# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 11 சனிக்கிழமை (27.11.2010)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 001


# கால எல்லையுடனான திட்டமிட்ட பேச்சு மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்ட முடியும்

## கொழும்பு வந்த அமைச்சர் கிருஷ்ணா வலியுறுத்து

கொழும்பு, நவம்பர் 27

கால எல்லையுடன் கூடிய திட்டமிட்ட பேச்சு மூலமே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண முடியும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வலியுறுத்தினார். அத்தகைய ஒரு அணுகுமுறை விரைவில் ஆரம்பமாகும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது எனவும் அவர் கூறினார்.

(24ஆம் பக்கம் பார்க்க)



### பலாலியில் இருந்து ஹெலிக்கொப்டரில்

## யாழ். நகருக்கு இன்று வரும் அமைச்சர் கிருஷ்ணா அடுத்தடுத்து 3 நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம், நவ. 27

இன்று காலை யாழ்ப்பாணம் வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மூன்று நிகழ்ச்சிகளில் பங்கு பற்றவிருக்கிறார்.

பலாலி விமான நிலையத்தில் இருந்து ஹெலி மூலம் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு முற்பகல் 10.15 மணிக்கு வந்துசேரும் அமைச்சர், விவசாயிகளுக்கு இந்தியா வழங்கியுள்ள டிராக்டர்களைக் கையளிப்பார்.

அதைத் தொடர்ந்து 280, பலாலி வீதியில் அமைக்கப்பட்டுள்ள துணைத் தூதரகத் திறப்பு

(23ஆம் பக்கம் பார்க்க)

★ உதயனுக்கு இன்று அகவை இருபத்தைந்து

★ உதயன் இன்று வெள்ளிவிழா நாயகன்

★ அவனது வாழ்வும் பலமும் -

★ வாசகர்களின் வாழ்த்தும் கருத்தும் -

உள்ளே வெள்ளிவிழா மலரில்
36 பக்கங்களில்

## மின்சாரம் தாக்கியதில் சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம், புங்கங் குளத்தில் நேற்று மாலை 5 மணியளவில் மின்சாரம் தாக்கியதில் சிறுவன் ஒருவன் மரணமானான். மற்றொரு சிறுவன் மயக்க மடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

சிவநாதன் தயானந்தன் (15 வயது) என்பவரே மரணமானவர்

(23ஆம் பக்கம் பார்க்க)

## ஆலயங்களில் இன்று பூஜைகளை நிறுத்துமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக முறைப்பாடு

### ஜனாதிபதியின் கவனத்துக்கு மாவை கொண்டுவருவார்

யாழ்ப்பாணம்,நவ.27

குடாநாட்டின் சில இடங்களில் ஆலயங்களில் இன்று பூஜைகளை நிறுத்துமாறும் பொது மக்களை ஆலயங்களுக்குச் செல்லக்கூடாது என்றும் படையினர் எச்சரித்திருப்பதாக எமக்குத் தகவல்கள் வந்துள்ளன.

இத்தகைய செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு நேற்றிரவு தெரிவித்தார்.

படையினரின் இந்தச் செயல்

(24ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலையில் பூஜை வழிபாட்டுடன் இன்று வலி.வடக்கின் மீள்குடியமர்வு ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 27

கீரிமலை, நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் விசேட பூஜை வழிபாடுகளை அடுத்து வலி. வடக்கின் மீள்குடியேற்றச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே இந்த மீள்குடியேற்றம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் மீள்குடியேற்றத்தை ஆரம்பித்துவைப்பர்.

இன்றைய மீள்குடியேற்றத்துக்காக 970 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித் தார்.

(ஒ-ஐ-9)

## அதிகாரப் பகிர்வு இல்லாத அபிவிருத்தி பயன் தராது

### சபையில் பொன். செல்வராசா உரை



கொழும்பு, நவ.27

''தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் வழங்காது அபிவிருத்தியால் ஏற்படுத்தப்படும் சமாதானம் நிலைக்காது. அபிவிருத்திக்கு பதிலாக அதிகாரப் பரவலாக்கலுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதிகாரப் பரவ லாக்கலுக்கு முன்னுரிமை வழங்க ஜனாதிபதி நட

(23ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடனான சந்திப்பு தோல்வி; தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஏமாற்றம்

கொழும்பு, நவ.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான நேற்றைய சந்திப்பின் போது தாம் முன்வைத்த 8 கோரிக்கைகளுக்கும் அவர் இழுத்தடிக்கும் வகையிலேயே பதிலளித்துள்ளார் என தமிழ்க் கட்சிகளின் அரங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

''இந்தச் சந்திப்பு வெற்றியளிக்கவும் இல்லை; ''திருப்தியளிக்கவும் இல்லை'' எனத் தமிழ்க் கட்சிகள் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரு மான எம். கே.சிவாஜிலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)

## உதயனின் வெள்ளி விழா உலா

### வாசகர் நெஞ்சங்கள் தொடந்தும் பேசும்

## மாகாண சபைகளுக்கு வருகிறது முடிவு காலம்

### ஜோன் அமரதுங்க எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, நவ. 27

மாகாண சபைகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது என்றும் மிக விரைவில் மாகாணகள் முறை முடிவுக்கு வரும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க நேற்று நாடாளுமன்றில் கூறி னார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களின் உரிமைகள் பறிக்

(23ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் சங்கத்தில் ஊழல் மோசடி; முன்னாள் பணியாளர்கள் மூவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 27

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒருவருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பாக அந்தச் சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளர் உட்பட மூன்று முன்னாள் பணியாளர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை இவர்களுடைய வீடுகளுக்குச் சென்ற பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர்.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் பொதுமுகாமையாளரான தயாள மலர் பேரம்பலம், முன்னாள் கிளை மேற்பார்வையாளரான சி.விமலன், முன்னாள் கிளை முகாமையாளர் ச.உதயகுமார் ஆகியோரே குற்றப் புலனாய்வுப்

(24ஆம் பக்கம் பார்க்க)


தனித்துவமான வண்ணங்கள் கொண்ட டையில்களால் உங்கள் மனையை அழகு படுத்துவதற்கு

நவீன் செரமிக்



Naveen Ceramic
212, Palaly Road, Jaffna. PVT LTD
Tel : 212220033 / 212220044


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, நவ.27

அச்சுவேலி கைத்தொழிற்பேட் டையை ஆரம்பிப்பதற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளதாக பாரம்பரிய மற்றும் சிறு கைத் தொழில்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

அமைச்சின் ஆலோசனைச் சபைக்கு தலைமை தாங்கிப் பேசியபோதே அமைச்சர் மேற் கூறிய தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை தொழில் அபி விருத்தித் திணைக்களத்துக்கு சொந்தமான அச்சுவேலியில் உள்ள சுமார் 600 ஏக்கர் காணியில் 19.9 கோடி ரூபா செலவில் பாரிய தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

இச் சமயத்தில் ஆலோசனைச் சபை அங்கத்தவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால அண்மைக் காலத்தில் அரசினால் வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட இந்நாட்டு தொழில் கலைஞர்கள் பற்றிய விவரங்களை வினாவிய போது அமைச்சர் அந்த விவரம் அடுத்த கூட்டத்தில் தரப்படுமென உறுதியளித்தார்.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க புத்தளத்தில் அமைச்சின் கிளைக் காரியாலத்தை திறக்க அமைச்சர் சம்மதித்தார். (த-5)

# முல்லை அரச அதிபரும் நேற்று இரகசிய சாட்சியம்

கொழும்பு, நவ. 27

நல்லிணக்க ஆணைக் குழுவின் நேற்றைய கொழும்பு அமர்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் இரகசியமாகச் சாட்சியமளித்தார்.

அவர் சாட்சியமளித்தபோது ஊடகவியலாளர்களோ, பொது மக்களோ அங்கிருக்க அனுமதிக்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும் நேற்றுமுன்தினம் கொழும்பில் நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் இரகசியமாகச் சாட்சியமளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# உள்ளூராட்சித் தேர்தல் ஒரே நாளில் நடைபெறும்

கொழும்பு, நவ.27

நாடெங்குமுள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் ஒரே நாளில் நடத்தப்படுமென மாகாண மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் பிரதியமைச்சர் இந்திக பண்டார நாயக்க தெரிவித்தார்.

நாடெங்கும் ஏராளமான உள்ளூராட்சிச் சபைகள் இருப்பதால் அவற்றுக்கான தேர்தல்களை கட்டம் கட்டமாக நடத்துவது சாத்தியமற்றது என அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலை நடத்த அமைச்சுக்கு வாய்ப்பிருந்த போதும் சகல உள்ளூராட்சித் தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்த வேண்டும் என்பதால் கொழும்பு மாநகர சபைத் தேர்தல் பிற் போடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் கொழும்பு மாநகர சபைத் தேர்தல் பற்றி எழுப்பிய வினாவொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## பாக். ஜனாதிபதி இன்று இலங்கை வருகை

பாகிஸ்தான்ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி இன்று இலங்கை வருகிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் 4 நாள்கள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இவர் இலங்கை வருகின்றார்.

# நீதியமைச்சின் நடமாடும் சேவை சாவகச்சேரியில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.27

பிறப்பு, இறப்பு மற்றும் காணாமற் போனவர்களைப் பதிவு செய்வதற்கான இரு நாள் நடமாடும் சேவை இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

நீதி அமைச்சின் சுனாமி நிவாரணத்திட்டத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இந்த நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்,நாளை ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் இந்த நடமாடும் சேவை இடம்பெறும்.

இந்த நடமாடும் சேவையின் மூலம் பிறப்புச் சான்றிதழ் பெறுதல், பதியப்படாத பிறப்புக்களைப் பதிவு செய்தல், இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களைப் பதிவு செய்தல், அடையாள அட்டை ,ஓய்வூதியம் தொடர்பான பதிவுகள் ஆகியவற்றை இலவசமாக மேற்கொள்ள முடியும்.

இந்தச் சேவையின்போது முத்திரைக் கட்டணம், புகைப் படப்பிடிப்பு செயற்பாடுகளுக்கான செலவுகளையும் நீதி அமைச்சு பொறுப்பேற்றுள்ளது.

நீதி அமைச்சின் இணைப்பாளர் சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நடமாடும் சேவையின் போது மேலதிகப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர், ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி அபயவர்த்தன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (கு-14)

# சிறிகொத்த முன் சத்தியாக்கிரகம் இருக்கத் திட்டம்

கொழும்பு,நவ.27

புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார மீது வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மேற்கொண்ட தாக்குதல் குறித்து கட்சி உரிய நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து கட்சியின் புத்தளம் மாவட்ட முக்கியஸ்தர்களும் ஆதரவாளர்களும் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி கட்சித் தலைமையகமான சிறிகொத்த முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

பொதுத் தேர்தலின் பின்னர் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார மீது அதே கட்சியைச் சேர்ந்த வடமேல் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டார். இத் தாக்குதல் காரணமாக பாலித ரங்கே பண்டார கடுமையான காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இது குறித்து அவர் கட்சியின் தலைமைக்கு அறிவித்தும் இன்று வரை முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதை ஆட்சேபித்தே சத்தியாக்கிரகம் மேற்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(சி)

# ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 13.9 கோடி ரூபா நிலுவை

யாழ்ப்பாணம், நவ.27

ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு இதுவரை தொழில் தருநர்கள் 13.9 கோடி ரூபாவை செலுத்தாமல் நிலுவையாக வைத்துள்ளதாகவும், அவர்களில் 1995 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 2009 ஆம் வருடம் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பொன்றின் அடிப்படையில் 600 தொழில் தருநர்களுக்கு எதிராக வழக்கு தொடர முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் ஏ.எம்.ஏ. கொடவத்த தெரிவித்தவை வருமாறு:-

இத்தகைய 600 வழக்குகளைத் தொடர முடியாததால் நிதியத்துக்கு 2 கோடி ரூபா வரை நிலுவையில் உள்ளது.

2009 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவதற்கு முன்பு கொடுப்பனவுகளை நிலுவையில் வைத்திருந்த தொழில் தருநர்களுக்கு எதிராக நிதியத்தின் சட்ட மூலம் 28 (8) இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதற்கேற்ப சட்ட மூலம் திருத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார். (த-5)

# தனி ஒரு அமைச்சருக்கு ரூ. 25 லட்சம் மாதாந்த செலவு என்கிறது ஐ.தே.க.

அரச சேவையாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்காத அரசு அமைச்சர் ஒருவருக்கு மாதாந்தம் 25 லட்சம் ரூபாவை செலவளிக்க முன்வந்துள்ளதாக ஐக்கியதேசியக் கட்சியின் பிரதம செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அரசு ஏதோ ஒரு வழியில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. அதனால் இவ்வளவு பெரிய எண்ணிக்கை கொண்ட அமைச்சர்களை நியமிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இது குறுகிய அரசியல் நோக்கம். ஒரு சிலரை திருப்திப்படுத்த பொதுமக்களின் வயிற்றில் அடிப்பது நியாயமில்லை.

அரச சேவையாளர்கள், தனியார்துறை ஊழியர்கள், சாதாரண பொதுமக்கள் ஆகியோரை பலத்த சிரமங்களுக்கு ஆளாக்கிவிட்டு 91 அமைச்சர்களை நியமிக்க வேண்டிய அவசியம் என்ன? ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரையும் தவிர்த்து ஏனைய 91 அமைச்சர்களுக்கான வருடாந்த செலவு 26,400 கோடி ரூபா. இவ்வாறு வீண்விரயம் செய்யும் பணத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்கலாம்.

எதிர்காலத்தில் இன்னும் விலைவாசி எகிறப்போகிறது. பருப்பு 240 ரூபாவுக்கும், தேங்காய் 45-50 ரூபாவுக்கும், டின்மீன் 240 ரூபாவுக்கும் விற்கப்படும். இந்த வேளையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை வழங்காமல் அமைச்சர்களுக்காக அரசாங்கம் பொதுமக்களின் பணத்தை வாரியிறைத்துக் கொண்டிருக்கிறது - இவ்வாறு தெரிவித்தார் திஸ்ஸ அத்தநாயக்க. (சி)

# கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு அரச மரியாதையுடன் வரவேற்பு

கொழும்பு, நவ. 27

வத்திக்கானில் பாப்பரசரினால் கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்ட மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு நேற்றுக் காலை விமான நிலையத்தில் அரச வரவேற்பு அளிக்கப்பட்டது.

கொழும்பு மறை மாவட்ட பேராயராக இருந்த மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த 20ஆம் திகதி வத்திக்கான் புனித பீற்றர் பெஸிலிக்காவில் 16ஆம் ஆசீர்வாதப்பரினால் கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

வத்திக்கான் புனித பீற்றர் சதுக்கத்தில் நடைபெற்ற இத்தாலிய கிறிஸ்தவர்கள் கலந்து கொள்ளும் சமய வழிபாடுகளில் கலந்துகொண்ட பின்னர் நேற்றுக் காலை அவர் நாடு திரும்பினர்.

# வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தியாலயத்தில் 75 மாணவர் நேற்று திடீர் சுகவீனம்

## தேயிலைத் தோட்ட கிருமிநாசினி காரணமா?

கம்பளை, நவ.27

கம்பளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட வெஸ்ட்ஹோல் தமிழ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 75 மாணவர்கள் நேற்றுக் காலை திடீரென சுகவீனமுற்றனர். உடனடியாக நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்றுக் காலை தரம் 10,11 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் மூன்றாம் தவணைப் பரீட்சை எழுதிக்கொண்டிருந்தபோது அவர்களுக்குத் திடீரென வாந்தி, மயக்கம், குமட்டல் போன்ற அறிகுறிகள் தென்பட்டன.

இதையடுத்து பாடசாலை நிர்வாகத்தினர் உடனடியாக மாணவர்களை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். இதனைத் தொடர்ந்து நேற்று பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது - எனப் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் 38பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும், நேற்று முற்பகல்வரை 37 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலைக்கு அண்மையிலுள்ள தேயிலைத் தோட்டமொன்றில் விசிறப்பட்ட கிருமிநாசினிமூலமே மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலைக்கு வைத்திய சாலையிலிருந்து சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று நேற்றுமுன்தினம் ஹட்டன் கல்விவலயத்துக்கு உட்பட்ட நோர்வூட் பாரதி தமிழ் வித்தியாலயத்திலும் மாணவர்கள் 32 பேர் ஒருவகை வைரஸால் தாக்கப்பட்டனர்.

இதன்காரணமாக குறித்த பாடசாலையை இரண்டு தினங்களுக்கு மூடுமாறு மத்திய மாகாணக் தமிழ்க்கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக் கது.

# கொழும்பு பிராந்தியத்துக்கு புதிய பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, நவ.27

கொழும்புப் பிராந்தியத்தின் புதிய பிரதி பொலிஸ் மா அதிபராக அநுர சேனநாயக்க கடந்த 24 ஆம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

1973 ஆம் ஆண்டு பொலிஸ் பயிற்சியில் சேர்ந்த அநுர சேனநாயக்க படிப்படியாகப் பதவியுயர்வு பெற்று 2008 ஆம் ஆண்டு பிரதிப் பொலிஸ் மா அதிபரானார்.

கொழும்பு, சிலாபம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு போக்குவரத்துத் தலைமையகம், கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவு ஆகியவற்றில் பணிபுரிந்துள்ள அநுர சேனநாயக்க தனது பணிக்காலத்தின் போது பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளிலும் பாரிய குற்றவாளிகளைக் கைதுசெய்வதிலும் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். கொழும்பு பிராந்தியத்தின் பிரதி பொலிஸ் மா அதிபராகக் கடமையேற்றுள்ள இவர் தொடர்ந்தும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிகளையும் கவனிப்பார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டில் நேற்று கொட்டித் தீர்த்தது மழை
# பொம்மைவெளியில் 150 குடும்பங்கள் நிர்க்கதி

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட மிகவும் பின் தங்கிய பிரதேசங்களான பொம்மை வெளி, சூரியவெளி, நித்திய வெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 150 குடும்பங்கள் கடந்த இரண்டு நாள்களாகத் தொடரும் அடைமழையின் காரணமாக மோசமாகப் பாதிக்கப் பட்ட நிலையில் இடம்பெயர்ந் துள்ளன.

இந்தக் குடும்பங்களில் 57 குடும்பங்கள் ஒஸ்மானியாக் கல்லூரியில் தங்கியுள்ளன. நாவாந்துறை சென். மேரிஸ் தேவாலயத்தில் சுமார் 40 குடும்பங்கள் தங்கியுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. இன்னும் சிலர் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிர்க்கதியான நிலையில் உள்ளனர். வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததாலும் கொட்டும் மழையின் காரணமாகவும் இடம்பெயர்வைச் சந்தித்துள்ள இந்தக் குடும்பங்களுக்கு அவசர உதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குடாநாட்டில் நேற்றுக்காலை முதல் கடும் மழை பெய்தது. மாலை வரை மழை தொடர்ந்தது. இதனால் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

கொட்டித் தீர்த்த கடும் மழை காரணமாகக் குடாநாட்டின் தாழ்ந்த நிலப்பிரதேசங்களில் வெள்ளம் தேங்கி நின்றதால் அப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தார்கள். போக்கு வரத்தும் பாதிக்கப்பட்டது. குறிப்பாக யாழ்.நகரின் பிரதான வீதிகளில் வெள்ளம் தேங்கி நின்றதால் அந்த வீதிகள் யாவும் வெள்ளக்காடாகக் காட்சியளித்தன.

அத்துடன் நகரின் கரையோரப் பகுதிகளான பொம்மை வெளி, காக்கை தீவுப் பிரதேசங்களில் உள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

தொடர்ச்சியாகக் கொட்டித் தீர்த்த மழையினால் நகருக்குப் பல்வேறு தேவைகளைப் பெற்றுக்கொள்ள வந்த பொது மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கினார்கள்.

இதே போன்று வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலும் கடும் மழை பெய்ததாகவும் அங்குள்ள தாழ் நிலப் பிரதேசங்களிலும் வீதிகளிலும் வெள்ளம் தேங்கி நின்றதாகவும் எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர். கடும் மழை காரணமாக பருத்தித்துறையின் வீதியின் அகலிப்புப் பணிகளும் பாதிக்கப்பட்டன.

யாழ். முற்றவெளியில் உள்ள தனியார் பஸ்தரிப்பு நிலைய வளாகமும் நேற்றைய மழையால் வெள்ளக்காடாகக் காட்சியளித்தது.

பஸ்கள் தரித்து நிற்கும் இடத்தைச் சுற்றி வெள்ளம் அதிகளவில் தேங்கி நின்றதால் பஸ்கள் பயணத்தை ஆரம்பிப்பதில் சிரமம் ஏற்பட்டது.

பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாகச் செல்லும் நடைபாதையிலும் பண்ணை வீதியில் வெள்ளம் வழிந்தோடாது தேங்கிக் காணப்பட்டது.

வெளியிடங்களுக்கு இந்த நிலையத்தில் தரித்து நின்று சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் தமது சேவையை ஆரம்பிக்க முடியாது சிரமப்பட்டன.

யாழ். குடாநாட்டில் நேற்றுக் கொட்டித் தீர்த்த கனத்த மழையினால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் சிரமப்பட்டனர்.

அதனைவிட மக்களின் இயல்பு வாழ்க்கையும் நேற்றைய தினம் முழுமையாகப் பாதிக்கப்பட்டது.

நேற்றுக் காலை தொடக்கம் பிற்பகல் வரை பெய்த இந்த அடை மழையினால் நகரை அண்டிய தாழ்ந்த நிலப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

குறிப்பாகக் காக்கைதீவு, பொம்மைவெளி, கொட்டடி, மீனாட்சிபுரம், பண்ணை, ஆரிய குளம் போன்ற பகுதிகளில் தாழ்ந்த பிரதேசங்களில் குடியிருக்கும் மக்களின் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்து சென்றது. அதனைவிட முக்கிய வீதிகளிலும் வெள்ளம் தேங்கி நின்றதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு காணப் பட்டது.

முற்றவெளியில் யாழ். பிரதம தபாலகத்துக்கு முன்பாக வுள்ளசுற்றுவட்ட வீதியில் வெள்ளம் அதிகளவில் தேங்கி நின்றதால் தீவுப்பகுதிக்கான போக்குவரத்துக்கள் நேற்றுப் பலமணி நேரம் தாமதப்பட்டதைக் காண முடிந்தது.

நல்லூர் பின்பக்க கோயில் வீதி மற்றும் வைமன் வீதி, நல்லூர் சிவன் வீதி போன்ற வீதி களிலும் வெள்ளம் வழிந் தோடாது தேங்கிக் காணப் பட்டது.

முற்றவெளியில் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகச் செல்லும் கே.கே.எஸ். வீதியை மூடி வெள்ளம் அதிகளவில் தேங்கிக் காணப்பட்டது.

இது இவ்வாறிருக்க குடா நாட்டின் தாழ்ந்த வயல் நிலங் களில் வெள்ளம் மூடிப் பாய்வதால் நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இதனைவிடத் தோட்டங் களில் பயிரிடப்பட்ட மரக்கறிச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. (த-9*86-23-236-319-26)



நேற்று பெய்த மழையினால் யாழ். கே.கே.எஸ் வீதியில் உள்ள கிராமிய வங்கி அலுவலகத்துக்குள் வெள்ளம் புகுந்தது. இதனால் அங்கிருந்த ஊழியர் அலுவலக மேசை மேல் ஏறி அமர்ந்திருக்கிறார். மழை காரணமாக வீதிகளில் வெள்ளம் தேங்கியமையால் போக்குவரத்திலும் சிரமம் ஏற்பட்டது. வெள்ளத்தால் சிரமப்படும் இருவர். (த-23-319)

## இளைஞர் நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களை தெரிவு செய்தல்

யாழ்ப்பாணம், நவ. 27

இளைஞர் நாடாளுமன்றத் துக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நாட்டில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் உதவி அரசாங்க அதிபர் பணி மனைகளிலும் நடத்தப்படவுள்ளன.

அந்தந்த மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (204-207)

## ஆறுமுகநாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், நவ.27

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக தெல்லிப்பழை துர்க்கா புரம் இல்ல மாணவிகளின் பண்ணிசை இடம்பெறும். அத்துடன் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.சிவலிங்கராஜாவின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. மாணவர் உரையை துர்க்கா மகளிர் இல்லத்தின் சிரேஷ்ட மாணவி செல்வி பூ. செல்வதி யம்மா நிகழ்த்துவார். (201)

## தகவல் தொழில்நுட்ப குழு தலைவராக லலித் வீரதுங்க

ஐக்கிய ஒன்றியத்தின் ஆசிய வலயத்தின் தகவல் தொழில்நுட்பத்துறை விசேட நிபுணர்களின் குழுத்தலைவராக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீர துங்க இரண்டாவது முறையாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வலயத்தில் தகவல் தொழில நுட்பத்தை அபிவிருத்தி செய்ய லலித் வீரதுங்க மேற்கொண்ட அக்கறையையும் அர்ப்பணிப்பையும் கருத்தில் கொண்டே அவருக்கு இந்த நியமனம் இரண்டாவது முறையாகவும் வழங்கப்பட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு 2011 இல் 'லப்ரொப்' கணினி வசதி

### உயர்கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, நவ.27

2011 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றுள்ள 25 ஆயிரம் மாண வர்களுக்கு 'லப்ரொப்' கணனிகளை வழங்க உயர்கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்கா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கென இரண்டு பில்லியன் ரூபா செலவழிக்கப்படவுள்ளது.

இந்த வருடத்தின் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன் வினியோகிக்குமாறு பரீட்சைகள் திணைக்களத்துடனும் கல்வி அமைச்சுடனும் நடந்த பேச்சுகளின் போது வலியுறுத்தியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறத் தகுதியுள்ள 25 ஆயிரம் மாணவர்களின் விவரங்கள் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன் கிடைக்க வழி செய்யப்படும்.

இதேவேளை நான்கு மாதங்கள் ... பெறவுள்ளதுடன் பிரதேச மட்டங்களில் கணினி பயிற்சி நிலையங்களும் ஏற்படுத்தப்படும்.

பல்கலைக்கழக அனுமதி ஜூன் மாத ஆரம்பத்தில் நடைபெறும். முதல் மூன்று மாத பாடங்களின் பின் அவர்களுக்கு ஆங்கில அறிவைப் பரிசிக்கும் பரீட்சை நடத்தப்படும்.

## யாழ்ப்பாணத்தில் அனுமதி பெறாத 14 கேபிள் ரீ.வி நிறுவனங்கள்

### பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சிக்கின

கொழும்பு, நவ.27

அனுமதிப்பத்திரங்களின்றி சட்ட விரோதமாக நடத்தப்பட்டு வந்த 15 கேபிள் தொலைக் காட்சி நிறுவனங்கள் கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்களில் குற்றப் பரிசோதனைப் பிரிவினர் மேற்கொண்ட விசேட சுற்றி வளைப்பின்போது பிடிபட்டுள்ளன. இவற்றில் 14 நிலையங்கள் யாழ்ப்பாணத் தில் இயங்கி வந்தவை.

இலங்கையில் கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு இதுவரை இரண்டு நிறுவனங் களுக்கு மட்டுமே அனுமதி வழங் கப்பட்டுள்ளது. கேபிள் தொலைக் காட்சி சேவையை நடத்த தொலைத் தொடர்புகட்டுப்பாட்டு ஆணைக் குழு, ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம், நாடகத் துறை அமைச்சு ஆகியவற்றின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனினும் அனுமதி பெறாமல் நாட்டின் பல பாகங்களில் ஏராளமான சட்டவிரோத கேபிள் தொலைக்காட்சி நிலையங்கள் இயங்குகின்றன. இவற்றால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வாய்ப்புள்ளதால் பாதுகாப்புச் செயலாளரின் பணிப்புக்கமைய இந்தச் சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப் பட்டன. சுற்றிவளைப்பின் போது பிடிபட்ட நிலையங்களில் 15 நிலையங்களில் 14 நிலையங் கள் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்துள்ளன.

## வடமாகாண மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வுகள் கிளிநொச்சியில்

வட மாகாண ரீதியில் சர்வ தேச மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வு 'சுயாதீன மாற்றத்துக்கு உட்படுத்தல் ஊடாக வலுவிழந் தோரை வலுவூட்டுவோம்' என் னும் தொனிப் பொருளில் இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் 12.30 மணி வரை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

வட மாகாண கல்விப் பணிப் பாளர் ப. விக்கினேஸ்வரன் தலை மையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்விற்கு பிரதம விருந்தின ராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி, கௌரவ விருந்தி னர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வல யக் கல்விப் பணிப்பாளர் எஸ். குருகுலராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் வட மாகாணத் தில் உள்ள அனைத்து கல்வி வலயங்களையும் சேர்ந்த மாற்று வலுவுள்ள மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு வைப வமும் இடம்பெறும். (எ-405)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராசாவை இன்னும் விசாரிக்காதது ஏன்? சி.பி.ஐயிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி

புதுடில்லி, நவ. 27

2ஜி அலைக்கற்றைவிற்பனையில் நடந்துள்ள முறைகேடுகள் தொடர்பாக அந்தத் துறையின் அமைச்சராகப் பதவி வகித்த ராசாவிடம் இதுவரை விசாரணையே நடத்தாதது ஏன் என்று மத்திய புலனாய்வு அமைப்பை (சி.பி.ஐ.) உச்ச நீதிமன்ற நீதிபதிகள் காட்டமாகக் கேட்டனர்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் என்று அழைக்கப்படும் அலைக்கற்றை விற்பனை தொடர்பான வழக்கு விசாரணையை சி.பி.ஐ. மேற்கொண்டாலும் அவ்வப்போது அந்த விசாரணை எப்படி நடக்கிறது என்பதை உச்ச நீதிமன்றம் தொடர்ந்து கண்காணிக்கத் தொடங்கியிருக்கிறது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜி.எஸ். சிங்வி, ஏ.கே.கங்குலி அடங்கிய 'ஆயம்' டில்லியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த விசாரணையை மேற்கொண்டது.

இந்த முறைகேடுகளில் துறையின் அமைச்சரும் செயலரும் ஈடுபட்டிருக்கின்றனர் என தலைமை லஞ்ச - ஊழல் கண்காணிப்பு ஆணையரும், தலைமைக் கணக்குத் தணிக்கையாளரும் அறிக்கைகள் அளித்த பிறகும் அவ்விருவரையும் சி.பி.ஐ. விசாரிக்காதது ஏன்? வழக்கு விசாரணையில் தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் போக்கு எதற்காக என்று நீதிபதிகள் கேட்டனர்.

தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் என்ற பதவி இந்திய அரசமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்டது.

அந்தப்பதவிக்கு நியமிக்கப்படுகிறவர் அரசின் நிர்வாக நடவடிக்கைகளில் ஏற்படும் இலாப, நஷ்டங்களை ஆராய்ந்து தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்டுகிறார். அப்படி அவர் சுட்டிக்காட்டிய பின்னரும் அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தவரிடமும் அந்தத்துறையில் செயலாளராக இருந்தவரிடமும் விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும். பொறுப்புள்ள பதவிகளை வகிக்கும் நீங்கள், அந்த இருவரையும் இதுவரை விசாரிக்கவே இல்லை என்கிறீர்கள்.

எட்டாயிரம் ஆவணங்களைப் பரிசோதித்தோம் என்கிறீர்கள். முக்கியமான 2 பேரிடம் விசாரிக்காமல் தலையைச் சுற்றி மூக்கைத் தொடப் பார்க்கிறீர்கள்?

அரசின் கொள்கை முடிவு காரணமாக கோடிக்கணக்கான ரூபா வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்றால் அந்த முடிவை எடுத்ததில் முக்கியப் பங்கு வகித்தவர்களிடம் முதலில் விசாரணையை நடத்தியிருக்க வேண்டும். குறைந்த பட்சம் இதைத்தான் நாங்கள் உங்களிடம் எதிர்பார்க்கிறோம். இந்த வழக்கு விசாரணையைக் கண்காணிக்கும் உச்ச நீதிமன்றம் குறித்து உங்களுடைய எண்ணம்தான் என்ன என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

வழக்கு விசாரணையில் சி.பி.ஐ. தனக்கென்று தனி விசாரணை பாணியை வைத்திருக்கிறது என்று குறிப்பிட்டு விசாரணையில் ஏன் தாமதம் ஏற்படுகிறது என்று சி.பி.ஐ. சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.கே.வேணுகோபால் விளக்கினார்.

# மும்பைத் தாக்குதல் தினத்தை ஒட்டி இந்தியா முழுவதும் தீவிர பாதுகாப்பு

டில்லி, நவ. 27

மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி இரண்டு ஆண்டு நிறைவு பெறுவதை ஒட்டி இந்தியா முழுவதும் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி தீவிரவாதிகள் புகுந்து நடத்திய தாக்குதலில் 166 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் நடந்து நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்தன. இதை ஒட்டி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற தகவல் கிடைத்துள்ளது.

ஏற்கனவே, மும்பையில் மக்கள் நெரிசல் அதிகம் உள்ள பகுதியில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் இருந்து இரண்டு வாரங்களுக்கு முன் உளவுத்துறை எச்சரிக்கை அறிவிப்பு வந்தது.

அதுபோல, டில்லியில் முக்கிய சந்தையான பலிகா பஜார் உள்ளிட்ட மூன்று முக்கிய சந்தைகளில் காஷ்மீர் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கின்றனர் என மற்றொரு உளவுத்துறை எச்சரிக்கையும் வந்துள்ளது.

இந்த நிலையில், மும்பைத் தாக்குதல் நினைவு தினத்தை ஒட்டி இந்தியா முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அமைதியைச் சீர் குலைக்கும் அசம்பாவித சம்பவங்களைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக மராட்டியம் மற்றும் டில்லி அரசுகளுக்கு கண்டிப்பான அறிவுரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இதுதவிர, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு போலவே கடல் வழியாக தீவிரவாதிகள் நுழைந்துவிடாமல் தடுப்பதற்காகக் கடலோரக் காவல் படையும் உஷார் படுத்தப்பட்டுள்ளது. தீவிரவாதிகளின் தாக்குதலைச் சமாளிக்க விமானப் படையும் தயார் நிலையில் இருக்கிறது.

# மழைக்கு இதுவரை 88 பேர் மரணம் குடும்பத்துக்கு தலா ரூபா 2 இலட்சம்

## தமிழக அரசு அறிவிப்பு

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழைக்கு இதுவரை 88 பேர் உயிரிழந்துள்ளனர் என மாநில அரசு தெரிவித்துள்ளது. பலியானோரின் குடும்பங்களுக்கு தலா ரூபா 2 இலட்சம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடலோர மற்றும் தென் மாவட்டங்களில் வடகிழக்குப் பருவமழை தீவிரம் ஆகியுள்ளது.

இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் கனமழை பெய்தது. இந்த நிலையில், பருமழையால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து, புனித ஜோர்ஜ் கோட்டையில் உள்ள பழைய தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டத்தை முதல்வர் கருணாநிதி நடத்தினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பெருமழையின் காரணமாக, நெல்லை மாவட்டம் பாபநாசம், மணிமுத்தாறு மற்றும் ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணைகள் தவிர, தமிழகத்தில் உள்ள எல்லா அணைகளும், குளங்களும், ஏரிகளும் பெருமளவுக்கு நிரம்பியுள்ளன.

இதுவரை, மதுரை, தர்மபுரி, கடலூர், ஈரோடு ஆகிய நான்கு மாவட்டங்களில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன எனத் தகவல்கள் வந்துள்ளன. நீர் வடிந்ததற்குப் பிறகு பயிர்ச்சேதம் குறித்து மதிப்பீடு செய்யப்படும். அதன் பின், உரிய நிவாரணம் வழங்கலாம் என்று மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பருவமழைக்கு 548 குடிசைகள் முழுமையாகவும், ஆயிரத்து 438 குடிசைகள் பகுதியாகவும் என மொத்தம் ஆயிரத்து 986 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள குடிசைகளைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சியர்கள் ஏற்கனவே நிவாரண நிதி வழங்கி வருகின்றனர்.

மழைக்கு 40 ஆண்கள், 27 பெண்கள், 21 குழந்தைகள் ஆக மொத்தம் 88 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். அவர்களின் குடும்பங்களுக்கு பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூபா ஒரு இலட்சமும், முதல்வரின் நிவாரண நிதியில் இருந்து ரூபா ஒரு இலட்சமும் என மொத்தம் ரூபா 2 இலட்சம் நிவாரண நிதியாக வழங்க முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# வீரம்செறிந்த தமிழினம் தற்போது எப்படித் தோல்வியைத் தழுவும்?

## வெற்றி பெறுவோம் என்கிறார் வைகோ

தஞ்சாவூர், நவ. 27

தமிழர்கள் மனித நேயம் மிக்கவர்கள் - உலகத்துக்கு பண்பாட்டையும், நாகரிகத்தையும் தந்தவர்கள். அந்தத் தமிழ் இனம் இன்று உலகில் நாதியற்றுள்ளது. மாமன்னர்கள் இராஜராஜசோழன், இராஜேந்திரசோழன் ஆகியோர் பல நாடுகளுக்குச் சென்று, பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர். அப்படிப்பட்ட வீரம் செறிந்த தமிழ் இனம் இப்போது, எப்படித் தோல்வியைத் தழுவும்?. நீதிக்கும், நேர்மைக்காக போராடியவர்கள் நாங்கள், தொடர்ந்து வெற்றிபெறுவோம்.

- இவ்வாறு ஈழத் தமிழ் ஆதரவாளரும், ம.தி.மு.க.வின் பொதுச் செயலருமான வைகோ தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் நேற்றுமுன்தினம் திருமணவிழா ஒன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இன்றைய தலைமுறையினர் பண்பு, பண்பாட்டைக் காக்க வேண்டும். இளைய தலைமுறையினரை ம.தி.மு.கவுக்கு வாருங்கள் எனக்கூறவில்லை, தமிழர்களின் பண்பாட்டைக் காக்க வாருங்கள் என்றுதான் கூறகிறேன். 1,000 ஆண்டுக்கு முன் நமது மூத்தோர் பாதுகாத்த பண்பாட்டைப் பாதுகாக்க இளைய தலைமுறையினரை அழைக்கிறேன்.

இந்தியாவில் அதிகளவில் நடக்கும் விவாகரத்து வழக்கில் தமிழகம், கேரளாவில்தான் அதிகம் உள்ளது. இதைப்பார்த்தால் நமது பண்பாடு எங்கு போனது எனத்தெரியவில்லை.

இல்லறம் என்பதில் அடிக்கரும்பு மட்டும் சுவையாக இருக்கக்கூடாது. கரும்பின் நுனி முதல் அடிவரை சுவையாக இருக்க வேண்டும். படித்த மணமக்கள் தமிழர்களின் பண்பாட்டை விட்டுக் கொடுக்காமல் வாழ வேண்டும். எந்த வயதிலும் அன்புக்கு வயதில்லை. கணவன் மனைவியிடையே உடல் நலக்குறைவு, உணவு, ஒருவரை ஒருவர் நேசித்தல், அன்பு என அனைத்தையும் பரிமாறிக் கொள்ளுதல் வேண்டும்.

இன்றைய தலைமுறையினர் முதியவர்களை முதியோர் இல்லத்தில் விட்டுச் செல்வது வேதனையளிக்கிறது. தாயை கடவுளாக மதிக்க வேண்டும். நீங்கள் இன்று உங்கள் பெற்றோரிடம் காட்டும் அன்பை, உங்கள் குழந்தை நாளை உங்களிடம் காட்டுவார்கள்.

கணவன், மனைவிக்கு இடையேயான அன்பை வேறு யாராலும் தர முடியாது. வாழ்வில் கணவன் தவறு செய்திருந்தாலும், அவரை பொறுத்து வாழ வேண்டும். குழந்தைகள் தேர்வில் தோல்வி அடைந்தால், அடிக்காமல் அன்பாக அறிவுரை கூற வேண்டும்.

ம.தி.மு.க. காணாத தோல்வியே இல்லை. தோல்வியைக் கண்டு நாங்கள் இன்று வரை துவண்டதில்லை.

குழந்தைகளுக்குப் படிப்புடன் அரசியல் கல்வியை அதிகம் கற்பிக்க வேண்டும். அப்போதுதான், இன்றைய ஆட்சியாளர்களின் உண்மை நிலையை அறிந்து கொள்வார்கள்.

தமிழர்கள் மனித நேயம் மிக்கவர்கள் - உலகத்துக்கு பண்பாட்டையும், நாகரிகத்தையும் தந்தவர்கள். நீதிக்கும், நேர்மைக்காக போராடியவர்கள் நாங்கள். தமிழர்களுக்கு பெருமையைத் தேடித் தந்தது இந்தத் தஞ்சை மாநகரம். உலகுக்கு சோறு போட்டதும் தஞ்சைதான்.

- இப்படி அவர் பேசினார்.

# 10ஆவது நாளாகவும் சபை முடக்கம் தீர்வு காண வழி தெரியவில்லையே!

## பிரணாப் முகர்ஜி கவலை

2 ஜி அலைக்கற்றை ஒதுக் கீட்டுப் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றம் 10 ஆவது நாளாக வியாழக்கிழமையும் முடக்கப்பட்டது. அவையை சுமுகமாக நடத்த ஒத்துழைக்குமாறு மக்களவைத் தலைவர் மீராகுமார் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வழி தெரியவில்லை என்று அவை முன்னவரும் நிதிய மைச்சருமான பிராணப் முகர்ஜி கவலை தெரிவித்தார்.

2 ஜி அலைக்கற்றை ஒதுக் கீடு முறைகேடு தொடர்பாக தணிக்கை அறிக்கையில் தெரி விக்கப்பட்ட கருத்துகள் குறித்து பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்யும். பொதுக் கணக்குக் குழு வுக்கு உதவி செய்ய பல்நோக்கு ஒழுங்கு நடவடிக்கைக் குழு அமைக்கப்படும் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதை எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன.

இதற்கிடையே இந்தப் பிரச்சினையால் நாடாளுமன்றக் குளிர் காலக் கூட்டத் தொடரை முன்கூட்டியே ஒத்திவைக் கும் [illegible] நாடாளு மன்ற [illegible] சர் பவன்குமார் பன் சால் கூறினார்.


25ஆவது திருமணநாள் வாழ்த்து



திரு.திருமதி அருந்தவபாலன் உதயகலா
தம்பதியினர்
இன்று சனிக்கிழமை தமது இல்லற வாழ்வில்
25 ஆண்டுகளை இனிதே
நிறைவு செய்து வெள்ளிவிழா காணும்
தம்பதியினரை வாழ்த்துகின்றோம்
பிள்ளைகள்: பிரிந்தாபன், ஆதவ்ன், சங்கவி, மேனம்மா.
சகோதரிகள்: தவராணி, றஞ்சினி (நோர்வே).
மைத்துனர்கள்: ஞானம் (லண்டன்), சிறிதரன் (நோர்வே).
மருமக்கள்: சிவனா - சுமன் (இலண்டன்), சயந் (இலண்டன்), சஞ்சீவன் (கொழும்பு), அபிநயா (நோர்வே), தாரகை (நோர்வே).
27.11.2010
ஆதவன் டிஜிற்றல் போட்டோ, கைதடி மேற்கு. 021 [illegible]5317


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரசின் காதுகளில் ஏறுமா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் சாங்கோ பாங்கமாக நடைபெற்று வருகிறது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் நாட்டின் சூடான பிரச்சினையாகியுள்ள, இராணுவ ஆட்சிக்கான முன்னேற்பாடுகளையும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்தும் காரசாரமான கருத்துக்களையும் முன்வைத்து வருகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா நேற்றுமுன்தினம் சபையில், தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் (நாம் இப்பத்தியில் அடிக்கடி குறிப்பிட்டுக் காட்டிய) வடக்கு, கிழக்கில் ஏனைய சமயத்தவர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகள் அரசாங்கத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டு வருவதைச் சுட்டிக் காட்டிக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு, கிழக்கில் எமக்கு உரிமை இல்லாத இடங்களில் பௌத்த விகாரைகளை அமைத்து மக்களிடையே குரோதத்தை ஏற்படுத்தி மீண்டும் ஒரு பயங்கரவாதம் உருவாக நாம் இடமளிக்கலாகாது என்று மிகக் காட்டமாகச் சாடியுள்ளார்.

போர் முடிவுற்ற நிலையில் மீண்டும் ஒரு முறை பயங்கரவாதம் தலைதூக்கும் ஒரு நிலைக்கு ஏன் அடித்தளம் இடுகிறீர்கள் என்றும் கேட்டுள்ளார் ஜயவிக்கிரம பெரேரா.

உண்மையில், பிற மதத்தவர்களின் மனங்களைப் புண்படுத்தாத முறையில் பெரும்பான்மை இன மக்கள் நடந்து கொள்ள வேண்டும். இம்மாதிரி நடவடிக்கைகளே கடந்த காலங்களில் தீவிரவாதமும், பயங்கரவாதமும் தோன்றக் காரணமாயிற்று என்பதை அரசாங்கம் உணராது செயலாற்றுவது குறித்து எதிர்க்கட்சியின் தவிசாளர் கண்டித்தும், எச்சரித்தும் இடித்துரைத்துள்ளார்.

குடியுரிமை, மொழியுரிமை, வேலைவாய்ப்பு, விகிதாசாரக் கல்விமுறை என்று தமிழ் இனத்தவர் மீது பேரின அரசுகள் காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்துவிட்ட இனவாரித் திட்டங்களின் பெறுபேறாகவே தீவிரவாதமும் அதன் வழியில் ஆயுதப் போராட்டமும் உருவாகின. இதனை யதார்த்தவாதிகள் மறுக்கமாட்டார்கள்.

ஆயுதப் போராட்டம் ஒழிக்கப்பட்டுவிட்டமையால் 'பழைய குருடி கதவைத்திறவடி' என்ற ரீதியில், பேரினவாதிகள் தமிழ்ப்பேசும் மக்கள் மீது தமது எண்ணங்களையும், திட்டங்களையும் திணிக்க முயல்வது அபத்தமானது.

அவ்வாறான முயற்சி இந்நாட்டில் ஒருபோதும் தேசிய நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கொண்டுவரப்போவதில்லை. வடக்கு, கிழக்கு மக்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வரும் துன்ப துயரங்களை, நாடாளுமன்றில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் விலாவாரியாக எடுத்து விளக்கியுள்ளார்.

போர் முடிவுற்ற நிலையில் வடக்கு, கிழக்கில் தொடர்ந்தும் இராணுவம் நிலைகொண்டிருப்பதையும் அதனால் மக்களுக்கு ஏற்படும், ஏற்படக்கூடிய பாதக விளைவுகளையும் அவர் நாடாளுமன்றில் விவரித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்பதால் அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் அவர்கள் குறைகூறவே செய்வார்கள் என்று அரசு அசமந்தமாக இருந்து விடமுடியாது. ஜெயவிக்கிரமவும் பிரேமச்சந்திரனும் எடுத்துவிளக்கியுள்ள விடயங்கள் அலசி ஆராயப்படவேண்டியவை, அவை தொடர்ந்தும் நிகழாமல் தடுக்கப்படவேண்டியவை.

வடக்கு, கிழக்கை இராணுவ மயமாக்கி தமிழ் மக்களின் அரசியல் தலைமையையும் முடக்கி, திட்டமிட்ட இராணுவ ஆட்சியை நிலைநிறுத்துவதன் ஊடாக மக்களின் அடிப்படை உரிமைகள், ஜனநாயக உரிமைகளை மறுத்து அடிமைகளாக வாழ நிர்ப்பந்திக்கும் சூழ்நிலை தோற்றுவிக்கப்படும் என்று சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு, கிழக்கில் தமிழர் கலாசார, சமயச் சூழ்நிலைகள் எவ்வாறு திட்டமிட்டு அழிக்கபடுகின்றன என்பதையும் கூட்டமைப்பு எம்.பி கூறிப்பிடத் தவறவில்லை.

தமிழர் கலாசார, சமய விழுமியங்கள் இந்த அரசின் ஆதரவுடன் அழிக்கப்பட்டு வருவது குறித்து அவர் விவரிக்கையில், பௌத்தர்கள் வசிக்காத இடங்களில் விகாரைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. பழைமையும் புனிதமும் மிக்க இந்துக் கோயில்களுக்கு அருகில் பௌத்த விகாரைகளையும் பெரும் புத்தர் சிலைகளையும் அமைத்து பௌத்தர் அல்லாதவர்களின் மனங்களை புண்படுத்துகிறீர்கள் என்று அரசிடம் சுட்டிக்கட்டியுள்ளார்.

இத்தகைய எச்சரிக்கைகளின் மத்தியில், ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற கோஷத்தின் கீழ் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையின் கீழ் தமிழ் மக்களின் நிலத்தில் சிங்களக் குடியேற்றங்களை நடத்துவதற்கான அரசியல் சதியை அரசாங்கமே தூண்டி வருவது வெளிச்சமாகி வருகிறது.

தெற்கில் இருந்து சிங்கள மக்களை ஏவிவிட்டு யாழ். ரயில் நிலையத்தில் தங்க வைத்து, அவர்களை ஏதிலிகளாகக் காட்டியதும் பின்னர் நாவற்குழியில் குடியேறச் செய்தமையும் சம்பந்தப்பட்ட மக்கள் தாமாகச் செய்த காரியங்கள் அல்ல.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் கெஹலியா மடுவில் சிங்களக் குடியேற்றம் நடத்தப்படுகிறது என்றும் -

மாவட்டத்தின் பல இடங்களில் இராணுவ மினி முகாம்களும் அவற்றைச் சூழ பௌத்த விகாரைகளும் கட்டப்படுவதாகவும் -

அந்த மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா கூறியுள்ளார்.

தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நடத்துவது, திரைமறைவில் இயங்கும் சக்திகளின் செயற்பாடு - ஏற்பாடு என்பதனை எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் தமிழ் பிரதேசங்களில் விகாரைகள் கட்டுவதும் அரசாங்கத்துக்குத் தெரியாமல், அதன் அனுசரணையின்றி நடப்பதாக மறைக்கமுடியாது; இல்லை என்று தட்டிக்கழிக்கவும் முடியாது.

அவ்வாறு இல்லையென்று ஒரு பேச்சுக்கு அல்லது வாதத்துக்கு எடுத்துக்கொண்டாலும், அரசு அதனைத் தடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்; எடுக்கவேண்டும்.

இந்த நிலைமை நீடிக்குமானால், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கூறியது போன்று, நாட்டில் மீண்டும் ஆயுதப் போராட்டமும், பயங்கரவாதமும் தலை தூக்குவதை அரசு தூண்டிவிடுவதாகவே முடியும்.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களையும் இந்நாட்டு மக்களாக அரசு கருதுவது உண்மையாயின், ஓரவஞ்சம் இன்றி உள் நோக்கம் இன்றிக் கருதுகிறதா?

தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்தியை உண்டாக்கவேண்டும் என்ற உண்மையான மனச்சுத்தமான நோக்கம் இருக்குமாயின் -

கொடிய போரின் காரணமாக நொடிந்து நொய்ந்து போயுள்ள வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும், அவர்களின் வீழ்ச்சியுற்ற கல்வி, கலாசார, சமய விழுமியங்களை வளர்த்தெடுக்கும் கைகரியங்களில் அரசும் அதன் தலைவர்களும் கபட நோக்கம் இன்றி இதய சுத்தியுடன் முழு மூச்சில் இறங்கவேண்டும். அவை போன்ற நற்காரியகங்களே அரசின் நல்லாட்சியை உலகளாவிய ரீதியில் உயர்த்திக்காட்டவும் உதவும். இதில் அரசு நல்மனதோடு கவனம் செலுத்துமா?

# பனம்பொருள் உற்பத்திகளை நவீன முறையில் சந்தைப்படுத்துவதன் மூலம் அதிக வருமானம்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

நவீனகால எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றவாறு பனைசார் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதன் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்கள் அதிக வருமானம் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தேசிய பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு 11லட்சம் மரநடுகைத் திட்டத்துக்கு அமைவாக பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் பனம் விதை நடுகை விழா கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலை மாணவர்கள் பனை வளத்தின் சிறப்புக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். பனை வளர்ந்து 15 வருடங்களில் பயனளிக்கத் தொடங்குகிறது. 120 வருடங்களைத் தனது வாழ்வுக்காலமாக கொண்ட பனை மரத்தின் மூலம் வருடமொன்றுக்குச் சராசரியாக 6000 ரூபாவைப் பெறமுடியும்.

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் ஊடாக பயிற்சி பெற்று நவீன வடிவத்தில் பனம் சார் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதனால் அந்தப் பொருள்களுக்கு அதிக விலை கொடுத்துப் பனை அபிவிருத்திச் சபை கொள்வனவு செய்து வருகின்றது.2011 ஆம் ஆண்டிலிருந்து பனம் சார் உற்பத்திப் பொருள்களுக்கு வருமானம் அதிகரிப்பதோடு அந்நியச் செலாவணியும் மீதப்படுத்தப் படும்.

பனை வளர்ப்பதன் ஊடாக சூழல் பாதுகாக்கப்படுவதுடன், அவை இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் எம்மைப் பாதுகாக்கின்றன. இன்றைய சிறுவர்களாகிய நீங்கள் நாளைய தலைவர்கள் எமக்குக் கிடைத்த இந்த அரிய வளத்தினைப் பாதுகாக்கும் பொறுப்பு மாணவர்கள் கைகளில் தான் உள்ளது - என்றார்.(த-201-14)

## சேவை நயப்பும் வரவேற்பும்

ஓய்வுபெற்ற கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் சி.சித்திரவடிவேலுவின் சேவை நயப்பு விழாவும் புதிய நியமனம் பெற்ற கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் வே.பாலசுப்பிரமணியத்தின் வரவேற்பு விழாவும் இன்று சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சு.வேதநாயகம், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு.சிவபாலன், யாழ். கல்வி வலயக் கணக்காளர் க.கமலரூபன், யாழ்.கோட்டக்கல்வி அலுவலர் வ.சிவபாலன், நல்லூர் கோட்டக் கல்வி அலுவலர் வி.மாணிக்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (204-72)

# சிரேஷ்ட அமைச்சர்கள் 10 பேரும் ஒரே இடத்தில் பணியாற்றுவர்

கொழும்பு,நவ.27

சிரேஷ்ட அமைச்சர் களுக்கான அலுவலகம் ஒரே இடத்தில் தனியாக அமைக்கப்படும். அதற் கமைய குறிப்பிட்ட ஒரு வளவில் அவர் களது பணிகள் நடைபெறும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு சிரேஷ்ட அமைச்சருக்கும் அலுவலகம் ஒன்றும் பணிப்பாளர்களும் நியமிக்கப்படுவதுடன் அமைச்சுக்களுக்கிடையிலான இணைப்பாளர்களாக அவர்கள் பணியாற்றுவர்.

சிரேஷ்ட அமைச்சர்களுக்கானவரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லையெனினும் ஜனாதிபதியின் நிதியில் அவர்களுக்கான செலவினங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

தற்சமயம் ஒன்பது சிரேஷ்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மில்ரோய் பெர்ணாண்டோ சத்தியப்பிரமாணம் செய்தபின் அமைச்சர்களின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்துள்ளது.

ரத்னசிறி விக்கிரமநாயக்க, டியூ குணசேகர, அத்தாவுத செனவிரட்ன, பீ.தயாரத்ன, ஏ.எச்.எம்.பௌசி, எஸ்.பீ. நாவின்ன, பியசேன கமகே, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கலாநிதி சரத்அமுனுகம ஆகியோரே சிரேஷ்ட அமைச்சர்களாகவுள்ளனர். (ஐ-5)

# மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்துக்கு இடைக்கால இயக்குநர் சபை நியமனம்

நவாலி,நவ.27

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒருவருட காலத்துக்கு 2011 வரை இடைக்கால புதிய இயக்குநர் சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி சங்க மண்டபத்தில் க.செல்வராசா தலைமையில் நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் 7 பேர் கொண்ட புதிய நிர்வாக சபையொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிக்கையில், இச்சங்கம் தற்போது 2 கோடியே 64 லட்சம் ரூபா கடனில் மூழ்கியுள்ளது. இந்த நட்டத்துக்குக் காரணம் இதற்கு முன்னர் சங்கத்தை நடத்திக் கொண்டிருந்தவர்கள் விட்ட தவறேயாகும் - என்றார்.

மேலும் அவர் கூறுகையில், சண்டிலிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் இரண்டு எரிபொருள் விற்பனை நிலையங்களே உள்ளன. இதில் சண்டிலிப்பாயில் ஒன்றும் மற்றது மானிப்பாயிலும் உள்ளன. மானிப்பாயிலுள்ள இச்சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் தினமும் தொங்கும் விளம்பரப் பலகையில் ஏதாவதொரு எரிபொருள் முடிவடைந்ததென்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

இதனால் மக்களின் கஷ்டநிலைமையைப் போக்குவதற்காக 10 லட்சம் ரூபா தனது முயற்சியிலிருந்து சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும் இனிமேல் இவ்வாறான தட்டுப்பாடு ஏற்படாதென்றும் கூறினார். (த-100)

## மானிப்பாய் சங்கத்தின் எரிபொருள் நிலையத்துக்கு ரூ.10 லட்சம் நிதியுதவி

யாழ்ப்பாணம்,நவ.27

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தின் அபிவிருத்திக்கென பத்து லட்சம் ரூபா நிதியை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஒதுக்கியுள்ளது.

எரிபொருள் விற்பனை நிலையத்துக்குத் தேவையான எரிபொருள்களைக் கொள்வனவு செய்வதற்கே இந்த நிதி பயன்படுத்த வேண்டும் என்றும் திணைக்களத்தால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (த-26)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 12 | | 28.11.2010 |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : | சப்தமி |
| | | பி.ப.02.56 வரை |
| நட்சத்திரம் | : | மகம் |
| | | பி.இ.03.39 வரை |
| [illegible] | : | 09.[illegible] |
| ராகுகாலம் | : | 04.43 -06.13 வரை |

## கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான

# வீடமைப்புக் கடன் தொகையை உயர்த்துவதற்கு தீர்மானம்

யாழ்ப்பாணம்,நவ.27

கிளிநொச்சி மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான வீடமைப்புக் கடன் தொகையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் அரச அல்லது அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்புக் கடனாக உயர்ந்தபட்சத் தொகையாக 3இலட்சம் ரூபாவும், ஏனையோருக்கு உயர்ந்தபட்சத் தொகையாக 2 இலட்சம் ரூபாவும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன் பெற விரும்புபவர்கள் தமது பெயர் விவரங்களை கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்திலோ அல்லது புதன்கிழமைகளில் பிரதேச செயலகங்களிலோ பதிவு செய்து கொள்ள முடியும் என அவர் மேலும் கூறினார். ([illegible] 14)

# ஆசிரியர்களின் இரண்டாம் மொழித்தேர்ச்சி கொடுப்பனவுகள் இடைநிறுத்தம்

சுன்னாகம்,நவ.27

ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இரண்டாம் மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு இடை நிறுத்தப்பட்டுள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்ற அரச ஊழியர்களுக்கு இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது. இதனால் ஆசிரியர்கள் உட்பட பலரும் நன்மையடைந்தனர்.

தற்போது ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை களைச் சேர்ந்தோருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங் கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-38)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# STUDY IN U.K.



IELTS அவசியமில்லை

யாழ். நகரில் மிகக் குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்

January Admission இற்கான இறுதி வாய்ப்பு

- ★ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
- ★ சேவைக்கட்டணம் முற்றிலும் இலவசம்
- ★ மிகக் குறைந்த செலவில் **Sponsor** வசதிகள்
- ★ பிரபலமான சட்டத்தரணிகளின் வழிகாட்டல் உதவியுடன்
- ★ குடும்பமாகக் கல்வி பயிலக் கூடிய வாய்ப்புகள்
- ★ லண்டனில் தரம் வாய்ந்த கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் அனுமதிகள்.
- ★ **Visa**வுக்கான 100% உத்தரவாதம்.
- ★ மிகக் குறுகிய காலத்தில் பயணம் செய்யலாம்.
- ★ **Interview** இன்றி 3 நாள்களுக்குள் அனுமதி.

**தொடர்பு: 077 0871616**

அலுவலக முகவரி:
245, பலாலி வீதி,
கந்தர்மடம்.
(Baby Photo அருகில்)

**அலுவலக நேரங்கள்:
திங்கள் - சனி வரை
காலை 9 - பிற்பகல் 3.30**




சீட்டிழுப்பு இலக்கம் 702 திகதி 25-11-2010

வெற்றி எண்கள்

**08 20 27 53 E**

ஜக்பொட் பரிசு ரூ. 14,643,910/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,643,910/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 2,000/= | 38,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 372 | 1,000/= | 372,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 602 | 1,000/= | 602,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15105 | 60/= | 906,300/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7092 | 40/= | 283,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 177367 | 20/= | 3,547,340/= |
| | | மொத்தம் ரூ. 6,149,320/- | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வென்றெடுத்த 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அநுராதபுரம் | 700566663-7-07 |
| கொழும்பு | 700577208-7-27 |
| வவுனியா | 700566646-8-38 |
| கம்பஹா | 700576733-6-16 |
| மட்டக்களப்பு | 700569713-3-03 |
| திருகோணமலை | 700572684-3-43 |
| யாழ்ப்பாணம் | 700565497-5-15 |
| இரத்தினபுரி | 700567068-3-33 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,549,320/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

**ரூ. 15,123,310/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 29 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர் No - 1 கோழிக்குஞ்சுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க இருக்கின்றன. (Nelna Farm) மிகக் குறைந்த விலையில் நம்பிக்கையாகப் பெற்றிட நாட வேண்டிய இடம் இலங்கையின் தலைசிறந்த விநியோகஸ்தர்கள்

**(Mafa Farm House)**

தொடர்புகளுக்கு
0773657008, 0773760445.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
ஆகக் கூடிய சில்லறை விலை – 110/-
உடன் தொடர்புகொள்ளவும்.

## தவறிவிட்டது

44/2, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளி என்னும் முகவரியைச் சேர்ந்த மயில்வாகனம் செல்வநாயகம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.451660250V) ஓட்டுமடத்துக்கும் பண்டித்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

தீ.செந்தூரன்
இலங்கை மின்சார சபை, 500, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 0779683076

## கோழிக்குஞ்சு விநியோகம்

பைரகா புறோயிலர் குஞ்சு 27.11.2010 இலும் 03.12.2010 இலும் விநியோகிக்கப்படும்.
விவரங்களுக்கு S.கிருஷ்ணகுமார்,
T.P.: 0772338084 மானிப்பாய்.

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் 64, மருதடி வீதி, நல்லூர் என்ற விலாசத்திற்குரிய கோயிலில் இருந்து சுமார் 200 யார் தூரத்தில் 1 பரப்பும் 5குளியும் அளவுள்ள காணியில் அமைந்த 5 அறைகளைக் கொண்ட சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள்:
0113 040720 அல்லது 0770739904

## புறொயிலர் விற்பனைக்கு

நிறை கூடிய புறொயிலர் கிலோ 300/=, சுத்தம் செய்யப்பட்டது கிலோ 450/= திங்கள், புதன், சனி, ஞாயிறு தினங்களில் நண்பகல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். ஆரூரன் பாம்
227, (நரியன் குண்டுக்கு அருகில்),
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

தூய இன 45 நாள் நிரம்பிய பொக்சர் (Boxer) நாய்க்குட்டிகள் மற்றும் பெண்நாய் (2 வயது), ஆண்நாய் (3½ வயது) உடன் விற்பனைக்குண்டு. தொ.பே: 0757149159

## காணியுடன் வீடும் விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, இருபாலை டச்றோட்டில் சுற்று மதிலுடன் கூடிய 10 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இது இருபாலை சந்தி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, இருபாலை கற்பக விநாயகர் கோயில் ஆகியவற்றிற்கு அண்மையில் உள்ளது. இங்கு பல பயன் தரும் மரங்களும் உண்டு.
தொடர்பு: 0771553248, 0726994524.

## மணமகள் தேவை

01. 1976 இல் 12 இல் சூரியனும், செவ்வாயும் 20 3/4 பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
02. 1980 இல் 12 இல் செவ்வாய் ஏழு கேந்திர பாவமும் 98 அண்டு பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
03. 1979இல் செவ்வாய் இல்லாமல் 19 1/2 பாவமுடைய சிங்கப்பூரில் வேலை செய்யும் இந்தியாவிலிருந்து B.Sc, CIMA, IT படித்த அழகான மணமகள் தேவை. மேலும் டாக்டர்கள், டீச்சர்கள், இஞ்சினியர்கள், பாவம் கூடிய, குறைந்த செவ்வாய் பாவமுள்ள மணமக்களும் சைவபோசனமுள்ள மணமக்களும், வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.

காமலக்கண்ணன் திருமண சேவை
தொடர்பு: 171/1, மனோன்மணி அம்மன் வீதி,
நல்லூர் வடக்குவீதி, நல்லூர்.

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை குணரத்தினம்

(உரிமையாளர் - அனுஷா ரான்ஸ்போர்ட்)



புத்தூர் கிழக்கு வீரவாணியைப் பிறப்பிடமாகவும், நல்லூர், சங்கிலியன் வீதி, அஸ்விஸ் ரவுன் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குணரத்தினம் (ஸ்ரீ, உரிமையாளர் - அனுஷா ரான்ஸ் போட்) கடந்த புதன்கிழமை 24.11.2010 அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்வநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பித்துரை மற்றும் கமலாதேவி தம்பதியரின் மூத்த மருமகனும் ஜெயந்தினியின் அன்புக் கணவரும் ஸ்ரீகிருஸ்ணா, அனுஷா (கனடா), ஜெயகிருஸ்ணா, சிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மாவதி (கனடா), உதயசுதன் (கனடா), சுதாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் டோனிக்காவின் அன்புப் பேரனும் இந்திராணியின் (நீர்வேலி) அன்புச் சகோதரனும் கந்தசாமியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.11.2010 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வத்தளை, கரவலப்பிட்டிய மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*100, றோயல் பேர்ள் கார்டின்,
அல்விஸ் ரவுன், வத்தளை.
0777679365, 0773558809
15/14, சங்கிலியன் வீதி,
நல்லூர்.
0771769424, 0750391442*

*தகவல்:*
கு.ஸ்ரீகிருஸ்ணா *(மகன்)*,
கு.ஜெயகிருஸ்ணா *(மகன்)*,
அ.யோகராஜா *(சகலன்)*.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1984 * 01 * 27



மறைவு 2009 * 12 * 07

திதி: 27.11.2010

## சிவகுமாரன் சகிந்தன் (ராசன்)

அம்மா என அழைத்த என் மகனே!
உனைப் பிரிந்தே
உயிர் துடித்து வாழுகின்றோம்
பாலூட்டிச் சீராட்டி உனை வளர்த்து
ஆளாக்கி வைத்தேன்
ஆனால் இன்று நீயில்லை
சுற்றமாய் நாங்கள் இங்கு
சுற்றியே கதறியழ
பற்றுடன் வாழ்ந்த
எம்மை விட்டுப் போனதேனோ!
உன் பிரிவைத் தாங்கும் வல்லமையின்றி
துடிக்கின்றோம், பதைக்கின்றோம்
இத்துயரம் மாறாது
எம் உயிர் உள்ளவரை

*உன்னை நினைத்து வாடும்:*
*அம்மா, சிவந்தன் (அண்ணா), சிவந்தா (அக்கா), சுரேந்திரா (அத்தான்), சுஜான், சுஜன்சன், கிருஷாந் (மருமக்கள்).*

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

# 14ஆம் ஆண்டு நினைவு நாள் — 2ஆம் ஆண்டு நினைவு நாள்

மண்ணுலகில் 23 ★ 10 ★ 1939



விண்ணுலகில் 04 ★ 12 ★ 1996

மண்ணுலகில் 19 ★ 01 ★ 1950



விண்ணுலகில் 18 ★ 11 ★ 2008

திதி: ஷஷ்டி


**மாரிமுத்து பாஸ்கரன்** — **பாஸ்கரன் சரஸ்வதி**

*அன்பெனும் பாலூட்டி அவனியிலே வாழ வைத்தீர்
அறிவெனும் ஞானமதை நெஞ்சினிலே ஏற்றி வைத்தீர்
சிரித்த முகத்துடனே பார் புகழ வாழ்ந்திருந்தீர்
மண்ணுலகம் போதுமென்று விண்ணுலகம் போயமர்ந்தீர்
வாழுகின்ற காலம் வரை உங்கள் நினைவோடு வாழ்ந்திருப்போம்*

பா.விஜயகுமார்,
கலைமகள் வீதி, கல்வியங்காடு

குடும்பத்தினர்.

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் குழந்தையா செல்லத்துரை

தோற்றம் 14.08.1914 — மறைவு 22.11.2005

## அமரர் நல்லம்மா செல்லத்துரை

தோற்றம் 16.05.1924 — மறைவு 06.08.2005

திதி: சஷ்டி

ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
என்றும் உங்களை மறவோம்.

கெற்றப்போலச் சந்தி, கட்டுவன் வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசனக் குளங்கள், மீன்பிடி இறங்கு துறைகள் அபிவிருத்திக்கு 'ஜெய்க்கா' நிறுவனம் நிதியுதவி

யாழ்ப்பாணம், நவ.27

ஜப்பானின் 'ஜெய்க்கா' நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் சேதமடைந்துள்ள நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் மீன்பிடி இறங்கு துறைகள் உள்ளிட்ட அடிப்படைக்கட்டுமான வசதிகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அவசரமாக புனர்நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளதாக இணங்காணப்பட்ட ஏழு நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைப்பதற்கான நிதியை யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திடம் 'ஜெய்க்கா' கையளித்துள்ளது.

அதேபோல சேதமடைந்துள்ள மீன்பிடி இறங்கு துறைகளைப் புனரமைப்பதற்கான நிதியை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடமும் அந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

நீர்ப்பாசனக் குளங்கள், மீன்பிடி இறங்கு துறைகள் ஆகியவற்றின் வேலைத்திட்டங்கள் சமூக மட்ட நிறுவனங்களான விவசாய சம்மேளனங்கள், மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் பங்களிப்புடனேயே முகாமை செய்யப்படவுள்ளன.

அத்துடன் 'ஜெய்க்கா' நிறுவனம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து சமூகமட்ட அமைப்புகள்மூலம் கண்ணிவெடி அபாயம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், கட்டுமான வேலைகளில் முகாமைச் சாதனங்களான கணக்குப் புத்தகங்கள் பேணல் மற்றும் வேலை மூலமான பயிற்சி என்பவற்றையும் வழங்கி வருகிறது.

சிறிய அளவிலான சமுதாய அடித்தள கட்டுமான வசதிகளை யாழ்.மாவட்டத்திலே புனர்நிர்மாணம் செய்யும் முன்னோடி வேலைத்திட்டங்கள் மூலம் 2 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான விவசாய மற்றும் மீன்பிடிக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கும் ஜெய்க்கா நிறுவனம் உதவியுள்ளது.

குறிப்பாகச் சாவகச்சேரி, கோப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, வேலணை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஜெய்க்கா நிறுவனத்தின் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பாக ஜெய்க்கா நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி அக்கீரா சிமுறா குறிப்பிடுகையில், 'ஜெய்க்கா' நிறுவனம் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கிலே சேதமடைந்துள்ள அடிப்படைக்கட்டுமான வசதிகளை புனர்நிர்மாணம் செய்வதில் 'ஜெய்க்கா' ஈடுபட்டுள்ளது - என்றார். (த-14)

## குடாநாட்டில் மீளக் குடியமர வந்த 50 முஸ்லிம் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், நவ.27

கடந்த சில தினங்களுக்கு முன் மீளக்குடியமர்வதற்கு சுமார் ஐம்பது முஸ்லிம் குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளன.

கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் வட பகுதியிலிருந்து வெளியேறிச் சென்று புத்தளம் மாவட்டத்தில் வசித்து வந்தவர்களில் ஒரு தொகுதியினரே மீளவும் குடியமர்வதற்கு யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவ்வாறு மீளக் குடியமர்வதற்கு யாழ்ப்பாணம் வந்துள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கான பதிவுகளை தற்போது கிராம அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். பொம்மை வெளி, நரவாந்துறைப் பகுதிகளில் அவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் இது வரையும் 300 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளதுடன் அதற்கான பதிவுகளையும் மேற்கொண்டுள்ளன. (ஜ-14)

## மாற்று ஆற்றலுள்ளோர் தின நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், நவ. 27

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகினால் நடத்தப்படும் உலக மாற்று ஆற்றலுள்ளோர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம், வடமாகாண விசேட கல்வி இணைப்பாளர் திருமதி நிஷாந்தி பெர்ணான்டோ ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-38)

## சமூகப் பொறுப்புள்ள உணர்திறன் மிக்க ஊடகங்கள் தேசத்தை வளர்க்கின்றன

### யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம், நவ.27

சமூகப் பொறுப்புள்ள உணர்திறன்மிக்க ஊடகங்களே தேசத்தை வளர்க்கின்றன. தனி ஒரு மனிதனுடைய மேம்பாடு என்பது ஊடக வளங்களின் செயற்பாடுகளிலே தங்கி இருக்கின்றது என யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் இங்கிலாந்து ஊடக வளவாளர் பியோனா பார்ட்டனால் 30 மணித்தியாலங்கள் நடத்தப்பட்ட ஊடகப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் முழுநேர இதழியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:- தற்போது பாடசாலைகளில் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளில் ஊடகவியல் என்பது பாடத்திட்டமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே அது போலவே எமது நாட்டிலும் மாற்றப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் ஊடகம் தனிப்பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் பயனுடையதாக இது அமையும். அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் எனக் காலத்திற்கு ஏற்றாற்போல் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.

எனவே, ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் வெளிநாட்டைச் சேர்ந்த வளவாளர் ஒருவரினால் ஊடகம் சம்பந்தமான ஆரம்பப் பயிற்சியை பெற்ற மாணவர்களை வாழ்த்துகிறேன். இவர்கள் அனைவரும் பெறப்பட்ட பயிற்சிகளைப் பயனுள்ளதாகப் பயன்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த ஊடகவியலாளர்களாக வரவேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பும் ஆகும்.

எமது தேசத்தில் சிறந்த ஊடகங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. அவை சிறந்த மனிதாபிமானம்மிக்க நல்ல கருத்துக்களையும் மக்களது பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் தமது சேவைகளை வழங்க முன்வரவேண்டும் - எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் "மனித வாழ்வியலைச் சித்தரிக்கும் படங்கள்" என்னும் தலைப்பில் பயிற்சி மாணவர்களால் எடுக்கப்பட்ட படங்களில் சிறந்த படங்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் இங்கிலாந்தின் ஊடக வளவாளர் பியானோ பார்ட்டின் ஊடக வளங்கள் நிலைய இயக்குநர் விமல் சாமிநாதன், ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் தேவானந்த் ஆகியோர் கலந்து கொண்டனர். (201-313-311)

## மாகாண மட்ட சிறுவர் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.27

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாண மட்ட சிறுவர் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவிற்குப் பிரதம விருந்தினராக முன்னாள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவும், கௌரவ விருந்தினராகக் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப்பிரிவுப் பணிப்பாளர் திருமதி அசோகா பண்டிதசேகரவும் கலந்து கொள்வர்.

இப்பரிசளிப்பு விழாவில் சிறந்த சாதனையாளர்களாக இறுதி மூன்று வருடங்களில் தெரிவு செய்யப்பட்ட 5 மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

2010ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் 3ஆம் இடங்களையும் 190 புள்ளிகளையும் சமமாகப் பெற்ற யோ.பிரியநேசன் (வ/பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி), ஜெனிங்ஸ் யூட் மிதுஷன் பிகிறாடோ (மன்/புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை) ஆகிய மாணவர்களையும், 2009 ஆம் ஆண்டு தமிழ்மொழி மூலம் தேசிய ரீதியில் முதலாவது இடத்தையும் 192 புள்ளிகளையும் பெற்ற லோ.ஸ்ரீகர்சன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) இரண்டாவது இடத்தையும் 191 புள்ளிகளையும் பெற்ற ச.கௌரீசன் (வ/ பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி), மற்றும் 2008 ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலம் தேசிய ரீதியில் முதலாவது இடத்தையும், 176 புள்ளிகளையும் பெற்ற தருமலிங்கம் பாசுபதன் (யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்) ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்படவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறுவர் நிகழ்ச்சிகளும், பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (ற)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### பயிற்சியின் உயர்ச்சி...



நிறைவு: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்ட பத்திரிகையில் அடிப்படைக்கான குறுங்காலப் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றது.
நிகழ்வில் வளவாளராகக் கலந்துகொண்ட இங்கிலாந்து ஊடக வளவாளர் பியானோபாட்டர் மங்கள விளக்கேற்றுகிறார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மாணவி ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குகின்றார். (201-23-86)

## மருதனார்மடத்தில் திருடப்பட்ட மோ.சைக்கிள் 6 மாதங்களின் பின் வவுனியாவில் மீட்பு

வலி.வடக்கு, நவ.27

கடந்த ஆறு மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் வவுனியாவில் இடம்பெற்ற விபத்தொன்றில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தெரியவருவதாவது:-

சுன்னாகம் மருதனார்மடத்தில் கடந்த புத்தாண்டையொட்டி இராணுவத்தினர் நடத்திய களியாட்ட நிகழ்வைப் பார்த்துக்கொண்டு இருந்த சுன்னாகம் மயிலணியைச்சேர்ந்த இளைஞர் ஒருவரின் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது.

சுன்னாகம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸார் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும் மேற்படிச் சம்பவம் குறித்து அறிவித்து இருந்தனர்.

கடந்த வாரம் வவுனியா நகரப் பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளிள் சிக்கியதைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தப்பிச் சென்ற நிலையில் மோட்டார் சைக்கிள் வவுனியா பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வவுனியா பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸாருக்கு உரிய தகவல் வழங்கப்பட்டு மோட்டார் சைக்கிளின் உரிமையாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. (201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2011

## கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிலையங்களை 01.01.2011 தொடக்கம் 31.12.2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமையக் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 26.11.2010 இருந்து 09.12.2010வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 13.12.2010 பி.ப 3மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி : 14.12.2010 பி.ப 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் : கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய **உள்ளூராட்சி உதவி ஆணையாளர்**, பிராந்திய **உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி** என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப்பெறக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | ஆட்டிறைச்சிக் கடை | | |
| 01 | பரந்தன் | 5000.00 | 500.00 | 144000.00 |
| 02 | முரசுமோட்டை | 5000.00 | 500.00 | 90000.00 |
| 03 | கண்டாவளை | 5000.00 | 500.00 | 90000.00 |
| 04 | தர்மபுரம் | 5000.00 | 500.00 | 108000.00 |
| 05 | கல்லாறு | 5000.00 | 500.00 | 90000.00 |
| 06 | புன்னைநீராவி | 5000.00 | 500.00 | 108000.00 |
| 07 | பிரமந்தனாறு | 5000.00 | 500.00 | 90000.00 |
| 08 | இராமநாதபுரம் | 5000.00 | 500.00 | 108000.00 |
| 09 | வட்டக்கச்சி | 5000.00 | 500.00 | 144000.00 |
| 10 | இரணைமடுச்சந்தி | 5000.00 | 500.00 | 108000.00 |
| 11 | உருத்திரபுரம் D8 | 5000.00 | 500.00 | 108000.00 |
| 12 | உருத்ததிரபுரம் D10 | 5000.00 | 500.00 | 108000.00 |
| 13 | ஜெயந்திநகர் | 5000.00 | 500.00 | 90000.00 |
| 14 | ஊற்றுப்புலம் | 5000.00 | 500.00 | 90000.00 |
| 15 | அம்பலப்பெருமாள் சந்தி | 5000.00 | 500.00 | 90000.00 |
| 16 | கோணாவில் | 5000.00 | 500.00 | 90000.00 |
| 17 | வன்னேரி | 5000.00 | 500.00 | 90000.00 |
| 18 | ஸ்கந்தபுரம் | 5000.00 | 500.00 | 144000.00 |
| 19 | கிளிநொச்சி இல01 | 5000.00 | 500.00 | 216000.00 |
| 20 | கிளிநொச்சி இல 02 | 5000.00 | 500.00 | 216000.00 |
| | | கோழியிறைச்சிக்கடை | | |
| 01 | பரந்தன் | 5000.00 | 500.00 | 180000.00 |
| 02 | முரசுமோட்டை | 5000.00 | 500.00 | 144000.00 |
| 03 | கண்டாவளை | 5000.00 | 500.00 | 144000.00 |
| 04 | தர்மபுரம் | 5000.00 | 500.00 | 180000.00 |
| 05 | கல்லாறு | 5000.00 | 500.00 | 144000.00 |
| 06 | புன்னைநீராவி | 5000.00 | 500.00 | 144000.00 |
| 07 | பிரமந்தனாறு | 5000.00 | 500.00 | 144000.00 |
| 08 | இராமநாதபுரம் | 5000.00 | 500.00 | 144000.00 |
| 09 | வட்டக்கச்சி | 5000.00 | 500.00 | 180000.00 |
| 10 | இரணைமடுச்சந்தி | 5000.00 | 500.00 | 144000.00 |
| 11 | உருத்திரபுரம் D8 | 5000.00 | 500.00 | 144000.00 |
| 12 | உருத்திரபுரம் D10 | 5000.00 | 500.00 | 144000.00 |
| 13 | ஜெயந்திநகர் | 5000.00 | 500.00 | 108000.00 |
| 14 | ஊற்றுப்புலம் | 5000.00 | 500.00 | 90000.00 |
| 15 | அம்பலப்பெருமாள் சந்தி | 5000.00 | 500.00 | 90000.00 |
| 16 | கோணாவில் | 5000.00 | 500.00 | 90000.00 |
| 17 | வன்னேரி | 5000.00 | 500.00 | 90000.00 |
| 18 | ஸ்கந்தபுரம் | 5000.00 | 500.00 | 144000.00 |
| 19 | கிளிநொச்சி இல 01 | 5000.00 | 500.00 | 252000.00 |
| 20 | கிளிநொச்சி இல 02 | 5000.00 | 500.00 | 252000.00 |
| | | மாட்டிறைச்சிக்கடை | | |
| 01 | பரந்தன் | 10000.00 | 500.00 | 216000.00 |
| 02 | முரசுமோட்டை | 10000.00 | 500.00 | 144000.00 |
| 03 | கண்டாவளை | 10000.00 | 500.00 | 144000.00 |
| 04 | தர்மபுரம் | 10000.00 | 500.00 | 180000.00 |
| 05 | கல்லாறு | 10000.00 | 500.00 | 144000.00 |
| 06 | புன்னைநீராவி | 10000.00 | 500.00 | 216000.00 |
| 07 | பிரமந்தனாறு | 10000.00 | 500.00 | 144000.00 |
| 08 | இராமநாதபுரம் | 10000.00 | 500.00 | 180000.00 |
| 09 | வட்டக்கச்சி | 10000.00 | 500.00 | 216000.00 |
| 10 | இரணைமடுச்சந்தி | 10000.00 | 500.00 | 180000.00 |
| 11 | உருத்திரபுரம் D8 | 10000.00 | 500.00 | 180000.00 |
| 12 | உருத்திரபுரம் D10 | 10000.00 | 500.00 | 180000.00 |
| 13 | ஜெயந்திநகர் | 10000.00 | 500.00 | 144000.00 |
| 14 | ஊற்றுப்புலம் | 10000.00 | 500.00 | 144000.00 |
| 15 | அம்பலப்பெருமாள் சந்தி | 10000.00 | 500.00 | 144000.00 |
| 16 | கோணாவில் | 10000.00 | 500.00 | 144000.00 |
| 17 | வன்னேரி | 10000.00 | 500.00 | 144000.00 |
| 18 | ஸ்கந்தபுரம் | 10000.00 | 500.00 | 180000.00 |
| 19 | கிளிநொச்சி இல 02 | 10000.00 | [illegible] | [illegible] |
| 20 | கிளிநொச்சி இல 03 | 10000.00 | [illegible] | [illegible] |

**நிபந்தனைகள்:**

01. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒருவார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒரு ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
02. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.
03. கடந்தகால கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்கள் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவராவர்.
04. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

**மோ.அருள்சோதி**
*செயலாளர்,*
*கரைச்சிப் பிரதேச சபை,*
*கிளிநொச்சி.*

(சி/572566)

## மக்கள் வங்கி - சங்கானை 208

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டீ எனும் பிரிவின் கீழ் பகிரங்க விற்பனை

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரிச் சந்தி, வண்ணை சிவன்கோயில் மேற்கு வீதி, சிவன்பண்ணை வீதியில் இல.190 இல் அமைந்துள்ள பெரிய மாடி வீடு கொண்ட பெறுமதி வாய்ந்த ஆதனம்

## ஏல விற்பனை

### திகதி மாற்ற அறிவித்தல்

மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ் விவரிக்கப்படும் ஆதனத்தைக் முன் குறிப்பிட்ட திகதியில் அல்லாது எதிர்வரும் 11.12.2010ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவ்விடத்தில் நின்று நான் பகிரங்க ஏலவிற்பனை செய்வேன்.

**காணியின் விவரணம்:**

*வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார் பண்னை பரிஷ், வண்ணார்பண்ணை மேற்கு,*

'வெள்ளைச் சூரித்தரை' நிலம் குளி 15.5/8 உறுதியின்படி: ஆனால் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ்.நிர்மலேந்திரன் 2004.09.13 ஆம் திகதி வரையப்பட்ட இல.398இன் பிரிவின்படி நிலப்பரப்பு 00 குளி 15.389 ஒரு மாடிக் கட்டடம், கிணறு, பயிரிடப்பட்டவை, குறிப்பிட்ட குளி 15.389, எல்லை கிழக்கு கந்தப்பிள்ளை சிற்றம்பலம் ஆதனம்; வடக்கு செல்லத்துரை பெண் தெய்வானைப்பிள்ளை ஆதனம்; மேற்கு சிவன்பண்ணை வீதியும் கிருஸ்ணன் பெண் ராஜலட்சுமியின் ஆதனம்; தெற்கு முத்தையா குணரத்தினத்தின் ஆதனம். இலக்கம் - டி 639/82 இன் கீழ் யாழ்ப்பாணக் காணி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

**ஆதனத்துக்குச் செல்லும் வழி:**

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து மானிப்பாய் வீதி, வழியில் 500 மீற்றர் தூரத்தில் வரும்போது யா/வைத்தீஸ்வராக் கல்லூரிச் சந்தியில் இடதுபுறமாகத் திரும்பி தெற்கு நோக்கிச் செல்லும் பாதை சிவன் பண்ணை வீதி; இதில் இடது புறமாக இரண்டாவது ஆதனம்; இது ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸ் அருகில் அமைந்துள்ளது.கால்நடையாக 5 நிமிடங்களில் சென்றடையலாம்.

**மேலதிக விவரங்களுக்கு:**

16.07.2010 அரச வர்த்தமானியையும்
29.09.2010 உதயன் பத்திரிகையையும் தயவு செய்து பார்க்கவும்

**கொடுப்பனவு செலுத்தும் விதம்:**

ஏலவிற்பனை இறுதியில் தீர்ந்து விட்டதும் வெற்றி பெற்ற கொள்வனவாளர் கீழ்வரும் முறைப்படி கொடுப்பனவினைப் பணமாக உடன் செலுத்தவேண்டும்.

01. கொள்வனவு விலையில் 10 வீதம்
02. உள்ளூர் அதிகார சபையின் வரியாகக் கொள்விலையில் 1வீதம்
03. ஏலதாரரின் தரகுக் கட்டணமாக கொள்விலையில் 2 ½ வீதம்
04. இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக 500/=
05. விற்பனைச் செலவும் வேறு கட்டணங்கள் இருப்பின் அவற்றுக்கானப் பணம்.
06. விற்பனை உறுதிப்பத்திரம், முத்திரைக் கட்டணம் என்பவற்றுக்கான கட்டணம்.

கொள்வனவு விலையின் 90 வீதம் தொகையை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் மக்கள் வங்கி, பிரதேசத் தலைமை அலுவலகம், இல.79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் செலுத்துதல் வேண்டும். தவறும் பட்சத்தில் ஏற்கனவே செலுத்திய தொகையாகிய 10 வீதத்தைச் செலவாக இழக்க நேரிடுவதோடு மீண்டும் ஆதனத்தை ஏலத்தில் விற்கும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு.

உரித்து உறுதிகளையும், மேலதிக விவரங்களையும் யாழ்ப்பாணம் மக்கள் வங்கி, பிரதேசத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல.: 021 222 2601
021 222 2956

**கே.பி.பாலகிருஷ்ணன்**
*அதிகாரமளிக்கப்பட்ட ஏலதாரர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

இல. 692, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021 222 2940 - 5198

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் வெற்றியை இன்னமும் கொண்டாடும் அரச தரப்பு போருக்குக் காரணமான விடயத்துக்கு தீர்வுகாண முயலவில்லை

## நாடாளுமன்றத்தில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 27

ஏறக்குறைய 18 மாதங்களுக்கு முன்னர் முடிந்து போன போரின் வெற்றியை இன்னமும் கொண்டாடி வருகின்ற அரச தரப்பு, போர் தொடங்குவதற்குக் காரணமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தாராளப் போக்குடன் செயற்பட இன்னமும் முன்வருவதாகத் தெரியவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பான மூன்றாவது நாள் விவாகத்தில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அவரின் உரையின் விவரம் வருமாறு:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தைப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்பு பெருமையுடன் சமர்ப்பிக்கும் இந்த முதலாவது வரவு செலவுத்திட்டத்தின் மீது எனக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு எனது பெரு மகிழ்ச்சியை முதலில் இச்சபைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த வரவு - செலவுத் திட்டமானது எதிர்வரும் ஆண்டில் இந்நாட்டை வழி நடத்தப்போகும் வலிமை கொண்ட ஒரு முன்வைப்பு என்பதை நான் அறிவேன். எமது இலங்கைத் திருநாட்டை ஆசியாவின ஆச்சரியமாக மாற்றும் ஜனாதிபதியின் தூரநோக்கின் பலாபலன்களை இந்த நாட்டின் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் என சகல இனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கிட்டும் வகையில் இந்நாட்டு வழிநடத்தப்படுமானல் நான் மட்டுமல்ல என்னைத் தங்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்த தமிழ்மக்களும் பெரும் மகிழ்ச்சியடைவோம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அப்படியொரு சமாந்தரமான வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் போரின் கொடூரத்தால் முழுமையாகச் சிதைக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வு நியாயமான முறையில் வழமைக்கு கொண்டு வர முயற்சிகள் நேர்மையாக முறையில் எடுக்கப்படுமானால் நாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னிலங்கையில் 22 பெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டதாகவும் கமநெகும கிராமிய எழுச்சித்திட்டம் மூலம் 27,888 மில்லியன் ரூபா செலவில் 72,1005 கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இவ்வறிக்கையில் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டது. ஒரு நாட்டின் உறுதியான அபிவிருத்திக்குக் கிராமங்களில் முன்னேற்றமும் விவசாய உற்பத்தி அதிகரிப்பும் அவசியமானது என்பதை எவருமே மறந்துவிடமுடியாது.

ஆனால் இப்பெரும் திட்டத்தில் வடக்கு கிழக்கு - உதாசீனப்படுத்தப்பட்டு விட்டது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. கடந்த காலங்களில் போரைக் காரணம் காட்டி வடக்கின் அபிவிருத்தி மறுக்கப்பட்டது. இன்றோ போர் முடிந்து 18 மாதங்கள் முடிந்துவிட்டன. எனினும் வடக்கின் குறிப்பாக வன்னி யின் விவசாய அபிவிருத்தி தொடர் பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஒரு சிலருக்கு விவசாய உள்ளீடுகளும் விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன என்பதை நான் இங்கு மறுக்கவில்லை. ஆனால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய ஏறக்குறைய 3 லட்சம் மக்கள் எவ்வித நிதி ஆதாரமும் அற்றவர்கள்! எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையுடன் நிற்பவர்கள்! இவர்களுக்கு உதவிகள் உரிய முறையில் வழங்கப்படாவிட்டால் இவர்கள் வாழ்வை எப்படிக் கட்டியமைக்க முடியும்? இந்தியா உட்பட வெளிநாடுகளும் தொண்டர் நிறுவனங்களும் வழங்கும் உதவிகள் கூடச் சரியான முறையில் மக்களைச் சென்றடைவதில்லை.

### வன்னி நீர்ப்பாசனம் பாதிப்படைந்துள்ளது

போராலும் ஏனைய புறமொதுக்கல் காரணங்களாலும் வன்னியில் பல நீர்ப்பாசனக் குளங்கள் பராமரிப்பற்றுப் பழுதடைந்துள்ளன. இவற்றைத் திருத்தி மீண்டும் விவசாயத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அப்படி ஒன்றிரண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவை பல்வேறு நெருக்கடிகள் காரணமாக ஆமை வேகத்திலேயே இடம்பெறுகின்றன. இவை மூலம் நாட்டின் விவசாய உற்பத்திக்கு எமது மக்கள் பங்களிக்கமுடியுமா? எமது மக்களின் வாழ்வாதாரங்கள் மேம்படுமா?

கிளிநொச்சி வடக்கின் பொற்களஞ்சியம் என்பதை நீங்கள் அறிவீர்கள். கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் பகுதி விவசாய உற்பத்திகள் இரணைமடுக் குளத்தையே நம்பியுள்ளது. ஏறக்குறைய 20, 000 ஏக்கர் நெற்செய்கைக் காணிகளுக்கு இக் குளத்தின் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. இக்குளத்தின் கழிவுநீரிரும் மானாவாரியாகவும் ஏறக்குறைய பத்தாயிரம் ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்படுகிறது. அதுமட்டுமின்றி இரணைமடு நீர்பாயும் பகுதிகளில் கிணறுகளின் நீர்மட்டம் குளத்தின் நீர் மட்டத்தைப் பொறுத்தே அமையும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் இரணைமடு நீர் வற்றினால் கிளிநொச்சியின் பல கிராமங்களின் நீர்த் தட்டுப்பாடு எற்பட்டுவிடும். அதுமட்டுமின்றி சிறுபோக வேளாண்மை காலங்களில் குளத்தின் நீர்மட்டத்தைப் பொறுத்து அரைப்பகுதிக்கோ அல்லது மூன்றில் ஒரு பகுதிக்கோ மட்டும் நீர் வழங்கப்படும். அதாவது இரணைமடு நீர் கிளிநொச்சியின் விவசாய, குடிதண்ணீர் தேவைகளுக்கே போதாது என்பது நடைமுறைக்கு யதார்த்தம்.

இப்படியான நிலையில்தான் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டு செல்லும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

### சட்ட விரோத மண் அகழ்வு

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகிறது. இதற்குச் சில அரசுக்கு சார்பான அரசியல்வாதிகளும் துணைபோகின்றனர். அதேபோல் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள வலிகாமத்தில் சட்டவிரோதமாக சுண்ணக்கல் அகழ்ந்து எடுக்கப்படுகிறது. இவற்றின் காரணமாக கடல்நீர் உட்புகும் அபாயமும், கிணறுகள் உவர் நீராக மாறும் ஆபத்தும் ஏற்படுகிறது. எனவே முதலில் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்துநிறுத்த வேண்டும். அது மட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் கோயில்கள் அருகிலும் வயல்கள் நடுவிலும் மழை நீரைத் தேக்கும் குளங்கள் உண்டு. இவை நிலக்கீழ் நீரோட்டத்துக்கு அவசியமானவை. அவை இன்று குப்பை கொட்டும் இடங்களாகவும் வீடு கட்டும் இடங்களாகவும் மாறிவிட்டன. உடனடியாகவே இச்சிறுகுளங்கள் சுத்தப்படுத்தப்பட்டு நீர் தேக்கப்பட வேண்டும்.

இவற்றைச் செய்யாமல் இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு சென்று கிளிநொச்சியின் விவசாயத்தை அழிக்க முயல்வதை ஏற்க முடியாது. அதற்காக நாம் யாழ்ப்பாணத்துக்கு இரணைமடு நீர் கொண்டு செல்வதற்கு எதிரானவர்கள் என்று அர்த்தமல்ல! இரணைமடுக் குளக்கட்டு உயர்த்தப்பட்டு கூடுதலான நீர் கொள்ளளவு செய்யப்படும் போது இது ஏற்றுக்கொள்ளப்படமுடியும்.

இல்லையேல் இந்தியாவில் காவிரி நீர்ப் பிரச்சினையில் கர்நாடகத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் முரண்பாடு ஏற்படுவதைப் போல் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் முரண்பாடு தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவே முதலில் குளக்கட்டை உயர்த்தும் நடவடிக்கையை மேற்கொள்ளும்படி இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டில் வறுமை நிலை 15.2 வீதத்திலிருந்து 7.6 வீதமா கக் குறைந்துவிட்டதாக இந்த வரவு செலவுத்திட்டம் பெருமைப்படுகிறது. ஆனால் வன்னியில் 15.2 வீதம் 90 வீதமாயுள்ளது என்பதை நீங்கள் அறிய வேண்டும். ஏனைய இடங்களைப் போன்று அங்கும் 7.6 வீதத்துக்கு குறைய வேண்டுமானால் உடனடியாகவே அவர்களின் விவசாய மேம்பாடு தொடர்பான திட்டங்களை துரிதமாக ஆரம்பிக்க வேண்டும். பாடசாலை செல்லும் சிறுவர் களின் தொகை 95 வீதத்திலிருந்து 100 வீதமாகிவிட்டது என இங்கு கூறப்பட்டது. வன்னியில் பல இடங்களில் இன்னும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் பல பாடசாலைகள் கட்டங்களின்றி தளபாட வசதியின்றி போக்கு வரத்து வசதியின்றி நடைபெறும் இந் நாள்களில் 100 வீதம் மாணவர்கள் பாடசாலை செல்ல முடியுமா?

எனவே வன்னியில் படசாலைகளை அபிவிருத்தி செய்யவும் ஏனைய கல்வித் தேவைகளை ஈடுசெய்யவும் வன்னிக்கு பிரத்தியேக நிதி ஒதுக்கவேண்டும் என நான் இச்சபையில் கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

### வன்னி மீள்குடியமர்வு

இவற்றைப் பற்றியெல்லாம் நான் இங்கு குறிப்பிடும்போது மீள்குடியேற்றம் பற்றிக் குறிப்பிடாமல் இருந்துவிடமுடியாது. இப்பகுதியில் இரண்டு லட்சத்து அறுபத்து மூவாயிரம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுவிட்டதாகவும் அவர்களின் வாழ்க்கை வழமைக்குத் திரும்பிவிட்டதாகவும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமன்றி மீள்குடியேற்றப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய 200 மில்லியன் ஒதுக்கப்பட்டதாகவும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டது.

இன்னும் எமது மக்கள் கூடார வாழ்க்கையே வாழ்கின்றனர். போக்குவரத்து வசதிகள் போதியளவு இல்லை, மருத்துவ வசதிகளுக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலைமை, வீடுகள் படுமோசமான நிலையில், மின்சார வசதியில்லை, இடிந்த கட்டடங்களோ கூரையற்ற வீடுகளோ இன்னும் சீர்செய்யப்படவில்லை.

இப்படியான ஒரு நிலையில் இந்த மக்கள் வழமையான வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபா இப்பகுதியின் தேவையின் ஒரு பகுதியைக் கூடப் பூர்த்தி செய்யக் கூடப் போதாது என்பதை நீங்கள் அறிவீர்கள்? ஆனால் அந்த நிதி கூடச் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது தான் ஜீரணிக்கமுடியாத விடயம்.

ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதி இங்கு ஆடம்பர விழாக்களுக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் களை வரவேற்கும் நிகழ்வுகளுக்குமே செலவிடப்படுகின்றன. கூரையற்ற கட்டடங்களையும் இடிபாடுகளையும் திறப்பு விழா நடத்தி திறந்து வைத்தமைக்காக வடமாகாண ஆளுநரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஜனாதிபதியால் கண்டிக்கப்பட்டதை நாம் மறந்துவிடமுடியாது.

இதன் மூலமே இந்த மக்களின் வாழ்க்கை வழமைக்குத் திரும்பிவிட்டதாக ஜனாதிபதிக்குப் பிழையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

இந்தியாவின் ஐம்பதினாயிரம் வீட்டுத்திட்டம் எமது மக்களில் ஒரு பகுதி தேவையையே பூர்த்திசெய்ய முடியும். எனவே அரசும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளையும் நிவாரணங்களையும் வழங்க நிதி ஒதுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். இந்நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் அதற்கான உரிமை எமக்கு உண்டு என்றே நம்புகிறோம்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த வலிகாமம் மக்கள் கடந்த 20 வருடங்களாக அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் சொல்லொணாக் கஷ்டங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். போர் முடிந்து 18 மாதங்களாகிவிட்டன. அவர்கள் மீள் குடியேற்றப்படுவதற்கு நீதிமன்றமும் அனுமதித்துவிட்டது.

எனவே அவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் அவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும். அப்படி மீள்குடியேற்றப்பட முடியாதவர்களுக்கு வேறு இடங்களில் காணிகள் வாங்கி வீடு கட்டிக்கொடுக்க வேண்டும்.

வன்னியில் போரால் பாதிப்புற்று தம் துணைவர்களை இழந்து, வாழ வழியற்று நிற்கும் இளம் தாய்மாரின் கண்ணீரைத் துடைக்க அரசு கரம் தரவில்லை. அவர்களுக்கு ஒரு சிறு துளி உதவியைக்கூடச் செய்வதற்கு அரசாங்கத்துக்கு மனம் இல்லை. இதனால் இன்னமும் இவர்கள் வாழ வழி தெரியாமல் பிறரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், இவர்களுக்கு இத்தகைய பாதிப்பை நிகழ்த்திய யுத்தத்தில் பங்கெடுத்த படையினருக்கு - அவர்களின் குழந்தைகளுக்கு - ஊக்குவிப்பை வழங்க முன் வந்திருக்கும் அரசு இந்த ஏழைத் தாய்மாருக்கு என்ன செய்யப்போகிறது? தமது அங்கங்களை இழந்து தவிக்கும் சிறுவர்களுக்கும் ஏனையோருக்கும் என்ன மருந்து அரசு தரப்போகிறது? சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தில் வசதியாக வாழ்ந்துவிட்டு இன்று தங்க இடமில்லாமல் அகதிகளாகவே அலைந்துகொண்டிருக்கும் மக்களுக்கு அரசு செய்யப் போகும் பிராயச்சித்தம் தான் என்ன? என்ற கேள்வி இங்கே எழுகிறது.

ஏறக்குறைய 18 மாதங்களுக்கு முன்னர் முடிந்துபோன போரின் வெற்றியை இன்னமும் கொண்டாடிவருகின்ற அரசு தரப்பு, போர் தொடங்குவதற்குக் காரணமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தாராளப் போக்குடன் செயற்பட இன்னமும் முன்வருவதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களின் மனதை வெல்லும் எந்த நடவடிக்கையிலும் அரசு இறங்கவே இல்லை. மாறாக இன்னமும் கசப்புணர்வுகளை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகளை அது மேற்கொண்டு வருகிறது. குறிப்பாகத் தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிகழ்த்துவதில் அரசு குறியாக உள்ளது. இது எதிர்காலத்தில் ஏதோ ஒரு ரூபத்தில் தமிழர் தரப்பு தனது எதிர்ப்புணர்வை வெளிக்காட்டுவதற்கும், ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தை வலியுறுத்துவதற்குமே உதவக்கூடும். ( 18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

யாழ்.நகரில் உள்ள மருந்தகத்திற்கு மருந்து விற்பனையில் அனுபவம் உள்ள ஊழியர்கள் தேவை.

தொடர்பு: 021 222 4386

(106489)

**வீடு வளவு விற்பனைக்கு**

மானிப்பாய் மெமோரியல் வீதியில் 4பரப்பு 7குழி, 3அறைகள், சாப்பாட்டு அறை, சமயலறை, சுற்றுமதில் போன்ற வசதிகள் கொண்ட புதியவீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0717353524 (106154)

# கனடா வழங்கும் அகதி அந்தஸ்து தொடர்பாக அவதானிக்கின்றது அந்நாட்டு தமிழ் காங்கிரஸ்

கொழும்பு, நவ. 27

கனடாவில் அகதிகளுக்கு தஞ்மளிக்கும் நடைமுறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி தொடர்பாக அவதானித்து வருவதாக கனேடிய தமிழ்க் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தமிழ்க் காங்கிரஸின் சட்டத்தரணியான கௌரி ஆனந்தசங்கரி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் கனடாவில் அகதிகளை ஏற்றுக்கொள்ளும் நடைமுறை 80 வீதத்திலிருந்து 47 வீதமாக வீழ்ச்சியடைந்தது.

இந்தநிலையில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கனடாவுக்கு 'சன் சீ' கப்பல் மூலம் சென்ற இலங்கை அகதிகளுக்கும் இந்த நடைமுறையினால் பாதிப்பு ஏற்படும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், ஒரு மாதத்தைக் கருத்திற் கொண்டு, அகதிகள் அங்கீகாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வரமுடியாது எனவும் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்

2009 ஆண்டில் கனடா, 90.7 வீத தமிழர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 26 . 02 . 1926

ஆண்டவன் அடியில் 23 . 01 . 1991

**கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு**

திதி: பூர்வபக்க அட்டமி

பாசமுடன் எம்மை வளர்த்த
அன்புத் தெய்வம் பப்பா, தாத்தா
இருபது ஆண்டுகள் கழிந்தாலும்
ஆறவில்லை எம்துயர்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 12 . 11 . 1929

ஆண்டவன் அடியில் 18 . 12 . 2008

**திருநாவுக்கரசு மனோன்மணி**

திதி: ஷஷ்டி

அன்பாலும் பண்பாலும்
பாசமுடன் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!
அம்மா, அம்மம்மா
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறாது எம்துயர்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

'திருமனோவாசா'
வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.

பிள்ளைகள்,
அருமைப் பேரன்.

## காரைநகர் பிரதேசசபை கேள்வி அறிவித்தல் கால நீடிப்பு ஆலடி, வலந்தலை மீன்சந்தை குத்தகை- 2011

மேற்படி விடயமாக 11.11.2010 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த குறித்த கேள்விக்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி 26.11.2010 ஆம் திகதியிலிருந்து 03.12.2010 ஆம் திகதிவரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

காரைநகர் பிரதேசசபை,
காரைநகர். 27.11.2010.

இரா.லோகநாதன்,
காரைநகர், செயலாளர், பிரதேசசபை, காரைநகர்.

(ஓ/572578)

## நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவு கூரல்



திருமதி
**அன்னபூரணம் தேவராசா**

திதி: அபரபக்க சஷ்டி
(27.11.2010)

தோற்றம்: 10.08.1933
மறைவு: 07.12.2009

நீங்கள் மறைந்த நொடி முதல்
இவ்வார்த்தை விட வேறு
வார்த்தைகள் இல்லை-
மனைவி, அம்மா, மாமி, அம்மம்மா, அப்பம்மா
உயிரில் நீங்கள் எங்கள்-
மனைவி, அம்மா, மாமி, அம்மம்மா, அப்பம்மா
உங்களைப் பிரிந்து ஓராண்டு
உருண்டோடி விட்டது
எமக்கெல்லாம் என்றும் வழி நடத்துவீர்கள்
என்று நாம் நினைத்திருக்க
கணப்பொழுதில் எம்மை எல்லாம்
ஏன் தவிக்க விட்டுச் சென்றீர்கள்
உங்கள் அன்பு மட்டும்தான் எமக்கோர்
ஆறுதல் மருந்து
உங்கள் பண்பு ஒன்றே எங்கள் வழி
உங்கள் பண்பு ஒன்றே எங்கள் வழி காட்டி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இ.தவராஜா,
தபால் கந்தோர் ஒழுங்கை,
கொக்குவில்.

(105914)

**சுவர்ணமஹால்**

**பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்**

யாழ் மக்களுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம்

03 மாத நிலையான வைப்புக்கு ஆண்டு ஒன்றிற்கான வட்டி வீதம்

**14.00%**

**(A.E.R.14.75%)**

(சிரேஸ்ட பிரஜைகளுக்கு)

இந்த அரிய வாய்ப்பு எமது கிளை யாழில் தடம் பதிக்கும் நாளான 06.12.2010 அன்று மட்டுமே

இல. 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : டிலாணி 077 22 68 555
: ராகுலன் 077 22 68 723

**எமது பிரதான சேவைகள்**

- நிலையான வைப்புகள்
- சேமிப்பு வைப்புகள்
- தங்க நகை அடகு சேவை
- வாடகை கொள்வனவு
- நிதிக்குத்தகை (லீசிங்)

SES

**சுவர்ணமஹால்**
பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்

A trust etched in gold

இல: 654, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0112 556160-4
தொலைநகல் : 0112 595062/2589823 மின் அஞ்சல்: infor@sfs.lk இணையத்தளம்: www.sfs.lk

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்:
கலாநிதி சோமா எதிரிசிங்க (அவைத்தலைவி) ஜே.எச். எதிரிசிங்க (பிரதி அவைத்தலைவர்) ஏ.டி.. எதிரிசிங்க (பணிப்பாளர்) என்.பி. எதிரிசிங்க (பணிப்பாளர்) ஏ.எஸ்.எதிரிசிங்க (பணிப்பாளர்) சுனில் அபேரட்ன (பணிப்பாளர்) FCA(SL), FSCMA(UK), FCMA (SL), CMA (AUS) மஹேந்திர டி சில்வா (பணிப்பாளர்) MBA, FCA, FSCMA (AUS) சமீர கனேகொட (பணிப்பாளர்/நிறைவேற்று அதிகாரி) ACA, B.B.Mgt. (Acc), ASCMA.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் 1988ம் ஆண்டின் 78ம் இலக்க நிதி கம்பனிகள் சட்டத்தின் ...
பதிவு இல : PB 594

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 10 . 09 . 1939



விண்ணில் 27 . 11 . 2000

**அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்**

(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி)

திதி: பூர்வபக்க துதியை (07.12.2010)

இத்தரையில் எத்தனை ஆண்டுகள்சென்றாலும்
இனியவரே உம்மை யாம்மறவோம் என்றும்
உத்தமராய் உலகில் உயர்வுடனே திகழ்ந்தவரே
உறவுகளை தவிக்கவிட்டு எங்குநீர் சென்றீர்

காலங்கள் பத்துக் கடந்தோடிப் போயினும்
ஞாலத்தில் எங்கள் நினைவுகளில் நிலைத்திடுவீர்
நீலவானம் நீ... இழந்ததுபோல் நாமும்
நிலந்தனிலே ...கின்றோம் நின்பிரிவால் என்றும்

மாண்புறும் உ...டலும் இராணுவ வாகனத்தால்
மண்மீது சாய்ந்ததுவோ மறுகிநாம் நிற்கின்றோம்
மாண்புடைய பாரதத்தில் மன்னுயிரும் பிரிந்ததுவோ?
மறுபிறப்புத் தனிலேனும் வருவாய் எம்முடனே

குடும்பத்தின் தலைவனாய் குன்றாத ஒளிவிளக்காய்
நடமாடும் தெய்வமாய் நானிலத்தே மிளிர்ந்தவரே
வடமிழந்த தேர்போல் வையகத்தே ஆகிவிட்டோம்
வாரீரோ விரைந்து எம்துயரைத் தீர்த்திடவே!

30, விவேகானந்த றோட்,
கொழும்பு-6.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்.

(106474)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களியாட்ட மையங்களை அங்கீகரிக்கும் சட்டம் நிறைவேறிய பின் நாட்டில் ஓயாத மழை, வெள்ளம்!

உதயன் சபைச் செய்தியாளர்:
இரா.புத்திரசிகாமணி

தந்தையா, அரசியல்தந்தையா? இப்படி ஒரு சுவையான சர்ச்சை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது.

ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, கால்நடை பால் உற்பத்தி தொடர்பாக விவரிக்கும்போது இன்று நாட்டில் பால் உற்பத்தியில் பெரும்பாலான பெண்களே ஈடுபட்டுள்ளனர் என்று கூறினார்.

அப்போது எதிர்த்தரப்பின் முன் வரிசையில் அமர்ந்திருந்த ஜோன் அமரதுங்க, ஆரிய விராக்காரிய வசம், ஹந்துன ஆகியோர் அடிக்கடி இடைமறித்துக் கேள்விகளைத் தொடுத்துக்கொண்டிருந்தனர்.

இவ்வேளையில் ஹர்ஷன் எம்.பியைப் பார்த்து பெரகுட்டி பால் தொழிற்சாலையை தனியார் மயப்படுத்துவதை இந்தச் சபையில் உங்கள் தந்தை வன்மையாகக் கண்டித்தார் அதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்றார் அமைச்சர் தினேஷ்.

இதனை இடைமறித்த எதிர்க்கட்சிக் கொரடாவான ஜோன் அமரதுங்க, அமைச்சர் அவர்களே நண்பர் ஹர்ஷனின் தந்தை நாடாளுமன்றத்திற்கு வரவே இல்லையே அவர் எப்படி இந்தச் சபையில் பேசி யிருக்கமுடியும் என்றார்.

அப்படியா? நான் அவருடைய தந்தையைப் பற்றிக்கூற வில்லை. அவரது அரசியல் தந்தையான நெல்சன் அவர்களைத்தான் குறிப்பிட்டேன். அவர் மட்டும்தானே பொலன்னறுவை மாவட்டத்தில் ஒரே ஒரு அமைச்சராக இருந்தார். அதைத்தான் சுட்டிக்காட்டினேன் என்றார் அமைச்சர்.

இதனைத் தொடர்ந்து ஜோன் அமரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினரின் குடும்பத்தில் அல்லவா குழப்பத்தை ஏற்படுத்தப் பார்க்கின்றார் என்றார். இதனால் சபையில் கலகலப்புக் காணப்பட்டது.

தொடர்ந்து அமைச்சரின் தந்தை தொடர்பாகவும் பேசப்பட்டது. அமைச்சர் அவர்களே ஐக்கிய தேசியக் கட்சி அரசு உங்கள் தந்தையையும் சிறையில் அடைத்ததாகக் கூறினீர்கள். அப்போது அவரும் அந்த அரசுடன்தானே இருந்தார் என்றார் ஜோன் அமரதுங்க.

இல்லை, இல்லை எனது தந்தை தேசிய அரசில் இணைந்து இருந்தாரேயன்றி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவில்லை. ஆனால் உங்கள் நண்பர்கள் பலர் இன்று எம்மோடு இருக்கின்றனர் என பந்தைத் திருப்பியடித்துவிட்டார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

நாடாளுமன்றம் வழமைபோல் சபாநாயகர் தலைமையில் காலை 9.30 மணிக்குக் கூடியபோது ஆரம்பக் கட்டமாக உறுப்பினர்களின் வாய்மூலவிடைக்காகபதில்கள் அளிக்கப்பட்டன.

கேள்வி நேரத்தின்போது

## சபையில் கேட்டவை

சர்ச்சைகளும் கிண்டல்களும் இடம்பெறுவது சகஜம் தானே. இன்றும் அஸ்வர் எம்.பி. அடிக்கடி சில கருத்துகளைக் கூறிக் கொண்டிருந்தார். இதனை இடையூறு என்றும் கூறலாம்.

அப்போது தயாசிறி ஜயசேகர எம்.பி., சபாநாயகரிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார். அதாவது, ஐயா இந்தச் சபையில் தேவை இல்லாத குப்பைகள் வந்து குவிந்துள்ளன. அந்தக் குப்பைகளை அகற்ற ஒரு அமைச்சரை உருவாக்கினால் நல்லது'' - என்றார்.

பின்னர் எதிர்க்கட்சிகளின் சார்பில் கருஜயசூரிய விவாதத்தை ஆரம்பித்தார். அரசு பாதுகாப்புக்காகப் பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளது ஏன்? அரசின் திட்டத்தின்படி சகல பொலிஸ் நிலையங்களிலும் விசேட அதிரடிப் படையினரை சேவையில் ஈடுபடுத்தப்போவதாகவும் கூறப்படுகின்றது. இது முழு நாட்டையுமே இராணுவ மயப்படுத்தும் ஒரு திட்டம். இது ஆரோக்கியமாக அமையாது.

முல்லைத்தீவு வள்ளிபுனம் காட்டில் 21 படையினரை ஒரே இடத்தில் கொலை செய்தவர்கள், அரச அனுசரணையில் சுகபோகம் அனுபவிக்கின்றனர். ஆனால், அப்படுகொலைகளில் தொடர்புடையவர்களை அழித்து நாட்டைப் பாதுகாத்த மாவீரர் சரத்பொன்சேகா இன்று எந்த விதமான வசதிகளும் இல்லாமல் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார் என்றும் சுட்டிக்காட்டினார் கரு ஜயசூரிய.

இவருக்குப் பதில் அளித்தார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

எதிர்க்கட்சி என்பதால் அரசு முன்வைக்கும் எல்லா விடயங்களையும் எதிர்க்கக்கூடாது. நன்மையானவற்றை ஆதரிக்கவும் வேண்டும்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் ஓட்டை விழுந்த படகில் ஏறித் தடுமாறிக் கொண்டிருக் கின்றனர். அவர்களின் நிலை பரிதாபமாக இருக் கின்றது.

தேச பிதா எனப்போற்றப் படும் மதத்தலைவரின் கொள்கைகளைக்கைவிட்டதாலேயே இன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் அழிந்து கொண்டுபோகின்றனர் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார்.

தினேஷ் குணவர்த்தன உரையாற்றும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடிக்கடி கேள்விகளைக் கேட்டு இடையூறு செய்து கொண்டே இருந்தனர். அமைச்சரும் சுடச்சுடப் பதில் அளித்துக் கொண்டே சமாளித்துவிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டணி உறுப்பினர் எஸ்.சுமந்திரன் பேசும்போது அடிக்கடி சர்ச்சைகள் இடம் பெற்றன.

சுமந்திரன் எம்.பி. அரசியல் யாப்பை மேற்கோள்காட்டி நாடாளுமன்றத்தின் அதியுயர் அதிகாரங்கள் ஜனாதிபதியால் பறிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.ஆனால், ஜனாதிபதி நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுகள் உட்படப் பல அமைச்சுகளைத் தன் வசப் படுத்திக் கொண்டுள்ளார் என்றும் கூறினார்.

அப்போது வழமைபோல் ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பினார் அஸ்வர் எம்.பி. அவர், அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினை என்று கூறிச் சபையில் எழுந்து நிற்பதால் அவர் புதிதாக அணிந்துள்ள சிவப்புத் தொப்பியும் சபையில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. மார்க்கப்பற்று மிக்க அஸ்வர் எம்.பி. ஜனாதிபதி இரண்டாவது பதவிக்கால பதவியேற்பு வைபவத்தின்பின், தனது மார்க்க புனித அடையாளமான தொப்பியை தொடர்ந்து அணிந்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

அதாவதுஅரசியல்அமைப்பின்படி ஜனாதிபதி எந்த ஒரு அமைச்சுப் பொறுப்பையும் தன் வசம் வைத்திருக்கமுடியும்.சட்டத்தரணியான சுமந்திரன் அரசியல் அமைப்புக்குத் தவறான வியாக்கியானம் கொடுக்கக் கூடாது என்றார்.

இதன்போது சிறிது சர்ச்சை ஏற்பட்டது. இதில் ஆளும் கட்சி உறுப்பினரான எம்.கே.டி.என். குணவர்த்தனவும் அவருடைய பங்கிற்கு சத்தம் போட்டார்.

நான் யாழ்ப்பாணத்தில் பத்து வருடங்கள் பொலிஸ் உத்தியோகத்தராக இருந்துள்ளேன். சுமந்திரன் தவறாகக் கூறுகின்றார் என்றார்.

ஐயா! இந்த அஸ்வர் எம்.பி. மிகவும் நல்லவர். ஆனால் யார் யாரையோ திருப்திப்படுத்துவதற்காக இங்கு வந்து எதை எதையோ பேசுகின்றார்.

நான் திட்டமிடப்பட்ட சிக்கலான குடியேற்றம் தொடர்பாகப் பேசுகின்றேன். இதன் மூலம் உங்களுடைய முஸ்லிம் சமூகமும் தானே பாதிக்கப்படப்போகிறது. அந்த உண்மையை உணர மாட்டீர்களா என்றார் சுமந்திரன் எம்.பி. இதன்பின் சபையில் அமைதி ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான கலாநிதி ஹர்ஷா.டி.சில்வா ஒரு குண்டைத்தூக்கிப் போட்டார்.

அதாவது இந்த அதிஉயர் சபையில் சூதாட்ட, விபசார, களியாட்ட மையங்களை அங்கீகரிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து நாட்டில் ஓயாத மழை, வெள்ளம், ஏன் இந்த நாடாளுமன்றம் கூட நீரில் மூழ்கி விட்டது என்றார். இது சிரிக்கக் கூடியதாகவும் சிந்திக்கக் கூடிய தாகவும் இருந்தது.

யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான சரவணபவன் நாளை உருவாகப் போகும் ஒரு பிரச்சினையை கோடிட்டுக் காட்டினார். அதாவது யாழ். பிரதேச தேசிய வளங்களை மண் மற்றும் சுண்ணக்கற்கள் சட்ட விரோதமான முறையில் கடத்தப் படுகின்றன. இதனால் எமது மூல வளங்கள் திட்டமிட்டுக் கொள்ளையடிக்கப்படுகின்றன என்று குற்றம் சாட்டினார்.

மற்றும் ஒரு விடயத்தில் தமிழ் நாடு, கர்நாடகா மாநில குடிநீர்ப் பிரச்சினையை தொட்டுக்காட்டினார்.

இரணைமடு நீரை கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதாகக் கூறப்படுகிறது. உரிய முறையில் இதனைச் செயற்படுத் தத் தவறினால் கிளிநொச்சி மாவட்ட விவசாயம் பாதிக்கப்படும் வகையில் இரணைமடு தண்ணீர் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப் பட்டால் இந்தியாவில் கர்நாடக மாநிலமும் தமிழ்நாடு அரசும் காவிரி ஆற்றுப்பிரச்சினையில் முட்டி மோதிக் கொள்வது போல் கிளிநொச்சி விவசாயிகளும் யாழ். விவசாயிகளும் மோதிக் கொள்ளும் நிலையை உருவாக்கிவிடும் என அபாய அறிவித்தல் ஒன்றையும் விடுத்தார் சரவணபவன் எம்.பி.

மூன்றாவது நாள் விவாதத்தின்போது தொடர்ச்சியாக விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

# தனியொரு மனிதருக்காகச் சட்டத்தை மாற்ற முடியாது எவராயிருந்தாலும் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க வேண்டும்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, நவ.27

''தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டார் என்பதால் எனது தந்தையும் நீண்ட காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சரத்பொன்சேகா மட்டுமல்ல, எனது தந்தையாக இருந்தாலும் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். தனி ஒரு மனிதருக்காக சட்டத்தை மாற்றியமைக்க முடியாது.'' என்கிறார் அமைச்சர் தினேஷ் குணவர்தன.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக மூன்றாவது நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

''நண்பர் கரு ஜயசூரிய சிறிது காலம் எங்களுடன் இருந்த போது நல்லவராக இருந்தார். நல்ல விடயங்களைப் பேசினார். ஆனால் இன்று பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஏனையவர்களும் பழுதடைந்த ஓடத்தில் ஏறி தடுமாற்றம் அடைந்துள்ளனர்.

வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து நாட்டை இரண்டாகப் பிரித்து விடலாம் என கனவு கண்டார்கள்.

நாட்டைக்காட்டிக் கொடுக்கும் வகையில் புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்தார் ஐ.தே.க. அமைச்சர்.

புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி, நாட்டைப் பிடிக்கும் புலிகளுக்கு துணை போனார்கள். ஆனால் எமது ஜனாதிபதி முழுமூச்சாக நின்று பிளவுபட்ட நாட்டை ஒன்றாக்கிய பெருமையை ஏற்றுக் கொண்டார்.

எதிர்க்கட்சியினர் வழமை போலவே வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்கின்றனர். விமர்சனம் செய்கின்றனர்.

நமது நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகள் எல்லாவற்றிலும் வறுமை காணப்படுகின்றது.

ஆனால் நாம் கிராமிய மட்டத்திலிருந்து வறுமையை ஒழிக்கும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துள்ளோம். கிராமங்கள் முன்னேற்றம் அடையும் போது முதலாளிமார் இல்லாமல் போய் விடுவர். இதனால்தான் முதலாளித்துவவாதிகள் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்கின்றனர்.

வாழ்க்கைச் செலவை மட்டும் பார்க்காது வாழ்க்கைத் தரத்தையும் பார்க்க வேண்டும். எமது வரவு-செலவுத் திட்டம் பௌதீகம் மட்டுமல்ல, பொருளாதார அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால் பொருளாதார விற்பனர்கள் வாழ்க்கையின் அடித்தளத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் செயல்படுகின்றோம்.

இன்றுநாம்மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளால் தான் மஹியங்கனையில் வாழும் வேடுவத் தலைவர் கூட செல்போனில் உரையாடுகின்றார்.

32 வருட கால யுத்தத்துக்கு எங்கள் ஜனாதிபதி முற்றுப் புள்ளி வைத்துள்ளார். வடக்கு-கிழக்கு பிரதேசம் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய 'வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம்' எனும் திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்த பல ஆயிரம் கோடிகளை ஒதுக்கி உள்ளார் ஜனாதிபதி.

இன்று எதிர்க்கட்சியினர் பயமின்றி யாழ்ப்பாணத்துக்குப் போகலாம். அங்கே எமது மக்கள் பெரிதும் ஆர்வத்துடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடியும்.

இரண்டுபட்ட நாட்டை ஒன்றாக்கி நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும், விவசாயம், கால்நடை அபிவிருத்தி, பால் உற்பத்தி,சிறு கைத்தொழில் முயற்சிகள் என்பனவற்றை ஊக்குவித்துள்ளோம்.

பெருந்தோட்டத்துறையில் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் தரிசாகக் கைவிடப்பட்டுள்ளன. இந்தத் தரிசு நிலங்களை சுவீகரித்து இளைஞர்களிடம் ஒப்படைக்கும் பாரிய திட்டம் ஒன்றை செயற்படுத்த உள்ளோம். இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புகளையும், பொருளாதாரத் தன்னிறைவையும் அடைய முடியும்''- என்றார் அமைச்சர் தினேஷ் குணவர்தன.

(சி)

# அனுமதி அட்டைகள் நேற்றுமுன்தினம் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், நவ.27

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டன.

நேற்றுமுதல் அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன என்று வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அனுமதி அட்டையில் தவறுகள் ஏதுமிருப்பின் அந்தந்தக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் மாணவர்களின் விவரங்களைப் பெற்றுக் கொழும்பில் உள்ள பரீட்சைத் திணைக்களத்துக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகச் சென்று சரி செய்து கொள்ள வேண்டும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடர்:**
நேரம் காலம் பார்க்காமல் கூடுதல் நேரம் பணியாற்றுவீர்கள். அயலார் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். வாகன பயணங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். பெண்கள் உறவினர்களுக்காக சில காரியங்களைச் செய்வர். மருத்துவச் செலவுகளை தவிர்க்க உடல் நலத்தில் கவனம் அவசியம்.

**இடபர்:**
சில பிரச்சினைகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல், மற்றவர்களிடம் கம்பீரமாக நடந்து கொள்வீர்கள். உடல் ரீதியான உபாதைகள் குறைந்து உற்சாகம், தெம்பு அதிகரிக்கும். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளுக்காக சில பொருள்களை வாங்கி கொடுப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சுகமான அனுபவம் உண்டு.

**மிதுனர்:**
ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களிடம் காட்டலாம். சகோதரர்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். வழக்கமான வேலை ஒன்றை இன்று செய்ய முடியாமல் போகலாம். அரசியல்வாதிகள் வெளியூர் பயணங்கள் செல்லலாம். குடும்பச் செலவு கூடும்.

**கடகர்:**
பம்பரமாகச் சுழன்று பணியாற்றும் நாள். தேங்கிக் கிடந்த பல வேலைகளைச் சுறுசுறுப்பாக ச் செய்து முடிப்பீர்கள். குழந்தைகளுக்காக, குடும்பத்தினருக்காக சிலவற்றை வாங்குவீர்கள். உறவினர்கள் வழியில் உற்சாகம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். எதிர்ப்புகளை முறியடித்து ஏற்றம் பெறும் நாள். செலவைக் குறைத்து சேமிப்பை அதிகரிப்பீர்கள்

**சிங்கர்:**
அவசரப்பட்டு செய்த காரியம் ஒன்றால் மனக் குழப்பங்களை சந்திக்கலாம். குடும்பத்தினருடன் கோவில்களுக்கு சென்று வழிபாடு நடத்தலாம். பண வரவுகள் தொடர்பான செய்திகளைக் கேட்கலாம். நெடுநாளாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**கன்னி:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள். குடும்ப உறுப்பினர்களுடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்கலாம். வேலையாள்கள் சிலர் உங்களிடம் உதவிகள் கேட்கலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புக்களைப் பெறலாம். பல நாள்களாக வராமல் இருந்த பணவரவுகள் வரலாம். பெற்றோரின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள்.

**துலார்:**
கடன் மிகுதிகள் வசூலிப்பில் அக்கறை காட்டுவீர்கள். சொந்த பந்தங்கள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். உடல் நல பராமரிப்பற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை செலவு செய்வீர்கள். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து, செய்த வேலை ஒன்றில் கணிசமான பலன் கிடைக்கலாம். வேலைப்பளு அதிகரிக்கும்.

**விருச்சிகர்:**
நீண்ட நாள்களாக மனதில் போட்டு வைத்த திட்டத்தை நிறைவேற்ற முற்படுவீர்கள். சுயதொழில் புரிவோர் கூடுதல் வருவாய் பெறலாம். பெரிய மனிதர்களின் ஆசிகளை, வாழ்த்துக்களைப் பெறலாம். நீங்கள் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் உறவினர் ஒருவர் சாக்குப் போக்குச் சொல்லலாம். கொண்டாட்டம் உண்டு.

**தனுசு:**
திட்டமிட்ட வேலைகளை உடனுக்குடன் செய்ய முடியாமல் இடையூறுகளை எதிர் கொள்ளலாம். பெற்றோர், பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களுக்காகச் செலவிடலாம். உறவினர் ஒருவருடன் கொடுக்கல் வாங்கல்களில் மனஸ்தாபம் ஏற்படலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் முடியாத அளவுக்கு செலவு ஏற்படலாம்.

**மகரர்:**
மனைவி வழியில் அனுகூலமான உதவி கிடைக்கும். பழைய நண்பர்கள் சிலர் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் பெறலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். இடமாற்றம், வீடு மாற்றம் தொடர்பான சிந்தனைகள் ஆள்கொள்ளும். சிலருடன் சேர்ந்து கூட்டாகச் சில காரியங்களில் இறங்குவீர்கள்.

**கும்பர்:**
பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். திடீரென உருவாகும் வேலைகளால் வழக்கமான வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம். மதிப்பு, கௌரவத்தைப் பேணிக் காப்பதில் அக்கறை காட்டுவீர்கள். விருந்தினர்கள் வருகையால் செலவு ஏற்படும். விருப்பமான உணவைச் சாப்பிடுவீர்கள்.

**மீனர்:**
கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். போட்டிகளால் உருவான தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். வெளியூர்களில் இருந்து சிலர் முக்கியமான தகவல்களைச் சொல்லலாம். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சிறிய வேலை ஒன்றுக்காக பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் தொல்லையுண்டு

## அழைப்பு....



கௌரவிப்பு- நாவற்குழி மகாவித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், பிரதிக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் ஆகியோர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் சூழ பாண்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (204)

# மாற்றுவலுவுடையோர் தினவிழா

கோப்பாய், நவ.27

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப்பிரிவு நடத்தும் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குத் தியாகி அறக்கொடை நிறுவன பொது மண்டபத்தில் யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் மருத்துவ கலாநிதி சி.கணேசமூர்த்தி கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணரும் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத் தலைவருமான மருத்துவ கலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி பரிசில்களை வழங்கவுள்ளார். (204-72)

## புத்தரும் கொலைகாரனும்



புத்தர் வாழ்ந்த காலத்தில் பயங்கரமான கொலைகாரன் ஒருவன் இருந்தான். கொலை, கொள்ளை என்று ஏகப்பட்ட பாவங்களைச் செய்தவன். அவனுக்குத் திடீரென்று ஒரு ஆசை தோன்றியது. ''புத்தரைப் பார்க்க வேண்டும்'' என்று.

இவனைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆதலால் நேரடியாகச் சென்று நான் புத்தரைப் பார்க்க வேண்டும் என்றால் அனுமதிக்கமாட்டார்கள். என்ன செய்வது என்று யோசித்தான்.

அவன் சுவர் ஏறிக்குதித்து புத்தர் இருக்கும் மடத்துக்குச் சென்றான். மடத்திற்குள் யாரையும் காணவில்லை. அவன் அங்கும் இங்கும் தேடி அலைந்த சமயம் ஒருவனிடம் மாட்டிக் கொண்டான்.

''ஐயா நான் திருடவரவில்லை. புத்தரைப் பார்க்கத்தான் வந்தேன். வாசல் வழியாக வந்தால் என்னை உள்ளே விடமாட்டீர்கள். அதுதான் சுவர் ஏறிக்குதித்து உள்ளே வந்தேன்.'' என்றான்.

உடனே அந்தச் சீடர் திருடனை சாரி புத்தரிடம் அழைத்துச் சென்றார்.

''எதற்கு வந்தாய்?'' என்றார் சாரிபுத்தர்.

''புத்தரைப் பார்க்க வந்தேன்'' என்றான் திருடன்.

''நீ எதற்குப் புத்தரைப்பார்க்க வேண்டும்'' என்று கேட்டார் சாரிபுத்தர்.

''திருடன், எனக்கு எல்லாமே வெறுத்துப் போய் விட்டது. என்னுடைய பாவங்களில் இருந்து விடுபட வேண்டும். அதற்குப் பிராயச்சித்தமாக நான் சந்நியாசி ஆகவேண்டும். மக்கள் தொண்டில் தீவிரமாக ஈடுபட வேண்டும்'' என்றான்.

அங்கிருந்தவர்கள் அனைவருக்கும் வியப்பாக இருந்தது. இவன் எப்படிச் சந்நியாசியாக முடியும். அதை ஜோதிடம் மூலமாக அறிந்துகொள்ள விரும்பினார்கள்.

பழைய பிறவியில் இவன் எவ்வளவு மோசமானவனாக இருந்திருப்பான், அவனை வெளியே தள்ளுங்கள் என்று கூச்சல் போட்டார்கள்.

திருடனுக்குக் கோபம் வரவில்லை. மாறாக கவலையடைந்து தற்கொலை செய்யும் எண்ணத்துடன் தலையைச் சுவரில் மோதி உடைத்தான்.

அந்தச்சமயம் உள்ளே வந்த புத்தர் அவனைத் தடுத்து நிறுத்தினார்.

புத்தரின் காலில் விழுந்து அழுதான். விவரம் யாவையும் அறிந்து கொண்டார் புத்தர்.

''இவனை ஒருவாரத்துக்குள் தகுதி உடையவனாக ஆக்கிவிட முடியும்'' என்றார் புத்தர்.

ஒருவாரத்திற்குள் அவன் சந்நியாசி ஆவதற்குரிய தகுதியும் பெற்றான்.

சீடர்களுக்கு ஆச்சரியம். ''எப்படி இந்த அதிசயம் நடந்தது'' என்று கேட்டார் சாரிபுத்தர். அதற்குப் புத்தர்:-

'' நீ நல்லவன் ஆனால் உனக்கு நாணம் இல்லை''! ''பாவங்களின் சுமை என்ன என்பது உனக்குத் தெரியாது'' ''அதன் தவிப்பும் தெரியாது''.

''ஜோதிடத்தில் கடந்த காலத்தை மட்டும்தான் பார்த்தாய். எதிர்காலத்தைத்தான் நாம் பார்க்க வேண்டும்''.

''தனது பாவச்சுமையில் இருந்து விடுபட இவன் பட்ட தவிப்புத்தான் இப்பொழுது இவனுக்கு விடுதலையைத் தேடித்தந்துள்ளது.''! என்றார்.

ஒருவிதத்தில் பார்த்தால் நல்லவர்களைவிட குற்றவாளிகள்தான் சீக்கிரம் பக்குவநிலையை அடைய முடியும். தங்களை நல்லவர்களாக நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு விமோசனமும் பக்குவமும் சுலபமாகக் கிடைப்பதில்லை.

**கோ.சுவாமிநாதன்.**

## ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே

ஒரு கூண்டுக் கிளி வாய் கிழிய கத்திக் கொண்டே இருந்தது. உச்சகுரலில் உரக்க உரக்கக் கத்தியது. ''எனக்குச் சுதந்திரம் வேண்டும்... விடுதலை வேண்டும்... என் சிறகுகளை முறிக்காதே...'' என்று கேட்பவர் கலவரப்படும்படி கத்தியது.

ஒருமகத்தானவர் பணம் கொடுத்து அந்தக் கிளியை வாங்கிக் கூண்டுக் கதவைத் திறந்து விரிந்து கிடக்கும் வானத்தில் சுதந்திரமாகப் பறந்துதிரி என்று வெளியில்விட்டார்.

வெளியில் வந்த கிளி தத்தித்தத்தி நடந்தது. சுற்றும் முற்றும் பார்த்தது. பறப்பதற்குப் பதிலாக மீண்டும் உரத்த குரலில் திரும்பித் திரும்பிச் சொன்னதையே சொல்லிச் சொல்லிக் கத்தியது.

''எனக்குச் சுதந்திரம் வேண்டும். விடுதலை வேண்டும் எனது சிறகுகளை முறிக்காதே'' என்று [illegible] நடந்து [illegible] சென்றதும்

அப்படியேதான் கத்திக் கொண்டிருக்கிறது அந்த முட்டாள் கிளி.



வீட்டில் வளர்கின்ற நாயைப் பாருங்கள். சொல்வதை எல்லாம் கேட்கும், ஆனால் கட்டுவதற்கு சங்கிலி எடுத்தால் நழுவிவிடும். தான் சிறைப்படக்கூடாது என்று நாய்கூட நினைக்கிறது.

சுதந்திரம் என்பது ஒருநாள் விழா அல்ல. அது வாழ்நாள்ச் சாதனை. யாரோ தருவதோ பெறுவதோ அல்ல. அது ஒருவகை மனோபாவம், மகத்தான வாழ்க்கை முறை. இது நோயாளிக்குச் செலுத்தும் மருந்து அல்ல.

அதுமலை உச்சியில் சிலிர்த்துப்பாயும் ஒருவகைத் தென்றல்.

எங்கும் எதிலும் சுதந்திரமாக இருக்கும்... எனவே அடிமைகளாக இருக்க ஆசைப்படாதீர்கள். சுயமாக ஆனந்த சுதந்திரத்தை அடைந்துகொள்ளுங்கள்.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த அபிவிருத்தித் திட்டமாயினும் இந்தியாவுக்கே அதில் முன்னுரிமை

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போருக்கு முன்னரும் சரி பின்னரும் சரி இந்தியாவுடனான உறவுகள் மிக நெருக்கமாக மிக மிக நல்ல முறையிலேயே உள்ளன. இரு நாடுகளின் தலைவர்களுக்கு இடையிலும்கூட மிகநெருக்கமான தொடர்புகள் இருக்கின்றன. எந்தத் திட்டமாக இருந்தாலும் இந்தியாவுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கிறோம்.

அதேவேளையில் அனைத்துலக சமூகமும் எமது இன்றைய நிலையைப் புரிந்துகொண்டு ஆதரவளிக்க வேண்டும். சமூகங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்த ஆதரவளிக்காமல் அதனைக் குறைப்பதற்கு ஆதரவளிக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் 'தி ஹிந்து' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் இறுதிப் பகுதியில் தெரிவித்துள்ளார்.




*கே:* நாடாளுமன்றத்தில் இருந்து ஜனாதிபதி தூர விலகி இருப்பது பிரச்சினையான ஒன்று என்று நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் எனக்குச் சொல்லி இருக்கிறீர்கள். அத்துடன் நீங்கள் நாடாளுமன்றப் பண்பாட்டிற்குள் வளர்ந்தவர் என்றும் சபைக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான இந்த இடைவெளியை இல்லாது செய்யவேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்றும் கூறி இருக்கிறீர்கள். உங்களால் அதனைச் செய்ய முடிந்ததா?

*ப:* ஆம்! 18ஆவது திருத்தச் சட்டத் திருத்தத்தின் பின்னர், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும். இது கட்டாயம்.

*கே:* அந்தப் பிரச்சினையை இது தீர்த்து விடுமா?

*ப:* அப்படித்தான் நினைக்கிறேன். ஏனென்றால், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாடாளுமன்றத்துக்கு நான் போக முடியும் என்ற நிலையில், அது கட்டாயம் என்றோ பயனுடையது என்றோ நினைத்தால் எந்த நேரத்திலும் நான் நாடாளுமன்றத்திற்குச் செல்ல முடியும். நான் நாடாளுமன்றத்தையும் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றேன் என்ற வகையில் அவர்கள் விமர்சித்தார்களானாலும் கூட, நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. அதனால்தான் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாடாளுமன்றம் சென்றால் போதும் என்கிறேன். அங்கு சென்று அந்த நடைமுறைகளைக் குழப்ப நான் விரும்பவில்லை. மக்களின் கருத்துக்களை அறிய, எதிர்க் கட்சியினர் சொல்வதைக் கேட்க, பிரச்சினைகளைக் கண்டறிவதற்காகவே நான் அங்கிருக்க வேண்டும்.

நான் ஓர் உதாரணம் சொல்கிறேன். அண்மையில், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு பிரச்சினையை எழுப்பினார். அரசுக்குச் சொந்தமான நிலத்தில் சிலர் கசினோ விடுதியை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதே அது. உடனே நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அது உண்மையானதுதான் எனக் கண்டறிந்தேன். உடனடியாக ரணிலை அழைத்து நன்றி சொன்னேன். இந்த மாதிரியான விடயங்களை எங்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியதுதான் எதிர்க் கட்சியினரின் கடமை. நான் நாடாளுமன்றத்தில் இருந்தேன் என்றால் இவ்வாறான விடயங்கள் குறித்து நிறையத் தகவல்களை என்னால் பெற முடியும். ஏதாவது தவறாக நடந்தால், நாங்கள் அதனைத் திருத்திக் கொள்ள முடியும். அதனால் நான் நாடாளுமன்றத்துடன் நெருங்கி இருக்க வேண்டியது முக்கியம்.

*கே:* அடுத்த விவகாரம், உங்கள் முன்னாள் இராணுவத் தளபதியைச் சிறையில் அடைத்துத் தண்டனை வழங்கி இருப்பது தொடர்பில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. அவரோ அவரது குடும்பமோ இதுவரை மனிப்பை ஜனாதிபதியிடம் கோரவுமில்லை. இது ஓர் அரசியல் பிரச்சினையா?

*ப:* இல்லை. இது அரசியல் பிரச்சினை இல்லை. சட்டம் எல்லோருக்குமானது. சட்டத்தின் முன் எல்லோரும் சமன். யாராவது பிழை செய்தால் அதனை அவர்கள் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். இதனை மக்கள் புரிந்துகொள்வார்கள். ஆனால் சில எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தை தமது அரசியல் ஆதரவுக்கான தளமாகப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள். அதற்காக அவரது பெயரைப் பயன்படுத்துகிறார்கள். இது மக்களுக்குரிய ஒரு பிரச்சினையாக எனக்குத் தோன்றவில்லை. இதில் அவர்களுக்கு ஆர்வமில்லை.

*கே:* ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஜே.வி.பியாவது இந்த விடயத்தைப் பாரதூரமாக்கும் போல் தோன்றுகிறதே?

*ப:* இல்லை. அவர்கள் ஏதாவது செய்யும் போது அல்லது அவர்களுக்குத் தேவைப்படும் போது இந்த விடயத்தை அவர்கள் கையில் எடுப்பார்கள்.

*கே:* நீங்கள் சொல்வது போல, சட்டம் மற்றும் ஜனாதிபதி என்கிற நிலை ஒரு பக்கம். மற்றையது, அவர் உங்களது இராணுவத் தளபதி, உங்களுக்கு அவரைத் தனிப்பட்ட முறையில் தெரியும். இந்த இரு விடயங்களும் எப்படிக் குறுக்கறுத்துக் கொள்கின்றன?

*ப:* ஆம்! இது உண்மையிலேயே மிகச் சிக்கலானது. ஆனால், இராணுவத் தளபதியோ இல்லையோ நீங்கள் தவறிழைத்தால் அதனை எதிர் கொண்டுதான் ஆகவேண்டும். அவர் அப்படிப்பட்ட நபர் என நாங்கள் முன்னர் நினைத்திருக்கவே இல்லை. அவர் வேட்பாளராகக் களம் இறங்கிய போது, அவரது மருமகன் ஓர் ஆயுதத் தரகர் என்று சிலர் எங்களுக்கு அறிவித்தனர். அதைப் பற்றி எமக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. இதற்கு முன்னர் அவரும் இதைப் பற்றி எம்மிடம் சொல்லவில்லை. அவர் உண்மையில் எங்களிடம் சொல்லி இருக்க வேண்டும். கேள்வி கோரல் சபையின் தலைவராக அவரே இருந்தார். இதற்கு முன் அப்படி இருந்த எந்தவொரு தளபதியும் அப்படிச் செய்ததில்லை. அவரது மருமகன் ஆயுதத் தரகர் என்பது எனக்கு முன்பே தெரிந்திருந்தால், நான் அவரை எச்சரித்திருப்பேன்; அல்லது திருத்த முயற்சித்திருப்பேன்.

*கே:* தாங்களாகவே சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் 11,000 பேர் இருக்கின்றனர் என்று எனக்குச் சொல்லப்பட்டது. இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்த்தீர்கள்?

*ப:* அவர்களில் குறிப்பிட்டளவானோருக்கு ஏற்கனவே புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 4,000 பேர் வீடுகளுக்குச் சென்று விட்டார்கள். சிறுவர்களையும் வயதானவர்களையும் விடுவித்து விட்டோம். அவர்களில் சிலர் போகவிரும்பவில்லை; அவர்களுடைய சொந்த நலன்களுக்காக எங்களுடனேயே இருக்கின்றனர்.

*கே:* அண்மையில் ஐ.நாவில் நீங்களாற்றிய உரையில், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை இலங்கையின் அபிவிருத்தியில் இணைந்து பணியாற்ற வருமாறு அழைப்பு விடுத்திருந்தீர்கள். அதற்கு நல்ல பிரதிபலன் இருந்ததா?

*ப:* ஆம்! பெருமளவு ஆதரவு கிடைத்துள்ளது. குறிப்பாக இரட்டைக் குடியுரிமை பெற விரும்புபவர்களிடம் இருந்து கூடுதல் ஆதரவு கிடைக்கிறது. அதே சமயம், வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் இனப்பிரச்சினையை ஒரு காரணமாகக் காட்டுகிறார்கள். பெருமளவான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அந்த நாடுகளின் குடியுரிமைகளைப் பெற்றுள்ளார்கள்.

*கே:* உங்களுக்கு இந்தியத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதற்காக இந்தியா வந்திருந்தீர்கள். இவ்வாறாக நெருக்கமான உறவை நீங்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறீர்கள். அந்த வகையில், போர் முடிவடைந்ததன் பின்னான சூழலில் இந்தியாவின் பங்களிப்புக் குறித்துத் திருப்திப்படுகிறீர்களா?

*ப:* ஆம்... ஆம்! உறவுகள் மிகமிக நல்ல நிலையிலேயே இருக்கின்றன. போருக்குப் பின்னரும் போர் முடிவடைவதற்கு முன்னரும்கூட உறவுகள் மிக நன்றாகவே இருக்கின்றன. இரு நாடுகளின் தலைவர்களுக்கு இடையிலும் மிக நெருக்கமான தொடர்புகள் இருக்கின்றன.

*கே:* ஓர் உதாரணத்திற்கு, வட பெருநிலப்பரப்பில் இடம்பெயர்ந்து வீடுகள் இன்றித் துன்பப்படும் மக்களுக்காக 50,000 வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டம் மற்றும் வடக்கில் உருக்குலைந்து போன ரயில் பாதைகளை மீளமைப்பது, பலாலி விமானத்தள விரிவாக்கம், காங்கேசன்துறைத் துறைமுகப் புனரமைப்பு, வீதி அபிவிருத்தி, கிழக்கிலுள்ள சம்பூரில் அனல் மின் நிலையம்....

*ப:* அப்படியானால் பாருங்கள்! எத்தனை திட்டங்களை இந்தியாவுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று. ஆனால், சில பத்திரிகைகள் எமது திட்டங்கள் தொடர்பாகப் பரபரப்பை ஏற்படுத்துகின்றன; சீனாவுக்குக் கொடுக்கப்பட்ட திட்டங்களுடன் ஒப்பிட்டுச் செய்திகள் எழுதுகின்றன.

*கே:* இந்த விடயம் தொடர்பில் (சீன விவகாரம்) இந்திய அரசு அல்லது தலைவர்கள் அல்லது அதிகாரிகள் தமது கவலையை வெளிப்படுத்தினார்களா?

*ப:* இல்லை... இல்லை! அவர்கள் புரிந்து கொள்ளக் கூடியவர்கள். ஏனெனில் எல்லாமே அவர்களுக்குத்தான் முதலில் கொடுக்கப்படுகிறது. விமான நிலையம், துறைமுகங்கள், அம்பாந்தோட்டைத் துறைமுகம் என எல்லாமே. சம்பூர்கூட 4 வருடங்களுக்கு முன்னரே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது.

எங்களுக்கு அபிவிருத்தி வேண்டும். நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தியாக அது இருக்க வேண்டும். இது வடக்கில் உள்ள தமிழர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும். இந்தத் திட்டங்கள் குறித்து வதந்திகள், பரபரப்புகளைக் கிளப்பும் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களும் வடக்கில் மீன்பிடி மற்றும் விவசாய அபிவிருத்திக்கான அடிப்படைத் திட்டத்தை வரைந்த விவசாய விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனை எதிர்த்தவர்களும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

*கே:* இரண்டாவது பதவிக் காலத்தைப் பொறுப்பேற்றுள்ள நிலையில் இலங்கை மக்களுக்கும் அனைத்துலக சமூகத்திற்கும் உங்கள் செய்தி என்ன? இலங்கையின் புதிய கள நிலைமைக்கு ஏற்ப அவர்கள் எப்படி எதிர்வினையாற்ற வேண்டும்?

*ப:* என்னுடைய மக்களுக்கான செய்தி, நான் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகின்றேன். அறிவு, சக்தி, வர்த்தகம், கடல்சார் போக்குவரத்து மற்றும் விமானத் துறை ஆகியவற்றின் முக்கிய இயங்கு

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN


சுட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

26 ஆவது அகவையில் காலடி பதிக்கும் உதயனே! பணிதொடர வாழ்த்துக்கள்.

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னைய விட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட... இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

**எரிக்கணேஷ்**

மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486

கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

வாசகர்களின் இதயங்களில் குடிகொண்டுள்ள உதயனே பல்லாண்டு வாழி!

**ஷாம்பவி பதிப்பகம்**

ෂාම්පවි මුද්‍රණාලය

Shampavi Printers

shampavi2009@gmail.com

புத்தம் புதிய திருமண அழைப்பிதழ்கள், மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள், விளம்பரப் பதாதைகள், இன்டர்ரிஸ் லேபல்கள் மற்றும் பாடசாலைகள் நிறுவன சஞ்சிகைகள், மற்றும் பொலித்தீன், துணி, பிளாஸ்ரிக் என்பவற்றில் புதிய நவீனமுறையில் அச்சமைப்பு, பொலிமர், இறப்பர் முத்திரைகள் குறித்த நேரகாலத்தில் நீங்கள் விரும்பிய டிசைன்களில் பெற்றிடவும் இன்றே விஜயம் செய்யுங்கள்

276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 2224143, 077 6184425 கரந்தன் வீதி, நீர்வேலி.



நீ உன்னதமாய் என்றென்றும் நீடூழி வாழியவே!

**பூரணி நகை மாடம்**

Manufacturers of Gold Jewels

தங்கப்பவுண் நகை வியாபாரம்

வின்சர் தியேட்டர் அருகில்,
இல:1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



வெள்ளி விழா காணும் **உதயன்**

பல நூற்றாண்டுகள் வாசகர் நெஞ்சங்களில் வாழ வாழ்த்துகின்றோம்.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 2223081

மக்கள் மனம் கவர்ந்த நாளேட்டுக்கு எமது வாழ்த்துக்கள்



With the Best Compliments From

**ESWARRAN**

Traders & Transport Service

GENUINE TRANSPORT SERVICE

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
யாழ்ப்பாணம் ⟺ கொழும்பு
அதிசொகுசு பஸ்சேவை



ESWARRAN Traders & Transport Service

| | | |
|---|---|---|
| இல.115, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212222813/2224317/0773865439 | இல.01, காரடிப்போக்கு, கிளிநொச்சி. (செலான் வங்கிக்கிளை அருகில்) தொ.பே: 0212285306 பக்ஸ்: 0212285307 | இல.201B, டாம் வீதி, கொழும்பு-12 தொ.பே: 0112433889 பக்ஸ்: 0112435247 |

காலத்தின் கருவியாக திகழ்பவனே...! உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

## மக்கள் வங்கி... என்றும் உங்களுடன்...

சிசு உதான மாணவர் மலர்ச்சிக் கணக்கு

yes Young Executive Savings

வனிதா வாசனா

பரிணத

ஜனஜய

மழலைகள் மலர்ச்சிக் கணக்கு இசுறு உதான

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 20% மேலதிக வட்டி

பாடசாலை மாணவர்களுக்கு விசேட புலமைப் பரிசில் திட்டம்

நிலையான வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்...
மாணவர்கள், முன்பள்ளி சிறார்களுக்கான விசேட பரிசுப் பொருட்கள்...
SMS Banking ... வசதிகளுடன்...

2008 2009 2009 www.peoplesbank.lk

மக்கள் வங்கி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் 25 வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN




தமிழ் மக்களின் குரலாக ஒலிப்பவனே வாழ்க!

**விநாயகர் களஞ்சியம்**

புதினப் பத்திரிகை முகவர் பல்பொருள் வாணிபம்

சகலவிதமான பொருள்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. தொ.பே: 021 321 2878

**ALDI ELECTRONICS**

**No,15 Stanly Road Jaffna**



தரமான கணனி,
கணனி உதிரிப்பாகங்கள்,
கைக்கடிகாரங்கள் (ஆண், பெண்)

பழைய புதிய தமிழ், ஆங்கில திரைப்படங்கள் பாடல்கள், காமெடிகள்

DVDs VCDs MP3s Audio CDs
Computer Games CDs



பல தடைகளைத் தாண்டி 25 வருட பூர்த்தியினை கொண்டாடும் உதயன் தொடர்ந்தும் நிலைத்து நிற்க எமது நிறுவனத்தினது இதயபூர்வமான வாழ்த்துக்களை அதன் உரிமையாளர், பிரதம ஆசிரியர், மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**Study in London/Canada**
**January/February**

விசா உத்தரவாதம் 100%

- ★ குறைந்த தகுதி O/L
- ★ IELTS அவசியமில்லை
- ★ ஆங்கில அறிவுபற்றிக் கவலைப்படவேண்டாம்
- ★ பகுதிக் கல்லூரிக் கட்டணம்
  லண்டன் 1750 யூரோ (315,000/-)
  கனடா 6000 டொலர் (615,000/-)
- ★ Sponsor ஏற்பாடுகள் குறைந்த செலவில்
- ★ ஏற்கனவே தூதுவராலயத்தினால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு விசா பெறுவதற்கான ஆலோசனைகள்
- ★ அனைத்து ஆவணங்களுடனும் தொலைபேசியூடாக அனுமதிபெற்று நேரில் சந்திக்கவும்.

05 வருட அனுபவம் பெற்ற நம்பிக்கையான நிறுவனம்

SEC,
620, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 222 0555

Hotline 0777919293
www.sec.edu.lk



இதயக் கோயிலில் குடியமர்ந்தவனே...!
உன் பணிதொடர எமது வாழ்த்துக்கள்!!

தங்க நகைகளை வாங்கிச் சென்றிட கைராசியானதும் நம்பகரமானதும் ராசியான நகைக்கடை

**சாணக்கா நகைமாடம்**

200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எட்டுத் திக்கெங்கும் உன் பெயர் கொடிகட்டிப் பறக்க எமது வாழ்த்துக்கள்

**பெஸ்ட் இன்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

**Best In's Textiles**



ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான நவீனரக ஆடைத் தெரிவுகளை உங்கள் எண்ணம் போல் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்

8V, பெரியகடை, யாழ்ப்பாணம். 59/2, பெரியகடை, யாழ்ப்பாணம்.

உதயனே...! உன் வெற்றி நடை தொடர எமது வாழ்த்துக்கள்



சைவ, அசைவ உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள் விசேட ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். குறித்த நேரத்தில் குறித்த இடத்திற்கு விநியோகிக்கப்படும். விடுதிகளில் தங்கியிருந்து பயிலும் மாணவர்களுக்கு விசேட விலையில் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படும்

**கணேசா உணவகம்**

இல.19, பலாலி வீதி,
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0770773264,021 791 4213

இன்று வெள்ளி விழாக் காணும் உதயன் பல்லாண்டு வாழ்க!



**UNI - ICT Campus**

No. 83, Palaly Road, Kanthamadam, Jaffna.T.P: 021 321 6433, 0777110862.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

நிகரில்லாத நாளிதழ் உதயனுக்கு எமது வாழ்த்துக்கள்

25th Happy Birthday



பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள், பிஸ்கற் வகைகள், பிறந்தநாள் நிகழ்வு விழாக்களுக்கான கேக் வகைகள், மிக்ஷர், குளிர்பான வகைகள், ஓடருக்குச் செய்து தரப்படும்.

குமார் பேக் ஹவுஸ்

சென்.செபஸ்தியான் வீதி, பாஷையூர்.



உடனுக்குடன் பண்புகளுடன் பணிபுரியவன் உதயனே வாழி!

தற்போது பருவகால விற்பனையில்...

மெய்கண்டான், லீலா, இரகுநாதையர் திருக்கணித கலண்டர் வகைகள், பொக்கட் டயறி, டெஸ்க் டயறி, ஸ்பெஞ் டயறி மனேஜ்மன்ட் டயறிகள், விளம்பரக் கலண்டர்கள் சுவாமிப்படம், சினிமா, பூக்கள், சீநெறி, பேபிபடம் இன்னும் பலவகை



கொப்பி வகைகள்

ஆரம்பப்பிரிவு , மாணவர்களுக்கென விசேடமாக தயாரிக்கப்பட்ட 160 பக்கம் கொண்ட இரட்டை றூள் நாலுறூள்-பெரிய சதுரறூள் கொப்பிகள் மற்றும் அனைத்து வகையான (ATLAS-RICHARD) கொம்பனிகளின் கொப்பி வகைகள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

அன்னை புத்தகசாலை

யாழ்ப்பாணம், 222 9881 சாவகச்சேரி 2270003

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சீரழிவுகளை உடனுக்குடன் உரைக்க வழங்கிக்கொண்டிருக்கும் உதயனின் பணி தொடர வாழ்த்துக்கள்

பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்

ஜெகன் களஞ்சியம்

இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

வசீகரத் தோற்றத்திற்கு!

சந்தனாலேப (குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)



வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பாலர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சிய டைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீர தோற்றத்தைத்தரும். (சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்

YOYS Pharmacy

நீண்டகால அனுபவம் வாய்ந்த ஆங்கில மருந்து விற்பனையாளர்



யோய்ஸ் மெடி

யாழ்.வீதி, மானிப்பாய. தொ.பே: 021 2255144

மக்களோடு மக்களாக பின்னிப் பிணைந்து தனது சேவையை வழங்கும் உதயனுக்கு எமது வாழ்த்துக்கள்

ஏகாம்பரம் புடைவை மாளிகை



மொத்த சில்லறை புடைவை விற்பனையாளர்கள்

(72)9,பெரியகடை, யாழ்ப்பாணம்.

வெள்ளி விழாக் காணும் உதயனுக்கு எமது வாழ்த்துக்கள்

சகலவிதமான கேக், ஐஸ்கிறீம் குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருள்கள் கைத்தொழில் மூலப்பொருள்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் ஆயுள்வேத மருந்துச் சரக்குகள், ஆகிய அனைத்தையும் பெற்றிட

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

16A, கே.கே.எஸ்.வீதி, (சத்திரச்சந்தி), யாழ்ப்பாணம்.தொ.பே: 2219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிச்சங்கேணி பால நீர் மட்டம் உயர்வு: மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் பாதிப்பு

மட்டக்களப்பு, நவ.27

கிழக்கு மாகாணத்தில் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றுடன் கூடிய கன மழையால் மட்டக்களப்பின் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பனிச்சங்கேணி பாலத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்பாலம் மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பிரதான போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ளது. அதேவேளை, ஆற்றையும் கடலையும் இணைக்கும் முகத்துவாரப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ளது.

கடல் மற்றும் ஆற்றுநீர் மட்டம் மழை காலத்தில் உயர்வடைவதால் பொதுமக்களின் போக்குவரத்து தடைப்படுகிறது.

கடந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது இப்பாலம் முற்றாகச் சேதமடைந்தது. அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று இதனைப் புனரமைப்பதில் ஈடுபட்டது. எனினும், ஒழுங்காகப் புனரமைக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ளி)

# அடிப்படை வசதிகளின்றி மீள் குடியமர்ந்தோர் அவதி

திருகோணமலை, நவ.27

புல்மோட்டையை அண்டிய பகுதிகளில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது மீள்குடியேறி வருகின்றனர்.

எனினும் தங்களுக்கு அடிப்படைத் தேவைகள் செய்து கொடுக்கப்படவில்லை என மீள்குடியேறிவரும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பட்டிக்குடா, பொன்மலைக்குடா, மண் கிண்டி, கரையாவெளி, தேத்தாவடித்தீவு, கொக்கிளாய் வீதி, மத்திவகுப்பு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களே தற்போது மீள்குடியேறி வருகின்றனர்.

எனினும் தமக்குரிய கொடுப்பனவுகளை வழங்கவோ, ஏனைய அடிப்படை வசதிகளை நிறைவேற்றவோ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இவ்விடயத்தில் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனறும் அவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். (ளி)

# திருமலை மாவட்டத்தில் வேட்பு மனுக்கள் தாக்கல்

திருகோணமலை, நவ.27

இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல்களையொட்டி திருகோணமலை மாவட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பட்டினமும் சூழலும் 11 பேரும், ஈச்சிலம்பற்றில் 2பேரும், மூதூரில் 3பேரும், பதவி சிரிபுரவில் 2பேரும், தம்பலகாமத்தில் 4 பேரும் போட்டியிடுகின்றனர்.

கந்தளாயில் 4 பேரும், சேருவிலவில் 2 பேரும், கோமரங்கடவலவில் 4 பேரும், குச்சவெளியில் 3பேரும், கிண்ணியாவில் 7 பேரும் போட்டியிடுகின்றனர்.

இம்மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களிடையே கடும் போட்டி நிலவுகிறது. வேட்பாளர்களின் சுவரொட்டிகள் பல பிரதேசங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. கட்அவுட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டத் தலைமையகத்தில் இன்று இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. (ளி)

# திருகோணமலையில் சிரமதானம்

திருகோணமலை, நவ.27

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் ஜனாதிபதியின் இரண்டாவது பதவி ஏற்பு வைபவத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தின. இவற்றில் ஓர் அம்சமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிய சிரமதான இயக்கமொன்று மேற்கொள்ளப்பட்டது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் சசிதேவி ஜலதீபன் இதற்குத் தலைமை வகித்தார். பிரதேச செயலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் திரளாக இதில் பங்குபற்றினார்கள். அத்துடன் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.




திருகோணமலை கடற்கரை பிரதேசம் முக்கிய சுற்றுலா மையமாக மாறிவருகிறது. இதன் அழகைப் பாதுகாக்கும் பொருட்டே மேற்படி பாரிய சிரமதானப் பணியை மேற்கொண்டோம் என பிரதேச செயலாளர் சசிதேவி ஜலதீபன் தெரிவித்தார். (ளி)

# சாய்ந்தமருது கேணியை சுத்தப்படுத்தும் திட்டம்

சாய்ந்தமருது தாமரைக் கேணியை முழுமையாகச் சுத்தப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை கல்முனை மாநகர சபை மேற்கொண்டுள்ளது.

பொது நூலகம், மாவட்ட வைத்தியசாலை, மல்ஹர் சம்ஸ் மகாவித்தியாலயம், விதாதா வன நிலையம், சமுர்த்தி வங்கி, நீர் வழங்கல் அலுவலகம் ஆகியவற்றுக்கு மத்தியில் தாமரைக் கேணி அமைந்துள்ளது. இப்பகுதியில் குப்பை கூளங்களும் கழிவுப் பொருட்களும் நிறைந்துள்ளன. இவற்றால் பாரிய சுகாதார சீர்கேடுகள் நிலவுகின்றன. டெங்கு அபாயமும் தோன்றியுள்ளது. இச்சீர் கேடுகளை நீக்கும் பொருட்டு இந்தச் சுத்திகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என முதல்வர் எஸ். இஸட். எம்.மசூர்மௌலானா தெரிவித்தார்.

இதற்கான அனுசரணையை யுனெப்ஸ் நிறுவனம் வழங்கியுள்ளது.

இவ் வேலைத்திட்டம் நிறைவடைந்ததும் தாமரைக்கேணிப் பகுதி முழுமையாக சுத்தமடையும். நீரோட்டமும் சீரடையும். இதைத் தொடர்ந்து பேணுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் என்றும் அவர் வலியுறுத்துகிறார். (ளி)

# நோர்வூட் பாடசாலை மாணவர்கள் 60 பேர் திடீர் சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில்

## பாடசாலையை மூடுமாறு உத்தரவு

நுவரெலியா, நவ. 27

ஹற்றன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நோர்வூட் ஸ்டொக் கொம் பாடசாலையில் திடீரென ஒருவகை வைரஸ் தொற்றால் பீடிக்கப்பட்டு சுகவீனமுற்ற மாணவர்கள் 60 பேர் டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் சிலர் மயங்கிய நிலையில் இருந்தமையால் உடனடியாக அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கவிரவில, மாநெலி, மாக்கொல ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு ஒரு வகையான வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்ந்து சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு பயணம் செய்து நிலைமையைப் பார்வையிட்ட மத்திய மாகாண தமிழ்க்கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா உடனடியாக இரு நாட்களுக்கு (25,26) பாடசாலையை மூடுமாறு உத்தரவிட்டார். (ளி)

# கிளவட்டன் பாடசாலையில் துஷ்பிரயோகம் எதிர்த்து பெற்றோர் ஆர்ப்பாட்டம்

கண்டி, நவ.27

ஹற்றன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட நோட்டன் கிளவட்டன் பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராகப் பெற்றோர் நேற்றுமுன்தினம் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி பாடசாலையின் தொண்டர் ஆசி ரியர் ஒருவர் தரம் 4, 5 மாணவிகள் சிலரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஈடுபடுத்தினர் என்ற சந்தேகத்தின்பேரில் நோட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, ஹற்றன் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த தொண்டர் ஆசிரியரின் நடவடிக்கை குறித்து கடந்த 15 நாட்களுக்கு முன்பே பாடசாலை அதிபருக்கு தெரியவந்துள்ள போதும், இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்காமைக்கு ஆட்சேபம் தெரிவித்தே பெற்றோர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஹற்றன் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ரெங்கராஜ் தெரிவித்தவை வருமாறு:-

பெற்றோரின் கோரிக்கை தொடர்பாக அறிந்துகொள்வதற்கும், பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்காகவும் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் இருவர் அந்தப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் - எனத் தெரிவித்தார். (ளி)

# பூசாரியும் இரு மாணவர்களும் புதையல் தோண்டியபோது கைது

கொழும்பு, நவ.27

கலேவெல, இலுக்பிட்டிய பிரதேசத் திலுள்ள பாழடைந்த தென்னந்தோப்பு ஒன்றில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இருமாணவர்களும் அவர்களுடன் இருந்த பூசாரியொருவரும் ரம்படகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பாழடைந்த தென்னந்தோப்புக்குள் அடிக்கடி சென்று வருவதைக் கண்டு சந்தேகம் கொண்ட பிரதேசவாசிகள் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலையடுத்தே மூவரும் கைது செய்யப்பட்டனர்.

ரிதிகம, மதட்டியாவ பிரதேசத்தைச் சேர்ந்த இம்மாணவர்கள் இருவரும் இம் முறை ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்கள் தென்னந்தோப்புக்குள் சென்றுவரப் பயன்படுத்திய 80 லட்சம் ரூபா பெறுமதியான பதிவு செய்யப்படாத சொகுசு வாகனமொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ளி)




# பன்விலை பிரதேசத்தில் பாலுற்பத்தி ஊக்குவிப்பு

பசுமாடு வளர்ப்பை ஊக்குவித்து பால் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதோடு சுயதொழில் முயற்சியை அதிகரிக்கும் நோக்குடன் பன்வில பிரதேசசபை மேலும் 20 நல்லின மாடுகளை வளர்ப்புக்கு வழங்கவுள்ளது என சபை தலைவர் சரத் கீர்த்திரத்ன தெரிவித்தார்.

முன்னர் 16 மாடுகள் வழங்கப்பட்டன. அவற்றில் 8 மாடுகள் கன்றுகளை ஈன்றுள்ளன. இந்த எட்டுக் கன்றுகளும் மேலும் 8 பேருக்கு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மாணிக்கக்கல் அகழ்ந்தோர் கைது

கண்டி, நவ.27

காசல்ரீநீர்தேக்க கெசல்கமுவ ஆற்றுப் பகுதியில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுவந்தசிலரை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் மாணிக்கக் கல் அகழ்வதற்காக சுமார் 30 அடி ஆழத்திற்கு நிலத்தை தோண்டியுள்ளனர். இதற்குப் பயன் [illegible] பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ளி)

# நகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நெல்மூடையை ஆலைக்கு அனுப்பிய பெண்

## இரண்டு லட்சம் ரூபா நகை தொலைந்தது

கொழும்பு,நவ. 27

திருடர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக வீட்டிலிருந்த நகைகளை நெல்மூடையொன்றில் மறைத்து வைத்திருந்த பெண்ணொருவர் தான், ஞாபகமறதியில் அந்த நெல் மூடையை அரிசி ஆலைக்கு அரைப்பதற்கு அனுப்பியதால் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் இழக்கப்பட்டுள்ளன என அக்குரஸ்ஸ பொலிஸில் முறையிட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் கணவன் வடபிராந்திய பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுகிறார். வீட்டில் அலுமாரியில் வைப்பதை விட நெல்மூடையில் நகைகளை மறைத்து வைப்பது பாதுகாப்பானது எனப் பெண் கருதி அதில் வைத்துள்ளார். எனினும் ஞாபக மறதியில் அந்த நெல் மூடையை ஆலைக்கு அனுப்பிவிட்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பெண் அரிசி ஆலையில் பணியாற்றும் ஊழியரைக் கண்காணித்து வந்துள்ளார். சாதாரண நிலையில் இருந்த அந்த ஊழியர் தாராளமாக செலவழித்து வந்ததுடன் நவீன ரக செல்போன் ஒன்றையும் வாங்கியுள்ளார். இதனால் சந்தேகம் வலுத்த பெண் பொலிஸாரிடம் முறையிட்டார்.

சந்தேகநபரான ஊழியரைக் கைதுசெய்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது, நெல் மூடையிலிருந்து தனக்கு நகைகள் கிடைத்தன என்றும், அவற்றை அடகு வைத்தே மேற்படி செலவுகளைச் செய்தார் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார் - என அக்குரஸ்ஸ பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ். எஸ். ஜயவீர தெரிவித்தார். (ளி)

# பாரதிதாசன் பிணையில் விடுவிப்பு

புலிகளுக்கு உதவினார் என்ற சந்தேகத்தில் மத்திய மாகாண பயங்கரவாதக் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் பாரதிதாசன் நேற்று முன்தினம் சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒக்டோபர் 23ஆம்திகதி கைது செய்யப்பட்ட இவர் முதன் முறையாக நேற்றுமுன்தினம் நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு[illegible] மீண்டும் ஜனவரி ஆறாம் திகதி நுவரெலியா நீதி[illegible] ராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் வெற்றியை இன்னமும் கொண்டாடும் அரச ....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

✱ அரசோடு சில தமிழ்த் தரப்புகள் தொடர்ந்தும் ஒன்றித்துச் செயற்பட்டு வருகிறது. அத்தகைய தமிழ்த் தரப்புகள் அரசுக்குச் சரியான பாதையைக் காட்டவேண்டிய கடப்பாட்டை மறந்துவிட்டார்கள். சரியான வழியில் அரசை நெறிப்படுத்த அவர்கள் தவறியதால் பாரதூரமான விளைவுகளே பரிசாகக் கிடைக்கக்கூடும். இத்தகைய தமிழ்த் தரப்புகளின் சுயநல முகம் விரைவிலேயே கலைந்துவிடும். அப்போதுதான் அரசு தரப்பு தன் தவறை உணர்ந்து நாணக்கூடும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நினைவு கூரவேண்டும். முன்னாள் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் ஐ.தே.க அரசாங்கத்திலும் சரி எதிர்க் கட்சியாக இருக்கும் போதும் சரி தமிழனுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ அநீதி ஏற்படும் போதெல்லாம் நிமிர்ந்து நின்று குரல்கொடுத்தவர் எந்தப்பயமும் இல்லாமல்.

✱ என்னதான் ஜனநாயகம் பேசினாலும், எல்லோரும் இலங்கையரே என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக்கொண்டாலும் உண்மையில் வடக்கு - கிழக்கு மக்கள் வஞ்சிக்கப்பட்டே வருகிறார்கள். நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களைச் சர்வதேச தரப்புக்கு உயர்த்தப் போவதாகப் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டது. அந்தப் பட்டியலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மாத்திரம் இடமில்லை. ஏனிந்த மாற்றாந்தாய் மனப்பான்மை? தமிழ் மாணவர்களின் கல்வி மீது காலங்காலமாக வைக்கப்படும் கத்தி இப்போது பல்கலைக்கழக சர்வதேச தரமாக்கலிலும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை தமிழர் பிரச்சினையை இன்னமும் சிக்கலான நிலைக்கே இட்டுச்செல்லக்கூடியது. உலகில் நிகழ்ந்த எல்லாப் புரட்சிகளுக்கும், எல்லா மாற்றங்களுக்கும் மாணவர் சக்தியே பின்புலமாக இருந்ததென்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மீது இனவாதம் பிரயோகிக்கப்படும்போது அது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்திவிடும். எனவே சர்வதேசத் தரத்துக்குப் பல்கலைக்கழகங்களைத் தரமுயர்த்தும் பட்டியலில் யாழ். பல்கலைக்கழகத்தையும் அரசு உடன் இணைக்க வேண்டும். இல்லாவிட்டால் அவ்வாறு இணைக்க முடியாமைக்குரிய காரணத்தைப் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும்.

✱ போர் முடிந்து இயல்பு வாழ்வுக்கு மக்கள் திரும்பி எங்கும் வசந்தம் வீசுவதாகவே கூறப்படுகிறது. ஆனால் யதார்த்தமோ வேறுவிதமாகவே உள்ளது. நிவாரணங்களும் உரிய முறையில் கிடைப்பதில்லை. இழந்துபோன தம் சொத்துக்களை மீள்பதிலீடு செய்ய உரிய தொழில் வசதிகள் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

அபிவிருத்தித் திட்டங்கள் பலவும் நடைபெறுவதாகச் சொல்லப்படுகின்றபோதும் இதுவரையும் எந்தவொரு தொழிற்சாலையும் வடக்குப் பகுதியில் புதிதாக நிறுவப்படவில்லை. கைத்தொழில் அமைச்சரோ அல்லது பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரோ இவ்வாறு பாரிய தொழிற்சாலை எதனையும் நிறுவ முடியாமைக்கான காரணத்தை விளக்குவார்களா? புதிய தொழிற்சாலைகளை நிறுவாவிட்டாலும் கூட ஏற்கனவே இயங்கிய தொழிற்சாலைகளைக்கூட புத்துயிரூட்டி பழைய நிலைக்குக் கொண்டுவர இவர்களால் ஏன் முடியாமல் போனது? இதன்மூலம் ஏராளமான மக்களுக்கு வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் தொழில் வாய்ப்புகளை வழங்கலாம் என்ற நோக்கு ஏன் அரசுக்கோ அல்லது குறித்த அமைச்சர்களுக்கோ இன்றளவும் ஏற்படவில்லை? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இருக்கின்ற ஒரே பதில் வடக்கின் வசந்தம் என்பது காகிதத்தில் மட்டுமே வாழ்கிறது. அதுவே யதார்த்தம் கூறிநிற்கின்ற உண்மையும்கூட. வடக்கின் வசந்தம் தொடங்கிய நாள்களில் இருந்து அச்சுவேலி தொழிற்பேட்டை பற்றி பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதாவது எமது இனப்பிரச்சினைத் தீர்வு மாதிரியே இதுவும் பேசப்பட்டுக்கொண்டே போகிறது. இராணுவ நடவடிக்கையில் அழிக்கப்பட் (சொத்துக்கள்) வீடு வாசல்களைக் கட்டிக்கொடுத்து மக்களது சாதாரண வாழ்வை உறுதிப்படுத்தவேண்டிய கடமை இந்த அரசைச்சாரும். கடமை செய்வதை அரசியலுக்காக உதவி செய்வதாகக் கூறுவது எவ்வகையிலும் பொருத்தமல்ல. உதவிசெய்துவிட்டு அதை அபிவிருத்தியாகக் காட்ட முயல்வது மக்களை ஏமாற்றும் செயல். (த)


## பாராட்டும் நன்றியும்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபன ஆலோசகருக்கான போட்டியில் எமது காப்புறுதி ஆலோசகர் செல்வி தேவனி சர்வேஸ்வரதேவன் நெல்லியடிக்கிளையில் முதலிடம் பெற்றமைக்காகப் பாராட்டி வாழ்த்துகிறேன்.



கடந்த முப்பது வருடங்களாக எமது காப்புறுதிச் சேவையில் எமது காப்புறுதி ஆலோசகர்கள் அகில இலங்கை ரீதியிலும் யாழ்ப்பாண பிராந்தியத்தில் முதலிடம் பெறவும், இலட்சாதிபதிகளின் சங்கம், தலைவரின் சங்கம், அபிவிருத்தி முகாமையாளரின் சங்கம், பிராந்திய முகாமையாளரின் சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவம் பெறவும். லண்டன், அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பாங்கொக், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று வர உதவியாயிருந்த யாழ்ப்பாணம், நெல்லியடி இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர், பிராந்திய விற்பனை முகாமையாளர், விற்பனை முகாமையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், ஆலுவலக ஊழியர்கள் காப்புறுதிப் பத்திரதாரர்கள், ஆலோசகர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதோடு சகலருக்கும் எல்லாம் வல்ல எங்கும் அருள் சுரக்கும் எழிலாள் நயினை நாகம்மையின் கருணை கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

" காப்புறுதியின் முன்னோடிகளை நாடுங்கள் முன்னோடியின் பலம் முன்னரை விடப்பலமானது"

" நயினைக்கதிர்", தேனாவளவு', கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
077-3545323
021-3735615 (104496)

லயன் சி.ந.கதிர்வேலு J.P.
அகில இலங்கை அதி சிறந்த அமைப்பாளர்
( ஆயுள்-2004 இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்).



## கிளிநொச்சிக்கான பதவி வெற்றிடம்

கொழும்பில் தலைமையகம் கொண்ட நிதி நிறுவனத்தின் கிளிநொச்சிக் கிளைக்குப் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. நிதி ஆலோசகர்
2. குழுத் தலைவர்
3. நிதி நிறைவேற்று அதிகாரி

தகைமை: க.பொ.த. (சா/த) 6 பாடங்களில் சித்தி க.பொ.த. (உ/த) சித்தி.

நேர்முகத் தேர்வு: 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை
இடம்: கிளிநொச்சி (கனிஷ்ட) மகாவித்தியாலயம்
நேரம்: காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை.

(சி/5725539) நிர்வாகி.



## யா/ நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலயம்

## புலமைப்பரிசில் பரீட்சை பாராட்டு விழா-2010



(108501)

எமது மாணவச் செல்வங்களை வழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட எம் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி எம்.ஞானதர்சினி, ஆசிரியர்கள் திருமதி விமலன் ஜெயபாரதி,திருமதி.ரஞ்சித் றொனிற்றா ஆகியோரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**1.புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள்**

இடமிருந்து வலமாக முதலாவது வரிசையில் நிற்பவர்கள்

வ.வைஸ்ணவி (152), த.நிதர்சனா (157) ,ஜெ.கஸ்தூரி (145), அ.சோபிகா (145), து. பிரசாந்தி (168), சி.ஜனனி (145), ப.கேதர்சன் (148), ஹ.கர்ணன் (156), வி.தோகீசன் (143), பா.கீர்த்தனன் (142), வ.சுலக்ஷன்(147), தே.ஜீவதுவாரகன்(160)

**2.100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்**

இடமிருந்து வலமாக இரண்டாவது வரிசையில் நிற்பவர்கள்

சு. கவிநயா (118), யூ.லக்ஸனா (123), க.விதுஷிகா (141),ந.நந்தமது (100),ஆ.நிருக்ஷனா (125), பு.பவதாரணி (114), ஜெ.டனுகா (136), வ.விஸ்ணுகா (138),ரா.வேணுஜா (125), கு.தீபதிகா (133), சு.கீர்த்தனா (117), ம. ரஜீவனா (129), வி.கோபிகா (115), ரோ. மேரிகிறிஸ்ரினா (132), ச. டெனிற்றா (133), கி. மனோஜா (133)

இடமிருந்து வலமாக மூன்றாவது வரிசையில் நிற்போர்

க.கலாகரன் (135), ம.மயூரன் (104), உ.ராகுல்ராஜாராம் ( 117), சு.தனுஸ்கரன் (106), அ. சஜீவன் (105),ம.வினோதன் (110), க.தனுஸன் (132), மோ தேனுஜன் (130), கோ.குணாளன் (138), ஜெ.ஜெயக்கிளின் (123), ஸ்ரீ.ஜிந்துசன் (128), ச.மதுசன் (108), ஜெ.திலக்ஷன் (111), ச.சாரங்கன் (123),ரா.சங்கீர்த்தன் (102), இ.கஜவதனன் (111).

இவர்களுடன் இருப்பவர்கள் அதிபர் அருட்சகோதரி எம்.ஞானதர்சினி

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனஜய லொத்தர்**

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் **180** சீட்டிழுப்புத் திகதி **25.11.2010**

வெற்றி இலக்கங்கள்: **04 13 51 61** சுப்பர் இலக்கம்: **07**

சுப்பர் பரிசுப்பொதி – ரூ. **9,086,360/=**

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 57423 | ரூ. 20/= | ரூ. 1,148,460/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 5293 | ரூ. 40/= | ரூ. 211,720/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 4427 | ரூ. 100/= | ரூ. 442,700/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 403 | ரூ. 200/= | ரூ. 80,600/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 103 | ரூ. 1,500/= | ரூ. 154,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 10 | ரூ. 3,000/= | ரூ. 30,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 9,086,360/= | |
| மொத்த எண்ணிக்கை | 67660 | | 3,067,980/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. **9,261,500/=** உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, சுகாதிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 – 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


## எந்த அபிவிருத்தித்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

தளமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதே எனது நோக்கம். அதனை அடைவதற்கு எமது மக்கள் ஒன்றிணைந்து நிற்க வேண்டும். அரசுடன் இணைந்திருந்தால் இலக்கை அடையலாம்.

அனைத்துலக சமூகத்துக்கான செய்தி, எமது நிலைமையை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் பயங்கரவாதிகளைத்தான் தோற்கடித்தோம், விடுதலைப் போராளிகளை அல்ல. மொத்த உலகமும் இந்தப் பிரச்சினையை இன்று எதிர்கொள்கிறது. எனவே நாம் எதைச் சாதித்துள்ளோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கையும் இலங்கையையும் அபிவிருத்தி செய்வதற்கு அவர்கள் உதவ வேண்டும்.

சமூகங்கள் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கே அவர்கள் உதவ வேண்டும். அதனை மேலும் ஆழமாகவும் பெரிதாகவும் ஆக்குவதற்காக அல்ல. நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும். காயங்களைத் தொடர்ந்தும் நோண்டிக் கொண்டிருக்காதீர்கள். நாங்கள் சாதகமாகவே எல்லாவற்றையும் சிந்திக்கவேண்டும். எதிர்மறையாக அல்ல. (உ)

## வழிகாட்டல் கருத்தரங்கு இடமாற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ. 27

இளைஞர்களுக்கான நாளை அமைப்பினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் நடமாடும் சேவையை முன்னிட்டே கருத்தரங்கு இடமாற்றப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (204-207)

## முக்கிய அறிவித்தல்

### 30.04.2009 இல் நிதிக்கூற்று தயாரித்தல்

மேற்படி எமது சங்கம் மீளக்குடியமர்ந்தபின் 30.04.2009 இல் கணக்குகளை ஒழுங்குபடுத்தி நிதிநிலைக்கூற்று தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கமைய கீழ்வரும் விடயங்களை மேற்படி திகதியில் உள்ளவாறான உறுதிப்பத்திரங்களை 10.12.2010 இற்கு முன் தலைவர்/பொதுமுகாமையாளர்/கிளி/ மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்(வ/து), செல்வா நகர், கிளிநொச்சி எனும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம் அல்லது நேரடியாகவும் கையளிக்க முடியும்.

**1. சங்கத்திற்கு வருமதியானது**
1. 01) வியாபாரக்கடன் பெற்றோர்
2. 02) முற்பணம் பெற்றோர்
3. 03) மற்றும் ஏனைய வருமதிகள்

**2. சங்கத்திலிருந்து செலுத்த வேண்டியவை**
2. 01) வியாபார சென்மதிகள்
2. 02) முற்பணங்கள்
2. 03) ஏனைய சென்மதிகள்

**3. இடம்பெயர்வு தொடர்பில் சங்கம் தொடர்பாக ஏதும் தகவல்கள் இருப்பின் அதனையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

**தலைவர்**

கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்,
செல்வாநகர், கிளிநொச்சி.

(சி/572553)

## 104ஆவது பிறந்த தினமும் ஐந்தாம் ஆண்டின் அழியாத நினைவலைகளும்



### திருமதி சின்னம்மா நமசிவாயம்

(மலாயன் ஓய்வூதியர்)

27.11.2010

மண்ணில் 27 . 11 . 1906

விண்ணில் 03 . 07 . 2005

சந்திரன் இல்லா வானம்
தாமரை இல்லாப் பொய்கை
மந்திரி இல்லா வேந்தன்
மதகரி இல்லாச் சேனை
சுந்தரப் புலவர் இல்லா
தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திகள் இல்லா வீணை
இவையாவும் போல
எம் நிலையும் ஆனதே
உங்களை இழந்ததனால்.


நீக்கமற எமதுள்ளத்தில் என்றென்றும் உறைந்திருக்கும்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட எமதுறவுகளுக்கும்
இந்நாளில் எமது இதய அஞ்சலிகள் விழிநீர் மல்க
"சாந்ததமும் உங்கள் நினைவு சாகாத நம் நினைவே"

தையல்நாயகி (மகள்),
நந்திகா (பேர்த்தி),
"இந்திரகிரி", வதிரி, கரவெட்டி.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(சி/572584)

# மரண அறிவித்தல்



## கதிரவேலு சுப்பிரமணியம்

### (காரைநகர் கோவளம், முன்னாள் வர்த்தகர், பதுளை)

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாக கொண்டவரும், கோவளத்தில் வசித்தவரும் தற்போது வெள்ளவத்தை வெவசெட் பிளேஸை வசிப்பிடமாகக் கொண்டவருமான V.C. சுப்பிரமணியம் 25.11.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - லட்சுமி தம்பதியினரின் அன்பு மிக்க புதல்வரும், அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அம்பலவாணர் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், அமுதம் (முன்னாள் ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான பாக்கியம், பொன்னம்பலம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்களேஸ்வரி (வெள்ளவத்தை), சாந்தமலர் (U.K.), லலிதாம்பாள் (வெள்ளவத்தை), கதிர்காமநாதன் (Swiss), விமலநாதன் (Swiss), கௌரியம்பாள் (U.K.), ஞானாம்பாள் (வெள்ளவத்தை), அருட்செல்வி (U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமநாதன், காலஞ்சென்ற தங்கராசா, நிமலேஸ்வரன், தனலட்சுமி, அருட்செல்வி, யோகநாதன், சுந்தரலிங்கம், கோபால் ஆகியோரின் அன்புமிக்க மாமனாரும், ஜெயகாந்தன், ஜெயரூபன், ஜெயந்தினி, ஜெயதர்சன், தாமிரா, உகந்தன், தயானி, அகீபன், கஜலக்ஷ்மி, மாதங்கி, சுஜிந்தன், பஜிந்தன், மாதோஸ், நிரோஷ், யதிசன், அபிலாஷ், கணேசராம், பிரவீன், கஜனி, காஞ்சனா, கௌசல்யா, மகேஸ்வரன், துஷ்யந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அமுதினி, அஞ்சுதன், பிரசன்னா, லிபிசா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று சனிக்கிழமை அவரின் இல்லத்திலும் பின்னர் இறுதிக்கிரியைக்காக மஹிந்த மலர்ச்சாலைக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் வைக்கப்பட்டு காலை 8.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணிக்கு கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**29, வெவசெட் பிளேஸ்,**
**வெள்ளவத்தை.**
**தொ.பே. 2503299**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி சிவகெங்கை ஆனந்தகிருஷ்ணனின் முதலாவது மோட்ஷ பிரார்த்தனை



திருவாளர் ஆனந்தகிருஷ்ணனின்
(இளைப்பாறிய உத்தியோகத்தர், அஞ்சல் தொலைத்தொடர்பு)
மனைவி **சிவகெங்கையின்** முதலாவது மோட்ஷ பிரார்த்தனை
இன்று (27.11.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.
இத்தருணம் இடம்பெறும் கூட்டுப்பிரார்த்தனையிலும், மதிய
போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்..

மாகியப்பிட்டி றோட்,
சண்டிலிப்பாய்.

ஆனந்தகிருஷ்ணனும்,
பிள்ளைகளும்.

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் சின்னத்தம்பி



இணுவில் மேற்கு, வட்டுவினியைச் சேர்ந்த சண்முகம் சின்னத்தம்பி 25.11.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் சண்முகம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியத்தின் அன்புக் கணவரும் பூமலட்சுமி, பரமானந்தம் (சுவிஸ்), பத்மாவதி, சண்முகேஸ்வரி, கணேசானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபாலப்பிள்ளை, வசந்தகுமாரி, வரதராசபிள்ளை, இராசேந்திரன், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமனும், சிவசோதி (தர்மினி), சிறீகரன் (சுபோதினி), மகேஸ்வரன் (சுஜந்தினி), சுகந்தினி (பிரேம்குமார்), கௌசல்யன், செந்தூரன், ஜதூசன், தனராஜ் (கார்த்திகாயினி), விஜிதா (காந்தன்), தாட்சாயினி (செந்தூரன்), நிரோஜினி, கஜேந்திரன், சிவதர்சினி, மேகலாதன், விந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், புராதனி, மர்த்தனி, லஷ்சினி, நிரூஷினி, கஜானன், கபேசன், மிதேஷா, சஸ்வதன், மிகிறன், நிவேஷ், வராகன், கரிசன், ஜரிஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணகை அம்மன் கோயிலடி,*
*இணுவில் மேற்கு, இணுவில.*

*தகவல்:*
க.கோபாலபிள்ளை *(மருமகன்).*

## தம்பிஐயா சந்திரசேகரம்



நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா சந்திரசேகரம் 25.11 .2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா- செல்லம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெள்ளைக்குட்டி- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், நந்தினி, ஜெபாபு (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைவாசன் (வருகை விரிவுரையாளர், இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி), கல்யாணி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், உதிசன் (மாணவன், தரம் 2, யா/இந்து ஆரம்பப் பாடசாலை), தானுசன், கவின் (சுவிஸ்), கனிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற அழகம்மா மற்றும் நாகரட்ணம், குணரட்ணம் காலஞ்சென்ற தருமசேகரம் மற்றும் குலசேகரம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சீவரட்ணம், தேவராணி, செல்வராணி, காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், பிறைசூடி, இராசமணி, கந்தையா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி மேற்கு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ். பல்கலையில் நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம், நவ.27

பேராசிரியர் சு.கணபதிப்பிள்ளையின் 'உடையார்மிடுக்கு' நாடகம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆற்றுகை செய்யப்படவுள்ளது. க.ரதிகரனின் ஆற்றுகையில் இந்த நாடகம் மேடையேற்றப்படும்.

# சிறுவர் விடுதி புதிய கட்டடத்தில்

தென்மராட்சி,நவ.27

சாவகச்சேரி வைத்தியசாலை சிறுவர் விடுதி புதிய கட்டடத்தில் இயங்கிவருகிறது.

ஜப்பானிய நிறுவனத்தினால் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டட சிறுவர் விடுதி அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டதையடுத்து சிறுவர் விடுதி இயங்கிவருகிறது.

(ம-207)

## நானாட்டானில் குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையில்

மன்னார்,நவ.27

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெரிய கட்டைக்காடு குளம் உடைப்பெடுத்தது. எனினும் பொது மக்களின் பெரும் முயற்சியால் மேலும் உடைப்பது தடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் மழையைத் தொடர்ந்து அணைக்கட்டு சிதைந்ததால் பெரும் அனர்த்தம் ஏற்படவிருந்தது. பொதுமக்களின் அவசரநடவடிக்கையில் இந்நிலைமை தவிர்க்கப்பட்டது.

தற்போதும் கூடசூரிய கட்டைக்காடுக்குளம், பெரிய கட்டைக்காடுக் குளம் ஆகியன நீர் நிரம்பிக் காணப்படுவதனால் உடைப்பெடுக்கக் கூடிய அபாயம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-86)

## கொழும்பில் குப்பைகள் அகற்ற தினமும் ரூ.22 இலட்சம் செலவு

கொழும்பு. நவ-27

கொழும்பில் குப்பை கூளங்களை சேகரிப்பதற்கு மாநகரசபைக்கு நாளாந்தம் சுமார் 22 லட்சம் ரூபா செலவாவதாக மாகாண சபைகளின் பிரதியமைச்சர் இந்திக பண்டாரநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கொழும்பில் நாளாந்தம் சுமார் 700 மெட்ரிக் தொன் குப்பை கூளங்கள் சேகரிக்கப்படுகின்றன. மூன்று தனியார் நிறுவனங்கள் இந்த பணியை மேற்கொள்கின்றன.

(ஓ-5)

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து தனஞ்செயன்



வேலணை இளைப்பாறிய தபாலதிபர் காலஞ்சென்ற சரவணமுத்து தம்பதியரின் இரண்டாவது மகனும் மேலைக்கரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்ற வே.நா. கந்தையா தம்பதியரின் மருமகனுமாகிய, பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்து இளைப்பாறியவரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வந்தவருமாகிய தனஞ்செயன் வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியை சிவசுந்தராவின் அன்புக் கணவரும், ஆதித்தன், மங்களா(கனடா), அனுஷா(துபாய்), கல்பனா(கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், மாதுமை, நந்தகுமார், புனிதநாதன், நிமலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிரா, சாயிரா, ஹரி, மதுஷா, மிதுஷா, மயூரா, அருண் ஆகியோரின் அன்புப் பேரனும், இளைப்பாறிய தபாலதிபர் நல்லைநாதன், இளைப்பாறிய ஆசிரியர் சிவம், செந்தில்நாதன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை 29.11.2010 கனடாவில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு-T.P-0014164460508
முகவரி- 1908 1208 YORK MILLS ROAD,
N.YORK,ONTARIO,CANADA

*தகவல்:*
**க.ஸ்ரீபதி**

(106560)

# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 845 திகதி: 25.11.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| L | 13 | 21 | 39 | 44 | 50 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 22,875,503.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 297 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14505 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 202088 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 30,141 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**8,089,080.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**23,201,517.50**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை அன்னலிங்கம்



(தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய முன்னாள் பஞ்சாய உறுப்பினரும், கோயில் திருப்பணியைத் தனது இலட்சியமாகக் கொண்டவரும், இளைப்பாறிய காணிப் பதிவாளரும், யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளரும், முன்னாள் உடுவில் பிரிவு விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானும், ஆங்கில மொழி பெயர்ப்பாளரும்)

தாவடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை அன்னலிங்கம் (24.11 2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- கதிரமலை தம்பதியரின் அன்புப் புதல்வனும், தாவடி முன்னாள் பிரபல வர்த்தகர் வே.க. கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (திரவியம்) அன்புக் கணவரும், செந்தில்குமரேசன் (விவாக, பிறப்பு, இறப்புப்பதிவாளர், உடுவில்), சாந்தினி (லண்டன்), கௌரி (லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும், கௌரிதேவி, இலங்கரத்தினம் (தாசன்- லண்டன்), குகசேனன் செட்டியார் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், நந்ததயாளன், டிலானி, டிலக்ஷி (லண்டன்), டிலக்ஷன், சுவாரகன், சுவாதிகன் (யாழ்.பரியோவான் கல்லூரி மாணவர்கள்), அபிகீத், அஷ்ணவி (லண்டன்), அகியோரின் அன்புப் பேரனும் தியோவின் (லண்டன்) ஆசைப் பூட்டனும், தையல்நாயகி (கனடா), செல்வலிங்கம், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், சிவபாக்கியம் மற்றும் சிவமணி (கனடா), பூமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற மகேஸ்வரி, தனலட்சுமி (சறோசா- லண்டன்), மகாலட்சுமி (ராசாத்தி), கெசலட்சுமி (கெசம்) ஆகியோரின் மைத்துனரும் அவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

"கணேசன் கருணை"
தாவடி- மானிப்பாய் வீதி,
தாவடி.

தொலை பேசி இல:
தாவடி- 021 222 3522, 021 321 8551
சாந்தி (லண்டன்)- 0044 208 423 3280
கௌரி (லண்டன்)- 0044 208 574 6358

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதிர்கிறது பிரிஸ்பேர்ண் களம்

# இங்கிலாந்து பதிலடி ஆஸ்திரேலியா 220/5

பிரிஸ்பேர்ண், நவ. 27

பிரிஸ்பேர்ண் டெஸ்ட் களம் அதிரத் தொடங்கியுள்ளது. ஆஸியின் தாக்குதலில் 260 ஓட்டங்களுக்குள் சுருண்ட இங்கிலாந்து அணி, நேற்றுப் பதிலடி கொடுக்கும் விதமாகத் தனது தாக்குதலை ஆரம்பித்தது. பதில் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறிவரும் ஆஸ்திரேலிய அணி, நேற்று ஆட்ட நேரம் முடியும்போது 220 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்துள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டி ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேர்ண் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 260 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

வோட்ஷன் 9 ஓட்டங்களுடனும், கடிச் 15 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று மீண்டும் தனது இனிங்ஸைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்தின் பந்துவீச்சுத் தாக்குதலால் நிலை குலைந்து போனது.

வோட்ஷன் 36 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்து செல்ல, பின்னர் வந்த பொண்டிங்கும் (10) வந்தவேகத்திலேயே நடையைக் கட்டினார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த கடிச், அரைச்சதமடித்த கையோடு ஆட்டமிழந்து சென்றார். பின்னர், கிளார்க் (9), நோர்த் (1) ஆகியோரும் ஆட்டமிழந்து சென்றனர்.

இறுதியில் நேற்று ஆட்ட நேரம் முடியும்போது ஆஸ்திரேலிய அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 220 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மைக்ஹஸி 81 ஓட்டங்களுடனும், கெடின் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், அன்டர்சன், பின் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும், ஸ்வான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய நிலவரப்படி, இங்கிலாந்தை விட ஆஸ்திரேலிய அணி 40 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.




# ஆசியக் கிரிக்கெட் போட்டியில் சம்பியனானது பங்களாதேஷ்

### இலங்கைக்கு நான்காம் இடம்

குவாங்சு, நவ.27

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் 'இருபது-20' கிரிக்கெட் போட்டியில், ஆப்கானிஸ்தான் அணியை 5 விக்கெட்டுகளால் வீழ்த்திய பங்களாதேஷ் அணி சம்பியனானது.

அத்துடன், நடைபெற்ற மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் இலங்கை அணி, பாகிஸ்தானிடம் தோற்று நான்காவது இடத்தைப் பிடித்தது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 'இருபது-20' கிரிக்கெட் இறுதிப் போட்டியில் பங்களாதேஷ் - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 118 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் 119 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 19.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் போட்டியில் வெற்றிபெற்றதுடன் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கிரிக்கெட்டின் சம்பியனாகவும் தெரிவுசெய்யப்பட்டது.

அத்துடன், நடைபெற்ற மூன்றாவது இடத்திற்கான போட்டியில், பாகிஸ்தான் - இலங்கை அணிகள் மோதின.


முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் 136 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 18 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் பாகிஸ்தான் அணி, 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றதுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தது.

## கபடிப் போட்டியில் இந்தியாவுக்கு தங்கம்

ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான கபடி இறுதிப்போட்டியில் இந்திய அணி, 28-14 என்ற கணக்கில் தாய்லாந்து அணியை வீழ்த்தி தங்கம் வென்றது.

ஆசியப் போட்டியில் பெண்கள் கபடி அணி தங்கம் வெல்லுவது இதுவே முதல் முறையாகும்.



நேற்றும் கொழும்பில் மழை பெய்தமையால் மேற்கிந்தியத் தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நேற்றைய ஆட்டம், ஒரு பந்துகூட வீசப்படாமல் கைவிடப்பட்டது. இதனால், ஆட்ட மைதானம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

# தங்கம் வென்றதால் அன்புத் தொல்லை!

இந்திய டென்னிஸ் அரங்கின் புதிய இளம் நட்சத்திரமாக உருவெடுத்துள்ளார் சனம்சிங் (22). ஆசிய விளையாட்டு இரட்டையர் டென்னிஸ் போட்டியில் சோம்தேவுடன் இணைந்து சாதித்த பிறகு, இவரது வீட்டில் தொடர்ந்து தொலைபேசி மணி ஒலித்துக்கொண்டே இருக்கிறதாம்.

சீனாவில் நடந்துவரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு இம்முறை இந்திய முன்னணி வீரர்களான லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஆகியோர் செல்லவில்லை.

எனினும், இளம் வீரரான சோம்தேவ் தேவ்வர்மன், சானியா மிர்ஷா ஆகியோர் தவிர புதிய முகங்களுடன் இந்தியா களமிறங்கியது.

இதில் சோம்தேவுடன் இணைந்து ஆண்கள் இரட்டையர் டென்னிஸ் போட்டியில் பங்கேற்றார் சனம் சிங். அடுத்தடுத்து வெற்றிபெற்ற இவர்கள் இறுதிப் போட்டியில் சீன ஜோடியை வீழத்தி தங்கம் வென்றனர்.

அரியானாவில் உள்ள இவரது வீட்டில் இடைவிடாது தொலைபேசி ஒலித்துக் கொண்டே உள்ளதாம்.

இதுகுறித்து இவரது தாயார் ரூபா சிங் கூறியவை வருமாறு:-

சோம் தேவ் - சனம்சிங் ஜோடி தங்கம் வென்ற பிறகு, குடும்ப நண்பர்கள், உறவினர்கள் என அனைவரிடமிருந்தும் வாழ்த்து கள்குவிந்த வண்ணம் உள்ளன. வீட்டிலுள்ள போன் மணி ஓயவே இல்லை.



சனம் சிங்கிற்கு டென்னிஸ் வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரிய வெற்றி இது. இதற்காக சனம்சிங் கடினமாக பயிற்சிகள் செய்திருந்தார். இந்த வெற்றி மூலம் தனது கனவு நிறைவேறியுள்ளதாக என்னிடம் தெரிவித்தார்.

## பிரவீன்குமார் விலகல்

இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி கவுகாத்தியில் நாளை 28ஆம் திகதி நடக்கவுள்ளது.

இந்தப் போட்டியில் காய்ச்சல் காரணமாக பிரவீன்குமார் விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளரான நெஹ்ரா சேர்க்கப்பட்டுள்ளார்.

# ஆசிய விளையாட்டுகள் இன்றுடன் நிறைவு 185 தங்கங்களுடன் சீனா முன்னிலை!

குவாங்சு, நவ.27

ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் குவாங்சு நகரில் நடந்து வருகிறது. இந்தப் போட்டி கடந்த 12ஆம் திகதி தொடங்கியது. இன்று 16ஆவது நாளாக போட்டிகள் நடந்து வருகின்றன.

அதேவேளை, இன்றுடன் போட்டிகள் அனைத்தும் முடிகின்றன. இன்று தடகளம், செபிக்தக்ரா, கரப்பந்தாட்டம் ஆகியவை நடக்கின்றன.

இவை முடிந்ததும் இன்று மாலை போட்டி நிறைவு விழா நடக்கும்.

தொடக்க நாளிலிருந்தே சீனா பதக்கங்களைக் குவித்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. சீனா (நேற்று மதியம் வரை) 185 தங்கங்கள், 106 வெள்ளிகள், 92 வெண்கலங்கள் என மொத்தம் 383 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

2ஆவது இடத்தில் தென் கொரியா உள்ளது. 72 தங்கங்கள், 61 வெள்ளிகள், 86 வெண்கலங்கள் என மொத்தம் 219 பதக்கங்க்ள் தென்கொரியாவுக்குக் கிடைத்துள்ளன.

47 தங்கங்கள், 70 வெள்ளிகள், 80 வெண்கலங்கள் என 197 பதக்கங்களைப் பெற்று ஜப்பான் 3ஆவது இடத்தில் உள்ளது.

இந்தியா 11 தங்கங்கள், 14 வெள்ளிகள், 29 வெண்கலங்கள் என மொத்தம் 54 பதக்கங்களுடன் 7ஆவது இடத்தில் இருக்கிறது.

கடந்த ஆசியப் போட்டிகளின்போது இந்தியா 10 தங்கப் பதக்கங்களைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சீனா கடந்த ஆசிய விளையாட்டுக் போட்டிகளில் 166 தங்கங்கள், 87 வெள்ளிகள், 63 வெண்கலங்களைப் பெற்றிருந்தது. இப்போது அதைவிட அதிகமான பதக்கங்களைக் குவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலய உதைபந்தாட்டம்; காலிறுதி ஆட்டங்களின் முடிவுகள்

வலி.வடக்கு, நவ.27

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு கிடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவு களுக்கான உதைபந்தாட்டம் போட்டியின் காலிறுதி ஆட்டங் களின் முடிவுகள் வருமாறு.


மானிப்பாய் இந்துக்கல்லூ ரிக்கும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் மானிப் பாய் இந்துக்கல்லூரி வசாவி ளான் மத்திய மகாவித்தியால யத்தை 1:0 என்ற கோல் கணக்கில் வென்றதும்

இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூ ரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோ தயாக் கல்லூரியை வென்றது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் மகா ஜனக்கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது.

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியா லயத்திற்கும் சுழிபுரம் விக்ரோ றியாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியா லயம் 1:0 என்ற கோல் கணக்கில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை வென்றது. (த-86)

## எங்களாலும் முடியும்.....



சாதிக்க: விளையாட்டமைச்சினால் நடத்தப்பட்ட அகில இலங்கை குத்துச்சண்டைப் போட்டியில் வெண்கலப் பதக்கங்க ளைப் பெற்றுக்கொண்ட பருத்தித்துறையைச் சேர்ந்த என்.கதி ரவன் (52 கிலோ) தொண்டைமானாற்றைச் சேர்ந்த எஸ்.செந்தில் நாதன் (62 கிலோ) ஆகிய இரு குத்துச்சண்டை வீரர்கள் இவர் கள். இந்தக் குத்துச்சண்டைப் போட்டி கண்டி எட்மன் சில்வா விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது. கடந்த முதலாம் திகதி அங்கு இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் இவர்கள் விருந்தி னர்களிடமிருந்து பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர். (த)

# மத்தியஸ்தர் சங்க புதிய நிர்வாகிகள்

வலி.வடக்கு,நவ.27

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் 50வது ஆண்டு வருடாந்த பொதுக் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் முன்னாள் தலைவர் ஆர். செல்வராசா தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிக தலைவர் எம். வேதாபரணம் தலையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் நிர்வாக குழு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக முருகவேலும், உப தலைவர்களாக ஆர்.செல்வராசா, எஸ்.முரளிதரன், சண தயாளன், என்.நடராசா, கோபிகிருஸ்ணன் ஆகிய ஐந்துபேரும், செயலாளராக எஸ். சிவசங்கரும், பொருளாளர்/ உபசெயலாளர் - குமரேசனும் நிர்வாகசபை உறுப்பினர்களாக கே. செல்வராசா, சிதம்பரப்பிள்ளை, றொபேசன், நாதன், ஞானதயாளன் ஆகியோரும், கணக்காய்வாளர்களாக நா. நவரத்தினராசா, திருச் செல்வன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-86)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை**
**இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு மருத்துவபீடம்**

## அறிவித்தல்

*கல்வியாண்டு 2009/2010*
*புதிய மாணவர்களுக்கான விரிவுரை*
*ஆரம்பம்-பிற்போடல்*

29.11.2010 அன்று ஆரம்பமாகவிருந்த 2009/2010 கல்வியாண்டிற்கான மருந்தியல், தாதியியல், மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் 13.12.2010 அன்று ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்
26.11.2010

(வி/572594)

## மரண அறிவித்தல்



### யோகம்மா வேலாயுதபிள்ளை

தாவடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட யோகம்மா வேலாயுத பிள்ளை நேற்று (26.11.2010) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சீரடி சாயி மந்திர்,
114, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (106571)

தகவல்
பா. ராகவன் (பேரன்)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 17 . 05 . 1924



மறைவு 28 . 10 . 2010

கோப்பாய் மத்தி, காளி கோவிலடியைச் சேர்ந்த

### அமரர் சின்னக்குட்டி முத்துத்தம்பி

கடந்த 28.10.2010 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.11. 2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றன.

அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காளி கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (106570)

குடும்பத்தினர்.

## 5பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டம்

பருத்தித்துறை வை.எம்.சி.ஏயின் ஆதரவுடன் பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் பதிவு செய்யப்பட்ட கழ கங்களுக்கிடையிலான ஐந்து பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை யும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத் தில் இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டது. (ஒ-23)

## மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.27

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மே ளனம் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டத் துடன் இணைந்து நடத்தும் வலைபந் தாட்ட மத்தியஸ்தர்களுக்கான 'ஏ', 'பி', 'சி' தரங்களுக்கான பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி யளவில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த் திகளை நேரகாலத்துடன் சமுகம் கொடுக் குமாறு யாழ். வலைப்பந்தாட்ட மத்தியஸ் தர் சங்கத் தலைவர் திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (த-23)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறோயிலர் 4Kg மேற்பட்டது, சுத்தம் செய்து 1Kg 450/= அத்துடன் கல்பேட், ஊர்ச்சேவல் என்பனவும் விற்பனைக் குண்டு.

158/5, தாசன் பாம், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

மிகவும் நல்லநிலையிலுள்ள கமடா ஒப்செற் மெசின் (Legal) விற்பனைக்குண்டு.

166, நாவலர் வீதி, யாழ்.
0212227442 / 0718474325

**வீடு விற்பனைக்கு**

மானிப்பாய் மெமோறியல் லேனில் 3 3/4 பரப்புக் காணியும் அதற்குள் அமைந்துள்ள வீடும் விற்பனைக்கு உண்டு. இந்த வீடு கோயில், பாடசாலைகள், ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு அண்மையில் அமைந்துள்ளது.

தொடர்பு- 0112503018,0112337594, 0777349357,0213219663
Mohan 1821 @ hotmail.com

**அறை வாடகைக்கு உண்டு**

யாழ்.நகருக்கு மிகவும் அண்மியதாக (சிங்கள மகா வித்தியாலயம் முன்பாக) பெண்களுக் கான வசதியான அறை வாடகைக்கு உண்டு. [illegible] விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:0778039588, 0777869760
இல.631, Hospital Road, Jaffna.

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை ஜெயவீரசிங்கம்



காரைநகர், பல காடைப் பிறப்பிடமாக வும், இல.48, ஜின்னா வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட செல்லத்துரை ஜெயவீரசிங்கம் அவர்கள் (23.11.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறு திக்கிரியைகள் நாளை (28.11.2010) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 8 மணியளவில் அவ ரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியள வில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 48, ஜின்னா வீதி,
யாழ்ப்பாணம். (106567)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P. 0777072117

### திருமதி காசிப்பிள்ளை அன்னபூரணம்

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிட மாகவும், விளானை, களபூமி, காரைநகரை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி காசிப்பிள்ளை அன்னபூரணம் நேற்று (26.11.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங் கம்-வள்ளியம்மை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வர்களான அம்பலவாணர்-சின்னக்குட்டி தம்பதியினரின் மரும களும், காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனை வியும், பத்மநாதன், பரமேஸ்வரி, கனகசபை, காலஞ் சென்ற சரஸ்வதி (தேவி) மற்றும் நவரத்தினம் ஆகியோரின் தாயாரும், பரமசாமி, மகேஸ்வரி, இரத்தின பூபதி, ஆறுமுகம், வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம், சோமசுந்தரம் ஆகியோ ரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான உருத்திர சிவம், புஷ்பராணி மற்றும் சற்குணராசா(லண்டன்), பத்மலோசனி, செல்வராணி(சுவிஸ்), சரவணபவன் (நாவலப்பிட்டி), செந்தூரன்(நாவலப்பிட்டி), தயானந் தன், சசிகலா (லண்டன்), லோகேஸ்வரி, தர்சிகா, கலஜா, தேவமயூரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2010) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளானை, களபூமி,
காரைநகர். (106566)

தகவல்:
மக்கள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுடன் சேர்ந்து எதிர்த்தால் தென்கொரியா மீது மீண்டும் தாக்குதல்

## எச்சரிக்கிறது வடகொரியா

சியோல், நவ. 27

அமெரிக்க படைகளுடன் சேர்ந்து இராணுவத்தை குவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் தென்கொரியா மீது அடுத் தடுத்து தொடர் தாக்குதல்கள் நடத்தப் படும் என வடகொரியா வியாழக் கிழமை எச்சரிக்கை விடுத்தது.

தென்கொரியா, வடகொரியா ஆகிய நாடுகளுக்கிடையே பல ஆண்டுகளாகப் பகை நிலவுகிறது. கடந்த 1950ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை பெரியள வில் கொரிய போர் நடந்தது.

இந்த நிலையில், மஞ்சள் கடல் பகுதியில் தென்கொரி யாவுக்குச் சொந்தமான தீவு மீது வடகொரியப் படைகள் கடந்த செவ்வாயன்று பீரங்கித் தாக்கு தல் நடத்தின. அதில் 2 பேர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, தென்கொரி யாவுக்கு ஆதரவாக விமானம் தாங்கி போர்க்கப்பலை அமெ ரிக்கா அனுப்பி வைத்துள்ளது.

இதனால், கொரிய தீபகற்பப் பகுதியில் போர் மேகம் சூழ்ந்து, பதற்றம் அதிகரித்திருக்கிறது. எனினும், வழக்கமான கூட்டு இராணுவப் பயிற்சி மேற்கொள் ளவே அமெரிக்க கப்பல் தென் கொரியா செல்கிறது எனக் கூறப்படுகிறது.

கொரிய கடற்பகுதியில் இரு நாடுகளின் படைகளும் அடுத்த வாரம் கூட்டு கடற்படை போர்ப் பயிற்சியை மேற்கொள்ளும் என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தென்கொரியாவுக்கு ஆதரவாக மேற்கு நாடுகள் களமிறங்கி இருக்கின்றன என வடகொரியா கருதுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில், ''அமெரிக்கப் படைகளும், தென்கொரிய படைகளும் மேற் கொள்ளும் கூட்டு இராணுவப் பயிற்சியே வடகொரியாவுக்கு நாங்கள் தரும் சரியான பதிலாக அமையும்'' என தென்கொரிய வெளியுறவு அமைச்சகம் வியா ழக்கிழமை தெரிவித்தது.

மேலும், தாக்குதல் நடந்த தீவு மட்டுமல்லாமல், அதைச் சுற்றியுள்ள தீவுகளிலும் ஏராள மான இராணுவத்தை தென் கொரியா குவித்துள்ளது. இது தவிர, முப்படைகளும் தயார் நிலையில் இருக்கின்றன. வட கொரியா இராணுவம் தாக்குதல் நடத்தினால், எந்தத் தயக்கமும் இல்லாமல், உடனடியாகத் தகுந்த பதிலடி கொடுக்குமாறு தென்கொரிய இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனால், வடகொரியா கடும் ஆத்திரம் அடைந்துள்ளது. எனவே, இந்த அறிவிப்பு வெளியான சிறிது நேரத்தில் வடகொரிய இராணுவம் சார்பாக வியாழக் கிழமை நண்பகலில் ஓர் அறிக்கை வெளியானது. அந்த நாட்டு தேசிய செய்தி ஏஜென்சி மூல மாக அது வெளியிடப்பட்டது.

அதில், ''போருக்கு ஆயத்த மாவதை தென்கொரியா நிறுத் திக்கொள்ளவேண்டும். இரா ணுவத்தை திரும்ப பெற்றுக் கொள்ளாமல், அமெரிக்காவு டன் சேர்ந்துகொண்டு வட கொரியாவை எதிர்த்தால் தாக்கு தல் தொடரும். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது எனத் தொடர்ந்து அடுத்தடுத்து சக்தி வாய்ந்த தாக்குதல்களை நடத்தத் தயங்க மாட்டோம்'' என எச்ச ரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது.

இதற்கிடையே, வடகொரியா வுக்கு சீனாவின் ஆதரவு இருந்து வருகிறது. எனவே, இந்த விவ காரம் குறித்து சீனாவு டன் பேச தென்கொரியா முடிவு செய்திருந் தது. ஆனால், அதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஏனெ னில், தென்கொரியாவுக்கு இந்த வாரம் பயணம் மேற்கொள்ள விருந்த சீன வெளியுறவு அமைச் சர் யாங் ஜியாச்சி, தமது பய ணத்தை தள்ளி வைத்து விட்டார்.

வடகொரியாவை சீனா பகிரங் கமாகக் கண்டித்தால் மட்டுமே இந்தப் போர் பதற்றம் தணியும் என அரசியல் வல்லுநர்கள் கருது கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், தென் கொரியாவின் உள்நாட்டுப் பொருளாதார சூழ்நிலை குறித்து ஆலோசனை செய்வதற்காக ஜனாதிபதி மாளிகையில் வியாழக் கிழமை அவசரக் கூட்டம் நடந் தது. கூட்டத்துக்கு ஜனாதிபதி லீ மியுங் தலைமை வகித்தார்.

வட கொரியாவுடன் போர் மூண்டால் உள்நாட்டுப் பொருளா தார சிக்கல் ஏற்படாமல் தடுப் பது குறித்து அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

# மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகின்றன. வரவு-செல வுத் திட்டத்தில் மீனவர்கள், விவசா யிகளுக்கு எதுவித அனுகூலங்களும் கிடைக்கவில்லை; சமுர்த்தி கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவில்லை.

மாறாக அமைச்சர்களின் எண்ணிக்கைதான் அதிகரிக்கின்றது. இது நாளுக்கு நாள் அதிகரிக்கவும் செய்கிறது. இது ஒரு கின்னஸ் சாதனையாக உள்ளது.

அரசமைப்புக்கு முரணாக சிரேஷ்ட அமைச்சர்கள் 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமனம் அவர்களுக்கு இழைக் கப்பட்ட பெரும் அநீதியாகும். அவர்களால் 3 மாதங்களுக்கு ஒரு தடவை தான் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துகொள்ளமுடியும்.

அந்த அமைச்சர்களுக்கு செயலாளர்களும் இல்லை; அலுவ லகங்களும் இல்லை. அவர்கள் பிரதி அமைச்சர்களை விடவும் கீழ் மட்டத்தில் உள்ளனர். அரசு மாகாண சபைகளை இல்லா தொழிக்கும் செயலில் ஈடுபட்டு வருகிறது. மாகாண சபைகள் மேற்கொள்ள வேண்டிய வரி அறவீடுகளை அரசுதான் செய் கின்றது. அவற்றில் சில சட்டவிரோதமாகும்.

அரசமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தின்படி இவ்வாறு செய்ய முடியாது. மாகாண சபை மிக விரைவில் முடிவுக்கு வரும். -என்றார்.

# பசுபிக் பெருங்கடலில் 50 நாள்களுக்கு முன் காணாமற்போன மூன்று வாலிபர்கள் மீட்பு

வெலிங்டன், நவ. 27

பசபிக் பெருங்கடலில் 50 நாள்களுக்கு முன் காணாமற் போன மூன்று வாலிபர்கள் உயி ருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

நியூஸிலாந்து டோகிலே தீவு பகுதியைச் சேர்ந்த 15 வயதுள்ள சாமு பேரஸ், பிலோ பிலோ, எட்வர்ட் நாசவு ஆகிய மூன்று வாலிபர்களும், ஒக்டோ பர் 5ஆம் திகதி நடந்த படகு போட்டியில் கலந்துகொண்ட போது தென் பசுபிக் பகுதியில் காணாமற்போனார்கள்.

பிஜி என்ற சிறிய தீவில் அவர்களை மீட்புக் குழுவினர் வியாழக்கிழமை கண்டுபிடித்து வைத்தியசாலையில் சேர்த்தனர். தேங்காய் சாப்பிட்டும், மழை நீர் குடித்தும் உயிர் பிழைத்தனர் என அவர்கள் சிகிச்சைக்குப் பின்னர் தெரிவித்தனர்.



# அதிகாரப்பகிர்வு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கை எடுக்க வேண்டும்.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

தமிழர்களுக்கான நல்லிணக்க விடயங்கள் எவையும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை. வரவு-செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி, தமக்காக ஏதாவது கூறுவார் என்று தமிழர்கள் எதிர் பார்த்து ஏமாந்து போயினர்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக ஜனாதிபதி மௌனம் சாதித்துள்ளார் என்று தமிழர்கள் கூறுகின்றனர்.

அபிவிருத்திகே முதலிடம். அதனூடாக சமாதானத்தைக் கொண்டு வர முடியும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அபிவிருத்திக்கு முன்னதாக அதிகாரப் பரவலாக்கலுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் இல்லாத இடத்தில் அபிவிருத் தியால் ஏற்படும் சமாதானம் நிலைத்திருக்காது. ஆகவே, ஜனாதி பதி அதிகாரப் பரவலாக்கலுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

இதற்காக நாடாளுமன்றில், மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை என்று ஜனாதிபதி கூறினார். ஆனால் இப்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசுக்குக் கிடைத்து விட்டது.

ஜனாதிபதிக்கு இப்போது எதிரிகள் எவரும் இல்லை. இருந்த ஓர் எதிரியும் சிறையில் உள்ளார். ஆகவே, தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய இதுவே தக்க தருணம். இந்தச் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி தவறவிடக் கூடாது.

இந்த அதிகாரப் பரவலாக்கலுக்காக எமது மக்கள் லட்சக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதாக அரசு அறிவித்தது முதல் மட்டக்களப்பில் 150 பேர் காணாமல் போயுள்ளனர். இதற்கு அரசா அல்லது புலிகளா காரணம்?காணாமல் போனவர்களின் மனைவிமார் மற்றும் பெற்றோர் தவிக்கின்றனர். நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

இராணுவத்தின் குடும்ப நலன்களுக்காக மூன்று வருடங்களுக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோல் யுத்தத்தில் உடல் உறுப்புகளை இழந்த தமிழ் இளைஞர்களின் நலனுக்காகவும் நிதி ஒதுக்கியிருந் தால் நாம் மகிழ்ச்சியடைந்திருப்போம். - என்றார். (சி)

## திருத்தம்

26.11.2010 ஆம் திகதி உத யனில் 4 ஆம் பக்கத்தில் பிர சுரமான சிறிதரன் தணீஸ் வரன் என்பவருடைய மரண அறிவித்தலில்

நகுலேஸ்வரி மகேஸ்வரன் என்ற பெயர் தவறுதலாக நகுலேஸ்வரி முரளி எனப் பிரசுரமாகியுள்ளது. அத்து டன் விஜயலட்சுமி இந்திரன், நவஜோதி, முரளி ஆகிய பெயர்களும் தவறுதலாகப் பிரசுரமாகவில்லை.

இவற்றைச் சேர்த்து வாசிக் கவும்.

# மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவார். ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டவர் கணநாத பிள்ளை ஜெயக்காந்தன் (15 வயது)-

சம்பவம் குறித்து தெரியவ ருவதாவது :-

நேற்று மாலை ஜெயக்காந் தனும் அயல் வீட்டுச் சிறுவ னான தயானந்தனும் சேர்ந்து கோழிக்கூட்டைத் தூக்கி வேறு இடத்தில் வைக்க முற்பட்டுள் ளனர். அந்தச் சமயம் கோழிக் கூட்டுக்கு இணைக்கப்பட்டி ருந்த மின்சார வயரில் கசிவு கார ணமாக இருவரும் மின் தாக் குதலுக்கு இலக்காகினர் என்று கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அயல் வீட்டுச் சிறுவனான தயானந் தன் பரிதாபகரமாக மரணமா னான். ஜெயக்காந்தன் மின்தாக் குத லால் அதிர்ச்சியடைந்த நிலை யில் மயக்கமுற்று யாழ். ஆஸ்பத் திரியில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டுள்ளார். (ஒ-78)

# இரட்டைக் கொலை: ஜப்பானில் இளைஞனுக்கு மரணதண்டனை

ஜப்பானில் 19 வயது வரையிலான குற்றவாளிகளை சிறுவர்கள் என அழைக்கின்றனர். இந்த வகையில் வடக்கு ஜப்பானில் மியாகி என்ற இடத்தைச் சேர்ந்த இளைஞன் தனது சகோதரி யையும், தனது காதலியையும் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளான்.

அதை தடுக்க முயன்ற ஒரு நபருக்கும் கத்திக்குத்து காயம் ஏற் பட்டது. சிகிச்சைக்குப்பின்னர் அவர் உயிர் பிழைத்தார்.

இச்சம்பவம் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடந்தது. இதைத் தொடர்ந்து 19 வயது இளைஞனை பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

அவன் மீது மியாகி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு 6 நடுவர்கள் (ஜூரிகள்) முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நடுவர்கள் கொலைகார இளைஞனை சாகும் வரை தூக்கி லிட்டு கொல்லும்படி மரண தண்டனை விதித்து தீர்ப்பு கூறினர்.

ஜப்பானில் நீதிபதிகள் முறை நீக்கப்பட்டு தற்போது (ஜூரிகள்) நடுவர்கள் வழக்கை விசாரிக்கும் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் கொண்டு வந்தபின்னர் இளைஞன் ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

# யாழ். நகருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில் அமைச்சர் கிருஷ்ணா கலந்துகொள்வார்.

முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் இந்தியத் தூது வர் அசோக் கே.காந்த் வரவேற்புரை நிகழ்த்துவார். அதன்பின் அமைச் சர் கிருஷ்ணா உரையாற்றுவார். அவரைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உரையாற்றுவார்.

அதன்பின்னர் தூதரக அலுவலகம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படும்.

இந்த நிழ்வை முடித்துக்கொண்டு அரியாலைக்குச் செல்லும் அமைச் சர் கிருஷ்ணா, நண்பகல் 12 மணிக்கு இந்திய உதவியுடன் அமைக் கப்படவிருக்கும் வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல்லை நடுவார்.

இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகி யோர் உரை நிகழ்த்துவர்.

தொடர்ந்து - வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஏற்பாடு செய்துள்ள மதியபோசன விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் மதவாச்சிக்குச் செல்வார்.

காங்கேசன்துறை - மதவாச்சி ரயில் பாதைப் புனரமைப்புப் பணியை அவர் அங்கு ஆரம்பித்துவைப்பார். (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கால எல்லையுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று நாள் பயணமாக இலங்கை வந்துள்ள அமைச்சர் கிருஷ்ணா நேற்று கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்தார். இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தின் பின்னர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் இணைந்து கிருஷ்ணா செய்தியாளர்களுடன் பேசினார்.

''இதுவரையும் தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சினைகள் அனைத்தையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பத்தை, கடந்த ஆண்டு மே மாதத்தின் பின்னரான காலம் வழங்கி உள்ளது. குறிப்பாக புனர்வாழ்வு மற்றும் அரசியல் தீர்வுதொடர்பான பிரச்சினைகளுக்குப் புரிந்துணர்வின் அடிப்படையிலும் இரு தரப்பினரையும் உள்வாங்கியும் தீர்வுகாண இதுவே சிறந்த சந்தர்ப்பம். பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கால எல்லையுடன் திட்டமிடப்பட்ட பேச்சுக்கள் (Structured dialogue mechanism) விரைவில் ஆரம்பிக்கப்படும் என்பது எமது எதிர்பார்ப்பு'' - என்றார் கிருஷ்ணா.

இந்தச் சமயத்தில் குறுக்கிட்ட அமைச்சர் பீரிஸ், இலங்கை அரசு தற்போதைய நிலையில் அபிவிருத்தியை வழமைக்குக் கொண்டுவர முன்னுரிமை கொடுத்து வருகின்றது என்றும் போரால் பாதிக்கப்பட்ட இடங்களில் உட்கட்டுமான வசதிகள் விருத்திசெய்யப்படுவதுடன் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு வருகின்றது என்றும் கூறினார்.

''அதற்காக, அரசியல் தீர்வை அரசு கைவிட்டு விட்டது என்று அதனை அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது. ஜனாதிபதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் சந்திப்புக்களை நடத்தி உள்ளார். இன்று (நேற்று) தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தைச் சந்திக்கிறார். எல்லோருக்குமான அரசியல் தீர்வு ஒன்றே எமக்கு வேண்டும்'' - என்றார் பீரிஸ்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்கும் அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா பதிலளித்தார். அவர் தெரிவித்ததாவது :-

சீனா இலங்கையில் முதலீடு செய்வதும், பாகிஸ்தான் இலங்கையுடன் நெருங்கி உறவாடுவதும் இலங்கை - இந்திய உறவைப் பாதிக்காது. இலங்கை - இந்திய உறவு நீண்டகால பாரம்பரியத்தைக் கொண்டது. எந்த நாட்டுடன் எப்படிப்பட்ட உறவை வைத்துக் கொள்வது என்பதை இலங்கைதான் தீர்மானிக்க வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரையில் உறுதியான ஆற்றல்மிக்க இலங்கையையே எதிர்பார்க்கிறது.

வடக்கில் தமிழ் மக்கள் இன்னும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருப்பது தொடர்பில் தமிழக முதல்வர் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். எப்படி இருப்பினும்17,000 பேர் மட்டுமே முகாம்களில் இன்னும் இருக்கின்றனர். எனினும் இந்த வருட இறுதிக்குள் அனைவரும் மீள்குடியமர்த்தப்பட்டு விடுவர் என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது. அவர்களை மீள்குடியமர்த்துவதற்கு சில காலமெடுக்கலாம். மக்கள் நிலையாக காலூன்றி வாழும் வகையில் கள நிலையைச் சீர்படுத்தவேண்டும். இலங்கை அரசு மனிதாபிமான வகையில் இது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நான் நம்புகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

### கிருஷ்ணா - மஹிந்த சந்திப்பு

அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜனாதிபதி மாளிகையில் வடக்கு ரயில் பாதை நிர்மாணத்துக்கென 416 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தத்தில் திறைசேரி செயலாளர் பீ.பி. ஜயசுந்தரவும் இந்திய எக்ஸிம் வங்கியின் பணிப்பாளர் நதீம் பஞ்சேடனும் கைச்சாத்திட்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது பதவிக் காலத்துக்கு பதவியேற்றது குறித்து அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

புத்தரின் 2,600 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டத்துக்காக எதிர்வரும் மே மாதம் கபிலவஸ்து தாதுக்களை இலங்கைக்குக் கொண்டுவரவும் இச்சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு வடக்கில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விளக்கமளித்தார்.

இதன் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா பிரதமர் டி.எம்.ஜயரட்னவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட இந்தியத் தூதரகத்தை அமைச்சர் கிருஷ்ணா நேற்றுத் திறந்துவைப்பதாக இருந்தது. இறுதி நேரத்தில் அந்தப் பயணம் கைவிடப்பட்டது. சீரற்ற கால நிலை காரணமாக ஹெலிக்கொப்டர் பயணம் பாதுகாப்பற்றது எனத் தெரிவிக்கப்பட்டதால் அம்பாந்தோட்டை துணைத் தூதரகத் திறப்புவிழா ஞாயிற்றுக்கிழமை காலை ஒத்திவைக்கப்பட்டது. (உ)

---

# நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுப்பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது :-

ஒரு வருடத்துக்கு முன்னர் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகளின் அடிப்படையில் சங்கத்தின் அப்போதைய பொதுமுகாமையாளர், கிளை மேற்பார்வையாளர், கிளை முகாமையாளர் ஆகியோர் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். இந்த ஊழல் மோசடியின்போது கையாடப்பட்ட நிதியையும் குறிப்பிட்ட காலத்துக்குள் திருப்பிச் செலுத்துமாறு சங்க நிர்வாகம் அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தது.

எனினும் அவர்கள் குறித்த காலப் பகுதியில் அவர்கள் அந்த நிதியைத் திருப்பிச் செலுத்தவில்லை. இதனை அடுத்துச் சங்க நிர்வாகம் இந்த மூவருக்கும் எதிராகக் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் யாழ். பொலிஸில் முறைப்பாடொன்றைச் செய்தது.

இதுதொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவந்தனர். இதனையடுத்து இவர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதன்பின் மூவரும் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை நாளைமறுதினம் திங்கட்கிழமை மேல் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. இந்த விசாரணைக்குச் சங்கத்தின் தற்போதைய பொது முகாமையாளர், பணிப்பாளர்சபை உறுப்பினர்கள் ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர். (த-26)

# ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான 16பேர் கொண்ட தமிழ்க் கட்சிகளின் அரங்கப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நண்பகல் அலரிமாளிகையில் இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது தமிழ்க் கட்சிகள் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கலந்து கொள்ளவில்லை.

இச்சந்திப்பு சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் தொடர்ந்து இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் என்பவை உள்ளடங்கிய 8 அம்ச மனு ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

''ஜனாதிபதியிடம் நாம் முன்வைத்த 8 கோரிக்கைகளுக்கும் அவர் இழுத்தடிக்கும் வகையிலேயே மழுப்பலாகவே பதிலளித்தார். கோரிக்கைகளை நிறைவேற்ற சிறிது காலம் எடுக்கும் எனக் கூறினார்.

இச்சந்திப்பு நாம் எதிர்பார்த்த அளவு வெற்றி அளிக்க வில்லை; திருப்தியும் அளிக்கவில்லை.''- இப்படி எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்றுத் தெரிவித்தார். ' (உ-சி)

---

# ஆலயங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இன்று தொடர்புகொண்டு தாம் பேசவுள்ளதாகவும் மாவை மேலும் கூறினார்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருப்பது குறித்து பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவல்களை ஜனாதிபதிக்கு தெரிவிக்க இருக்கின்றேன்.

படையினரின் இவ்வாறான போக்கு மக்கள் மத்தியில் அச்சநிலையை தோற்றுவிப்பதாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஒ-ஐ)


யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
Course Fees - Rs.7500/= Only
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - 27/11/2010 நேரம் 10மணி காலம் 2 மாதங்கள் -
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

WANTED
Web designer
Web technician
Apply
mmslanka@gmail.com
Contact :
0772263636

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
30-11-2010
Batch 6 : 8.00 AM- 11.00 AM
Batch 7 : 11.00 AM - 2.00 PM
Batch 8 : 2.00 PM - 5.00 PM
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS

SPECIAL AIR FARES

| | |
|---|---|
| COLOMBO/ LONDON / COLOMBO | 79000.00 |
| COLOMBO/ DOHA | 24500.00 |
| COLOMBO/TORONTO | 76000.00 |
| COLOMBO/SINGAPORE/COLOMBO | 27500.00 |
| COLOMBO/TIRUCHIRAPALLY/COLOMBO | 13300.00 |
| COLOMBO/ CHENNAI/COLOMBO | 13500.00 |
| COLOMBO/ KULALUMPUR/COLOMBO | 26900.00 |
| COLOMBO/ ROME/COLOMBO | 80000.00 |
| COLOMBO/SYDNEY/COLOMBO | 92500.00 |

ALL TAXES INCLUDES — CREDIT CARDS ACCEPTED
ABOVE FARES ARE SUBJECT TO SEAT AVAILABILITY
FUTHER DETAILS PLEASE CONTACT
METRO TRAVELS & TOURS (PVT) LTD TEL:0215673555, 5673666
No- 62/33, Stanley Link Road, Jaffna. FAX 021 2220404

வெளிவரவுள்ளது...
புலமைச் சுடர்
2011-2012

விலை ரூபா10
திங்கள் தோறும்
முயற்சியும் பயிற்சியும் உயர்ச்சி தரும்
எதிர்வரும் 06.12.201 முதல் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களிற்கான ஒருவாரகாலம் கற்பதற்குப் போதுமான கற்றல் குறிப்புக்கள், மாதிரி வினாத்தாள்களைத் தாங்கிய விசேட கையேடு வெளிவரவிருக்கின்றன.
உங்கள் பிரதியை உறுதிப்படுத்த அருகிலுள்ள உதயன் முகவரிடம் உடன் பதிவு செய்யுங்கள்
தொடர்புகளுக்கு: யாழ் விநியோகப்பிரிவு இலக்கம்: 021 5677222
ஆசிரிய பீடம்: 011 576 8855, 071 427 3035.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN




யாழ்.மண்ணின் முதற்தர நாளிதழுக்கு எமது வெள்ளி விழா வாழ்த்துக்கள்

கஜசங்கவி சென்றர் அன்ட் கஜசங்கவி பிறிண்டேர்ஸ்

டீலர் இன் இந்தியன் வெடிங் காட்ஸ் அன்ட் ஒவ்செற் அன்ட் ஸ்கிறீன் பிறிண்டிங்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திருமண அழைப்பிதழ்கள், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த நாள் அழைப்பிதழ்கள் மற்றும் Cakebox, Wedding Bag மற்றும் Gift ஐற்றம், குங்குமச் சிமிழ், மஞ்சள் குங்குமம்,குபேரன் சிலைகள் மற்றும் ஐசிங்கிற்குத் தேவையான பொருள்கள் (டம்மி செற், ஸ்ராண்ட், கப்பிள்ஸ்) அனைத்துடனும் திருமண வைபவத்திற்குத் தேவையான அனைத்துவிதமான பொருள்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



கஜசங்கவி சென்றர் அன்ட் கஜசங்கவி பிறிண்டேர்ஸ்

இல.237, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7885

உதயனே...! உன்னதமாய் உன் பணிதொடர வாழ்த்துக்கள்.

Taste of Jaffna

Authentic Jaffna Food, Western, Indian, Chiness Food.

101, Main Street, Jaffna.

Tel: 0094 21 222 1322, 0094 21 320 7190, Fax: 009421 222 1323.



உதயனே ...! உன் பணி தொடர எமது வாழ்த்துக்கள்!!

TRACTOR SPARES

Importers and Dealers in Tractor Spare Parts, Specialist in Massy.
Ferguson Engineers & Tipping Course Pressure pipe fitting.



Prop:-V.R.Rajasingam, T.P.021-2225055.
7,Kannathiddy Road,Jaffna.

தமிழினத்தின் விடிவிற்காக தொடர்ந்து மலர எமது வாழ்த்துக்கள்

பரணி கிறீம் ஹவுஸ்

K.K.S. Road, Kokuvil Junction. Kokuvil. T.P: 0779186284




# அழகுத் தோட்டம் அமைப்பதற்கு வழிமுறைகள்

★ அழகுச் செடிகளை பூச்சாடிகளில் (செம்மண்: மணல்: மக்கிய குப்பை-1:1:1) இந்த விகிதத்தில் மண்ணை நிரப்பிச் செடிகளை வளர்ப்பது ஆரோக்கியமானது.

★ பூச்சாடிகளுக்கு அதற்கென்றே கிடைக்கும் தனிப்பட்ட Nippolac பெயின்டுகளை அடித்து கவர்ச்சியாக்கலாம். பழைய பூச்சாடிகளையும் நன்கு துடைத்துவிட்டு பெயின்ற் அடிக்கலாம். வருடக் கணக்கில் நன்றாக இருக்கும்.

★ பூச்சாடிகளில் உள்ள செடிகள் அல்லது பூக்கள் கவர்ச்சியாகத் தெரிவதற்காக அடிக்கடி இடமாற்றம் செய்யவும். இந்த இடமாற்றம் அவை உற்சாகத்துடன் வளரவும், நம் மனத்திற்கு ரம்மியமாகவுமிருக்கும்.

★ தினமும் செடிகளில் உள்ள பழுத்த இலைகள், காய்ந்த குச்சிகள், வாடிய பூக்கள்- இவற்றைக் கிள்ளிவிட்டு சாடிகளைச் சுற்றி சுத்தமாகக் கூட்டி விடவும்.

★ தினமும் காலையில் சாடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதுடன் அவற்றில் படிந்துள்ள தூசி, ஒட்டடையை நீக்குவதற்கு தண்ணீரை ஸ்ப்ரே செய்து கழுவவும். செடிகள் பளபளவென்று ஜொலிக்கும்.

★ செடிகள் பெரிதாக வளர்ந்துவிட்டால் வேண்டாத கிளைகளை வெட்டிவிட்டு ஷேப் அழகாக இருக்கும்படி ட்ரிம் செய்யுங்கள். அதற்கும் மீறிப் போனால் செடியை பெரிய தொட்டிக்கு மாற்றிவிடலாம்.

★ செடிகளை நெருக்கமான அல்லது அடைசலான இடத்தில் வைத்தால் அதன்தோற்றம் மறைக்கப்படும். செடி எடுப்பாகத் தெரிவதற்கு சுவர், மூலைகள் போன்ற பின்னணியில் செடிகளை வைக்கவேண்டும். செடிகளின் கம்பீரத்தைக் காட்டுவது அதன் பின்னணிதான்.

★ படிகள் போன்ற இரும்பு ஸ்டேண்டுகள், வளையங்கள் பொருத்தப்பட்ட ஸ்டேண்டுகள் உபயோகித்து சிறிய செடிச் சாடிகளை அதில் வைத்து அழகு படுத்தலாம். சில கொடி வகைகளைக் கட்டடங்கள் மாதிரியான தட்டிகள், கூடைகள், ஜாடிகள் மேல் படரவிட்டு அழகுபடுத்தலாம்.

★ வீட்டுக்குள் வைக்கும் இன்டோர் பிளான் டின் ஆக இருந்தால் தண்ணீர் வடிவதற்கு பூச்சாடிகளின் அடியில் தட்டை வைக்க வேண்டும். மாதம் ஒருமுறை சுத்தம் செய் தால் போதுமானது.

★ ஒரேமாதிரியான செடிகளை ஒரே மாதிரியான பூச்சாடிகளில் வளர்த்து வரிசைப் படுத்தினால் அதன் அழகே தனிதான்.
பூக்கும் செடிகளாக இருந்தால் அழகோ அழகு தான்.




Diahsri Distributors
220, Stanley Road, Jaffna.

Agents for
Dsi Samson Rubber Products&
Nippolac Paints



தமிழ் மக்களின் குரலாய் ஓங்கி ஒலிக்க எமது வாழ்த்துக்கள்

திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும் நவீனரக ஆடைத் தெரிவுகளுக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கான சிறந்த ரெடிமேட் ஆடைகளுக்கும்

லலிதா ரெக்ஸ்

(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)

இல.5, 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5260



புதுமைகளை முதலில் புகுத்தும் உதயனே வாழி...!

Computer Class, Self Practicals, Computer Games, Printing, CD&DVD Writing, Computer repairing & Sales
Local: 021 4591761/021 459 1890
I.D.D.: 009421 459 1761, 009421 459 18190.
Fax: 021 4591761

Computer World

7th Mile post, Chankanai
E-mail: Computerworld@wow.lk.

B.O.C.Travels (Pvt) Ltd
Subsidiary Bank Of Ceylon

| | |
|---|---|
| Colombo/ Chennai/ Colombo | 13,100.00 |
| Colombo/ Thiruchirapally/ Colombo | 13,100.00 |
| Colombo/ Doha | 18,500.00 |
| Colombo/Singapora/ Colombo | 28,500.00 |
| Colombo/ Kualalumpur/ Colombo | 30,750.00 |
| Colombo /London/ Colombo | 75,000.00 |
| Colombo/ Paris/ Colombo | 64,500.00 |
| Colombo/Frankfurt/ Colombo | 68,100.00 |
| Colombo/Sydney/ Colombo | 93,350.00 |
| Colombo/ Toronto | 71,700.00 |
| Colombo/ Toronto/ Colombo | 124,100.00 |
| Colombo/ Milan | 43,181.00 |
| Colombo/Rome/ Colombo | 59,790.00 |



யாழ்ப்பாணத்தில்...

24 மணிநேர தொலைபேசி: 0727849535

★ The above Air fares are subject to change without prior notice.

உங்கள் நம்பிக்கையான பிரயாணத் தேவைக்கு
BOC Travels (Pvt) Ltd. இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்.

0212224575-76

E-mail:sureshk.boctrav@galileo.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

# 25 ஆண்டு பேனாப் போராட்டம் என்றும் தொடரும்

இருபத்தைந்து ஆண்டுகள் -
காலவிரிப்பில் இது ஒரு மணித்துளி!

ஆனால் வடக்கின் ஊடக வரலாற்றில் இது ஒரு சாதனை! தொடர்ந்து பயணப் பாதையைத் தடை செய்யப் பாயும் இடிமின்னல்; பாதங்களை அங்குமிங்கும் இழுத்து குடைசாய வைக்கக் காத்திருக்கும் சேறு சகதி; கொத்தி உயிரையே குடித்துவிடப் படமெடுத்து நிற்கும் நச்சரவங்கள்; உயிருடனையே கொத்திக்குதறி தின்றுவிட வட்டமிடும் பிணம் தின்னிக் கழுகுகள் -

இவற்றின் மத்தியில்தான் உதயனின் 25 வருடப் பயணம் தொடர்ந்தது! கொலை வெறியுடன் குறிபார்த்து நின்ற துப்பாக்கிகள் மத்தியிலும் எங்கள் பயணம் குறிதவறாது தொடர்ந்தது!

கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன; கோழைத்தனமான தாக்குதல்களால் பணியாளர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன; சாதனங்கள் சேதமாக்கப்பட்டன; எரியூட்டப்பட்டன; எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயங்களும் எம்மைச் சுற்றி உருவாக்கப்பட்டன.

கொடூரமான காலகட்டத்தில் எமது ஊடகவியலாளர்கள் மேல் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியில் பலர் மயிரிழையில் உயிர் தப்பினர். எனினும் அச்சம் அவர்களை அடிபணிய வைத்துவிட முடியவில்லை! உதயனின் பயணம் தொடர உயிர் கொடுத்த பணியாளர்கள் பலர்! உடல் பாதிப்புக்கு உட்பட்டோர் பலர்! ஊடகப் பணிக்கு உயிர் தந்தவர்களையும், உடல் துன்பம் பட்டவர்களையும் உதயன் என்றும் உயர் பீடத்தில் வைத்து நினைவு கூரும்.

இத்தனை நெருக்கடிகள் மத்தியிலும் உதயன் நிமிர்ந்து நின்றது! தமிழ்த் தேசியத்தின் குரலாய் மக்கள் மத்தியில் செறிந்து நிறைந்தது. அழித்தொழிக்க நினைத்தவர்களும், வழி தவறவைக்க முயன்றவர்களும் ஏமாற்றத்திலும், இயலாமையிலும் விழி பிதுங்கி நிற்க உதயன் 25 வருடங்களைப் பூர்த்தி செய்து விட்டது.

இது ஒரு சாதனைதான்! இது ஒரு வெற்றிதான்! இந்தச் சாதனையின் பின் இந்த வெற்றியின் பின் ஒருவர் இருவரல்ல ஆயிரமாயிரம் கரங்கள் உண்டு.

எத்தனை இடர்கள் சூழ்ந்த போதும், எத்தனை எறிகணைகள் ஏவிவிடப்பட்ட போதும் எத்தனை தூற்றல்கள் பரப்பப்பட்ட போதும் எல்லாவற்றையும் உதாசீனம் செய்துவிட்டு அன்றிருந்து இன்று வரை ஆதரவுக் கரம் தருகின்றனரே எமது வாசகர்கள் - உதயனை வாழ வைத்த அடிவேர்கள் அவர்களல்லவா?

தென்றலையும் புயலையும் ஒன்றாய் முகம் கொடுத்து உயிராபத்தைப் பொருட்படுத்தாது உதயனை வழி நடத்துகிறாரே பிரதம ஆசிரியர்; அவருடன் கைகோர்த்து இரவு பகல் பாராது பணியாற்றுகிறார்களே ஆசிரியபீடத்தின் உதவி ஆசிரியர்கள் ஏனைய பணியாளர்கள். இவர்களின் பங்கு உதயனின் பயணத்தில் அளப்பரியதல்லவா?

உயிரச்சுறுத்தல் மத்தியிலும் மிரட்டல்கள் மத்தியிலும் அச்சமின்றிப் பணியாற்றும் செய்தியாளர்களும், ஊடகவியலாளர்களும், வெளிக்களப் பணியாளர்களும் ஆற்றும் துணிச்சல் மிக்க சேவை உதயனின் பலத்தை நிலைநிறுத்தும் பெரும் பணியல்லவா?

இத்தனை சேவைகளையும் பத்திரிகைத் தாளில் ஏற்றி வெளிக்கொண்டு வரும் அச்சகப் பணியாளர்களும் அனைத்தையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் முகவர்களும், விநியோகஸ்தர்களும் ஆற்றும் பணி அளப்பரியதல்லவா?

குறைந்த விலையில் நிறைந்த விடயங்களை வழங்கும் வகையில் நிதி வளங்களை வழங்கும் விளம்பரதாரர்களும், விளம்பரம் சேகரிப்பவர்களும் எமது வளர்ச்சியின் முக்கிய பங்காளிகளல்லவா?

இப்படி இப்படியாக-

உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அர்ப்பணிப்பு உணர்வாலும், கடின உழைப்பாலும், இதயபூர்வமான ஆதரவாலும் எமது இருபத்தைந்து வருடப் பயணம் இடையூறுகளை வென்று ஏறுநடை போடுகிறது.

தேசியம் என்பது அரசியலுக்கு மட்டும் அடங்கிப் போவதில்லை; நாமறிவோம். சமூக வாழ்வின் ஒவ்வொரு அம்சங்களிலும் நாம்தான் நிமிர்ந்து நிற்க வேண்டும். எமது மக்களின் எழுச்சிக்குக் கரம் கொடுக்கவேண்டும்.

அதனால் - எமது கரங்களை அகல விரித்தோம். கலை, இலக்கியம், கல்வி, மருத்துவம், வரலாறு, விளையாட்டு என வாழ்வின் ஒவ்வொரு அம்சங்களும் உதயனின் பக்கங்களை மேடையாக்கி மக்களிடையே பவனி வந்தன. கலை, இலக்கியப் படைப்பாளிகள், கல்வியியலாளர்கள், வரலாற்றியலாளர்கள், மருத்துவர்கள், விளையாட்டு நிபுணர்கள் முதல் வீரர்கள் வரை அத்தனை பேரும் எம்முடன் ஒத்துழைத்து நின்றனர். தமது பங்கை வழங்கி உதயனின் நன்மைக்கு உரம் சேர்த்தனர்.

தேசத்தின் மூலை முடுக்கெங்கும் ஊடுருவிச் சென்ற ஊடகவியலாளர்கள் மக்களின் துன்ப துயரங்களையும், நல்லவை கெட்டவைகளையும் தேடிப்பிடித்து அரங்குக்குக் கொண்டு வந்தனர். மழை, வெயில் பயணம் என இடையூறுகளை உழைப்பின் திறனால் வென்று பணியாற்றினர். அச்சுறுத்தலால் அவர்களின் பணியை முடக்க முடியவில்லை. இன்றும் தொடரும் பணியில் தலைநிமிர்ந்து நடந்து உதயனுக்கு உரம் சேர்க்கின்றனர்.

பொய்மைக்கும் உண்மைக்கும் புரையோடிப் போன ஏமாற்று அரசியலுக்குமிடையே சுழியோடி சரியானவற்றை மக்கள் முன் வைப்பதில் எமது அரசியல் ஆய்வாளர்களின் சத்திய வேட்கையும், அஞ்சாத நெஞ்சுரமும், அர்ப்பண உணர்வும் அற்புதமானவை. ஏமாற்றுகளை அம்பலப்படுத்தி நியாயங்களை வெளிக்கொண்டு வருவதில் உதயனின் பங்கை சிறப்பித்த இவர்களின் பங்கு உதயனின் பெருமைக்கு வலுச்சேர்த்தன. ஊடகம் என்பது என்றுமே ஒரு தனிமனிதனில் தங்கியிருப்பதல்ல! அச்சு முதல் சிறு ஆளிவரை முறையாக இயங்கினாலே அதன் பயணம் இடையூறுகளைத் தாண்டி ஏறு நடைபோடும்.

அந்தப் பெரும் பாக்கியம் உதயனுக்கு உண்டு என்பதை, உதயன் நெஞ்சு நிறைந்த பெருமையுடன் பிரகடனம் செய்கிறான்.

பிரதம ஆசிரியர் முதல் பத்திரிகை விற்பவர் வரை தந்த ஒத்துழைப்பும் அளப்பரிய சேவையுமே இன்று உதயனை இருபத்தைந்து வருடங்களாக வலம் வர வைத்தன என்பதை நாம் என்றும் எமது நெஞ்சில் நிலை நிறுத்தியுள்ளோம்.

இருபத்தைந்து வருடங்களாக இளமை குன்றாமல் வெளிவந்த இடையூறுகளுக்கு அஞ்சாமல், செயற்பட்டுக்கொண்டிருக்கும் எமது உதயனின் நிர்வாகப் பணிப்பாளராக சகலரின் உழைப்பையும், அர்ப்பண உணர்வுகளையும் ஒன்றிணைத்து முன் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக நான் பெருமைப்படுகிறேன்.

மீண்டும், உதயனுக்கு உயிரையும், உழைப்பையும் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறி, தொடர்ந்தும் உண்மை, அஞ்சாமை, நேர்மை என்ற இலட்சியத்துடன் முன் செல்வோம் என உறுதி செய்கிறேன்.

- நிர்வாக இயக்குநர்.

## உதயனே நீ நீடுழி வாழ்க!



'உதயன் இன்று தனது 25ஆவது ஆண்டு நிறைவைக்கொண்டாடுகிறது. 1985 நவம்பர் 27ஆம் திகதி எனக்கு இன்னும் நினைவில் இருக்கின்றது. அதற்கு முதல் நாள் எமது பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தலைமையில் நாங்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தோம். அடுத்த நாள் முதலாவது பத்திரிகை வெளிவருகிறது.

"வடக்கு கிழக்கு இணைந்த மாநில சுயாட்சியையே இந்தியா வலியுறுத்தும்" என்ற தலைப்பு.

இப்படியாக ஆரம்பித்த பத்திரிகை கடந்த காலங்களில் எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும் கடந்து இன்று வடக்கின் முதன்மைப் பத்திரிகையாகி வெள்ளிவிழா காண்பது மட்டற்ற மகிழ்ச்சி தருகின்றது.

உதயன் பத்திரிகை அலுவலகம் பல தடவைகள் தாக்குதல்களுக்கு உள்ளானது. ஊழியர்கள் கொல்லப்பட்டனர். இடப்பெயர்வுகளை சந்தித்தது. யாழ் மின்சாரசபை ஒழுங்கையில் இருந்து நாவலர் வீதிக்கும், நாவலர் வீதிக்கும் கடைசியாக சரசாலைக்கும் இடம்பெயர்ந்த போதிலும் பத்திரிகை தொடர்ந்து வெளிவந்துகொண்டிருந்ததற்கு எமது நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் அவர்களினதும் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் அவர்களினதும் மனம் தளராத பணிகளை மறக்க முடியாது.

இந்த நேரத்தில் எமது ஆரம்பகால உறுப்பினர்களும், பத்திரிகையின் வளர்ச்சிக்கு துணை நின்று செயலாற்றியவர்களுமான என்.வித்தியாதரன், சி.குருநாதன் ஆகியோரையும், செய்தித்துறையில் தொடர்ந்து பெரும் பங்காற்றும் ஜி.குகநாதனையும் மற்றும் ஆரம்ப கால செய்தியாளர்கள் இரத்தினராஜசிங்கம், ராஜேந்திரா ஆகியோரையும் நாம் மறந்து விட முடியாது. உதயன் நீடுழி வாழ வாழ்த்துகிறேன்.

**என்.பத்மசீலன்**
ஆசிரியர்,
சுடர்ஒளி நாளிதழ் - வார இதழ்

## நினைவு கூருகின்றோம் அமரரான பங்காளர்களை



சி.க.சிற்றம்பலம்

யாழ்ப்பாணத்தில் தமிழ் நாளிதழ் ஒன்றைப் புதிதாக ஆரம்பிக்கவேண்டும் என்பதில் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதுகளில் பெரும் விருப்பத்தையும் கருத்தையும் கொண்டிருந்தவர் சங்கானையைச் சேர்ந்த அமரர் சி.க திருச்சிற்றம்பலம்.

இறைபக்தனும் ஆன்மீகத்தில் ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்ட அவர், ஒரு தமிழ் உணர்வாளருமாவார். சிங்களம் மட்டும் சட்டத்தின் கீழ் சேவை செய்வதற்கு விருப்பமின்றி அரச சேவையிலிருந்து இளமையிலேயே இளைப்பாறியவர்.

கண்டிப்பும் கண்ணியமும் நிறைந்த அவர் சிறந்த நிர்வாகியும், மக்கள் சேவையாளனும் பத்திரிகையாளரும் ஆவார். ''உன்னைப் பற்றி'' என்ற மாதாந்த இதழின் ஆசிரியராக அதனைப் பல வருடங்கள் வெளியிட்டவர். இவற்றோடு அவர் சங்கானைப் பட்டின சபைத் தலைவராக இருந்து தொண்டாற்றியவர்.

உதயன் உங்கள் கைகளிலும் உள்ளங்கைகளிலும் உலாவருவதற்கு உந்து சக்தியாகவும் விளங்கியவர் ''திரு''. அதன் பெருமைமிக்க முதலாவது பொது முகாமையாளராகப் பணிபுரிந்து வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

★ ★ ★



க.சண்முகம்

தாம் பிறந்த மண்ணின் வளங்களும் இங்குள்ள வாய்ப்புக்களும் கண்டறியப்பட வேண்டும் அதற்கென இந்த மண்ணின் சிந்தனைச் சிற்பிகள் செயல் வீரர்கள் மற்றும் பெரு மக்களின் கருத்துக் கருவூலங்களை அரங்கேற்றத் துணை புரிய வேண்டும். இதுவே அமரரின் சிந்தனையாக இருந்தது. அதற்க உகந்த சாதனம் பத்திகையே என உணர்ந்தார்.

தமிழ் மண்ணில் பத்திரிகை ஒன்றைத் தொடங்கவேண்டும் என்ற அவரது ஆர்வம் போதாகி மலராகி, காயாகி அ பழமாகிக் கனிந்து வரும் வேளை அமரராகிவிட்டார்.

அவரது இலட்சிய இலக்கை அடைவதற்கு எமது சகலவிதமான சக்தியையும் அர்ப்பணிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## மக்கள் மனங்களில் நிறைந்த மகத்தான பத்திரிகை

வெள்ளிவிழாக்காணும் உதயன் பத் திரிகைக்கு முதற்கண் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை யும் பாராட்டுக்களையும் தெரிவித் துக்கொள்கின்றேன்.



யாழ்ப்பாண மக்கள் மனங்களில் தனக்கென ஒரு தனியான இடத்தை தக்கவைத்துக் கொண்டவன் உதயன். நாட்டு நடப்புக்களை, உலக நடப் புக்களை உடனுக்குடன் சுடச்சுட தனக்கே உரிய பாணியில் எமது இல்லங்களுக்கு எடுத்து வந்தவன். காலை உதயத்தில் கையில் உத யனுடன் காப்பி குடிப்பது மரபாகிவிட்டது.

உதயன் வெறுமனே ஓர் செய்திப் பத்திரிகை என்ற வட்டத்திற்குள் நின்றுவிடவில்லை.தனது தார்மீக சமூகப் பொறுப்பை உணர்ந்து செயற்பட்ட ஓர் பத்திரிகையாக நான் காண்கின்றேன். மக்களின் தேவைகளைக் குறைகளை எப்போதும் மக்களின் குரலாக ஓங்கி ஒலித்து வந்துள்ளான். அதேநேரம் சமூ கத்தில் இடம்பெறும் சீர்கேடுகளை சுட்டிக்காட்டியும் சமூகத்தை மேம்படுத்தும் நோக்கில் பல சமூக விழிப்புணர்வு கட்டுரைகளை தாங்கி வந்துள்ளான்.

ஒரு செய்தி மூலம் இனங்களிடையே, மதங்களி டையே, சமூகங்களிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்துவது மிகச்சுலபம். உதயன் நடுநிலையாக நின்று மிகுந்த அவதானத்துடனும், சமூகப் பொறுப் புணர்வுடனும் செய்திகளை வெளியிட்டு வந்ததை நாம் அவதானித்திருக்கின்றோம்.

சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் என்ற வகையில் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் குறிப்பாக டெங்குகாய்ச்சல் போன்ற நோய்கள் தீவிரமாக பரவிய காலங்களில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியிருந்தது. உத யன் ஓர் பொறுப்புள்ள ஊடகமாகச் செயற்பட்டு மக் களின் சுகநல மேம்பாட்டிற்காக தனது சிறப்பான பங்களிப்பை வழங்கி வந்துள்ளான். எமது சுகநல மேம்பாட்டு பணிக்கு உறுதுணையாக நின்ற உத யனை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

கடந்த ஓர் கால்நூற்றாண்டு காலமாக பல்வேறு நெருக் கடியான காலகட்டங்களை கடந்து வந்து தனது தனித்து வத்தை நிலைநாட்டிய உதயன் நீண்டகாலம் நிலைத்து நின்று சமூகமேம்பாட்டிற்காக உழைக்க எனது நல்வாழ்த் துக்கள் உரித்தாகட்டும்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

## பக்கச் சார்பற்ற நடுநிலை இதழ்

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் எண்ணங் களையும் அபிலாசைகளையும் மட்டுமல் லாது அவர்



களின் உணர்வுகளையும் உரிமை களையும் வெளிப்படுத்தி புலம் பெயர் உறவுகளுடன் உலகவாழ் தமிழ் மக்களின் ஏக்கங்களை நிவர் த்தி செய்யும் முன்னணி இதழாக உதயன் விளங்குவது வெள்ளிடை மலை. பக்கச்சார்பற்ற நடுநிலை இதழ் என்பதோடு சமுதாய, சமூக மேம் பாட்டுக்கும் கலை கலாசார விழு மியங்களுக்கும் தன்னிகரில்லா தொண்டாற்றுவதில் உதயனுடன் சேர்ந்து நாமும் பெருமைகொள் கின்றோம். 25 ஆண்டு களைத் தாண்டிய உதயனின் பயணம் இன்னும் பல நூறாண்டுகள் தாண்டி சீரிய வழியில் வீறுநடைபோட வாழ்த்துகின்றோம்.

**வைத்தியகலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா,**
*பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*

## வளர்ச்சிப் பாதையில் உதயன்

இன்று 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் உத யனின் சேவை உண்மையிலேயே பாராட்டுதற்கு ரியது. தமிழ் மக்களின் அபிமானத்தை வென்ற இந்தப் பத்திரிகையின் தொண்டு இன்னும் பல்லாண்டு தொடரவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

பல சவால்களை சந்தித்தும் துணிகர மாக தனது கருத்துக்களை தெரிவித்து வரும் இப்பத்திரிகையின் பணி இன் னும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நம் எல்லோரிடமும் இருக்கிறது. இந்தப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு அர்ப் பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருக்கும் அனைவருமே பாராட்டப்பட வேண்டியவர் கள் இவர்களது சேவை இன்னும் தொடர எனது மனப் பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**Dr.சி.சிவன்சுதன்,**
*வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை.*

## யாழ்ப்பாணத்தவர்களின் குடும்பப் பத்திரிகை உதயன்

வெள்ளிவிழாக் கொண்டாடும் உதயன் நாளிதழ், யாழ்.குடாநாட்டின் அசைக்க முடியாத சொத்து என்று



கூறின் மிகையில்லை. அந்த வகை யில் வெள்ளிவிழாச் சிறப்பிதழக்கு வாழ்த்துக் கூற என்னையும் அன்புடன் அழைத் தமைக்கு எனது நன்றிகள்.

மிகவும் இக்கட்டான சூழலில் உதயன் தனது பணியினைத் தமிழ்மக் களுக்கு ஆற்றத் தொடங்கியது. அர சியல், இராணுவ மற்றும் பொருளாதார அழுத்தங்கள் எனப் பல்வேறு கெடு பிடிகளுக்கு இடையேயும் தமிழ் மக்களுக்கு ஆணித்தர மான கருத்துக்களை உண்மை, நடுவுநிலைமை, அஞ் சாமை என்பவற்றின்பால் நின்று உடனடியாக எடுத்து இயம்பிவரும் நாளிதழ் உதயன் பத்திரிகையாகும். இதனால் யாழ்ப்பாணத்தவர்களின் குடும்பப் பத்திரி கையாக உதயன் இடம்பிடித்ததில் வியப்பில்லை.

உதயன் பத்திரிகை வாசகர்களுக்கு மட்டுமன்றி எழுத் தாளர்களுக்கும் மிகச் சிறந்த களம் அமைத்துத் தமிழை வளர்த்து வருகின்றது. மேலும் பத்திரிகையின் ஆசியரித் தலையங்கம் தனிச்சிறப்பு மிக்கது.

கடந்த 25 வருடங்களாகத் தொடர்ச்சியாக வாசகனாக இருந்து தினமும் உதிக்கும் உதயனைத் தரிசிக்கும் நான், எனது ஆத்மாவில் உள்ள உதயன் மேன்மேலும் சிறப்புடன் மலர இறைவனை வேண்டுகின்றேன்.

**வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா,**
*யாழ்.மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி.*

## நாடி நல் உலகு காண்க நன்றாக



ஞாலம் விரிந்திட, காலம் கரைந் தாட ஓலம் பரந்தாட ஒப்பமிடும் தமி ழினத்தின் சாலச்சிறந்த பணி சமுதாய நாக்காக சீலமுடைச் செய்திப் பல சிக்கல் சூழ் மத்தியிலும் இருபத்தைந்து ஆண்டு களாய் வித்தாகி விதையாகி விருப்பான கருவாக இருக்கும் யாழ். ''உதயன்'' பல் லாண்டு வாழ்க! வளர்க! என வாழ்த்துகின் றேன். திருமுருகன் வாயிலிலே நின்று வலம் வந்து அருள்தர வாழ்த்துகிறேன். பல்லாண்டு வாழ்ந்து படர்கொடிபோல் தமிழினத்தின் விடிவிற்காய் சேவை பல ஆற்றிடவும் வாழ்த்துகிறேன். கூடிவரும் உதயன் நாளிதழே வடிகாலாய் நாடி நல் உலகு காண்போம் நன்றாக!

**ச.பொ.பாலசிங்கம்,** *[முன்னாள் யாழ்.உதவி அரச அதிபர்]*
*50 ரக்சிடோ கோட், அப்பாட்மென்ற் 619,*
*ஸ்காபரோ, ரொறன்ரோ, கனடா....*

## வீறு நடை போடுக

உதயன் தனது 25ஆவது அகவையை பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் கொண்டாடுவதையிட்டு எமது மகிழ்ச்



சியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக் கின்றோம். தடைகள் , தட்டுப்பாடுகள் மிரட்டல்கள் மத்தியில் தொடர்ந்து வெளிவந்ததை நாம் மறக்க முடியாது. மிகவும் தட்டுப்பாடான காலத்தில் ஏதோ கிடைத்த தாள்களில் வெளி வந்ததை நாம் எவ்வாறு மறப்பது? தொடர்ந்து வெளிவரவேண்டும். தர்ம வழியில் சத்தியத்தைக் கடைப்பிடித்து வீறு நடைபோடவேண்டுமென்று பகவான் சத்தியசாயி பாபாவிடம் வேண்டுகின்றோம்.

**வைத்தியகலாநிதி.கு.கணேசமூர்த்தி,**
*சிறீ சத்தியசாயி சேவா நிலையம், திருநெல்வேலி.*

## துணிச்சலோடு முகம் கொடுப்பவன் உதயன்

தமிழ் மக்களின் உள்ளங்கவர்ந்த பத்திரிகை தனது 25வது அகவையை இந்நாளில் கொண்டாடுவதையும்,



அது தொடர்பாக வெளியிடப்படும் வெள்ளிவிழாச் சிறப்பிதழுக்கு வாழ்த் துச் செய்தியொன்றினை வழங்குவதை யிட்டு பெருமகிழ்ச்சி எய்துகின்றேன்.

நடந்து வந்த25 வருட காலத்தில் உதயன் பல்வேறு விதமான சோதனை கள், வேதனைகள், நெருக்கடிகள் போன்ற வற்றிற்குத் துணிச்சலோடு முகங் கொடுத்து பல்வேறு சாதனைகளைப் படைத்திருப்பது குறித்து பாராட்டாமல் இருக்க முடியாது.

காலத்தின் தேவையறிந்து சிறுவர், இளைஞர், முதி யோர் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் ஏற்ற வித்தில் ஆக்கங்களை வழங்கி குடாநாட்டு மக்கள் மட்டுமன்றி வெளி நாடுகளில் வாழும் எம்மினத்தவரும் ஏற்றிப் போற்றும் விதத்தில் உதயன் பத்திரிகை வெளிவந்து கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். தனக்கென தனியானதொரு இடத் தினைப் பெற்றிருக்கும் உதயன் மேன்மேலும் வளர்ச்சி பெற்று மேன்மையுற வேண்டுமெனமனதார வாழ்த்துகின்றேன்.

**மு.செ.சரவணபவ,**
*மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.*

## உதயனின் எதிர்காலம் பிரகாசமாக அமையட்டும்

கடந்த 25 ஆண்டுகளாக தங்களையும் உதயன் பத்திரிகைப் பணிப்பாளர், ஆசிரிய பீடத்து அங் கத்தவர்களையும் நாம் நன்கறிவோம். தாங்கள் இந்த மண்ணில் கடந்த பல வருடங்களாக எமது மக்களுக் குத் தேவையான வழிநடத்தல் சேவைகளை வழங்கி வந்துள்ளீர்கள்.

கடந்த பல வருடங்களாகத் தங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் மத்தியிலும் மனம் தளராது, களத்தில் நின்று உதயனை நாளாந்தம் மக்களுக்குத் தொடர்ச் சியாக வெளியீட்டு சிறந்த ஊடகப் பணியைச் செய்துள்ளீர்கள். தற்பொழுது தமிழ்பேசும் மக்களுக்கு ஒற்றுமை என்பது 'கானல் நீராக' தென்படுகின்றது.

எமது இனம், மொழி, கலாசாரம், தேச வழமைகள் ஒரு தனித்துவமானது. அதைப் பேணிப் பாதுகாக்க நாங்கள் எடுக்கும் முயற்சிகள் போற்றத்தக்கவை. வடகிழக்கு தமிழ் பேசும் மக்கள் தற்பொழுது எமது சரித்திரத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பது உண்மை நிலை. இதற்கு முக்கிய காரணம் தந்தை எஸ். ஜே.வி.செல்வநாயகத்தின் தீர்க்கதரிசனத்தை உணரா மல் செயற்பட்டு வந்ததுதான். அந்தப் பெரியார் காட்டிய வழியில் சென்றிருந்தால் இந்த நிலை வந்திராது.

தமிழ் மக்களும் எமது சகோதரர்களான முஸ்லிம் மக்களையும் இணைத்து அவர் விட்டுச் சென்ற பாதையில் நாம் ஒன்றுபட்டு எமது மண்ணையும், உரிமைகளையும் காப்பாற்றலாம். அதற்கு தாங்கள், தங்கள் பத்திரிகை மூலம் எதிர்காலத்தில் பணியாற்று வீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

உதயன் குடும்பம் நீடுழி வாழ்ந்து தமிழ்மக்களின் வாழ்வில் விடிவு விரைவில் கிட்ட பணி செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் எமது வாழ்த்துக்கள்.

**Dr& Dr.Mrs. தெய்வேந்திரம் குடும்பம்.**

## உலகத்தோர் அகக் கண்களைத் திறப்பவன் உதயன்



உதயமதில் உன்முகத்தில்
உள்ளமதைப் புதைக்காவிடின்
உன்னதமாய் எம் பொழுதை
உளமாரக் கழிக்கலாமோ....


உள்ளம் நெகிழ்ந்திட
உணர்வுகள் பொங்கிட
உன் கரம் பற்றி
உன்னோடு இணைந்தால்
உதயனே - நீயோ
உலகத்தோர் அகக் கண்களைத் திறக்கின்றாய்
உன்புகழ் உலகெங்கும் மேலோங்க
உளமார வாழ்த்துகின்றேன்.

*கண் சிகிச்சை நிபுணர்*
**வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன்,**
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

## உள்ளம் கவர் உதயன்

பொரும்பாலான யாழ். வாசிகள் என்னைப் போலவே காலையில் உதயனுடன் தங்கள் நாளை ஆரம்பிக்கிறார் கள் என்பது நிதர்சனமான உண்மையாகும். யாழ்ப் பாணம் அன்று முதல் இன்று வரை தனது தனித்து வத்துக்குப் பெயர்பெற்றது. எது எப்போது அவசிய மாகிறதோ அது அப்போது இறையருளால் கைகூடும் என்பது எமது ஆன்றோர்கள் கருத்து. ஆனால் அப்பணி ஒன்றும் இலகுவான காரியமாக அமைந்து விட வில்லை. அதற்காக உதயன் அனுபவித்த சிக்கல்கள், இழப்புக்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவற்றையும் தாண்டி உதயன் சாதித்திருக்கிறான் என்பதுதான் அதன் பெருமை. உலக ராஜதந்திரிகள் கூட யாழ். வாசிகளின் ஏன் இலங்கைத் தமிழர்களின் மனவோட்டத்தையும் கூட அறிய உதயனைத் தான் நாட்டினார்கள் என்பது நான் சொல்லித் தெரிய வேண்டிய ஒரு விடயம் அல்ல. உதயன் எங்கள் வரலாற்றின் பதிவு. இங்குதான் எங் கள் வாழ்வும் வளமும் சோகமும் அவலமும் சோத னைகளும் சாதனைகளும் பதியப்பட்டு இருக்கின் றன. இப்போது நாங்கள் இன்னுமொரு மாற்றத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்றோம். இவ் வேளை உதயன் தன் வெள்ளிவிழாவைக் கொண் டாடுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையை உரத்துச் சொல்லவும் எம் உள்ளக்கிடக் கையும் உள்ளபடி உலகுக்கு உரைக்கவும் உதயனின் தேவை முன்னரைவிட இப்போது அதிகமாக உள்ள தாகவே நான் உணருகிறேன். உதயன் மேன்மேலும் சிறப்புடன் வளர எனது வாழ்த்துக்கள்.

**சு.ரவிராஜ்,**
*சத்திரசிகிச்சை நிபுணர்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN



## வந்தனன் உதயன் வந்தனன்

இரவின் இருளைக் கலைத்து, உலகில் ஒளி வெள்ளம் பரப்ப உதயன் ஏழு பரிதிகளில் ஏறி உதித்து வரும் காட்சி. வி.கே. என்ற இரு எழுத்துக்களில் மறைந்திருக்கும் முதுபெரும் ஓவியர் வீ. கனகலிங்கத்தின் கைவண்ணத்தில் பிறந்தது இந்தச் சித்திரம்.

## உதயனும் இலட்சினையும்

நாளின் நாயகன் சூரியன். பூலோகத்தின் புருஷனும் அவனே. இங்குள்ள உயிர்கள் யாவும் வாழ்வதற்கும், வளமும் நலமும் பெறுவதற்கும் ஆதார சுருதியாக இருப்பவன் இரவிதான். பயங்கரமான இருள் மண்டிய இரவைக் கலைத்து ஒளிதந்து உலகை உய்விக்க உதித்து எழும் போது பகலவனான சூரியன், உதயனாகின்றான்.

ஆதியிலே, தமிழ் மக்கள் முதன் முதலில் சூரியனைத்தான் தமது கடவுளாகக் கொண்டு வணங்கினார்கள். சமய ரீதியில் மட்டுமன்றி தமிழர் வாழ்விலும் சூரியனுக்கு முதலிடம் தரப்பட்டது.

சூரியனுக்கு உள்ள அத்துணை முக்கியத்துவத்தை உணர்ந்தே உங்களது உள்ளம் கவரவரும் நாளிதழுக்கு உதயன் என்று பெயர் சூட்டினோம். வைகறையைக் கலைக்க உதயன் உதித்து எழுந்ததும் பூவுலகெங்கும் மகிழ்ச்சி பொங்கிப் பிரவகிப்பதுண்டு. அதேபோன்று உதயன் நாளிதழ் உங்கள் கைக்குக் கிடைத்ததும் உங்கள் உள்ளக் கமலம் மலர வேண்டும் என்பது எமது வேணவா. வதந்திகள் உண்மையற்ற பிரசாரங்கள் மலிந்த இக்காலத்தில் உண்மையான செய்தி எனும் ஒளிதந்து உதவுவான் உதயன். அவனுக்கு உங்கள் நல்லாசியையும் நல்லாதரவையும் தாருங்கள்.

உதயனுக்கு முன்னால் இருக்கும் அவனது இலச்சினையைப் பாருங்கள். நவீன தொடர்புச்சாதனங்கள் வருவதற்கு முன்னர் இடத்துக்கு இடம் செய்தி அல்லது தூது கொண்டு செல்லும் முறைகள் பலவிதமாக இருந்தன.

புறா, அன்னம் போன்ற பறவைகள் மூலம் காதலர்களும் அரசர்களும் செய்தி அனுப்பியதாகச் சங்க கால இலக்கியங்கள் கூறும். அதற்கு முந்திய காலத்தில், வீரர்கள் கணை தொடுத்தே செய்திகளைத் தூர இடங்களுக்கு அனுப்பினார்களாம்.

ஆனால் இன்றுமுதல்.....

உதயன் செய்திக்கணை தொடுப்பான். வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல வேகமாகச் செய்தி தருவான் என்பதையே இலச்சினை குறிக்கிறது. செய்தி எழுதும் பேனாவை அம்பாகவும், அதன் வாயில் செய்தி எழுதப்பட்ட காகிதம் இருப்பதாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது. சூரியனிலிருந்து புறப்படும் ஒளிக்கதிர்களின் வேகத்துடன் வாசகர்களுக்குச் செய்தியைக் கொடுக்க வேண்டும் என்பது அதன் உள்ளார்ந்த கருத்து.

முத்தமிழ் வளர்த்த மூவேந்தர்களில் ஒருவரின் அரச கொடி, விற்கொடி செய்தியை வேகத்தோடு தருவதைச் சித்தரிக்கும் போது, தமிழ் அரசன் ஒருவனின் கொடியையும் சிறப்பித்ததாக விளங்கும் என்பதாலேயே வில்லையும் அம்பையும் தெரிவு செய்தோம்.

## உதய வேளையில் உங்களுடன்....

அன்புசால் பெருமக்களே!

வணக்கமும் நல்வாழ்த்துக்களும்.

உங்கள் கைகளில் தவழ்பவன் உதயன். அவன் இன்று காலை உதித்து எழுந்தவன். புதினம் சொல்ல வரும் புதியவன். ஆம் உங்கள் எல்லோருக்கும் புதியவன். ஆயினும் உங்கள் பால் அன்பு கொண்டவன். தமிழ் மக்களாகிய தங்களுக்குப் பணி செய்வதற்கென்றே யாழ்ப்பாண உந்தியில் உதித்தவன். உங்கள் நல்வாழ்வும் இன்பமும்தான் அவனது நீண்ட நெடு நோக்கும் இலட்சியமும்.

அரசியல், பொருளாதார, சுதந்திரம் மலர வேண்டும். சமூக சமத்துவமும் சகோதரத்துவமும் பூத்துக் குலுங்க உலகின் ஏனைய பகுதி மக்களுக்கு இணையாக உயர வேண்டும். அதற்கேற்ற அபிவிருத்தியும் உழைப்பும் இந்தப் பூமியில் செறிந்து பரவவேண்டும்.

எங்களிடம் உள்ள கல்வி, மனித சக்தி முதலாம் பல்துறை ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்த வேண்டும். சொந்த மண்ணின் வளங்களைக் கண்டறிந்து அவற்றைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டும். எமது வருங்காலச் சந்ததிச் செல்வங்கள் வேலை வாய்ப்புக்கும் ஜீவனத்துக்கும், கொழும்பையும் பிற நாட்டுத் தலைநகரங்களையும் நாடாதிருக்கச் செய்யவேண்டும். தமிழர் தமது பிறந்த மண்ணில் உரிமைகளுடனும் வசதிகளுடனும் முதலாந்தர பிரஜைகளாக வாழவேண்டும். தம்மைத் தாமே ஆண்டு தமது பணிகளைத் தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும்.

இதுவே உதயனின் ஆசையும் அபிலாஷையும். தமிழ்ப் பெருமக்கள் இதனை ஈட்டுவதற்காக உதயன் தன்னை அர்ப்பணம் செய்வான். அந்த அர்ப்பணமே அவனது உதயநாள் சங்கற்பம்.

ஈழத் தமிழர் வாழ்வில் இருள் கவிந்துள்ளது. அந்த இருள் நீங்கி ஒளி பரவ வேண்டும். பூவுலகில் இருள் நீங்கி ஒளி தருபவன் உதயன். அதேபோல், தமிழர் வாழ்வில் ஒளி பரவிப் பிரகாசிக்க இந்த உதயன் பல்லாற்றானும் உழைப்பான்.

அநீதியின் தலையில் எழுத்தடி கொடுக்கவும், அக்கிரமத்திற்கு எதிராக ஆர்த்தெழவும், கருத்தைத் திரட்டி வழிப்படுத்தவும், ஒடுக்கப்படுவோருக்காகக் குரல் கொடுக்கவும் அவன் ஒரு போதும் பின்னிற்கப் போவதில்லை.

போலி வேடம் போட அவனுக்குத் தெரியாது. உள்ளத்தை உள்ளவாறே கூறி உண்மையை நிலை நாட்ட அவன் உழைப்பான்.

'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதை அவன் அறிவான்.

பத்திரிகைக்கு உள்ள மகா சக்தியை உணர்ந்தவன். அதனை நேர்வழியில் ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் ஆற்றுப்படுத்த வேண்டிய தன் அவசியமும் அவனுக்குப் புரியும். தமிழ் மக்கள் சகலரும் அவனது தோழர்கள். எதிரிகள் எவரையும் அவன் தேடிக் கொள்ள விரும்பவில்லை. நடுவுநிலைமை அவன் நல்வழியாக இருக்கும்ங.

உதயன் உன்னி எழுந்து உயர்ந்து வளர்வதற்கு உங்கள் எல்லாவித நல்லாதரவையும் நாடி நிற்கிறோம்.

உதயனுக்கு உங்கள் இதயக் கமலங்களில் இடம் தாருங்கள்.

உதயன் பால் தமிழர்கள் உள்ளம் எல்லாம் பொங்குக. தமிழ் மண் எங்கும் மங்களம் தங்குக - என்று இறையருளை இறைஞ்சுகின்றோம்.

பிரசுர முகாமைப்பீடம்

(*முதல் நாள் உதயனின் அறிமுகத்தின் மறுபிரசுரம் இவை)

## மூச்சந்தி முரளி



அச்சா!
யாழ்ப்பாணத்திலிருந்து
மூன்றாவது
பத்திரிகை. நல்ல
முழிப்பாய் இருக்கு.
எங்கடை
பகுதியிலேயே
எல்லாத்தையும்
செய்யலாம்
என்பதற்கு இது
முன்மாதிரி தானப்பா!

27.11.1985

## சமர்ப்பணம்

மக்கள் சக்தி மகாசக்தி. அந்த மகாசக்திக்கு ஆற்றலும் அடித்தளமுமாக அமைவது எழுத்து. மக்கள் தம் சிந்தனையைப் பிரதிபலிப்பது எழுத்தே.

எழுத்தை- சிந்தனையை அரங்கேற்றும் மேடைகளில் முதன்மையானது பத்திரிகை. அதன் பேராற்றல் மகத்தானது.

பத்திரிகை மக்கள் பணி செய்யும் மாட்சிமை மிக்கத் தொண்டன். ஜனநாயகத்தின் பாதுகாவலன். மக்கள் நாயகர்களை நேர்வழிப்படுத்தும் மதியூகம் மிக்க நல்ல அமைச்சன். மக்களுக்கும் அரசினருக்கும் இடையில் தொடர்பு உண்டாக்கும் விசுவாசத் தூதன். மக்கள் இன்னல்களைத் துடைக்கத் தன்னை அர்ப்பணிக்கும் கர்மவீரன். அநீதிகளைப் பேணவாள் கொண்டு அரிந்து எறியும் தர்மவீரன். பின்வரப் போவதை முன்னரே கூறி எச்சரிக்கை செய்யும் தீர்க்கதரசி.

பத்திரிகையின் பணியும் பொறுப்பும் பன்முகமானது. அதற்கென ஒரு தர்மம் உண்டு; பல நெறிகளும் உள்ளன.

உதயன் தனக்குள்ள பணிகளைத் தப்பாது செய்வான். தனக்குரிய பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவான். வாசகர்கள் தான் அவனின் அதிபதி. தமக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் கொடுமைகளையும் களைந்தெறிய மக்களுக்குக் கை கொடுப்பான் உதயன். அவர்படும் இன்னல்களையும் துயரங்களையும் துடைப்பதற்குப் பக்கபலமாக இருப்பான்.

உதயனின் உயிர் மூச்சு உண்மை. உண்மையை- உள்ளத்தைச் சொல்வதற்கு அஞ்சாதிருப்பது அவனது அறநெறி, நடுநிலைமை அவனின் நேர்வழி. பத்திரிகா தர்மம் அவனது ஆன்ம நேயம்.

அமிழ்தினும் இனிய அருந்தமிழ் இன்றுள்ள நிலை தாண்டி மேலோங்க வேண்டும். எமது மண் அன்னைக்கு ஆபத்து வராது பாதுகாத்து அவளைச் சீராட்டிப் பாராட்ட வேண்டும். அவள் மடியில் உள்ள வளங்களைப் பெருக்கித் தமிழ் மக்கள் நல்வாழ்வு காணவேண்டும். அழிந்தொழியும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்ட ஈழத் தமிழரின் கலை,கலாசாரங்களைப் பேணிப் பாதுகாத்து மெருகூட்ட வேண்டும். எல்லாத் துறைகளிலும் புதுமைகள் புரியும் இதய வேட்கை தமிழ் மக்களுக்கு ஏற்பட வேண்டும்.

இதுவே உதயனின் பெருவிருப்பம். இதனை மக்கள் அடைவதற்கு உதயன் என்றென்றும் பக்கத்துணையாய் நிமிர்ந்து துணை நிற்பான்.

வாசகர்களின் கருத்துக்களை - நல்ல கருத்துக் கருவூலங்களை அரங்கேற்ற வசதி ஞெணுசய்து தரவும் உதயன் பின்நிற்கமாட்டான்.

நாளின் நாயகனாக இருந்து அன்றாட உலக, உள்நாட்டு, மாநில, மாவட்ட, உள்ளூர்ச் செய்திகளை வாசகர்களுக்குத் தருவதே உதயனின் பெருங்கடமை அந்தக் கடமையைக் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் அவன் ஆற்றுவான் எனப் பிரதிக்ஞை செய்தி இன்று படைக்கின்றோம். வாசகர் இதயக் கமலங்களின் காதலனாக-நாயகனாக உதயன் திகழ தமிழ்க் கடவுள் முருகன் பாதத்தில் வைத்துத் துதித்து உங்களின் முன் சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## எந்நாளும் உன் பணி ஓங்குக



உதயத்திலே வந்து உள்ளத்தில் உவகை பொங்க உன்னதமாக உணர்வுபூர்வமாகச் செய்திகளை உலகிற்கு அறியச் செய்த அற்புத உதயன் 26 ஆவது ஆண்டில் கால் தடம் பதித்து வெள்ளிவிழாக் கொண்டாடும் இந்நாளில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். நான் கண்ட உதயனிடம் பெரும் பண்புகள் உண்டு. முக்கியமாகச் சம்பந்தப்பட்டவர்களது மன உணர்ச்சியைத் தூண்டாத விதத்தில் அமைதியான வார்த்தைகளால் அருமையான சொற்பிரயோகத்தினால் தெளிவாக சிறுவர் முதல், பெரியோர்கள் வரை மக்களின் குறைகளைச் சம்பந்தப் பட்ட பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதில் உனக்கு நிகர் வேறு எவருமில்லை. மற்றும் மாணவர் மனம் மகிழும் உன் படைப்புக்கள், முத்துமுத்தான சிந்தனைத்துளிகள், எண்ணிலடங்கா உன் படைப்புக்களில் வாசகர் திருமுகம். மலரும் இந்நாள் போல் எந்நாளும் உன் பணி ஓங்குக என வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

**செ.குலபாலசெல்வம்,**
*சாலை முகாமையாளர், இ.போ.ச.[ வட ],*
*பருத்தித்துறை.*

## தடைக்கற்களைப் படிக்கற்கள் ஆக்கியவன் உதயன்



கால்நூற்றாண்டைக் கடந்து நிற்கும் காத்திரமான பத்திரிகை உதயன் நாளிதழ் உதயமாகி இருபத்தைந்தாண்டுகள் நிறைவாகிவிட்டன. இந்த நீண்ட காலப்பகுதியில் உதயன் எதிர்கொண்ட இன்னல்கள், இடர்பாடுகள் ஒன்றல்ல, இரண்டல்ல. இருந்த போதிலும், தன் முன்னே தோன்றிய தடைக்கற்கள் யாவற்றையும் படிக்கற்களாக்கி, தளரா உறுதியோடு தமிழ் மக்களுக்குச் சேவையாற்றிவரும் தனிப் பெரும் பத்திரிகை இது என்றால் அதில் மிகையேதும் இருக்க முடியாது. பத்திரிகைக் காகிதங்களே கிடைக்காத மிகவும் இக்கட்டான காலப் பகுதியில் கூட உதயன் ஆற்றிய சேவையைத் தமிழ் மக்கள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள். அதனால் தான் அவர்கள் இன்றும் உதயனுக்குத் தம் இதயங்களிலே தனியாய் ஓரிடத்தை ஒதுக்கியிருக்கின்றார்கள். அந்த அசைக்க முடியாத பலந்தான் இந்நாளிதழின் இன்றைய வெற்றி.

கால்நூற்றாண்டைக் கடந்து நிற்கும் நமது உதயன் நாளிதழ் மேலும் மேலும் மேன்மைபெற்று வளர்ந்தோங்க இறையாசி வேண்டி இதயபூர்வமாய் வாழ்த்துகின்றேன். நற்றமிழும் நல்லறிவும் நானிலத்தில் தழைக்க நம் உதயனின் பணிகள் தொடரட்டும், வளரட்டும்!

**ஆ.ரவீந்திரன்,** *தலைவர், வாழ்வகம்,*
*சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.*

## உலகம் சுற்றும் வாலிபன் - உதயன்



உதயன் தனது 25 ஆண்டு சேவையினை நிறைவு செய்து வெள்ளிவிழாக் கொண்டாடுவதனையிட்டு, உதயனுக்கு எழுதியதன் மூலம் பெயரும் புகழும் பெற்றவன் என்ற வகையில் யான் இரட்டிப்பான மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

ஒருசமயம் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர் ஒருவருக்கு நான் அறிமுகப்படுத்தப்பட்ட போது "ஏன் அந்த... வீட்டு பத்திரிகைக்கு எழுதுகிறீர்கள்? வேறு பத்திரிகைகள் கிடைக்கவில்லையா?" என்று அவர் கேட்டார். அதற்கு நான் "உதயனுக்கு எழுதினால் அது உலகளாவிய வாசகர்களைச் சென்றடையும். எழுத்தால் எனக்கு ஏற்பட்ட எல்லாப் புகழுக்கும் அது தான் காரணம்" என்றேன். அதிகம் ஏன், யாழ்.போதனா வைத்தியசாலையின் புகழ் பெற்ற வைத்திய நிபுணர்களே தங்கள் கட்டுரைகளும் நினைவுச் சொற்பொழிவுகளும் உதயனில் வெளிவரவேண்டும் என்று விரும்பு வதற்கும் அது தானே காரணம்.

கொழும்பிலிருந்து வெளிவருகின்றஒரு பிரபல நாளி தழின் யாழ். பதிப்பிலே பலரது நேர்காணல்கள் வந்து கொண்டிருந்தன. ஆனால் அந்த நேர்காணல்கள் வந்த பக்கம் கொழும்பு நகரப்பதிப்புக்களில் காணப்படவில்லை என்று அறிகின்றோம். இணையத்தளம் மூலமாக இங்குள்ள பத்திரிகைகளைப் பார்த்து அபிப்பிராயம் தெரிவிக்கும் வெளிநாட்டு அன்பர்களும் 'அந்தப்பக்கம்' அங்கும் கிட்டவில்லை என்றனர். இதுபோன்ற தவறுகள் உதயனைப் பொறுத் தவரை இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அத னால் உலகம் சுற்றும் உதயனைப் பாராட்டுகிறேன். அதன் பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

**பொ.சண்முகநாதன்.** *[சண் அங்கிள்]*

## உதய வேளையில் உறவாடும் உதயனே நீ வாழ்க

உதயவேளையில் எம்முடன் உறவாடி உள்ளூர்ச் செய்திகளையும் உலகப்புதினங்களையும் உடனுக்குடன் உயிர் நண்பனைப்போல் எடுத்துரைக்கும் உதயனே, உனக்கு இன்று அகவை இருபத்தைந்து நிறைவதை நினைக்கும்போது நெஞ்சம் மகிழ்கிறது.



இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நீ ஒரு குழந்தையாய் யாழ்.மண்ணில் பிறந்து என்னைப் போன்றவர்களின் கரங்களில் தவழ்ந்தபோது இருபத்தைந்து வயதையும் கடந்த வாலி பனாய்ப் பவனி வருவாய் என்று நாம் எண்ணி இருக்கவில்லை. ஏனெனில் நீ பிறந்த மண்விடிவுக்காய் ஏங்கித் தவித்தது. நீ பிறந்த காலம், உனது தாய் மண்ணை இருள் சூழ்ந்த காலம். இடர் நிறைந்த, வலிசுமந்த மக்களின் துயரங்களை வெளி உலகுக் குப் பறைசாற்றி இருள் சூழ்ந்த தமிழர் வாழ்வில் ஒளியேற்றும் உதய சூரியனாய் உன் தோற்றம் மிளிர்ந்தது.

நீ கடந்து வந்த பாதை கல்லும் முள்ளும் நிறைந்தவை ஏசுவார்கள், எரிப்பார்கள் , அடிப்பார்கள், சுடுவார்கள், இது ஞானியின் வாயில் மலர்ந்த வார்த்தைகள், இவை வெறும் வார்த்தைகளல்ல, எதிர்கால நிஜத்தை முன்கூட்டியே சொன்ன தீர்க்கதரிசன வரிகள். ஆம், எரித்தார்கள், அடித்தார்கள், சுட்டார்கள் இன்னும் எத்தனை அக்கினிப் பரீட்சைகளையும் தாண்டி சுடச்சுட ஒளிரும் பொன்னாய்த் திகழ்ந்தாய். எம்மினத்தின் இருள் சூழ்ந்த காலங்களில் எல்லாம் உனது துணிச்சல் நிறைந்த பயணத்தைப் பார்த்து பிரமித்து நின்ற நாள்களை நினைத்துப் பார்க்கின்றேன். உன்னை உருவாக்க எண்ணியவர்களை அன்று எனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இன்று அவர்கள் மக்கள் மனம் நிறைந்த தொண்டனாய் அவனியில் பவனி வருவதைப்பார்த்து மகிழ்கின்றேன்.

பிரதம ஆசிரியர், ஆசிரிய பீடத்தினர்,செய்தியாளர்கள், அச்சு ஊழியர்கள், உன்னைச்சுமந்து மக்களிடம் சேர்க்கும் நண்பர்கள், உன் உறவைத் தினமும் நாடும் நெஞ்சம் நிறைந்த வாசக நேயர்கள், விற்பனை முகவர்கள், விளம்பரதாரர்கள் அத்தனை பேரும் ஊர்கூடித் தேர் இழுத்தால் தேர் ஓடும் என்ற முதுமொழிக்கிணங்க ஒன்று பட்டு நின்றதனால் உன்பயணம் தொடர்ந்தது.

இன்று இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து வெள்ளி விழாக்காணும் உதயனே, நீ நீடுழி வாழ்க. நீ நூற்றாண்டு கடந்தும் தமிழர் துயர்துடைக்க உன் நெடும் பயணம் தொடர வாழ்த்துகின்றேன். வாழி நீ.

**மகாமானி க.சோமசேகரம் J.P,**
*தலைவர், காரைநகர் அபிவிருத்திச்சபை.*

## உதயனே! நீ நீடு வாழ்க



தமிழ் அன்னையின் தீம்பாலை உண்டு அவள் மடியில் கிடக்க அவள் எம்மைத் தாலாட்டிச் சீராட்டிப் பேசிய இன்பத் தாய்மொழியாகிய இனிய தமிழ் எங்கும் தளைத்தோங்க, சிறப்பு பெற, தமிழ் பேசும் மக்களுக்கும், புலம்பெயர்ந்த எம் உறவுகளுக்கும் சேவையாற்றிவரும் எமது உள் ளம் கவர்ந்த உதயனே, நீ நீடுழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றேன். மக்களின் தொண்டனாகத் தோன்றி தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று இன்று வெள்ளி விழாக்காணும் உதயன் தமிழ் நாளி தழை வளர்ச்சி அடைய நல்வாழ்த்து, வழங்குவதையிட்டு பெருமிதமடைகின்றேன்.

**எஸ்.இராசலிங்கம்,** *அத்தியட்சகர்,*
*அரச முதியோர் இல்லம், கைதடி .*

## தமிழர்களது செல்லக் குழந்தை உதயன்

யாழ்ப்பாண மண்ணிலே பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து 26 ஆம் அகவையை எட்டியுள்ள தமிழர்களின் செல்லக் குழந்தை உதயன். இன்று உலகெங்கு



முள்ள தமிழ் மக்கள் தினமும் பார்த்துப் பாராட்டிப் பயன் பெறும் பத்திரிகையாக வளர்ந்துள்ளமை அதன் நித்திய வாசகர்களாகிய எல்லோருக் கும் மகிழ்ச்சி தரக்கூடியது. ஈழசேகரி, ஈழநாடு பத்திரிகைகளின் சகோதரனாக நம் மண்ணில் உதயமான உதயன் நூற்றாண்டு காலம் தமிழர் காப்பாளனாக, தான் போற்றிப் பேணும் பத்திரிகா தர்மம், மக்கள் சேவை, உண்மை, நேர்மை, பயமின்மை ஆகிய பண்புகளுடன் வாழ்க வளர்கவென வாழ்த்துகிறேன். உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில் நாதனின் கட்டுக் கோப்பிலே தினமும் சுடர்விடும் உதயன், தன் அனைத்து உதவி ஆசிரியர்கள் மற்றும் தனக்காகப் பணி யாற்றும் அன் புள்ளங்கள் அனைவரையும் அன்போடு இணைத்து, வளர்ந்து தமிழ்வளர்க்கும், தமிழ் காக்கும் வீரனாக வாழ்க, வளர்க என அனைத்து வாசகர்களுடன் ஒன்றிணைந்து இந் நன்நாளில் அன்போடு வாழ்த்துகிறேன்.

**மாணிக்க சீலானிநோதன்,**
*சுதந்திர ஊடகவியலாளர், மறைவன்புலோ, சாவகச்சேரி.*

## பருதி போல் நிலைத்து வாழி



ஆனதோ வெஞ்சமர்
அழிந்ததோ பல் உயிர்
எண்ணரும் கோடி சொத்தை
இழந்தனர் இங்கு மக்கள்

"இன" எனில் சிறைவாசம்
ஏனெனில் கேட்டால்
மண்ணிலே மக்களிங்கு
மாண்டனர் வன்செயலால்

அன்னியப் படையிங்கு
ஆதிக்கம் செய்த காலம்
கண்ணிருந்தும் குருடர் போல
காதிருந்தும் செவிடராயிங்கு

பல்குழல் சீறிப் பாய
பல உயிர் துடித்து மாள
உண்டியும் உடையுமின்றி
ஊரூராய் அலைந்தனர் மக்கள்

மண்ணிலே நடப்பவற்றை
மக்களுக் கெடுத்தியம்ப
இல்லையோ யார் நாதியற்றென்று
இடர்பட்டு அழுதார் மக்கள்

உதித்தது உதயமாது
"உதயன்" என்றிட்டார் நாமம்
காரிருள் கிழிக்கும் நல்ல
கதிரவன் போல் உதித்தான்

உரிமையின் குரலாய் நாளும்
உலகிற்கு உதயன் சொன்னான்
அஞ்சியதில் மக்கள் என்று
ஆதாரம் அளித்தான் அன்றோ

குண்டுகள் எறிந்தால் என்ன
கட்டிடமோ எரித்தாலென்ன
அஞ்சிடாக் கதிரவன் போல்
ஆற்றினான் உதயன் தொண்டு

அச்சமும் மடமையும் இங்கு
ஆதிக்கம் செலுத்தி விட்டால்
நிச்சயம் எமது மண்மேல்
நிலைகெட்டு அழிவர் மக்கள்

கல்வியைக் காத்து நின்று
கவின் பெறு கலைகள் பேணி
மண்ணிலே எம் பண்பாட்டை
மாசறக் காத்தானன்றோ

கதிரவன் மறைவை எண்ணி நின்றோ
காரிருள் அகற்றுகின்றான்
உதயனாம் ஞானமாது இங்கு
உண்மைக்காய் உழைக்கின்றானே!

தமிழினம் கலை பண்பாடு
தனிப்பெரும் வரலாறு தன்னை
அழித்தொழிப்பார் எண்ணம் நாளும்
ஆற்றினாய் சேவை அன்றோ?

மண்ணுலகில் மட்டும் மிந்த
மித்திரனோ மட்டும் மண்மேல்
செந்தமிழ் வாழும் மட்டும்
சிந்தனையில் நிலைத்தாய் அன்றோ

இருபத்தைந்து ஆண்டு முன்னே
இருள் சூழ்ந்த ஈழமட்டில்
காரிருள் அகல என்றோ
கருணை சேர் இறையருளால்
திருநிறை உதயன் இங்கு
தினம் தினம் உதித்தானன்றோ
பேரிருள் அகன்று செல்ல
பெருந் தொண்டு ஆற்றி நின்ற
அரும் பெரும் உதயன் சேவையை
அகிலமே போற்றுதம்மா!

கடல் அலைசூழ்ந்து கொஞ்ச
கனி போல் உவக்க கொஞ்ச
நிலாமகள் மகிழ்ந்து கொஞ்ச
நீள் பெரு [illegible] கொஞ்ச
தமிழினம் உன்னைக் கொஞ்சி
தாலாட்டுப் பாடுதம்மா!

**விகடகவி**
**மு. திருநாவுக்கரசு**

உதயனுக்கு இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## துணிச்சலுக்கான விருது பெற்றவன் உதயன்

உலகம் உவக்க உதித்து ஒளிவீசிச் சுடர்விட்டுக் கதிர் பரப்பும் சூரிய பகவானின் உதயன் என்ற நாமத்துடன் இருபத்தைந்து ஆண்டு களாக மக்கள் மனம் நிறைந்த நாளித ழாக வெளிவந்து இன்று வெள்ளிவிழாக் கொண்டாடும் உதயன் பத்திரிகை மேலும் மேலும் தொடர்ந்து பிரசுரமாகி சிறப்புடன் மிளிர வாழ்த்துகின்றேன்.



மக்களின் தேவையை உணர்ந்து அவ்வப்போது நிகழும் நாட்டுநடப்புக் களையும் பண்டிகை, விழாக்கள், விரதங்கள் பற்றியும் காத்திர மாக எழுதி வெளியிட்டு வந்த உதயன் நிறுவனத்தினருக்கு எல்லாம் வல்ல நல்லைக் கந்தன் சகல சௌபாக்கியங் களையும் நல்கியருள வேண்டும் என்று பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம்.

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிவரும் உதயன் நாளிதழ் நம் நாட்டினர்க்கு மட்டுமல்லாது, புலம் பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் ஈழத்தமிழ் மக்களுக்கும் தன்னுடைய மகத்தான அளப்பரிய சேவையை அர்ப்பணிப்புடன் வழங்கி வருவதையிட்டுப் பேரு வகையடைகின்றோம். துணிச்சல் மிகுந்த பத்திரிகை என விருது பெற்ற உதயன் நாளிதழ் இன்னும் பல சிறப்புக்கள் பெற்று மகோன்னதமும் மங்களமும் நிறைந்த ஒரு தினசரியாக திகழ எமது பூரண நல்லாசிகளை வழங்கி மகிழ்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
*நல்லை திருஞான சம்பந்தர் ஆதினம், யாழ்ப்பாணம்.*

## நல்லாசிகள் உரித்தாகட்டும்



தேமதுரத் தமிழினை உலகமெங்கும் பரப்பி என்றென்றும் தமிழர் தம் இதயங்களில் குடி கொண்டிருக்கும் 'உதயன்' பத்திகைக்கு இன்று வெள்ளி விழா. அண்ட சராசரம் அனைத்தையும் இயக்குகின்ற அன்னை ஆதிபராசக்தியின் அருட்கடாட்சத்தினால் இன்றும் மக்கள் பணி செய்பவன் உதயன் என்றால் அது மிகையாகாது. பல சவால்களையும், சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கி எம் இனத்தின் விடியலுக்காக தன் மகத்தான பணிகளை ஆற்றி நிற்கும் உதயனுக்கு அன் னையின் கடைக்கண் பார்வையே உறுதுணையாக உள்ளது.

தமிழர் தாயகத்தில் நடந்த அத்தனை துன்பங்களையும் உலகறியக் காட்டி எம்மக்கள் தாயகத்தில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதில் அன்றும், இன்றும் ஆணித்தரமான கொள்கை கொண்டு அரிய பல பணிகளை ஆற்றுவதற்கு என்றும் துணிவுடன் முன்னிற்கும் நிர்வாக இயக்குநர், பிரதம ஆசிரியர், ஊழியர்கள், செய்தியாளர்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நோய்நொடியின்றி உயர் வான தர்மமான பத்திரிகைத் தர்மத்தினை ஆற்ற எல்லாம் வல்ல வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பாதகமலங்களை வேண்டி நல் ஆசிகள் நல்குகின்றேன்.

**சிவஸ்ரீ சதா. சிவகுமாரக்குருக்கள்**
*அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்.*

## மக்களின் குரலாக ஒலிப்பவன்



25 ஆவது ஆண்டு நிறைவினைப் பூர்த்திசெய்து பத்திரிகைத் துறையிலே தனக்கென ஓர் தனித்துவம் மிக்க பத்திரிகைத் தர்மத்தை நிலை நிறுத்தி வரும் உதயன் நிறுவனத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த 2 1/2 தசாப்தங்களாக எமது மக்களின் குரலாக ஒலித்த உதயனின் மகத்துவமான சேவை யினை உலக தமிழ் பேசும் மக்கள் எவரும் மறந்து விட முடியாது.

'உதயன்' எமது மக்களுக்கு ஆற்றிய சேவை மகத்துவமானது. அதற்கென அது கொடுத்த விலைகள் ஏராளம். தனது சேவையாளர்கள் சொத்துக்கள் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். 'உதயன்' தொடர்ந்தும் எமது மக்களின் சமூக வளர்ச்சிக்கும் குறிப்பாக இன்றைய இளைய சமுதாயத் தினருக்கு ஓர் சிறந்த வழிகாட்டியாகத் தனது சேவையைக் காத்திரமாகத் தொடர வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

தமிழ் மக்களின் மனம் நிறைந்த இவ் வெள்ளி விழா நாயகன் தனக்கே உரித்தான அஞ்சாமை, நேர்மை, உண்மை என்ற பாதையிலே செயற்பட்டு மேலும் பல விழாக்களைக் கண்டு, தமிழ் பேசும் நல்லுலகத்துக்குச் சேவைகள் வழங்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கு.விக்னேஸ்,**
*பிரதம நிறைவேற்று அதிகாரி/ இயக்குனர்.*
*IIS CITY CAMPUS.*

## மாவைக் கந்தனது நல்லருள் கிட்டட்டும்

விதம் விதமான கலாசாரம் பண்பாடுகள், செயற்பாடுகள், கொண்டு அவர்தம் உணர்வுகட்கு வலுப்பெற ஏங்கி



நிற்கும் சமுதாயத்தினர், தத்தம் தொழில் மையங்களிலும் பல்வேறு பட்ட ஆதார சுருதிகளோடு இணைந்து அவர்தம் கல்வி,சமய அனுஷ்டானம், பொருளீட்டு முறை, அரசியல் அலசல் என்பனவற்றோடு கலந்தும் தத்தம் வாழ்வினை மேம்படுத்தும் செயற்பாடுகள் தற்காலங்களில் சர்வ சாதரண மாகிவிட்டது. இவர்கட்கெல்லாம் கல்லூரிகளோ, பல்கலைக்கழகங்களோ எதுவித அறிவுறுத்தல்களைத் தானும் ஏற்றவகையில் வழங்கி உதவுவதில்லை. ஆனால் தினசரி, வாராந்திர பத்திரிகைகள் தான் நூற்றுக்கு நூறு வீதம் இச் சமுதாயத்தினருக்குப் பேருதவிபுரிந்து ஊக்கு விப்பதை நாடு நன்கறிந்துள்ளது. இத்துறையில் காத்திர மானது போற்றுதற்குரியது. பாத்திரமறிந்து தந்த கொடையாகவே அமைகிறது. வெகுமதியும், தானமும், வேள்வியில் ஆகுதி கொடுத்த பொருள்களும் அற்பமாகத்தான் பயன்தரும். ஆனால் காலநிலைகளுக்கேற்ற செயற்பாட்டுக்கு சமுதாயத்தினருக்கு தகுதிகளறிந்து தரும் அறிவுக்கொடை, மனதை ஏதாவதொரு செயற்பாடுகட்கு ஊக்குவிக்கும் செய்திகளது கொடை, அது தகுதியாக அமைந்து எக்காலமும் பயன்தரத்தக்க கொடையாக அமையுமென சாணக்கிய நீதி நூல் தரவுகள் தருகின்றன. கடந்த 25 வருடங்களாக உதயன் பத்திரிகை எதிர்கொண்ட தொல்லைகள், கஷ்டங்கள்,உபத்திரவங்கள் யாவும் பயங்கரமானதாக அமைந்தும், இவற்றைத் துணிந்து எதிர்கொண்டு வெற்றி கொண்டுவந்ததும் உண்மையில் உதயனது கொடையின் சால்பேயாகும். ஒருசமயம் பாடசாலை மாணவர்கள் பாவிக்கும் அப்பியாசக் கொப்பி பேப்பர் மூலமாகவும் உதயனது கொடை மகாத்மியம் பெற்றது.

ஆசிரிய தலையங்கங்களின் வீரியமும் வீச்சும், சிறுவர் முதல் பெரியோர் வரை பயனிக்கும் வாழ்வியலின் பேறுகட்கான தரும் செய்தித் தரவுகளும், விவசாயம், கைத்தொழில் போன்ற துறையில் ஈடுபடுவோருக்கும், சமயம் சமயானுஷ்ட விரதகால உயர்ச்சிக்கு மக்கள் ஆற்றவேண்டிய செய்தித்தரவுகளும், நக்கீரன் போன்று குற்றங்கள் அது குற்றமேதான் எனத் துணிந்து வாதாடும் திறமையும் நெஞ்சை நெகிழ வைக்கும் டச்சிங்கான (Touching) கதைகளும்உதயன் கொண்டிருப்பதனாற்தான் 25 வருடகாலச் சேவையின் தன்மையை உயிர்நிலைக்கு ஏற்றியுள்ளது.

எதைச் செய்யலாம், எதைச்செய்யக் கூடாது, எதுதர்மம், எதுஅதர்மம், எது அனுகூலமானது என்பதையெல்லாம் உதயனைத் தொடர்ந்து வாசிப்போர் நன்குணர்ந்துள்ளனர். அதனாலும் உதயன் இமயம் இடம்பெயர்ந்தாலும் ஏழ் கடலும் கலவரப்பட்டாலும், தன்பாதையில் இருந்து விலகக் கூடாதென அறிஞர்கள்கூட உதயனை தொடர்ந்து ஆசீர்வதிக்கின்றனர். நல்லதோர் உதய சேவையை சகலரது மனங்களும் குளிர்ச்சி கொள்ளதக்கதாக இதுவரை செயலாற்றியது போன்று இன்னும் எத்தனையோ வருடங்களுக்கு இவ் உதயசேவை தொடரவேண்டுமென யானும் ஆசிர்வதிக் கின்றேன். அதற்காக உதயனது பிரம்மாக்கட்கு மாவைக் கந்தனது நல்லருள் நிறைவாகக் கிடைக்கவேண்டு மெனவும் பிரார்த்திக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ.சு.து.ஷண்முகநாதக் குருக்கள்,**
*ஆதினகர்த்தா-பிரதமகுரு, கந்தசுவாமி கோயில் மாவையாதீனம்.*

## வல்லிபுர மாயவன் அருள் பரவட்டும்

இன்றைய தினம் ''உதயன்''(27.11.2010) தனது 25ஆவது அகவையை நிறைவு செய்து, வெள்ளி விழாவைக் கொண்டாடுகின்றான். தனது தனித்துவமான, மகத்தான சேவையைத் தமிழ் மக்களுக்கு வழங்கி ஒவ்



வொரு தமிழ் மகனின் மனதினிலும் நிறைந்திருப்பவன் ''உதயன்'' என்றால் அது மிகையாகாது. தினந்தோறும் பற்பல செய்திகள், துணுக்குகள், அரசியல், சமூகப் பணிகள், சமய விடயங்கள், கலாசாரங்கள் என நீண்ட பட்டியலுடன் நிறைந்து வீட்டுக்கு வீடு வீற்றிருக்கும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை ''உதயன்'' தான். தமிழ் மக்களின் தனித்துவமான கலாசாரம் பேணும் யாழ்ப் பாணக்குடாநாட்டின் தலைசிறந்த பத்திரிகை ''உதயன்''. அத்தோடு மட்டுமல்லாது அனைத்துத் தமிழ் மக்களுக்கும், புலம் பெயர்ந்து வாழும் எமது ஈழத் தமிழ் மக்களுக்கும் தனது மகத்தான சேவையை வழங்கி வருபவன் ''உதயன்''. தினந்தோறும், காலையில் எங்கள் வீடுகளில் எங்கள் கைகளில் இருப்பவன் ''உதயன்'' நாளிதழ்.

பற்றுறுதியுடன் தனது சேவையை ஆற்றிவரும் ''உதயன்'' நாளிதழ் மேன்மேலும் வளர்ச்சியடைந்து, தொடர்ந்தும் தமிழ் மக்களுக்குத் தனது சேவை வழங்குவான். எல்லாம் வல்லிபுர மாயவனின் நல்லாசிகளையும் எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**- பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு J.P.**
*பிரதம குரு,*
*ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில்.*

## காலத்தைக் காட்டும் கண்ணாடியாக விளங்குபவன் உதயன்

அன்றாட நிகழ்வுகளை நாம் அறியவும் அந் நிகழ்வு களின் அடிப்படைகளைப் புரியவும் எமது அறிவை வளர்க்கவும் வழிசெய்கின்ற வகையில் பத்திரிகைகள் மனிதனை ஆளுகை செய்கின்றன.



பழைய ஊடக மாகிய பத்திரிகைகள் புதிய நுட்பங்களைத் தன்னுள் புகுத்தி நாட்டில், உலகில் நடக்கும் நிகழ்வுகள் பற்றிய விளக்கங்களையும் விவரணங்களையும் தந்து காலத்தைக் காட்டும் கண்ணாடியாகச் செயற்படுகின்றன. இந்த வகையில் தமிழ் மக்கள் மனம் நிறைந்த ப்த்திரிகையாகிய உதயன் எமது உரிமைக்குரலாக, தமிழ் உணர்வின் வழிநின்று நீதியோடு குரல் எழுப்பி, அடக்கி ஒடுக்கப்படுவோருக்கு ஆறுதலின் ஊற்றாக விடிகாலையில் புலரும் கதிரவனாக, தனித்துவத்தோடு திகழ்கின்றது. பத்திரிகை உலகில் கால் நூற்றாண்டாக வலம் வரும் உதயன் நாளிதழ் எம் சமூகத்தின் காவல் முழக்கமாய் விளங்குகின்றது.

இப்பத்திரிகை உண்மைக்குச் சான்று பகர்வதோடு, நீதியைப் போதிப்பதாகவும், சமாதானத்தையும் ஒப்புரவையும் ஏற்படுத்தும் ஊடகமாகவும் செயற்படுகின்றது. மக்களுக்குத் தேவையான செய்திகளைத் தந்து அவர்களை சிந்திக்க வைத்து அவர்களிடம் பொதுக் கருத்தை ஏற்படுத்தி, அநீதிகள், அடக்குமுறைகளை வெளிக்கொணர்ந்து தவறுகளைத் திருத்துவதோடு நல்லாலோசனைகளை வழங்கி பொதுநலனைப் பேணிப்பாதுகாக்கும் இன்னோ ரன்ன பணிகளை உதயன் நாளிதழ் கடந்த 25 வருடங் களாகத் திறம்பட செய்து வருகின்றது.

இந்தப் பத்திரிகைத் தர்மப்பணியிலே உதயன் பத்திரிகை அதன் நிர்வாகம், பணியாளர்கள், அச்சகம் அடைந்த உயிரிழப்புக்கள், பொருளிழப்புக்கள், அச்சுறுத்தல்கள், அடக்கு முறைகள் உலகம் அறிந்ததே. இருப்பினும் எவ்வித விட்டுக்கொடுப்பும், பின்வாங்குதலும் இல்லாது உண் மையின், உரிமையின், நீதியின் குரலாய்த் தொடர்ந்து அதே போக்கோடும் வீச்சோடும் முழங்கும் உதயனின் நேர்மையை எண்ணி மன மகிழ்கின்றேன். வெள்ளிவிழாக் காணும் உதயன் பத்திரிகையை வாழ்த்தி இப்பத்திரிகைப் பணி பாரெங்கும் பல நூற்றாண்டாய் சிறக்க நல்லாசீரை உவந்து அளிக்கின்றேன்.

**மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை,**
*மன்னார் ஆயர்.*

## நற்பணி வளர வாழ்த்துகிறேன்



''உதயன்'' தமிழ் தேசிய தினசரி ஊடகத் துறையில் தனது 25ஆவது வருடத்தை நிறைவு செய்வது தமிழ் மக்கள் அனை வருக்குமே மனநிறைவு தரும் செய்தி யாகும். வெள்ளி விழாவைக் கொண்டாடும் உதயனுக்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த காலங்களில் உதயன் எதிர் நோக்கிய சவால்கள் அனேகம். எல்லாவற் றையும் எதிர்கொண்டு, மேற்கொண்டு உண்மையைப் பறைசாற்றும் செய்தித்தாளாக மிளிர்வது அனைவரது பாராட்டுக்கும் உரியதாகும். பலவகையான சவால்களையும் எதிர்கொண்டு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து தரமான செய்திகளையும், சமகால நிகழ்வுகளையும் உடனுக்குடன் தருவதில் சளைக்காது பணியாற்றிய உதயன் பல்லாண்டு தொடர்ந்தும் சேவை செய்வதாக என வாழ்த்துகிறேன்.

''ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம், உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள்'' என்ற யோகர் சுவாமி களின் கூற்று என் சிந்தனைக்கு வருகின்றது. தனது தாபனத் தில் அழிவுகள், பணியாட்களின் இழப்புக்கள் உள்ளடங்கலாகப் பல வேதனைகளைச் சுமந்த வரலாறாய் இந்த 25 வருட காலம் இருப்பினும் அஞ்சாமல் வீறுநடைபோட்டு தமிழ் மக்களின் தேவைகளை அவ்வப்போது வெளிக்கொணர்ந் தும், செய்திகளை உடனுக்குடன் அறிவித்தும், ஆக்கபூர்வமான சிந்தனைகளைத் தெரிவித்தும் புதிய சகாப்தம் படைக்க உதயனை மனமுவந்து வாழ்த்துகிறேன். தொடர்ந்தும் ''உதயனின்'' நற்பணி வளர இறைவனை வேண்டுகின்றேன்.

**அதி வண. கலாநிதி.டி.எஸ்.தியாகராஜா**
*தென்இந்தியத் திருச்சபை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

25 உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN




உதயனே..! உன் பணி மேன் மேலும் தொடர எமது வாழ்த்துக்கள்.

SKN

## சிறிதேவி கருமாரி

நகை மாடம்

தங்கப்பவண் நகை வியாபாரம்

83/01, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 5672567, 0773604712.



எல்லோருடைய இதயங்களையும் கொள்ளையடித்த 'உதயனே' பல்லாண்டு வாழி!

## நியூ நெல்சன் லேணர்ஸ்

பதிவு இல. D.S.590

அரச அங்கீகாரம் பெற்ற முதன்மைச் சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- ★சகல வாகனங்களுக்கும் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாகச் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- ★எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள்
- ★அதிகூடிய பயிற்சி நேரங்கள் ★அதிகூடிய பயிற்சிக் காலங்கள்
- ★சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்
- ★தவணைமுறைக் கட்டணங்கள்
- ★வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்



இல.89, கண்டி வீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4527,
0773581916

கிளை: இல.12/1,
செங்குந்தா கட்டடம்,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.
தொ.பே: 0777942312

## ஜெ.இராசரத்தினம்

S.R.P பம்புகள்

கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

தரமான செய்திகளை உடனுக்குடன்
வழங்கும் உதயனின் பணி தொடர வாழ்த்துக்கள்...!



தமிழ் மக்களின் தனித்துவமான நாளிதழுக்கு எமது வாழ்த்துக்கள்

## நியூ ராஜ்குமார் ரேடர்ஸ்

NEW RAJHKUMAR TRADERS



45.Adiyapatham Rd,
Thirunelvely, Jaffna.

45, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 300 1520

யாழ் மக்களின் முதற்தர தெரிவாக தொடர்ந்தும் வெளிவர எமது வாழ்த்துக்கள்

ANNA

## "ஜீவாகாரம்"

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உப உணவாகும்.

JEEVAKARAM

தேக ஆரோக்கியத்துக்குப்
போஷாக்கு நிறைந்த ஜீவாகாரம்

வாழ்க்கை முழுவதும் வளமுடன் வாழ
- ✱ வளர்ந்துவரும் குழந்தைகளுக்கும்
- ✱ கர்ப்பிணித் தாய்மார்களுக்கும்
- ✱ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
- ✱ போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும்

அண்ணா கறிமிளகாய்த் தூள்
அண்ணா கோப்பி
அண்ணா அப்பம் மா
அண்ணா பற்பொடி
அண்ணா அரிசி மா
அண்ணா தோசை மா

- ★ குமரன் விபூதி
- ★ துர்க்கா பத்தி
- ★ சந்தனக்குச்சி
- ★ ரோஜா பத்தி

அண்ணா தொழிலகம்
இணுவில்.

இல்லத்தரசிகளே! அண்ணா கோப்பி தயாரிப்புக்களை
வாங்கிப் பாவித்து இன்புறுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

# வாசகர்களுடன் சில நிமிடங்கள்.....

உதயனுக்கு இன்று இருபத்தைந்தாவது அகவை. நினைத்துப்பார்க்க இரண்டு வித உணர்வுகள் மனதில். முதலில் வந்தது மனப்பூரிப்பு; இரண்டாவது ஆச்சரியம். வருடங்கள் விரைந்தோடிவிட்டன. மக்கள்- வாசகர்கள்- தந்த பலத்தினால் உதயன் வாலிபனாக உயர்ந்து வளர்ந்து யாழ்ப்பாணம், இலங்கை, அனைத்துலகம் என்று தமிழ் மக்கள், தமிழ் பேசும் மக்களின் அபிமானத்துக்கும் அன்புக்கும் உரியவனாக அவர்களோடு ஊடாடி வருகிறான், உலா வருகிறான் என்ற பூரிப்பு.

உதயனை முதல் நாளன்று -குரோதன ஆண்டு கார்த்திகைத் திங்கள் பன்னிரெண்டாம் நாள் -1985 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி அன்று - கார்காலக் குழந்தையாகப் பெற்றெடுத்த நிறுவனத்தினரும் அவர்களோடு சேர்ந்து உழைத்த பணியாளர்களும் பெற்ற மகிழ்ச்சி ,திருப்தி இன்று நினைவுகளில் வந்து மோதிச் செல்கின்றன.

யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டு உற்பவித்த மூன்றாவது தமிழ் நாளிதழ் உதயன். அவன் பிறக்கு முன்னரே அவனுக்குப் பொருத்தமான புதிதான நவமான பெயரைச் சூட்டுவதில் கார்த்திகைக்குமரன் முருகனின் (மாவை முருகனின்) அருளும் கிடைத்ததை மறக்க முடியவில்லை.

குடாநாட்டின் முதலாவது அகலத்தாள் (Broad Sheet) நாளேடாக வெளிவந்தமை அவன் நிகழத்திய, எய்திய சாதனைகளில் ஒன்று;முதலாவதானதும் அதுவே. (எனினும் நாட்டில் நிலவிய போர்ச் சூழ்நிலையால் உண்டான பத்திரிகைத் தாள் தட்டுப்பாட்டினால் இப்போதைய கையடக்க அளவுக்கு மாற்ற நேர்ந்தது) மதிப்பீடு ஒன்றின் பிரகாரம் பிந்திய அளவையே வாசகர்கள் விரும்பியதால் அந்த வடிவிலேயே அவன் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறான்.

குடாநாட்டில் மூன்றாவது தமிழ் நாளேடு ஒன்றை வெற்றிகரமாக வெளியிட முடியுமா என்று பத்திரிகையாளர் நண்பர்கள் உட்பட என்னுடன் நெருக்கமாகப் பழகிய பலரும் சந்தேகம் வெளியிட்டனர்.புத்திஜீவிகள், அதிகாரிகள், வர்த்தகத்துறை சார்ந்தவர்களும் அதே சந்தேகத்தை எழுப்பினர். அவர்களின் எதிர்மறையான பார்வை - சந்தேகம் -உதயனை, முற்றுமுழுதாக வித்தியாசமான புதிய பாங்குடன் வெளிக்கொணர வேண்டும் என்ற தூண்டுதலை, உத்வேகத்தை தந்தது.

புகழுக்காக கூறவில்லை. உதயன் நாளேடாக வெளிவரத்தொடங்கிய ஒரு சில மாதங்களிலேயே கொழும்புத் தினசரிகள் உட்பட்ட ஏனைய பத்திரிகைகளை விட விற்பனையில் முந்திக்கொண்டது. நிர்வாகிகளின் செயல் ஊக்கமும் ஆரம்பகால ஆசிரிய பீடப் பணியாளர்கள், மற்றும் அச்சகப் பகுதி, விநியோகப்பகுதி, விளம்பரப்பகுதிப் பணியாளர்களின் பங்களிப்புடனும் அதனை ஈட்டமுடிந்ததை என்றுமே மறக்க இயலாது.

மக்களோடு ஒட்டி உறவாடும் பத்திரிகையாக, அவர்களின் அபிமானத்துக் குரிய பத்திரிகையாக, இன்றும் முன்னணி வகிக்கும் உதயன், யாழ்ப்பாணம், வன்னி, இலங்கை என்ற எல்லைகளைத் தாண்டி அனைத்துலகு எங்கும் வாழும் தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்று அவர்களுக்குச் செய்தி சொல்லும் செல்ல மகனாகத் திகழ்கிறான். அவனது வாலிபப் பருவம் வளர்ச்சியுடனும் வனப்புடனும் பூரித்து நிற்கிறது.

வாரஇதழை வெளியிட்டு, அது பிரபல்யம் பெற்ற பின்னர் நாளேட்டை தொடங்குவது என்ற வழமையான போக்கை மாற்றி, ''புதுமை''யையும் இயற்றியது உதயன் எனக் குறிப்பிடுவது தவறு அன்று. உதயன் வாசகர்களிடத்தில் பெற்ற ஆதரவின் பலத்தில் அதன் வார இதழ் ''சஞ்சீவி''யை இரண்டரை மாதங்களில் வெளியிட்டதையும் இங்கு பதிவு செய்வது பொருத்தம்.

அத்தோடு சிறுவர் மாத சஞ்சிகையின் ''அர்ச்சுனா''வை உதயனின் முதலாவது வருடப் பூர்த்தியின்போது வெளியிட்டோம்.அதனை அடுத்துசமய சஞ்சிகையான ''ஞானக் கதிர்'', சோதிட சஞ்சிகையான ''ஜோதிடஜோதி'' ஆகியனவற்றை வெளி யிடும் மனப் பலம் உண்டானது. வாசகர்கள் எங்கள் பக்கத்தில் இருந்தமையால் அவர்களின் ஆதரவுடன் அவை ஒவ்வொன்றும் ஊன்றிக் கால்பதித்தன.

இன்று உதயன் இருபத்தைந்தாவது வயதை பூர்த்தி செய்கிறான் என்றதும் என்னையும் தட்டிவிட்டு- விஞ்சி நின்று - அந்த நாள்களின் ஞாபகங்கள் வந்து மனதில் அலை மோதுகின்றன.

ஆரம்ப காலத்தில் உதயன் ஏனைய பத்திரிகை களை விட சகல வகைகளிலும் வித்தியாசமானதாக, வாசகர்களை கவர்ந்திழுக்கவல்லதாக அமைய வேண்டு மென்ற எண்ணக்கருவை அச்சொட்டாக நிறைவேற்றுவதற்கு ஆசிரியபீடத்தில் என்னுடன் தோளோடு தோள் நின்று உழைத்த திருவாளர்கள் நடேசப்பிள்ளை வித்தியாதரன் (அண்மைக்காலம் வரை உதயனின் ஆசிரியராகப் பணியாற்றி மிளிர்ந்தவர்), சின்னையா குகநாதன், நாகலிங்கம் பத்மசீலன்(இப்போது சுடர் ஒளி ஆசிரியர்) ,எஸ்.ஜெகதீஸன், முத்து.சிவலிங்கம், வே.வரதசுந்தரம் ஆகியோர் என்றும் என்மனதில்இருந்து நீங்காதவர்கள்.

இவர்களைப்போலவே உதயனுக்குரிய இலச்சினையை, எனது கருத்தை உள்வாங்கி தத்ரூபமாக வரைந்து தந்த எமது மூத்தநண்பரும் பிரபல ஓவியருமான வீ.கே என்ற இரண்டு எழுத்துக்களால் அழைக்கப்பட்ட அமரர் வீ.கனகலிங்கம், ஓய்வு நிலையிலும் ஓடிஓடிஉழைத்ததை மறக்க இயவில்லை.

ஆரம்பகால அலுவலக செய்தியாளர் களாகபணிபுரிந்த கே.இரத்தினராஜா சிங்கம், சண் ஜோன்சன் ஆகியோரும் காணாமல் போய்க் கொலையுண்ட எஸ்.இராஜேந்திராவும் பத்திரிகையின் வளர்ச்சிக்கு துடிப்பாக பணிபுரிந்தவர்கள்.

உதயனின்விற்பனையிலும், விளம்பரத்திலும் இடம்பிடிக்க அர்ப்பணி த்து பணிபுரிந்த விநியோக முகாமையாளர் அமரர்எஸ்.கே.சிவலிங்கம் ,கணக்காள ராக பணிபுரிந்த அமரர் ஜெயரஞ்சிதனும் நினைவுக்கு வருகிறார்கள். நாவலர் வீதியில் எமது அலுவலகம் இயங்கிய போது இலங்கை விமானப்படையினர் வீசிய குண்டுகளால் கயமுற்ற ஜெயந்தன் நினைவுக்கு வருகிறார்.

அச்சகப்பகுதிக்கு பொறுப்பாக இருந்த அமரர் ந.இரசநாயகம் ஓர் இளைஞரை போன்று சுறுசுறுப்பாக பணிபுரிந்தமை கண்ணில் இன்றும் நிழலாடுகிறது. போர்ச்சூழ்நிலை காரணமாக எமது நிறுவனம், பூனை தனது குட்டிகளைக் கௌவிச் செல்வது போன்று, அச்சு இயந்திரங்களையும் ஏனைய உபகரணங்களையும் காவிக்கொண்டு மாறிமாறி இப்போது மூன்றாவது தளமான கஸ்தூரியார் வீதியில் இயங்குகிறது. முதன்முதலில் மின்சார நிலைய வீதியிலும், இரண்டாவதாக நாவலர் வீதியிலும் அலுவலகம் செயற்பட்டது.

ஒரு நாளேட்டை ஆரம்பிப்பதும், அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வ தும், அவர்களின் விருப்பத்துக்கும் அபிமானத்துக்கும் உரிய தாக்குவதும் இலகு வான பணியன்று. பத்திரிகை நிறுவனத்தின் சகல அங்கங்களும்- பிரிவுகளும் - அவற்றில் கடமையாற்றுவோ ரும், இப்பணி ஒரு கூட்டுமுயற்சி என்ற மன உணர்வுடன் கடுமையாக உழைத்தால் மட்டுமே அதனை செல்வாக்குப் பெற்றதாக, மக்கள் அபிமானத் துக்குரியதாக்க இயலும்.

உதயன் நிறுவனத்தை ஆரம்பித்த காலத்திலேயே அதன் சகல அங்கங்களின் பணியாளர்களினதும் கூட்டுச் செயற் பாட்டுக்கான அடித்தளத்தை நிர்வாகத்தினர் அமைத்துவிட்டனர். அதனாலேயே போர்காலச்சூழலிலும், உதயனுக்கு எண்ணிலடங்கா சோதனைகளும், உயிர், உடைமை இழப்புகளும், அழிப்புகளும் வந்த காலையிலும் மனம் தளராது அவன் உதித்தான், உதித்து வருகிறான். மக்களுக்கு தகவல் சொல்லும் தனது பிரதம பணியில் இருந்து அவன் பின்வாங்காமல் உழைத்தமைக்கு கூட்டுப் பணிப்பண்பாடே பிரதான காரணம் என்பேன்.

அகோரப்போர் நடைபெற்ற காலத்திலும், அத்தியாவசியப் பொருள் களைக் கொண்டுவருவதற்குக் கூட தடைவிதிக்கப்பட்டகாலத்திலும், சிமெந்து அரணிடப்பட்ட பதுங்குகுழிக்குள் அரிக்கன் விளக்கிலும் பணிபுரிந்து, உதயன் வாசகர்களுக்கு தடங்கலின்றிக் கிடைப்பதற்காக உழைப்பதற்கு உந்துதல் தந்தது. சகல பிரிவுப்பணியாளர்களதும் உணர்வு பூர்வமான பங்களிப்பும் கூட்டு உழைப்புமே என்பது ஊன்றிப் பதிவாக வேண்டிய ஒன்றாகும்.

பத்திரிகையை வெளியிடுவதற்கு வளங்கள் வற்றிப்போன காலத்திலும் அச்சுறுத்தல்கள், அதிகாரத்தனங்கள், அழிப்புக்கள்,எதிர்ப்புகள், கொலை அச்சுறுத்தல் கள் பணியகத்துக் குள்ளேயே கொலைகள், கடத்தல்கள், சிறையிடுதல் என்று காலத் துக்கு காலம் இடைவிட்டும் தொடர்ந்தும் சோதனை தந்து தாங்கொணாத நிலைக்கு தள்ளப்பட்டபோதிலும் நிர்வாகத்தினரதும், சகல நிலைப் பணியாளர்களினதும் கூட்டு முயற்சியும், மக்கள் பலமும் சேர்ந்து கொண்டதால் உதயன் உயர்ந்து நிற்கிறான், என்பதே யதார்த்தம்.

இடர்க்காலங்களில் நெருக்கடிகளை எதிர்கொண்ட போதிலும், வீச்சுக் குன்றாமல் உதயன் வெளிவந்தமைக்கு அந்தந்த காலகட்டங்களில் -

மக்களுக்குரிய உன்னத தேவையில் ஈடுபடும்ஒருநிறுவனத்துக்கு வேண டப்படும் கடமை உணர்வும், மனம் தளராமல் சலிக்காமல் செயலாற்றும் பொறுப்புணர்வும், துணிச்சலும் கொண்ட பணியாளர்களின் கடும் உழைப்புமே உதயனை உயர்த்தின. நிர்வாகத்தினரின் இதே இயல்புகளும் பொறுப் புணர்ச்சியும் ஒன்று சேர்ந்ததால் உதயன், மக்கள் நாளேடாக தொடக்க காலம் முதல் இன்று வரை மிளிர்ந்து உயர்ந்து நிற்கிறான்.

உயிர்த்துடிப்புள்ள,மக்கள் நலன்களையே தனது மூச்சாகக் கொண்ட நாளி தழாக உதயன் மிளிர்வதற்கு முழுக்க முழுக்க மக்கள் தரும் பலமே மூல காரணம். மக்கள் அவன் மீது கொண்டுள்ள பற்றும் அபிமானமும் மதிப்புமே எமது மூல வளங்கள்.

எக்காலத்திலும், எப்பொழுதிலும், எந்தச் சூழலிலும் மக்கள் நாளிதழாக மிளிர வேண்டும் அதனை நாடியதாகவே தன் பணிகள் அமைய வேண்டும் என்பது உதயனின் இலக்கும் இலட்சியமும் ஆகும். அவற்றை அவன் இதயபூர்வமாக உய்த்துள்ளான்.பல சோதனைகள், வேதனைகள், இழப்புக்களின் மத்தியிலும் அவன் ஈழத்தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஒலித்து வருவதை நீங்கள் அறிவீர்கள். அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், கழுகுப்பார்வைகள், பழிவாங்கல்களுக்கு மத்தியிலும் அவன் மனங்குலையாமல், உறுதிதளராமல் கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஈழத்தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வருகிறான்.

பத்திரிகா தர்மத்தை தனது ஆன்மநேயமாக கொண்டவன் உதயன். தனக்குள்ள சமூகப் பொறுப்புணர்வை அவன் என்றும் தட்டிக் கழித்ததில்லை, மறந்ததும் இல்லை. அவ்வழியே அவன் இனியும்,தொடர்ந்தும் வீறுநடைபோடுவான். மக்க ளுக்கான பணியே அவனது முதன்மையான பணி. அந்தமனிதப் பணியில் அவன் வேறெந்தச் சாரரையும் விட முன்னணியில் நின்றவன்; இனியும் நிற்ப்பான்.

கழிந்து சென்ற இருபத்தைந்து வருடங்களாக - அவனது பிறந்தநாள் தொட்டு- காலத்துக்கு காலம் - அவன் முகம்கொடுத்த சோதனைகள் அதனால் உண்டான வேதனைகள், வலிகள் மக்கள் சேவை என்ற மருந்தினால் நீங்கிப் போனதே உதயனின் அனுபவமாகியுள்ளது.

உதயனின் இருபத்தைந்து வருடகால வளர்ச்சிக்கும் வலிமைக்கும் வளத்திற் கும் உறுதிகுன்றா உழைப்புக்கும் மக்களே! வாசகர்களே! நீங்கள்தான் ஊட்டச் சத்து. அவனது உன்னத பணிக்கும், உயர்ச்சிக்கும், பெருமைக்கும், சாதனைகளுக் கும் விளைநிலமாக விளங்குவோரும் நீங்களே.

மக்களுக்கு எதிரான அநீதிகளை இனங்கண்டு அவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுவதையும் அதன் மூலம் அவற்றைக் களைந்தெறிய உதவுவதும் -

மக்களின் அரசியல் விடிவுக்காகவும், பொருளாதாரம்,கல்வி,கலாசாரம், பண்பாடு, தொன்மை மற்றும் மனித வாழ்வியலின் அங்கங்கள் சார் துறைகளிலும் அவர்களுக்கு பக்கத் துணையாக நிற்பது அவனின் பிரதான பணிகளில் சிறப்பிடம் பெறுவதை நீங்கள் அறிவீர்கள்.

அடக்கு முறைக்கு ஆட்பட்டு, தமது அரசியல் உரிமைகளை இழந்து நிற்கும் எமது இனத்தின் விடிவுக்காக உரத்துக் குரல் கொடுக்கும் தனது தார்மீகக் கடமை யில் நின்றும் அவன் தளர மாட்டான். வாலிபனாக வளர்ந்துள்ள அவன், மக்களின் தோழனாக நின்று தொடர்ந்தும் ஓங்கிக் குரல் கொடுப்பான். கொடுமைகளைக் கண்டு துவளாது மக்கள் பலத்துடன் அவர்களுடன் சேர்ந்து குரல்கொடுப்பான். அவனது பிரதான பணியாக அதுவே அமைந்துள்ளது. இனிவரும் காலங்களிலும் தளர் வின்றியும், வீரியத்துடனும் அந்தச் சேவை தொடரும். மக்களில் பலதரப்பட்டவர்களின் தேவைகளையும் அறிந்து அவற்றை பூர்த்தி செய்யும் வழித்தடத்தில் உதயன் தொடர்ந்தும் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு பின்னிற்க மாட்டான். அவர்களின் தேவை கருதி எல்லாத்துறைகளிலும்சேவைநலத் திட்டங்களை முன்னெடுப்பான்.

2006ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதி துப்பாக்கிதாரிகள் உதயன் அலுவலகத்தில் புகுந்து நடத்திய வெறியாட்டத்தின் போது எமது பணியாளர்கள் இரு வர் கொல்லப்பட்டதும், இருவர் சூட்டுக்காயங்களால் ஊனமுற்றதும் உதயனின் சரித்திரத்தில் மிகப்பயங்கரமானதாகும்.

அந்தச் சம்பவத்தில் எங்கள் விற்பனை முகாமையாளர் ஜோர்ச் சகாயதாஸ், விநியோக அலுவலர் ஆர்.ரஞ்சித்குமார், அலுவலகத்துக்குள்ளேயே உயிர் நீத்தனர்.

அதனைத் தொடர்ந்து பத்திரகையாளர்கள், திருமலைச் செய்தியாளர் சுகிர்த ராஜன், அலுவலகச் செய்தியாளர் எஸ்.ரஜீவர்மன் அகியோரின் கொலைகளும் ஆசிரியர் பீட உதவியாளர் வி.நிமலராஜன் கடத்தப்பட்டதும் அடுத்த பயங்கரங்கள்.

02.05.2006 இல் அலுவலகத்துக்குள் புகுந்தவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட் டில் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான கணனிகள் மற்றும் அச்சு உபகர ணங்கள் நாசமாகின. அதேபோன்று அதே காலப்பகுதியில் கோப்பாயில் உள்ள பத்திரிகைத்தாள் களஞ்சியம் எரியூட்டப்பட்டது. விற்பனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட உதயன் பிரதிகள் வீதிகளில் வைத்து எரியூட்டப்பட்டதும் மறக்கக் கூடிய அச்சுறுத்தல் அல்ல.

அத்தோடு திருப்திபடாத தரப்புகள், பத்திரிகை விநியோகத்தை தடுப்பதற்காக விநியோக முகவர்களுக்கு கொலைமிரட்டல் விடுத்தன. ஆக இறுதியாக உதயன் ஊழியர்களை கடமைக்குச் செல்லக்கூடாது என்று நாள் அவகாசம் கொடுத்து கொலை மிரட்டல் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தும் பயமுறுத்தினர்.

மேற்குறிப்பிட்ட இடர்மிகுந்த காலங்களில் எல்லாம் மனம் தளராது தமது உழைப்பை நல்கிய பணியாளர்கள் அனைவருக்கும் நன்றிக்குரியவர்கள்.

தமது சொந்த வீடுகளுக்கு செல்லமுடியாது வருடக்கணக்கில் அலுவலகத்திலேயே வசித்து தமது பணிக்கு சிறப்பு கொடுத்த பத்திரிகையாளர்களின் பெயர்கள் உதயனின் சரித்திரத்தில் எழுதப்பட வேண்டியவர்கள். கைது என்ற பெயரில் கடத்தப்பட்டு சிறைவைக்கப்பட்ட பத்திரிகையாளரின் பெயரும் அவ்வாறே பதியப்பட வேண்டியதாகும்.

உதயன் தமிழ் மக்களில் ஒருவன் என்ற நிலை நின்று, அவர் தம் உரிமைகளுக்காக- சகல வகைசார் உரிமைகளுக்காக- ஓங்கிக்குரல் கொடுக்கப் பின்னிற்கமாட்டான். அந்த ஒப்பற்ற பணியை ஆற்றுவதற்கு வரக்கூடிய தடைகளை மக்கள் பலத்தாலும் தளராமன தாலும் எதிர்கொண்டு மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கோட்பாட்டை முன்வைத்து தொடர்ந்து உழைப்பான். உங்கள் பலமும் வளமுமே உதயனின் பலமும் வளமும் ஆகும் என்பதனை உணர்ந்து உங்களுக்காகவே உழைப்போம்.

மதிப்புக்குரிய வாசகர்களே! எங்களின் ஊக்கியாக விளங்கும் வர்த்தகப் பெரு மக்களே! விற்பனைமுகவர்களே! உங்கள் எல்லோருக்கும் இன்றைய நன்னாளில் உதயன் தனது இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறான். நீங்கள் எல்லோரும் இன்புற்று இருக்க இறைவன் அருள் புரியட்டும்.

பிரதம ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## சொலல் வல்லன்; சோர்விலன்; அஞ்சான்....



உதயா,
எம் மனம் நிறை நாளிதழ் - நீ
எம்மிடையே
பெருவரவேற்பைப்
பெற்றவன் - நீ
புலம்பெயர் உறவுகளுடன்
உன்னை இணைத்தவன் - நீ
எம்மை வாசிக்கவும்; யோசிக்கவும்
வைத்தவன் - நீ
சுருங்கிய வார்த்தைகளால் நிறைகருத்தைத்
தருபவன் - நீ
எமது இருப்புடன் இணைந்தவன் - நீ
எமது மாணவரிடையே கல்விப் பயிர்
வளர்ப்பவன் - நீ
உதயா நீ,
சொலல் வல்லாய்; சோர்விலாய்;
அஞ்சாய்;
உன்னை இகல்வெல்லல்
யார்க்கும் அரிது.
உன் சகோதரன் 'சஞ்சீவி' எங்கே?
அவனுடன் பல்லாண்டுகள் நீ வாழ
என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

**ஆ.ராஜேந்திரன்,** *வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.*

## மக்கள் இயக்கமாக மிளிரும் -உதயன்



உதயன் தமிழ் நாளிதழ் வெள்ளி விழா ஆண்டில் கால் பதிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். உண்மை, நேர்மை, அஞ்சாமை ஆகிய தாரக மந்திரங்களைக் கைக்கொண்டு செயற்பட்டு வந்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளான். தற்பொழுது தனது சேவையை இணையதளத்தில் இணைத்துக்கொண்டுள்ள தன் மூலம் உலகத் தமிழ் மக்களுக்குக் குடாநாட்டு செய்திகளை சிறப்பான முறையில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். கடந்த காலங்களில் பல இன்னல்களைச் சந்தித்த போதும் தளராத தனது உழைப்பினால் இன்று வெள்ளிவிழா காண்பது உதயனின் மற்றொரு சிறப்பம் சமாகும்.

யாழ். மாவட்டத்தில் வதியும் மக்களுக்கு சேவை புரிவதும், அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் கூட்டுறவுத்துறை மக்கள் இயக்கமாக மிளிர்வதற்கும் நாளி தழ்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும். இந்த வகையில் உதயன் நாளிதழ் ஆற்றும் சேவை அளப்பரியதொன்றாகும்.

உதயன் நாளிதழ் இன்னும் பல்லாண்டு காலம் தனது சேவையை மக்களுக்கு வழங்கி பவளவிழா, மணிவிழா, என்பவற்றை மக்கள் சக்தியோடு கொண்டாடவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**வி.கே. அருந்தவநாதன்,** *கூட்டுறவு அபிவிருத்தி, உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.*

## மக்களின் குரலாக இயங்குபவன் உதயன்

யாழ்ப்பாண மண்ணில் வேர்விட்டு, வளர்ந்து, தழைத்து, பரந்து புகழ்பெற்று இருக்கும் உதயன் நாளிதழின் வெள்ளி விழா நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நவீன தொழில்நுட்பம் அசுர வேகத்தில் வளர்ச்சி பெற்றுள்ள இந்த வேளையில் அத்துடன் இணைந்து வளர்ந்து வரும் உதயன் பத்திரிகையின் பணியானது போற்றுதற் குரியதாகும்.

யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்லாது தனது இணையதளத்தின் ஊடாக உலகெங்கும் உள்ள தமிழ்மக்களின் மனங்களை வென்றுள்ள உதயன், சிறப்பான, நடுநிலையான செய்திகளின் மூலம் தன் தனித்துவத்தைப் பேணிவருகின்றது.

வலி.வடக்கு பிரதேசம் தொடர்பான அபிவிருத்திச் செய்திகளுக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து உதயன் செய்திகளைப் பிரசுரித்து வருவது நாம் அறிந்த விடயம்.

செய்திகளை மட்டும் பிரசுரிப்பது பத்திரிகைகளின் பணியாகாது. அதற்கு மேலதிகமாக மக்களின் நாளாந்த செயற்பாடுகளுக்கும், அவர்களின் தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் இணைந்து செயற்பட்டு மக்களின் குரலாக இயங்குவது முக்கியமானது.

அவ்வாறான செயற்பாட்டில் உதயன் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**எஸ்.முரளிதரன்,** *பிரதேச செயலாளர், வலி வடக்கு, தெல்லிப்பளை.*

## சோதனைகளைக் கடந்து சாதனை படைத்த உதயன்

காரிருள் அகத்தில் நல்ல கதிரொளியாக, பாரினில் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சியாக,



ஊரினை நாட்ட, இந்த உலகினை ஒன்று சேர்க்க யாழினில் பிறந்த உதயன் நாளிதழ் 25 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் காண்பதையிட்டு எனது மகிழ்ச்சியையும் மனமார்ந்த பாராட்டுக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருளும் இடரும் சூழ்ந்திருந்த ஒரு காலகட்டத்தில் யாழ் நகரிலிருந்து ஒரு தினசரிப்பத்திரிகையை 25 ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்துவது என்பது சாதாரண விடயமல்ல. இதனை இமாலயச் சாதனை என்றே கூற வேண்டும். சோதனைகளைக் கடந்து சாதனை படைத்த உதயன் பல்லாண்டு, வாழ்க,வளர்க என வாழ்த்துகிறேன்.

**திருமதி.யோ.பற்குணராஜா,** *மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.*

## பெரு விருட்சம் - "உதயன்"

உதயன் பத்திரிகையின் வெள்ளிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடை கின்றேன்.



கடந்த 25 ஆண்டுகளாகத் தமிழ் பேசும் மக்களுக்கு தன்னிகரில்லாத சேவை ஆற்றிவரும் உதயன் பத்திரிகையின் பணி பாராட்டப்பட வேண்டியது.

சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்டு இன்று பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கும் உதயன் பத்திரிகையானது, நாட்டு பிரச்சினைகளின் போதும் இடப்பெயர்வு காலங்களின் போதும் மற்றும் பல கஷ்டமான சூழ்நிலைகள் வந்த போதும் தனது சேவையை வழங்கப் பின்நிற்க வில்லை.

பற்பல இன்னல்கள் தேடிவந்த நேரங்களிலும் அவற் றுக்கு முகம் கொடுத்து துணிவுடன் செயற்பட்ட பெருமை உதயனுக் குரியது. மறைந்து கிடக்கும் பிரச்சினைகளை உடனுக்குடன் வெளிப்படுத்தி அவற்றுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுத் தருவதில் உதயனின் பங்கு குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியது.

பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு பெருமையுடன் விளங்கும் உதயன் பத்திரிகை வெள்ளி விழா சிறப்பு மலரை வெளியிடுவதையிட்டு மகிழ் வடையும் அதே வேளை வெள்ளிவிழா நிகழ்வுகள் சிறப் பாக அமைய வாழ்த்துவதுடன் உதயனின் சேவை சிறப் புடன் தொடர பிரார்த்திக்கின்றேன்.

**க.ரீரா,** *பதிவாளர், மேல்நிதீமன்றம், யாழ்ப்பாணம் .*

## மக்கள் மனதைக் கொள்ளை கொண்டவன்

எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணுகின்ற யாழ்ப்பாண மண்ணிலே மக்கள் மனதில் என்றும் உறைந்திருக்கின்ற நாளிதழாக உதயன் விளங்குகின்றது. இப் பத்திரிகையானது உதயமாகி இன்று இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியாகும் இவ் வேளையில் வெள்ளி விழா மலர் வெளிவருவதனையிட்டுப் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். நாட்டின் சாதாரண, அசாதாரண சூழ்நிலைகளின் மத்தியில் போரின் வடுக்களையும், மக்களின் துன்பியல் வாழ்க்கையையும் வெளி உலகுக்கு எடுத்துக் காட்டி எமது மண்ணுக்கும் மக்களுக்கும் உயிரளித்து தனக்கென தன்னிகரில்லாச் சேவையை வழங்கி வரும் இப்பத்திரிகையின் பணி பாராட்டப்பட வேண்டியதொன் றாகும்.



உள்நாட்டில் மட்டுமல்ல புலம்பெயர்நாடுகளிலும் நாளிதழாக, இணையத்தளங்களிலும் வெளிவந்து மக்கள் மனம் கவர்ந்த பத்திரிகையாக விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிரவன் உதயமாக மறந்தாலும் உதயன் காலையில் மக்கள் கரங்களில் தவழ என்றும் மறந்ததில்லை. அந்தளவுக்கு எல்லோருடைய மனதையும் கொள்ளை கொண்ட பத்திரிகையாக விளங்குகின்றான்

இன்றுவெள்ளிவிழாவில் மகிழ்வுறும் உதயன் பத்திரிகை ஆசிரியர்குழாம் மற்றும் நிர்வாகத்தினர், வாசகர்கள் அனைவருக்கும் எமது பிரதேசத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**க.ருநிமோகனன்,** *உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை.*

## வரலாற்றைப் பதித்து வாழ்க!



போரிடை பிறந்த பிள்ளை
புயலிடை வளர்ந்த பிள்ளை
பேரிடர், நன்மை,தீமை
பிரசுரித் துயர்ந்த பிள்ளை
வேரிலே வெந்நீர் வீழ்ந்தும்
விழுதுகள் பரப்பி... யாழின்
சீர்சொல்லும் உதயா... நீ நம்
திசைகளின் செல்லப்பிள்ளை!

வடக்கிலே உதித்த வெய்யோன்,
வரலாற்றின் சாட்சி சொன்னோன்,
விடியலில் வந்து செய்தி
விதைத்திடும் உதயன். நித்தம்
நடுநிலை தவறாதுஉண்மை
நவின்றிடும் நண்பன். இன்னும்
நெடுங்காலம் பொறுப் புணர்ந்து
நியாயங்கள் பகிர வேண்டும்.

நீரெனக் குளிர்ந்து நின்றாய்.
நெருப்பெனக் கொதித்தும் நிற்பாய்.
தாயென்றும் அரவணைத்தாய்.
தந்தை போல் அறிவுந் தந்தாய்.
ஆம்.. இரு பத்தைந் தாண்டாய்
அனுபவம் அழகும் பெற்றாய்.
வாழ்க நீ பல நூறாண்டு!
வரலாற்றைப் பதிந்து வாழ்வாய்!

**த.ஜெயசீலன்,** உதவி அரசாங்க அதிபர், *காரைநகர்.*

## பணி தொடர வாழ்த்துக்கள்

ஊடகத்துறையில் தன் அயராத உழைப்பால் உயர்ந்து நிற்கும் உதயன் பத்திரிகையின் வெள்ளி



விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த 25 வருடங்களாக உண்மை, நேர்மை, அயராத உழைப்பு, நேர்த்தியான சேவை என்பவற்றோடு இன்னல்கள், இடையூறுகள் அத்தனையும் கடந்து சுமைகளை சுகமாக சுமந்து கொண்டு மக்களுக்கு அரும்பணிபுரிந்து தமிழ் மக்களின் மனங்களில் மங்காத நாமத்தைக் கொண்ட தனித்துவமான ஒரு பத்திரிகை உதயன் என்பது மகிழ்ச்சியளிக்கின்றது. வெவ்வேறுபட்ட காலங்களில் வெவ்வேறு விதமான சூழல்களில் தனது பணியை இடைவிடாது நடத்தி வந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

உடனுக்குடன் செய்திகளை வழங்கி தனது சேவையின் மூலமாக பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் நன்மதிப்பை பெற்று மக்களின் இதயம் கவர்ந்த பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. ஒரு பத்திரிகை நிலையான இடத்தை பிடிக்க வேண்டியதற்கு அது வழங்கும் செய்தியின் தரம், உண்மைத் தன்மை, விரைவு என்பன முக்கியமானவையாகும். அந்த வகையில் உதயன் தனது பணியை சிறப்பாக செய்து கொண்டிருக்கின்றது தனது சேவைக்கு இடர்கள் வந்த போதும் தனது பணியை நிறுத்தாது தொடருகின்ற உதயனின் சேவை உண்மை யிலேயே போற்றப்பட வேண்டிய தொன்று.

இப்பத்திரிகை மேன்மேலும் சிறப்புற்று பல்லாண்டு காலம் தனது பணியைத் தொடரவேண்டுமென வாழ்த்து வதுடன் இப்பத்திரிகை மேன்மேலும் சிறப்புற்று பல் லாண்டுகாலம் தனது பணியைத் தொடரவேண்டுமென வாழ்த்துவதுடன் இப்பத்திரிகையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த பிரதம ஆசிரியர் மற்றும் அனைத்து உத்தியோகத் தர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்து கொள் கின்றேன்.

**நா.வேதநாயகன்,** *அரசாங்க அதிபர், முல்லைத்தீவு.*

உதயனுக்கு இன்று பிறந்தநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தடைகள், இடர்கள் என்பவற்றை கடந்து பல்லாண்டு காலம் நிலைபெற வாழ்த்துவோர்

| | |
|---|---|
| 1. E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம் | 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| 2. கஜமுகன் காட்வெயர் | 147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 3. S.P.N. மோட்டோர்ஸ் | 145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 4. CEPECT. Co | 48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN



இளைய தலைமுறையின் நாழிதளாய்
தொடர்ந்துவெளிவர வாழ்த்துக்கள்

**அம்பாள்**

Nal/DS/842 மரக்காலை

இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4921012, 0777111147

வாசகர்களை தன்வசப்படுத்திய
உதயன் நீடூழி வாழி!

இன்றைய நவநாகரிக பாதணிகளின்
தரமான தெரிவுகளுக்கு
தனிச்சிறப்பு பெற்ற ஒரே ஸ்தாபனம்

**நாதன்ஸ் சூ பலஸ்**

இல.17, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சப்பாத்துக்கள், உடுப்புவகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றிட

**அபிராமி மல்ரி சென்ரர்**

இல.127/3, யுப்ளி பசார்,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222858, 0776615973

புலம்பெயர் வாசகர்களின் முதற் தர தெரிவாய்
தொடர்ந்து வெளிவர வாழ்த்துக்கள்

**கஜன் குறூப்**

காகிதாதிகள் உள்ளூர், வெளியூர் தினசரி,
வார, மாத, புதின பத்திரிகைகள் மற்றும்
அறிவியல் பத்திரிகைகள், தேசியலொத்தர் சபை அபிவிருத்தி சபை
ரிக்கற்றுகள், பான வகைகள், குளிர்பானவகைகள் விற்பனையாளர்.
76.B, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

மேலும் சாதனைகள் படைத்து வெளிவர எமது வாழ்த்துக்கள்

**Atlas Enterprises & Book Shop**

Main Street, Chankanai.

தமிழ்ப் பணி தொடர தொடர்ந்து பல்லாண்டு மலர வாழ்த்துக்கள்!



**Jana**
Civil Engineering
Construction

K.K.S. Road, Tellippalai.

விருதுகள் பல பெற்று நூற்றாண்டு விழாக் காண எமது வாழ்த்துக்கள்

**ரமணன்**
கட்டப் பொருள் விற்பனை நிலையம்



சகல விதமான கட்டடப்
பொருள்களை நியாய விலைக்குப்
பெற்றுக்கொள்ளலாம்.

525, 528, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9296




உண்மைகளை உறைக்க எடுத்துக் காட்டும்
உதயனே... வாழி!

யாழ்.நகரில்... **வஜிதா**



மோட்டார் சைக்கிள் திருத்தகமும்
சேவிஸ் சென்ரரும்

இல.300/1, நாவலர் வீதி,
ரயில்வே சந்தி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: வசந்தன்
T.P.0778097741




அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை எம்மிடம்
மலிவுடன் கூடிய கொழும்பு, விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, ஆசிய நாடுகள்)

**ஒளி அழகன்**
VIDEO AND STUDIO

இல.59, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
தொடர்பு: 021 4921 711

அனைத்துவிதமான கமராக்களும்,
உதிரிப்பாகங்களும் எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்ந்து முதற்தரமாய்
வெளிவர எமது வாழ்த்துக்கள்




சகல புரியாணிகள் (சைவ,
அசைவம்), குளிர்பானங்கள்,
சிற்றுண்டிகள் (றோல்ஸ்,
வடை, கட்லட், சமோஷா)
என்பவற்றை சுவையாக
உண்டு மகிழ

**ஹொட்டல் றொலெக்ஸ்**

ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2808

360, காலி வீதி, கொழும்பு-06,
தொ.பே: 2360462

தமிழ் நாளிதழ்களுக்கு முன்னோடியாக வெளிவர வாழ்த்துக்கள்

**அற்புதா ரேடிங் கொம்பனி**
மல்ரிப் பிளேஸ்

சகலவிதமான ஆடம்பரப் பொருள்கள்,
துவிச்சக்கரவண்டி அதன் உதிரிப்பாகங்கள்
வீட்டுத் தளபாடங்கள்,
பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக்
உபகரணங்கள் அனைத்தையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## மலர்ந்து மணம் வீசும் உதயன்

உதயன் உதயமாகி இருபத்தைந்து ஆண்டுகள். நம்பமுடியவில்லை!



இன்றும், காளை வயதின் எல்லையிலும் உதயமான அன்றுபோல் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கின்றான் உதயன்!

இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் உதயன் கண்ட சோதனைகள் வேதனைகள் கொஞ்சமல்ல!

உதயனின் உயிர்நாடியான அதன் பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் மீது நடந்த கொலை முயற்சி!

உதயன் உதிக்காமல் தடுப்பதற்கு உதயன் அலுவலகத்தின் உள்ளே புகுந்து நடத்தப்பட்ட தாக்குதல்.

அப்பாவி ஊழியர்கள் இருவர் உயிர்ப்பலி எடுக்கப்பட்டமை.

உதயன் ஆசிரியர் கடத்தப்பட்டுப் பல நாள்கள் காவலில் வைக்கப்பட்டு, நீதிமன்ற விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டமை.

மேலும் சில ஊழியர்கள் சிந்திய இரத்தம்!

உதயனுக்கு ஏற்பட்ட சேதங்கள்!

இத்தனை சோதனைகள் வேதனைகளுக்குப் பின்னரும் உதயன் சோர்ந்து விடவில்லை.

உதயன் வெளிவராமல் நின்று விடவில்லை. அன்று போல் இன்றும் தினமும் உதித்துக் கொண்டிருக்கிறான்; ஒளி வீசிக்கொண்டிருக்கின்றான். சோதனைகள் வேதனைகள் எல்லாம் கடந்து இன்று உதயன் காளைக்கே உரிய துணிச்சலுடன் வீறுநடை போடுகிறான்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு நாளிதழ் வெளிவரமுடியும் என்று வழிகாட்டியது ஈழநாடு. ஈழநாடு காட்டிய வழியில் வேறொரு பத்திரிகையும் முளைவிட்டது. அதுவும் உட்பூசலால் முளையிலேயே கருகிப்போனது. உதயன் ஆரம்பம் முதல் மங்காமல் ஒளிவீசிக்கொண்டிருக்கிறான். பத்திரிகைப்பணி இலேசானதல்ல. பல பாடங்கள் பத்திரிகைப் பணியில் படிக்கவேண்டும்.

உதயன் நூறாண்டு காலம் வாழ இந்த வெள்ளிவிழாவில் என் உளம் நிறைந்த வாழ்த்துக்கள். உதயன் நிறுவனத்தினருக்கும் பிரதம ஆசிரியருக்கும் எனது உளம் நிறைந்த நல்லாசிகள். உதயன் நீடுவாழ இறைவனை யாசிக்கின்றேன்.

**- எஸ்.எஸ்.கோபாலரத்தினம் (கோபு)**
*முதுபெரும் பத்திரிகையாளர்.*

## நவீனத்துவத்துடன் செயற்படுபவன்

உதயன் பத்திரிகையின் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும் அதன் நவீனத்துவ அணுகுமுறையே காரணமாகும். செய்தி எவ்வாறு அமைய வேண்டும் என்று



அத்துறைசார் ஆற்றலர் தெரிவித்தமைக்கு அமைய உதயன் செய்திகள் அமைகின்றன.

வாசகர்களுக்குப் புரியும் வண்ணம் செய்திகள் எழுதப்பெறல் வேண்டும். செய்தியை எழுதுகின்ற இதழியலாளனுக்கு தான் தெரிந்து அறிந்திருப்பவை அனைத்தும் வாசகனுக்கும் தெரியும் என்ற நினைவு ஏற்படக்கூடாது. உதயன் செய்திகளில் இந்த இரு அம்சங்களும் முன்மாதிரியாகப் பேணப் பெறுகின்றன.

செய்தியை ''தலை மாறிய பிரமிட்'' முறையில் எழுத வேண்டும் என்பது மூத்த இதழியலாளர்களின் சிறப்பான அறிவுறுத்தலாகும். காரணம் பத்திரிகையின் பக்கம் அமைக்கும் பொழுது சில செய்திகளைக் குறுக்க வேண்டிய தேவை ஏற்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் ''தலை மாறிய பிரமிட்'' முறை, செய்தியைக் குறுக்குவதற்கு உதவியாக அமையும். குறித்த செய்தியின் கடைசிப் பந்திகளை நீக்கிவிட்டால் பக்க அமைப்பு வசதியாக அமையும். ''தலை மாறிய பிரமிட்'' முறையில் செய்தி எழுதப் பெற்றிருப்பின், இறுதிப் பந்திகளை அகற்றுவதன் மூலம் வாசகன் குறித்த செய்தியை வாசித்துப் புரிந்துகொள்வதற்கு இடர்ப்பாடு எதுவும் ஏற்படமாட்டாது.

தமிழ் தினசரிப்பத்திரிகைகளில் உதயன் மட்டுமே செய்தி எழுதும் விடயத்தில் மிகமிக சாதாரண வாசகர்களை மனதிருத்தி மேற்குறித்த முறைமைகளைப் பின்பற்றுகின்றது. இதுவே உதயன் இதழின் விற்பனைப் பெருக்கத்திற்கும் காரணமாகும்.

இதழியல் நவீனத்துவத்தை புரிந்து கொண்டு இது போன்று பல புதுமைகள் காலத்துக்கு காலம் உதயன் செய்திப்பகுதி அமைதியாக உள்வாங்கப் பெறுகின்றது. இன்று, வெள்ளிவிழாக்காணும் உதயன் தின சரியை அதன் வாசக நெஞ்சங்களோடு இணைந்து வாழ்த்துவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

**இ.சங்கர்,**
*முதுபெரும் பத்திரிகையாளர்,*
*430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.*

## ஒளி கொடுக்கும் கதிரவனாக உதித்து எழுந்தவன் எங்கள் உதயன்



உதயன் பத்திரிகையின் பணிவாழ்வின் இருபத்தைந்து வருட நிறைவிற்கு எனது அனபும், தமிழ் பண்பும் கலந்த வாழ்த்துக்களை கூறி நிற்கின்றேன். கடநத இருபத்தைந்து ஆண்டுகளைப் பின் நோக்கிப் பார்க்கும்போது எம் மண்ணில்போரும், அதன் விளைவாகக் கொலை, சொத்தழிவு, மனித உரிமை மீறல்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மனித மாண்பு சிதைந்த ஒரு வாழ்வையே எம் மக்கள் சந்தித்தனர்.

குருதி படர்ந்த கறை கண்ட தேசமாக, உறவுகளை இழந்த பூமியாக, ஏதிலிகள நிறைந்த இடமாக எம் மண் மாறிவிட்டது. இத்தகைய ஒரு சூழமைவில் இம் மக்களுக்கு ஒளி கொடுக்கும் கதிரவனாக உதித்ததுதான் உதயன் பத்திரிகை.

ஜனநாயகம் பேணப்படுகினற நாட்டில், உயிர்களுக்கு உத்தரவாதம் உள்ளபோது, பத்திரிகைப்பணி இலகுவான தொன்றாகும். ஆனால யுத்த பின்னணியில் பத்திரிகைப் பணி சவால்கள் நிறைந்தது மட்டுமல்ல உயிராபத்துக்களையும் எதிர்கொள்ளவேண்டியதொன்றாகும். உதயன் பத்திரிகை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பல சாவால்களைச் சந்தித்தது மட்டுமல்லாது, சக பணியாளர்களின் சாவையும் சந்தித்து பணியாற்றியதை மறக்கமுடியாது. உண்மைக்குச் சான்று பகர்வோர் உயிரையும் துச்சமென எண்ணியே பணியாற்ற வேண்டும். உதயன் பணியாளர்கள் அனைவரும் அத்தகைய ஒரு தியாக உணர்வுடன் பணியாற்றினார்கள். எனவே எம் மக்களின் பாராட்டிற்கு என்றும் அவர்கள் உரியவர்களே.

உதயன் பத்திரிகை, தமிழ் தேசியத்தின் நலன்களை, தமிழ்க் கலாசாரத்தின் விழுமியங்களைப் பேணிக்காக்க எடுத்த, எடுக்கின்ற முயற்சிகள் வரலாற்றுத் தேவை மட்டுமல்ல, பத்திரிகையின் முக்கிய பொறுப்பாகும். ஒரு இனம் தனது தேசியத்தையும், கலாசாரததின் உயர்ந்த விழுமியங்களையும் இழக்க நேரிடின விரைவில் அத்தேசிய இனத்தின் இருப்பு வரலாறாகிவிடும். தமிழ் மக்களின் தேசிய உணர்வுகளைத் தட்டியெழுப்பி, சமூக சீர்கேடுகளை உள்ளபடி உரைத்து தமிழ இனத்தின் காப்பரணாக இருக்கும் உதயனின் பணி தொடரவேண்டும்.

உதயன் பத்திரிகையின் மற்றுமோர் உன்னதமான பணி, காலத்தின் தேவைக்கும் சூழமைவிற்கும ஏற்ப தரமான கட்டுரைகள், ஆக்கங்களை ஊக்குவித்து அவற்றை பிரசுரித்து அறிவுத்துறையில் தமிழ் மக்களை முன்னேற்ற எடுத்த முயற்சிகளாகும். உதயன் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள் பல்பரிமாணங்களைக் கொண்டதாகும். அவை அரசியல் துறையாக, சமூகம் சார துறையாக, கல்விசார் துறையாக, நவீன தொழில்நுட்பத துறையாக, கணனிசார் துறையாக இருந்தமை பல்நிலையிலுள்ளவர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

எனவே உதயன் பத்திரிகையின் நிர்வாகிகள், ஆசிரியர், பணியாளர்களுக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்களை இவ் வெள்ளி விழாவில் கூறி நிற்கின்றேன். உங்கள் சிறப்பான பணி வரலாற்றுத் தேவை மட்டுமல்ல, தமிழினத்திற்கு என்றும் வேண்டப்படுவதுமொன்றாகும். என்றும் உண்மையை உரையுங்கள். மக்களின் நலனைச் சிரமேற்கொண்டு சவால்கள் மத்தியிலும் கடந்த காலங்களில் நீங்கள் ஆற்றிய பணி போல் இனிவரும் நாள்களிலும் உங்கள் பணி தொடரட்டும்.

யுத்தம் முடிவுற்றாலும், அவற்றின் வடுககளும், காயங்களும், மனவழுத்தங்களும் இன்னும் முடிவுறவில்லை. அதுமட்டுமல்ல, தமிழ் மக்களின் தேசியப பிரச்சினைகள், போராட்டங்கள் இன்னும் தொடாகதையாகவேயுள்ளது. எனவே வரும் காலங்களில புதிய பாதையைக் காட்டுகின்ற புனிதமான பணி பததிரிகைகளின் பாரிய கடப்பாடாகும். நீதி வழியில் நெறி தவறாது உள்ளதை உள்ளபடி உரைத்து சமூகத்தைச் சீரிய வழியில் செம்மைப்படுத்துவது உதயனின் எதிர்காலப பணியாகும். இப் பணியைச் சிறப்புற நிறைவு செய்ய எல லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி, மீண்டும் வெள்ளிவிழா கொண்டாடும் உதயன் பத்திரிகைத் துறையின் ஆசிரியர், நிர்வாகிகள், பணியாளர்களை வாழ்த்தி வளமுடன் சிறக்க வேண்டிநிற்பது

**அருள் பணி கி.ஜோ.ஜெயக்குமார்,**
*முன்னாள் இயக்குனர், கரித்தாஸ் கியூடெக், யாழ்ப்பாணம்.*

## உதயனின் சேவைக்கு மக்கள் அளித்த கௌரவம் பெரிது

உதயன் நாளிதழ் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த இருபத்தைந்து வருடங்களில் எனக்கு இருதசாப்த காலத் தொடர்பு உதயனுடன் உண்டு. தமிழ்ச் சித்திரைப் புத்தாண்டு, தைப்பொங்கல் பண்டிகைக் காலங்களில் குடாநாட்டுப் பழைமைகளைப்பற்றி கடந்த காலங்களில் தொடர்ச்சியாக எழுத அரிய



வாய்ப்பளித்து வரும் உதயனுக்கு என்றும் நன்றியறிதலுடையேன்.

என்னைப் பொறுத்த அளவில் தந்தை வழி தான் என்வழி. வடக்குக் கிழக்கு இணைந்த அகண்ட தமிழ் மாநிலம் ஒன்று உருவாக்கப்பட்டு ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் இலங்கையில் தமிழ் பேசும் இனம் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே தந்தை செல்வா கண்ட கனவாகும். உதயனும் கடந்த இருபத்தைந்து வருடங்களாக இதே இலட்சியத்துடனேயே வாழ்ந்தும் போராடியும் வருகின்றான். இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்களும் தமிழ்த்தலைவர்களும் இழந்தவை பல. உதயனும் செய்த தியாகங்களும் இழந்தவையும் பலவாகும்.

தமிழ் பேசும் மக்களது உரிமைகளுக்காகப் போராடி வரும் உதயனைப் போற்றுபவர்களும் பாராட்டுபவர்களும் பலர். அதேவேளை உதயனுடன் முட்டி மோதுபவர்களும் இருக்கவே செய்கிறார்கள். இதுவரை காலமும் நாடாளு மன்றத்திற்கு வெளியே நின்று தமிழ் பேசும் மக்களது உரிமைக்குரலுக்காகப் போராடிய உதயனின் சேவையை அங்கீகரித்து இன்று ஊடகப் போராளி ஒருவரையும் நடந்த பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்ட மக்கள் நாடாளுமன்றத் திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். இது உதயனின் மகத்தான சேவைக்கு மக்கள் அளித்த மாபெரும் கௌரவம் என்றே கூற வேண்டும்.

உதயன் என்றால்
உ- உறுதியானவன்
த-தமிழ்பேசும் மக்களுக்காகப் போராடுபவன்
ய-யமனுக்கும் பயமில்லாதவன்
ன்-ஊழல்களைக் கண்டிப்பவன்
என்று அர்த்தமாகும்.

உதயன் தொடர்ந்து பல்லாண்டு தமிழ் பேசும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என மனதார வாழ்த்தி, உதயனுக்கு எனது ஆயிரம் நல்லாசீர்வாதங்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மனமகிழ்ச்சி அடைகிறேன்.

**செல்லப்பா நடராசா,** *முருபெரும் பத்திரிகையாளர்.*

## சவால்களை எதிர்கொண்டு வென்றெடுத்தவன் உதயன்

வெள்ளிவிழாக் காணும் உதயனை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.



யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட ஆயுளுடைய ஒரு நாளிதழாக அது வெளிவந்து கொண்டிருக்கிறது. பல சவால்களை அது சந்ததித்திருக்கிறது. விவேகத்துடனும் அமைதியாகவும் அவற்றை எதிர்கொண்டு இன்று வரையும் நின்று பணிசெய்கிறது. உதயனுக்கு மூன்று வாய்ப்புகள் இருக்கின்றன.

ஒன்று, அதனை வழிநடத்துகின்ற நிர்வாகப் பணிப்பாளர், ஊடக அறிவும், நிர்வாக நல்லறிவும், தலைமைத்துவப் பண்புமுடையவராக அவர் திகழ்ந்தமையால் உதயன் ஒவ்வொருநாளும் உதயமாகிக் கொண்டிருக்கிறான். இரண்டு, சோர்விலாத, நல்ல ஊடக அனுபவம் வாய்ந்த, தேவையான சரியான முடிவுகளை எடுக்கக்கூடிய முதன்மை ஆசிரியரையும் அவருக்கு உதவக்கூடிய துணை ஆசிரியர்களையும், ஊக்கமுள்ள ஊழியர்களையும் கொண்டுள்ளதால் உதயன் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஒவ்வொருநாளும் உதயமாகிக் கொண்டிருக்கிறான். மூன்று, தனக்கென ஒரு வாசகர் கூட்டத்தைக் கொண்டிருப்பது, ஒரு சமூகக் கடனைத் தொடர்ந்து ஆற்றிவருவது, இதுவும் உதயன் ஒவ்வொரு நாளும் உதயமாகிக் கொண்டிருக்க உதவுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வள நிலையம் மற்றும் பயிற்சி மையத்தின் பணிப்பாளராக நான் பணியாற்றும் பொழுது உதயன் அந்நிலையத்துக்குச் செய்த உதவிகளை நன்கு அறிவேன். நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு உள்ளகப் பயிற்சியினை நன்கு வழங்கியதோடு அம் மாணவர்களுக்கு நல்ல நம்பிக்கையினையும் அது நல்கியது. உதயன் மேலும் பல ஆண்டுகள் ஒவ்வொரு நாளும் உதய மாகி மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் நல்லொளி பெருக்க வேண்டுமென இறையருளை வேண்டி என்னுடைய வாழ்த்தினையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்வடைகிறேன்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்,**
**Ph.D.(Edin.) D.Litt.(Hon.UJ).**

உதயனுக்கு இன்று பிறந்தநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

# KALAIMAGAL

## International College

கலைமகள் சர்வதேசக் கல்லூரி 2011 ஆம் ஆண்டுக்கான Play group, LKG, UKG, Gr.1 முதல் G.C.E. O/L வரையான வகுப்புகளுக்கு விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி டிசம்பர் 15 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதால் அதற்கு முன் உங்கள் விண்ணப்பப்படிவங்களை எமது கல்லூரிகளின் கொக்குவில் தலைமைக் காரியாலயத்திலும் சாவகச்சேரி வட பிராந்திய தலைமைச் செயலகத்திலும் சமர்ப்பிக்க அறிவுறுத்துகின்றோம்.

### எமது கல்லூரியின் சிறப்பான செயற்பாடுகளாவன...

★ முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த)வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்தி லும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை. (English Medium)
★ Play Group முதல் Grade-05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade-6 முதல் G.C.E. (A/L) வரை இலங்கை பாடத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை
★ ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
★ பிரத்தியேக சீருடை
★ சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
★ கணினி ஆய்வுகூடம்
★ விஞ்ஞான ஆய்வுகூடம் ★ நூலகம்
★ சாதாரண மக்களும் முகம்கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த கட்டண வசதி
★ தமிழ்,சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
★ அரச பாடசாலைகளின் நேரசூசியை பின்பற்றும் கல்விக் கொள்கை.
★ கலை, கலாசாரம், விளையாட்டு,நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு.
★ மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா,கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.
★ மாணவர்களுக்கான போக்குவரத்து வசதி
★ இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள் சாவகச்சேரி (தென்மராட்சி), கொக்குவில் (வலிகாமம்), நெல்லியடி (வடமராட்சி) ஆகிய இடங்களில் இயங்குகின்றன. மேற்படி எமது பிரதான கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த), வரையிலான வகுப்புகள் உள்வாங்கப்படும். ஏனைய உப கிளைகளான அச்சுவேலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, நல்லூர், வட்டுக்கோட்டை போன்ற கிளைகளில் Play Group L.K.G, U.K.G ஆகிய வகுப்புகள் மட்டுமே நடைபெறும் என்பதையும் இக்கிளைகளில் இணைந்து கல்விகற்கும் சிறார்கள் ஆண்டு 1 முதல் A/L வரையான வகுப்புகளில் கல்வி கற்க கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் தமது கல்வியைத் தொடரும் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது கல்லூரியின் 2011ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் டிசெம்பர் 15 ஆம் திகதி வரையே ஏற்றுக்கொள்ளப்பட உள்ளதால் உங்கள் பிள்ளைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும் சமர்ப்பிக்கவும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

## Kalaimagal International College

*Nunavil East,*
*Kandy Road, Chavakachari.*

*Kulappiti Junction.*
*Church Lane, Kokuvil.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## அர்ப்பணத்தின் அத்தியாயம்

''உதயன்'' ஊடக நிறுவனம் இருபத் தைந்து ஆண்டுகள் வளர்ந்து, இளமைத் துடிப் புடன் நிறைவு விழாக் கொண்டாடி மகிழ்ந்து நின்று, பூரிப்படை யும் இந் நாளில் நாமும் இணைந்து நின்று வாழ்த்துகின் றோம்.



இலங்கையில் ஊடகத் துறை குறிப்பாகக் கடந்த இரு தசாப்தங் களிலும் எதிர்கொண்டிருந்த அடக் குமுறைகளும், அழிப்பு நடவடிக் கைகளும் மறுபக்கத்தில் ஊடக வியலாளர்கள் முகங்கொடுத்த அச்சுறுத்தல்களும், கொலைகளும் ஊடக சுதந்திரத்தைக் குற்றுயிராக்கி விட்டிருந்தன. ஜனநாயக தத்துவத்தின் ஆணிவேரையே அகழ்ந் தெடுத்து சிந்தனைச் சுதந்திரத்தையே அழித்துவிடும் நடவடிக்கைகள் வரலாற்றில் கறைபடிந்து அத்தியா யங்களாய் பதியப்பட்டுள்ளன.

இத்தனை கொடிய வரலாற்றுக் கால கட்டத் திலும் 'உதயன்' ஊடக நிறுவனம் நேரடியாகவே சந்தித்த, அனுபவித்த உயிர் அச்சுறுத்தல்களும், கொலைகளும், அழிப்பு நடவடிக்கைகளும் நாடே அறியும்.

ஜனநாயக விழுமியங்களையும், ஊடகத்துறை யையும் பேணிப்பாதுகாத்திடவும், வளர்த்திடவும் உதயன் நிறுவனமும், பணியாளர்களும் தம் இள மைக்காலம் முழுவதையும் அர்ப்பணித்துள்ளனர். இதற்கும் மேலாக இலங்கையில் ஆண்ட ஒரு இனம் தமிழ்த்தேச மக்கள் கடந்த அரைநூற்றாண்டு காலத்திலும் பேரினவாத சித்தாந்தத்திலும் அதன் ஆட்சிகளினாலும் அழித்தொழிக்கப்படுவதற்கு எதிராகத் தமிழும், தமிழ் மக்களும், தமிழ் நிலமும் எழுச்சி பெறவும், விடுதலை பெறவும் ஒரு சமுதா யத்தை உருவாக்கு வதில் உதயன் நிறுவனத்திற்குப் பிரதான பங்குண்டு என அறுதியிட்டுக் கூறலாம்.

இப்பொழுது இருபத்தைந்து ஆண்டு நிறைவுற்ற இளைஞனாய் அர்ப்பணத்தின் அத்தியாயத்தில் நின்று ஜனநாயக விழுமியங்களும், தமிழும், தமிழ் மக்களும், தமிழ் நிலமும் வாழ்வும், ஆளவும் வளம் பெறவும் உதயன் நிறுவனம் உழைத்திட வாழ்த்தி நிற்கின்றேன்.

- மாவை சேனாதிராசா.
*நாடாளுமன்ற உறுப்பினர், யாழ் மாவட்டம்.*

## உதயன் நூறாண்டு விழாவையும் காணவேண்டும்



உதயன் பத்திரிகை வெள்ளி விழா கொண்டாடுகின்றது என் பதைக் கேட்கும் பொழுது உவகை அடையக்கூடியதாக இருக்கின் றது. உதயனின் 25 வருட காலப் பயணம் என்பது நெருப்பாற்றை நீந்திக்கடப்பதற்கு ஒப்பானது. பிராந்திப் பத்திரிகையாக ஆரம் பிக்கப் பட்டு, இன்று புலம்பெயர் தமிழ் மக்களெல்லாம் விரும்பி வாசிக்கும் இணையப் பத்திரிகையாகவும் இது மாறியுள்ளது.

யுத்த காலத்தில் உதயன் சந்தித்த நெருக்கடி கள் சொல்லில் அடங்காதவை. இந்திய அமைதி காக்கும் படையின் காலத்திலும், இலங்கை இரா ணுவ நெருக்கடிகள் இருந்த காலத்திலும் உதயன் பத்திரிகை பல நெருக்கடிகளுக்குள்ளானது. தமிழ்த் தேசிய வளர்ச்சியிலும், ஈழ விடுதலைப் போராட்டத்திலும் அதன் பங்கு கணிசமானது.

உதயன் தமிழ் மக்களுக்காக அவர்களின் தேசி யத்திற்காக, விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதால் அப்பத்திரிகை அலுவலகம் அடித்து நொருக்கப்பட்டு அங்கிருந்த ஊழியர்கள் சிலரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். உதயன் பத்திரிகையாளர் சிலர் வீட்டுக்காவலில் இருப்பது போன்று பத்திரிகை அலுவலகத்திலேயே அடைபட்டுக் கிடக்கவேண் டிய துர்ப்பாக்கிய நிலை. சொல்லொணா நெருக்கடி களுக்குள்ளாலும் உதயன் பத்திரிகை வந்ததென்றால் மூத்த ஊடகவியலாளரினதும் ஊழியர்களதும் துணிச் சலும், விடாமுயற்சியும் தான் அதன் அடிப்படைக் காரணங்களாக இருக்க முடியும்.

25 வருட கால உதயன் வரலாறு என்பது ஈழ விடுதலைப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்தது.

இப்பத்திரிகை மென்மேலும் வளரவேண்டும்.

நூற்றாண்டு விழாக்களையும் காண வேண்டு மென வாழ்த்தி வரவேற்கின்றேன்.

- சுரேஸ் க. பிரேமச்சந்திரன்.
*கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.*

## நல்லாசிகள் உரித்தாகட்டும்



தமிழ் மக்களின் சமகால வரலாற் றில் ஊடகங்களின் பங்களிப்பு முக்கி யமடைந்துள்ளது. அரசியல் ரீதியாக நெருக்கடிக்குள்ளாகிய ஒரு சமூகத்தின் நெருக்கடிகளைத் தீர்ப்பதிலும் போரி னால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை ஆற்றுப்படுத்துவதிலும் தமிழ் ஊட கங்கள் கூடிய பங்களிப்பைச் செய்ய வேண்டியுள்ளது.

நீடித்த போர்ச்சூழலில் முகிழ்த்தது. உதயன் பத் திரிகை. போர்ச்சூழலிலேயே தன்னுடைய 25 ஆண்டு காலப் பணியையும் செய்திருக்கிறது. நீடித்திருந்த போர்ச் சூழலில் தன்னுடைய பணியின் போது பெற்றுக் கொண்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு சம காலத்தின் அரசியற்சூழலில் எதிர்காலத்துக்குரிய செல் நெறியை வகுப்பதில் உதயன் பங்காற்ற வேண்டும்.

இந்த அமைதிச் சூழலை நிரந்தர சமாதானச் சூழ லாக்கும் பொறுப்பு சகல தரப்பினரதும் கடமையாகும். உண்மை, பக்கஞ்சாராமை என்ற ஊடகதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு சமகாலத்தின் அரசியற்சூழலில் எதிர்காலத்துக்குரிய செல்நெறியை வகுப்பதில் உதயன் பங்காற்ற வேண்டும்.

இந்த அமைதிச் சூழலை நிரந்தர சமாதானச் சூழ லாக்கும் பொறுப்பு சகல தரப்பினரதும் கடமையாகும். உண்மை, பக்கஞ்சாராமை என்ற ஊடக தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் சூழலிலும் யாழ்ப் பாணத்து ஊடகப் பண்பாட்டுச்சூழலிலும் உதயன் பத்திரிகை ஒரு முன்னணிப் பாத்திரத்தை வகிக்கவும் உதயனின் இந் தப்பணி சிறந்து தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் மிளிரவும் வாழ்த்துகிறேன்.

- முருகேசு சந்திரகுமார்.
*கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.*

## பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



மக்கள் மனதில் மதிப்புடன் இடம் பிடித்த உதயன் பத்திரிகை இன்றுடன் 25 ஆண்டு களை நிறைவு செய்கிறது என்பதையிட்டு மிகவும் அகமகிழ் வடைகிறேன்.

கடந்த காலங்களில் உதயன் கடந்து வந்த பாதைகள் கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடானவை என்பது நாமனைவரும் அறிந்ததே. அச்சகத் தையும் அலுவலர்களைத் தாக்கி அராஜ கம் புரிந்தது ஒரு கும்பல். வெளியிட்ட உண்மைச் செய் திக்காய் பத்திரிகை நிறுவனத்தை சீல்வைத்து பாடம்புகட்ட நினைத்தது இன்னொரு கும்பல். போட்டிக் கணை களாலும், பொறாமைக் குறிகளாலும் தாக்க முனைந்தனர் இன்னும் பலர்.

ஆனால், இவற்றுக்கெல்லாம் சளைத்திடாது வந்து சவால் களை சோதனைகளாக எதிர்கொண்டு அதன்மூலம் சாதனைகள் பலகண்டு இன்று 25ஆம் அகவை காணும் ''உதயன்'' உண்மையிலே பாராட்டப்பட வேண்டியவன் தான்.

*''சமன்நின்று சீர்தூக்கும் கோல்போல் அமைந்து*
*ஒருபாற் கோடாமை சான்றோர்க்கு அணி''*

என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைவாக இயன்றவரை பக்கச்சார்பு ஏதுமின்றி சர்ச்சைகள் வரும் சந்தர்ப்பங்களில் சகல தரப்பினரதும் தகவல்களைச் சீர்தூக்கிப் பார்த்துச் சரியான செய்திகளை வெளியிட்டது மட்டுமல்லாமல் எவ்வளவோ அச்சுறுத்தல்கள் உயிராபத்துக்கள் இருந்த போதிலும் தமிழரது உரிமைக்குரல் ஓய்ந்துவிடாது உயர்ந்து மிளிர்ந்தவன் உதயன் என்றால் அது ஒன்றும் மிகையல்ல.

பத்திரிகைத்துறையில் இயன்றவரை பத்திரிகா தர்மத் தைப் பேணி நேரம் காலம் ஏதுமின்றி எத்தனையோ இழப் புக்களுக்கு மத்தியிலும் நின்று உழைத்து நிமிர்ந்திருப் பவன் உதயன். இக்கட்டான காலகட்டங்களில் இவற்றுக் கெல்லாம் துணையாக இருந்தவர்களில் இருந்த இந் நிறுவனத்தின் முன்னாள் பத்திரிகையாசிரியர் ந.வித்தியா தரன் குறிப்பிடத்தக்கது.

தமிழர் குரலாக தம் தரணியிலே தாரகையாய் மிளிர்ந்து இன்று 25ஆவது அகவை நிறைவு காணும் உதயன் குடும் பத்தினரை எனது மனதார வாழ்த்திப் பாராட்டுவதோடு இன்னும் நேர்மையுடன் அவர்களது பணி சிறக்க இறை யருளைப் பிரார்த்திக்கின்றேன்.

- அப்பாத்துரை விநாயகமூர்த்தி,
*கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர், யாழ் மாவட்டம்.*

## பலமாய் இரு....மலை போல் எழு!

''அறிவித்தல்'' என்கிறபோது இங்கு செய்தியே முதலிடம் பெறுகின்றது. நாளாந்த செய்திகளை முழு மையாகத் திரட்டி, முக்கியத்துவத்தின் அடிப்படை யில் வகைப்படுத்தி செய்தி வெளி யிடுதலே ஓர் பத்திரிகையின் முதன் மைப் பணியாகும். இந்த முதன் மைப் பணியில் உதயனுக்கு இன்று 25 வருடங்கள் நிறைவு என்று சொல்வதை விடவும், நெருப் பாற்று நீச்சலில் உதயனுக்கு 25 வருடங்கள் நிறைவு என்றே நான் செல்வேன். சமுதாயத்தில் மறைக் கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, மறைக் கப்பட்ட, மறுக்கப்பட்ட பிரச்சினை களை, உண்மை களை, செய்திகளை இனங் கண்டு அவற்றைத் தோண் டித் துருவி ஆராய்ந்து உதயன் செய்தி வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது.



இலங்கையில் இன்று பல பத்திரிகைகள் வெளி வந்து கொண்டிருந்தாலும், உதயன் பத்திரிகையின் வாழ்க்கை மிகவும் சவாலானது, ஆபத்தும் எதிர்ப்பும் நிறைந்தது. தேசிய உணர்வுக்கும் நலனுக்கும் பலம் சேர்த்து, இன ஒருமைப்பாட்டை வலியுறுத்தி மக் களின் உரிமைகள் பாதிக்கப்படும்போது வன்முறை யைத் தூண்டாமல் போராட்டம் நடத்தி, நீதியை நிலைநாட்ட முனைந்த போதெல்லாம் தான் வரித்துக் கொண்ட பாதையில் உதயன் சந்தித்த உயிர் வலி களும், ரணங்களும் ''ஓர் இதழ் ஒரு படை வரிசைக்கு ஒப்பானது'' என்பதை எமக்குப் புலப்படுத்தியது. அரசியல் மட்டுமன்றி, அனைத்துத் துறைகளிலும் சட்டங்கள் மீறப்படுவதையோ, மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளையோ உதயன் ஒருபொழுதும் கைகட்டி நின்று வேடிக்கை பார்த்ததில்லை. மாறாக, மாபெரும் சக்திகள் முன் போராடும் சமரனாக, உரிமைக்குரலாக முழங்கியது. சுதந்திரமான பேச்சும், நம்பத்தகுந்த செய்தியிடல் மூல மும் பொது மக்கள் தமது சொந்த நலன்களுக்கு இணங்க நன்கு அறிவூட் டப்பட்ட தீர்மானங்களை எடுக்கக்கூடியவாறான சூழலை நன்றே ஏற்படுத்தி சமுதாயத்தரத்தை உரு வாக்குவதிலும், உயர்த்துவதிலும் உதயன் வலிமை யுடையவன். சமூகக்கட்டுப்பாடுகளி லும் உதயன் நிறையவே ஆதிக்கம் செலுத்தி வருவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. குடாநாட்டின் பெரு விருட்ச மான உதயன் பத்திரிகை தொடர்ந்தும் நடுநிலைமை யுடன் சகலருக்கும் இடமளித்து மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திருமதி. விஜயகலா மகேஸ்வரன்,
*நாடாளுமன்ற உறுப்பினர் , யாழ். மாவட்டம்*

## உதயனின் மிடுக்கோ மிடுக்கு!

வெள்ளிவிழாக் காணும் உதயன் கண்டு பேரு வகை யடைகிறேன். துறைகள் பல இருப்பினும் பத்திரிகைத் துறையின் வாழ்வு என்பது வித்தியா சமானது. எப் போதாவது சவால்கள் வரு வது பலருக்கு. ஆனால் எப் போதும் சவால்கள் நிறைந்த வாழ்வு நிலையில் பயணிப்பது பத்திரிகை துறை. அன்றாட உலகத்தின் தேடல் களோடும் மனித மனங்களை நாடி பிடித்து தான் வாழும் சமு தாயத்தின் அடையாளங்களைக் காப்பாற்றி யும், கொடுமை கண்டு குமுறியும் பெருமை கண்டு குதூகலித்தும் தனது பக்கங்களை பக்குவப்படுத்தும் பத்திரிகைத் துறை சார்ந்தவர்களை வரவேற்று வாசகரின் இதயநாடியாக வாழும் பத்திரி கைகளில் உதயனுக்கும் தனிப்பெரும் இட முண்டு. அதிலும் துப்பாக்கி முனைகளினால் பேனா முனைகள் பிளந்தெறியப்பட மேற்கொள்ளப்பட்ட முயற்சி களை எதிர்கொண்டு வெற்றிநடைபோடும் உதயனை நான் வாழ்த்துகிறேன். வெள்ளி விழாக்காணும் இப்பொழு தில் அத்திவாரமாக, உரமாக உயிர்கொடுத்த இத்துறை சார்ந் தவர்களை நான் வணங்குகிறேன்.



சரித்திரங்களை புதுப்பிக்கவும், உருவாக்கவும் வல்லவை பத்திரிகைகள் இந்த வல்லமை உத யனுக்கும் உண்டு என நான் நினைக்கிறேன். எழுச் சியும், வீழ்ச்சியுமாக பயணிக்கும் ஈழத்தமிழரின் யதார்த் தத்தை எதிர்காலம் புரட்டும் போது உதயனையும் உற்று நோக்கும் என்பது கண்கூடு. வெள்ளிவிழா மிடுக்கில் மிளிரும் உதயன் வரலாற்றுப் பார்வை தூர நோக்கோடும் இன்னும் நெடுங் காலம் பத்திரிகை பணி செய்ய என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

சிவஞானம் சிறீதரன்,
*நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## துணிச்சலுக்கான ஊடக விருது பெற்றவன் உதயன்

உலகிலேயே உயர்ந்த சேவை ஊடக சேவையாகும். நாட்டு நடப்புக்களைத் தினமும் தந்து



மக்களை விழிப்பூட்டவும், வழிநடத்த வும், அறிவூட்டவும் ஆற்றும் சேவையாகும். இரவு, பகல் பாராது விழித் திருந்து புயல், மழை, பெருவெள்ளம், சூறாவளி, பூகம்பம்,சுனாமி ஏற்படும் எவ்வேளைகளிலும் துணிந்து முன் சென்று தகவல் அறிந்து அவைகளை விடிகாலையில் வெளிக்கொணரும் துணிச்சல் மிக்க சேவை இதுவாகும். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை.

அந்தவகையில் யுத்த மழையில் குடைபிடிக்காமல் நனைந்து அலைந்து செய்தி சேகரிப்பதிலும் அதை வெளிக்கொணர்வதிலும் உதயனுக்கு நிகர் அவனே. பல்வேறு இன்னல்கள், கொலை அச்சுறுத் தல்கள் மத்தியிலும் துணிந்ததை 25 வருட காலத்தை கடந்து வந்துள்ள உதயன் மேலும் பல்லாண்டுகள் மக்கள் சேவை யாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

''துணிச்சல் மிக்க ஊடகம்'' விருதைப் பெற்ற உதயன் மேலும் மேலும் மக்கள் சேவை யாற்ற வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

**மக்கள் காதர்,**
*ஊடகவியலாளர்,மன்னார்.*

## இன்றுபோல் என்றும் மிளிர்க...

இந்த ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி (இன்று) 'உதயன்' தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.



யாழ்ப்பாணத்தில் வசித்த மக்கள் செய்தித் தொடர்புகள் எதுவுமின்றி இருந்தமையும், வலிகாமம் மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தமையும் எனது ஞாபகத்திற்கு வருகின்றன. வஞ்சம் நிறைந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும் உதயனின் சேவை வடபகுதி மக்களுக்குத் தடையின்றிக் கிடைத்தது. அங்குமிங்கும் ஓடித் திரிந்த உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் தவறிய தமது உறவுகளைத் தேடியபோது உதயன் மட்டுமே தவறியவர்கள் தொடர்பான தகவல்களை அவர்களுக்கு வழங்கினார்கள்.

பிரச்சினையான காலகட்டத்தில் மக்களுக்குத் துணிவுடன் சரியான தகவல்களை வழங்கியமை தொடர்பாக உதயன் பெருமிதம் கொள்ளலாம்.

தற்போது வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் தமிழ் பேசும் மக்கள் உதயனின் இணையத் தளம் மூலமாகவே தகவல்களையும் தமது தாயக பூமி தொடர்பான செய்திகளையும் அறிய முடிகின்றது.

எதிர்காலத்திலும் உதயன் வெளியீட்டகத்தின் ஊழியர்கள் தடையின்றித் தமது கடுமையான பணியை மேற்கொள்ள எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி சாபா. ஜோதிலிங்கம்**
*லண்டன்.*

## ஊடகப்பணி தொடரட்டும்

பல இன்னல்களைச் சுமந்து உயிர்களை இழந்து பல இடர்களைத் தாண்டி எதிர்ப்பு களுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து தமது பணியினை ஒரே நோக்கமாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் அசையாத இடத்தை பெற்று மக்கள் மனதில் நீங்கா இடத்தைப் பெற்று நிக்கும் உதயனே. வெள்ளிவிழா வாழ்த்துகிறேன். அசையாத ஆசிரியர், அயராத பணியாளர், அன்பான ஆதரவாளர் அனைத் தும் உள்ளடக்கி அரசியல் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள் விளையாட்டுச் செய்திகள், பிரதேச செய்திகள் இவை மட்டுமன்றி மாணவ மாணவிகளுக் கான கல்வி சுடர் இளஞ்சிறார்களுக்கான இளந்தளிர் போன்ற பல விடயங்களைத் தாங்கியும் உண்மைச் செய்திகளை பக்கம் சாராமல் பறைசாற்றி நிற்கும் உதயன் பத்திரிகையே வெள்ளிவிழா காணும் உன்னை மனதார வாழ்த்துகிறேன். உன் புகழ் எட்டுத் திக்கும் பரவி மக்கள் மனதில் நீங்கா இடத்தைப் பெறவேண்டி இறைவனைப் பிரார்த் திக்கின்றேன்.

**சிலைபுநர் தவம்,** முல்லைத்தீவு
*ஊடகவியலாளர்.*

உதயனுக்கு இன்று பிறந்தநாள்

## பல்லாண்டு காலம் பணிசெய்க

உதயன் இன்றுவரை வெளிவந்து 25 ஆண்டுகளைப்



பூர்த்தி செய்வதையிட்டு உதயன் வாசகர் மற்றும் முன்னாள் ஊழியர் என்ற வகையில் பெருமைப்படுகிறேன். ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை உதயன் கடந்து வந்த பாதை மிகக் கடுமையானவை. சோதனைகள் கெடுபிடிகள் சொல்லில் அடங்கா. இந்திய இலங்கை இராணுவங்களின் கெடுபிடிகளைப் பல சந்தர்ப்பங்களில் எதிர் கொள்ள நேர்ந்தது. மேலும் எமது இனத்தின் விடுதலைக்காகப் புறப்பட்ட அமைப்புக்களின் அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள் கொஞ்ச நஞ்சமல்ல. இத்தனையையும் தாண்டி இன்று வரை உதயன் வெளிவருவது புதுமையே. உதயன் மீது அரசின் கெடுபிடிகள் தொடர்ந்த வேளையில் துணிச்சலுக்கான விருது உதயனுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு கஷ்டங்களை நிர்வாகம் எதிர் கொண்ட வேளையில் பல ஊழியர்கள் அவர்களது உயிர்களைப் பறிகொடுக்கும் துன்பியல் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

உதயன் நிறுவனத்தில் நான் சுமார் 15 ஆண்டுகள் பல்வேறு பதவிகளை வகித்து நிர்வாகத்தினதும் வாசகர்களினதும் தேவைகளை முடிந்தளவு பூர்த்தி செய்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

நான் தற்போது பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்றேன். இதற்கும் உதயனே காரணமாகும். உதயன் ஊழியன் என்ற வகையில் கெடுபிடிகள் காரணமாக நாட்டில் நின்மதியாக வாழமுடியாத நிலையில் புலம்பெயர்ந்து பிரான்ஸ் வந்தேன். இருப்பினும் இங்கிருந்தவாறும் தினமும் உதயன் பத்திரிகை வாசிக்கத் தவறுவதில்லை. எல்லைகள் அந்த ஊடகவியலாளர்களின் சம்மேளனத்தின் (R.S.P) தலைமையகம் பிரான்சில் உள்ளது. அவர்கள் உதயன் எதிர் நோக்கும் தொல்லைகள் குறித்து நன்கு அறிவர். அவர்கள் உதயன் மீது வைத்துள்ள கௌரவம் என்னை ஆச்சரியப்பட வைத்தது. இம்மாதம் 27 ஆம் திகதி தனது 25 வயதைப்பூர்த்தி செய்யும் உதயன் தொடர்ந்து பல்லாண்டு வெளிவர எனது வாழ்த்துக்கள்.

**அ.முத்துலிங்கம்(கஜனி),**
*உதயன் முன்னாள் ஊழியர், பாரிஸ்.*

## அஞ்சாது வீறுநடை போடும் உதயன்

எங்கள உதயன் இருபத்தைந்தாவது அகவை அடைகிறான் என்பதை அறிய மட்டற்ற மகிழ்ச்சி ''பஞ்சம் படை



வந்தாலும் பாரெல் லாம் வெந் தாலும் அஞ்சுவமோ நாங்ளெடி ஆறு முகன் தஞ்சமடி'' என்ற யோக முனியின் நற்சிந் தனைக்கு ஏற்ப எத்தனை துன்பங்கள் கண்ட போதும் அஞ்சாது வீரநடை போடும் உதயனை வாழ்த்த வாயில்லை.

பல்லாண்டுகளுக்கு முன் யோகர் சுவாமிகள் ஆச்சிரமத்தில் நடந்த ஒரு நிகழ்வு இத்தருணத்தில் ஞாபகம் வருகிறது. ஈழநாடு முதல் இதழை ஆசிரியர் கபி.கரன் ஐயா யோகர் சுவாமிகள் காலடியில் சமர்ப்பித்தார். அப்பொழுது அப்பத்திரிகையை ஆசிர்வதித்து யோகர் சுவாமிகள் கூறிய வார்த்தைகள் ''எரிப்பார்கள் அடிப்பார்கள் கொளுத்துவார்கள் உண்மையை எழுது உண்மையாய் எழுது'' இது போல உத யனும் சந்தித்தது கொஞ்ச நஞ்சம் அல்ல என்பதை எல்லோரும் அறிவோம். உதயனுக்கு இன்னொரு பெருமை தற்போது அமைந்துள்ள காரியாலயம் கஸ்தூரியார் முத்துகுமார் வளவு யோகர்சுவாமிகளின் பொற்பாதம் அடிக்கடி பதித்த இடமாகும். கஸ்தூரியார் டாக்டர் பசுபதி ஆயுள்வேத வைத்தியர் பரராசசிங்கம் ஆகியோர் நடத்திய சிகிச்சை நிலையம் அமைந்துள்ள இடத்தில் யோகர் சுவாமிகளை அடிக்கடி காணலாம். ஏழை எளியவருக்கு இலவச வைத்தியத்தை இவ்விரு வைத்தியரும் வழங்கியதை எவருமே அறிவர். இவ்விடத்தில் உதயன் அமைந்திருப்பது சால பொருத்தமாகும்.

உலகத்திலுள்ள தமிழர்கள் அமெரிக்காவில் இருந் தாலும் சரி ஆபிரிக்காவில் இருந்தாலும் சரி உதயன் இதழை நாள் தோறும் இணையம் மூலம் பார்ப்பதை நான் நன்கறிவேன். உதயனை பார்க்கும் போது நாங்கள் சொந்த ஊரில் இருப்பது போன்ற ஒரு பிரமை. இது வார்த்தைகளால் விபரிக்க முடியாது. அனுபவித்து உணர வேண்டும்.

உதயன் மென்மேலும் பிரகாசிக்க நல்லூரானின் அருளாசி வேண்டி அதை வெளியிட்டும் நிறுவனத்தாருக்கும் பிரதம ஆசிரியருக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

**ம.சிவயோகசுந்தரம் (நல்லூரான் சிவா)**
*பொறியியலாளர், பொஸ்ரன் அமெரிக்கா.*

## உதயன் தன் வழியில் தொடர்ந்தும் தொண்டாற்றுக........

'உதயன்' பத்திரிகை தனது 25ஆவது அகவை



நிறைவை இன்று கொண்டாடுவதையிட்டு மனம் பூரிப்படைவதுடன் அதன் அபிமான வாசகர் மட்டுமன்றி அதன் முன்னாள் ஊழியர் என்ற வகையிலும் பெருமையும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நமது பிரதேச மக்களுக்கு 25ஆண்டு கள் வழித்துணையாகவும், திசைகாட்டியாக வும் திகழ்ந்து அவர்களை சரியான பாதையில் நடத்திச் சென்ற - செல்கின்ற ஒரு பத்திரிகை 'உதயன்' என்பதை மறுப்பதற்கில்லை.

இன்று நாடு இருக்கின்ற நிலையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரலாய்த் திகழ்ந்து இன்னும் பற்பல ஆண்டுகள் உதயன் நீடித்து நிலைக்க வேண்டும் என்று பிரார்த்திக் கின்றேன்.

கொடிய போர் ஒன்றினை எதிர்கொண்டு சொல்லொணாத் துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்து முகாம்களிலும், மீள் குடியேற்றம் என்ற கொட்டில்களிலும் இன்னமும் தவித்துக் கொண்டிருக்கின்ற எமது உறவுகளுக்கு உதயன் தன்வழியில் தொடர்ந்து தொண்டு ஆற்றும் என்பதில் சந்தேகமில்லை.

அன்றாடம் நாட்டின் நடப்புகளையும், செய்தித் தகவல்களையும் அள்ளி வழங்குவது மட்டுமன்றி மாணவர்களுக்கான விடயங்கள், அரசியல் கட்டுரைகள், வைத்திய ஆலோசனைகள், பொது அறிவு, பொருளாதாரம், கலை, கலாசாரம் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான அம்சங்களென தினசரிக் களஞ்சியமாக புதுப்பொலிவுடன் வெளிவரும் 'உதயன்' இன்னும் பல்வேறு வகையில் அம்சங்களைத் தாங்கி வெளி வரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திருமதி ஈஸ்வரி பெருமாள்**
*முன்னாள் விளம்பர முகாமையாளர், உதயன்*

## இருண்ட யுகத்தில் ஒளிரும் காலவிளக்கு

இன்று
அகவை இருபத்தைந்தை கடந்து
நகர்ந்து கொண்டிருக்கிறாய்
எம்மினத்தின் வலிகளோடும்
உணர்வுகளோடும் நெருக்கமாகி
அடக்குமுறைகளில் இருந்து
உடைப்பெடுத்தாய்
உலகின்
கோட்டை கோபுரங்களது வாசலில் ஏறி
துயரைச் சொன்னாய்
யுத்தம் கொட்டி விட்டுப்போன தீயில்
எரிந்து சாம்பரான தேசத்தாயின்
வடுக்களை
பீனிக்ஸ் பறவையாய் உரைத்தாய்
இடர்கள் குறுக்கிட்ட போதும்
நீ துணிந்து எழுதிக் கொண்டிருந்தாய்
காயம்பட்ட உனது பேனா
நேர்கோடாய்
உமிழ்கிறது நியாயத்தையும்
நீதியையும்
உதயனே என்றைக்கும் - நீ
இருளடைந்த இந்த யுகத்தில்
எம்மினத்தின் காலவிளக்காய் இரு.

**சுமத்ரன் - (சுதேசிகன்)**
*சுவிஸிலிருந்து முன்னாள் உதயன் செய்தியாளர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

மக்களின் நன்மதிப்புடன் நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்

Oral And Dental Wing of Mc Leod Hospital Inuvil.

இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின்
வாய் பல் சிகிச்சைப் பகுதி (இணுவில் ஆஸ்பத்திரி)

அதி உன்னத உபகரணங்கள், வசதிகள் கொண்ட (Air Rotor Dental Unit) இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய், பல் சிகிச்சைப் பகுதிக்கு வருகை தந்து நவீன முறையில் சிகிச்சை பெறுங்கள். தேவையேற்படின் கொழும்பிலிருந்தும் அதி உன்னத நிபுணர்களை இச்சிகிச்சைப் பகுதிக்கு வரவழைக்க சந்தர்ப்பம் உண்டு.

Dr.R. விசாகரூபன், பல் வைத்திய நிபுணர்

தொ.பே: 021 222 7669, 0779060767, 0776171451.



தினமும் உதயவேளையில் உதயமாகும் உதயன்
நூற்றாண்டு விழாக் காண எமது வாழ்த்துக்கள்

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

இல.108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:இல.262, கண்டி வீதி, சாவகச்சேரி.

★ புத்தம் புதிய தரம்மிக்க மோட்டார் சைக்கிள்களா?
★ M.D. - 90 மற்றும் றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா?
★ அவற்றுக்கான உதிரிப்பாகங்களா?
★ பற்றறி வகைகளா? ★ அஸிட் வகைகளா? ★ சோலர் வகைகளா?

இவை அனைத்தையும் ஓரிடமாகவே
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!



அருள் விநாயகர் றேடர்ஸ்

இல.106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 222 5558
கிளை: மெயின் வீதி, சங்கானை.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நிகழ்வுகளின் ஒளிப் பதிவுகளை உடனுக்குடன் பார்வையிட : www.uthayanonline.com

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழாக தொடர்ந்து வெளிவர வாழ்த்துக்கள்

சாரங்கா நகைமாடம்

157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972, 8917, 2480, Fax. No: 222 8869

இணை நிறுவனம்
சாரங்கா ஜுவல்லறி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11,
TEL: 2434971. FAX: 0112434071

தளராத துணிவோடு தொடர்ந்து வெளிவர மேலும் வெள்ளி விழா வாழ்த்துக்கள் உரித்தாகுக

அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்கு தருபவர்கள்

நிஷானந்தா ஜுவல்லறி

இல.6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2227985

யாழ்.மண்ணில் தொடர்ந்து முதற் தர நாளேடாக
வெளிவர எமது வாழ்த்துக்கள்

நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

சிறி சிவாஞ்சனா நகையகம்

இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 9227

வியதகு சாதனைகள் புரிந்து வெள்ளிவிழாக் காணும் உதயனுக்கு வாழ்த்துக்கள்

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

ஜுவெல் பிளாசா

இல. 91,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

ஜுவெல் பிளாசா
Jewel Plaza




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN









உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள www.uthayanonline.com


**Midea Electro Mart**

**Authorized Dealer For Abans Ltd.**

தடைகளை தகர்த்து மலைபோல நிமிர்ந்து
தமிழ் மக்களின் பிரச்சினைகளை தொடர்ந்து
துணிவுடன் வெளிக்கொண்டுவர
எமது வாழ்த்துக்கள்

| COMPACQ CQ3014 DESKTOP.PC | |
|---|---|
| PROCESSOR | Intel gore 2 Due 2.8Ghz E7400 |
| MEMORY | 2GB DDR2 |
| HARD DISK | 310GB 30Gb/s Hard Disk |
| DISK DRIVE | DVD Writer |
| MONITOR | 19th L.G.LCD |
| UPS | Toyostar, 650 VA |
| SPEAKER | 900W |
| MOUSE | Compacq |
| KEYBOARD | Compacq |
| | 75,900 |

D.Link Router 7900
Logitech webcam 2490

PRINTER
HP 1005 Laserjet - 16500
HP deskjet 3920 - 6500

SCANNER
CANON LIDE 100 - 6900
HP G2410 - 9900

| LAPTOPS | COMPACQ 420 | PROLING MINI |
|---|---|---|
| PROCESSOR | Intel Core 2 Duo 2.2Ghz E7400 | Atom Intel 1.6Ghz |
| MEMORY | 2GB DDR2 | IGB |
| HARD DISK | 500GB HDD | 160GB |
| DISK DRIVE | DVD Writer | Nill |
| CAMERA | Web Camera | WebCamera |
| MONITOR | 14.6' | 9" |
| OTHERS | WIFI Blue Tooth | WIFI Blue Tooth |
| | 72,900 | 46,900 |

| PERSONAL PC SYSTEM | INTEL ATOMPC SYSTEM | INTEL DUAI CORE PC SYSTEM | INTEL CORE 2 DUO PC SYSTEM |
|---|---|---|---|
| PROCESSOR | Intel Atom 1.6 GHZ | Intel Dual core 2.7 GHZ | Intel core 2 Duo 2.93 GHZ |
| MOTHER BOARD | Intel 945 GNL Main Board | Intel Chipset G31 Main Board | Intel Chipset G31 Main Board |
| MEMORY | IGB DDR - II, 800MHZ | IGB DDR - II, 800MHZ | IGB DDR - II, 800MHZ |
| HARD DISK | 250GB SATA - 7200RPM | 250GB SATA - 7200RPM | 250GB SATA - 7200RPM |
| DISK DRIVE | LG DVD Writer | LG DVD Writer | LG DVD Writer |
| CASING | ATX 500W Ccivo | ATX 500W Ccivo | ATX 500W Ccivo |
| MONITOR | 16" LCD AOC 40,900 | 16" LG LCD 45,900 | 19" LG LCD 54,900 |
| KEYBOARD | Multimedia ps/2 | Multimedia ps/2 | Multimedia ps/2 |
| MOUSE | Optical USB/Ps2 | Optical USB/Ps2 | Optical USB/ps2 |
| SPEAKER | Genius Multimedia 900W | Genius Multimedia 900W | Genius Multimedia 900W |
| UPS | Toyostar 650 VA | Toyostar 650 VA | Toyostar 650 VA |

**Abans** உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தைப் பெற்றிடலாம்.
* Computers - Three Years Warranty
* Fridge and washing machine - Five Years Warranty

No: 1-I, 1-H, STANLEY ROAD, JAFFNA, SRI LANKA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646,
E.mail: midea21@gmail.com




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN




மகத்தான சேவையினால் மக்கள் மனம் கவர்ந்த நாளேட்டுக்கு எமது வாழ்த்துக்கள்

L

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவாக
சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு

## கிருபா லேணர்ஸ்

Reg.No: D3/589 அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

ஆண், பெண் இருபாலாருக்கும் அனுபவம் வாய்ந்த
ஆசிரியர்களால் மும்மொழிகளிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தலைமைக் காரியாலயம்: 22G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224353, 0777225292,0715364822
கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி. 0213006550, 0718799190
கிளை: ஐயனார் வீதி, கச்சேரி அருகில், கிளிநொச்சி. 021 228 5505, 0777238600

## த சாரிகா லேணர்ஸ்

TCL

'A' வகுப்பு சாரதிப் பயிற்சிக் கல்லூரி

அனைத்து வாகனங்களுக்கும் சிறந்த வாகன
ஓட்டுநர் பயிற்சி வழங்கப்படும்

L

விசேடமாக உழவு இயந்திரப் பயிற்சியும்
பெண்களுக்கு மாருதி சுசுக்கி காரில்
பாதுகாப்பான பயிற்சியும்
அடிப்படை இயந்திரத் தொழில்நுட்ப
பயிற்சியும் வழங்கப்படும்.



உரிமைக்காகக் குரல் கொடுத்து உயர
எழுந்த உதயனே வாழி! வாழி!!



இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

சிட்டுக்குருவி போல் உயர்ப்
பறந்து நூற்றாண்டு விழாக்
கொண்டாட எமது
வாழ்த்துக்கள்

## ராஜா

கிறீம் ஹவுஸ்

குளிர்ச்சியின் சிகரம் ராஜா! அறுசுவையின் சின்னம் ராஜா!

சுகாதார முறைப்படி, தரமான சுவைகுன்றாத தயாரிப்புக்களே ராஜாவின் இத்தனைகால
சேவையின் முத்திரை! கொழுத்தும் வெய்யிலிலும்
உங்களைக் குளிர்ச்சியில் மூழ்கடிக்க
புத்தம் புதிய வகைத்
தயாரிப்புக்களுடன் உங்களைக்
வரவேற்கின்றது.



**ராஜா கிறீம் ஹவுஸ்**

36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மக்களின் பிரச்சினைகளைத் தொடர்ந்து புட்டுக்காட்டி பல்லாண்டு காலம் வெளிவர எமது வாழ்த்துக்கள்

## V.S.P லஞ் ஒயில்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 2224135, 2229165.

உணவுத் தேவைகளுக்குச்
சுத்தமாகத் தயாரிக்கப்படுகிறது



எமது நிறுவனத்தின் vsp லஞ் ஒயில் கொழும்பு வாழ் மக்களின் நலன்கருதி கொழும்பிலும் விற்பனையாகிறது.

பல தடைகளைக் கடந்து,
இன்று 25 ஆவது அகவையினைப்
பூர்த்திசெய்யும் உதயனுக்கு
எமது வெள்ளிவிழா வாழ்த்துக்கள்.

LG 1 No Dealer in SriLanka



Fridge, Deep freezer, Bottle cooler, Airconditioner, T.V. மற்றும் சகலவிதமான மின்சார இலத்திரனியல் உபகரணங்களை அபான்ஸ் நிறுவனத்தின் உத்தரவாதத்துடனும் இலவச விநியோக சேவையுடன் பெற்றுக்கொள்ள

## LG JAFFNA ELECTRICAL

Authorized Dealer for Abans

**Show Rooms :**

141,Power House Road,
Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No: 04,New Market,
Chavakachcheri.
T.P: 0213008702

No.135, A-9 Road,
Kilinochchi.
T.P: 021 492 5289.

Cool Line:
0777725258

94 (6), Stanley Road,
Jaffna.
021 222 2353

# உதயனின் 25 வருடகால வாசகன் ஒருவரின் நோக்கில்....

அந்தக் கவரொட்டி, போவோர் வருவோரைத் திரும்பிப்பார்க்க வைத்தது. "புதியவன் வருகிறான், புதினம் சொல்ல வருகிறான்" என்ற வாசகங்கள் வெளிப்பட, அழகிய வடிவமைப்பில் இருந்த அந்த விளம்பரத்தால் பாடசாலை மாணவனாகப் பஸ் ஏறிப் பயணம் செய்த நானும் ஈர்க்கப்பட்டேன். புதியவைகளைத் தரிசிப்பதில் இருந்த ஆர்வம் அந்தப் புதியவனையும் கண்டுவிட வேண்டும் என அவாவியது. 27.11.1985 - சாவகச்சேரிச் சந்தையில் மீசையரின் பேப்பர் கடையில் அந்தப் புதியவனைப் பெறுவதற்குப் பலர் முண்டியடித்தனர். சாவகச்சேரி நகரின் விற்பனை முகவராக இருந்த மீசையரிடம் பேப்பர் பெறுவதே தனிக்கலை. முண்டியடிப்போருக்கு ஏச்சும் பேச்சும் தாராளமாகக் கிடைக்கும். தூசண பூசணம் என்றும் அவரை அழைப்பர். உதயன் என்ற அழகிய திருநாமத்துடன் வெளிவந்த அந்தப் புதியவனைச், சிறியவனாகிய நானும் மிதிபட்டு நெரிபட்டு ஒருவாறு பெற்றுக் கொண்டேன். வெளிவந்த சிலமணித் துளிகளிலேயே எல்லாப் பத்திரிகைகளும் விற்றுத் தீர்ந்தன. ஈழநாடு, ஈழமுரசு என்ற இருபத்திரிகைகள் குடாநாட்டில் இருந்து வெளிவந்த சூழலில் புதியவனின் விற்பனை வேகம் அங்கு நின்றிருந்த பலரை வியப்பில் ஆழ்த்தியது. ஈழத்தமிழரை வழிநடத்தப் போகும் சக்தி இவனே என அன்றே குறிக்கப்பட்டது.

பத்திரிகைகள் பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் முக்கிய சக்தியாக விளங்குகின்றன. உலகளாவிய ரீதியில் வானொலி தொலைக்காட்சி இணையம் என இலத்திரனியல் ஊடகங்கள் பெருக்கெடுத்திருந்தாலும் பத்திரிகைகளுக்கு இருக்கின்ற தனிமரியாதை இன்னும் குறைவடையவில்லை. உலக மாற்றத்திற்கேற்ப ஈ - பேப்பர் என்றும் அவை தம்மை நிலைமாற்றித் தனித்துவத்தைப் பேணுகின்றன. இதற்கு உதயனும் விதிவிலக்கல்லன்.

1983 இல் ஈழ விடுதலைப் போராட்டம் கூர்மை பெற்றது. நாம் யார்? என்பதை உணர்வதற்கு 83 இல் இடம்பெற்ற போராட்ட முன்னெடுப்புக்களும் அன்று ஏற்பட்ட பெருங்கலவரமும் வழிவகுத்தன. இந்நிலையில் சொல்லாயுதங்கொண்டு மக்களை வழிநடத்தும் போர்க்குழந்தையாகவே உதயனின் பிறப்பு நோக்கப்பட்டது. உதய வேளையில் உங்களுடன்.... என்ற தலைப்பிட்டு அவன் வெளிப்படுத்திய எண்ணங்கள் பலரையும் யோசிக்க வைத்தன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகையாயின் ஈழ என்ற அடையுடன் வெளிவரும் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருந்த காலத்தில் 'உதயன்' என்ற பெயர் எவ்வாறு பொருத்தமுற அமையும் என்பதற்கான விளக்கத்தையும் உதயன் பிரசுரித்தான். எல் என்ற சொல் சூரியனைக் குறிக்கின்றது. சூரியனை வழிபாடாற்றும் மக்கள் வாழ்ந்த பகுதி எல்லம் எனப்பட்டது. இதுவே பின்னாள்களில் ஈழம் எனப்பட்டது. எனவே சூரியனைக் குறிக்கும் உதயன் என்ற பெயர் பத்திரிகைக்குப் பொருத்தமானது எனவும் சூரியன் இருளை நீக்கி ஒளியைத் தரும் என்ற நிலையில் உதயனும் எமது அஞ்ஞான இருளை நீக்கிப் புதிய ஒளியைப் பாய்ச்சுவான் எனவும் ஒரு விளக்கம் அமைந்திருந்தது.

உதயனுக்கென வடிவமைக்கப்பட்டிருந்த இலச்சினையும் கனதியானது. உண்மை -அஞ்சாமை -நடுநிலைமை என்ற வேட்கையுடன் உதயன் செய்திக் கணை தொடுத்து ஆற்றுப்படுத்துவான். வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல விரைவாகச் செய்திகளைப் பரப்புவான். சூரியக் கதிர்களுக்கு ஒப்பாக அவை விரைந்து வாசகர்களை வழிப்படுத்தும். இவற்றை உணர்த்துமாற் போல் இலச்சினை அமைந்திருந்தது. மூவேந்தர்களில் ஒருவரான சேர அரசர்களின் குறியீடாக விளங்குகின்ற வில், இலச்சினையில் இடம்பெற்றிருந்தது. கிழக்குத் திசை நோக்கிய காகிதம் சுமந்த பேனா அம்பாக உருவகிக்கப்பட்டிருந்தது. தமிழர் விடியலின் திசை நோக்கிய பயணம் இதுவெனப் புரிந்து கொண்டேன். வந்தனன் உதயனன், வந்தனன் என ஏழு குதிரைகளில் ஏறி உதயன் உதித்து வரும் காட்சியை முதல் நாள் இதழில் வீ.கே. எனப்படும் வீ. கனகலிங்கம் ஓவியமாக்கியிருந்தார்.

ஒரு ரூபா விலையில் நான்கு பக்கங்களுடன் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. திருக்குறள் பற்றிய அறிகைக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந் தது. வள்ளுவருடைய படத்துடன் தினமும் ஒரு குறளும் அதற்கான பொருள் விளக்கமும் இடம்பெற்றன. ஆரம்ப நாள் தொடக்கம் 1990 ஆம் ஆண்டுவரை இந்நடை முறையைக் காணமுடிகின்றது. பெரும்பாலும் ஆசிரியர் தலைப்புக்குப் பொருத்தமாக இக்குறட்பா அமைவதுண்டு.

சமூகப் பிரச்சினைகளைப் பேச்சு மொழியில் வாசகருடன் உறவாட வேண்டும் என்ற பெருவிருப்புடன் வித்தாரம் என்ற பகுதி 02.12.1985 முதல் ஆரம்பிக்கப்பட்டது. அரசியல், சமூகம், பொருளாதாரம், கலை, இலக்கியம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளின் பின்னணியில் இருக்கக்கூடிய விடயங்களை ஆழமாகவும் அகலமாகவும் ஆராய இப்பத்தியெழுத்து முயன்றது. இன்று ஞாயிற்றுக்கிழமைகளில் பிரபலம் பெற்றுத் திகழும் சந்தியாடிச் சோமுவுக்கு ஒப்பாக இப்பத்தியை இனங்காட்டலாம். மரண அறிவித்தல் அந்நாள்களில் 'நீத்தார் பட்டியல்' என்றே வெளிவந்தது. ஆனால் இன்று போலப் பட்டியலாகக் காண முடியாவிடினும் இடையிடையே ஒன்றிரண்டு அறிவித்தல்கள் ஆரம்ப காலங்களில் வெளிவந்தன. இதே போலத் திருமண அழைப்பையும் 'கல்யாண வைபோகம்' என்ற பெயரில் பிரசுரித்தனர். எதையும் வித்தியாசமாகச் செய்யும் ஆர்வம் உதயனிடம் வெளிப்பட்டிருந்தது.

இளைய தலைமுறையினரின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ் என்ற கவர்ச்சியான வாசகமும் பத்திரிகையின் அடியில் அழகுற அமைந்திருந்தது. முதியவர்கள் பலர் தமது இளமையை வெளிக்காட்ட உதயனைக் கைகளில் கொண்டு செல்வதைப் பெருமையாகக் கருதுகின்றனரோ என நையாண்டியும் செய்திருக்கிறேன். நான்கு பக்கங்களுடன் அகல வடிவமைப்பில் (Broad Sheet / Standard Size) உதயன் தன் பயணத்தைத் தொடங்கினான். இன்று உலகில் கையடக்கமான பொருள்களே பெரும் வரவேற்பைப் பெறுகின்றன. யாழ் வாசகர்கள் இதனை அன்றே உணர்ந்திருந்தனர். மக்களின் விருப்புக்கு மதிப்பளித்தும் பத்திரிகைத் தாளுக்கு அக்காலத்தில் அடிக்கடி ஏற்பட்ட பற்றாக்குறைகள் காரணமாகவும் 04.08.1990 தொடக்கம் சிறிய வடிவமைப்புக்கு (Tabloid size) உதயன் தன்னை மாற்றிக் கொண்டான்.

பத்திரிகையொன்றின் பணிகளாக அறிவித்தல் (Inform), அறிவுறுத்தல் (Instruct), விளக்குதல் (Interprit), மகிழ்வித்தல்(Entertain), வாணிபம் மேற்கொள்ளல் (Merchandise) என்பவற்றை இனங்காட்டுவர். உதயனும் இப்பணிகளை நிறைவேற்றக் கூடிய எத்தனங்களில் ஈடுபட்டான். தனது எண்ணங்களை ஈடேற்றவெனச் சகோதரச் சஞ்சிகைகள் மற்றும் பத்திரி கைகளையும் உருவாக்கினான். உதயன் தொடங்கி இரு மாதங்களைப் பூர்த்தி செய்வதற்கு ஒருநாள் முன்னதாக, அதாவது 25.01.1986 இல் சஞ்சீவி என்ற பெயரில் வாரவெளியீட்டை வெளிக்கொணர்ந்தான். வார இறுதி நாள் என்பது ஞாயிற்றுக்கிழமையே எனக் கருதப்பட்ட நிலையில் தமிழ் மரபுப் படியும் சோதிட முறைப்படியும் சனிக்கிழமையே வார இறுதிநாள் என்ற உண்மையை அன்று வாசகர் பலர் உணர்ந்தனர். சத்துவ குணத்தின் (தூய்மையின்) வெளிப்பாடாக அமையும் ஞாயிற்றுக்கிழமையே நமது வாரத்தின் ஆரம்ப நாள்.

சஞ்சீவி, குடாநாட்டு வாசகரின் அறிவுப் பசிக்கு அருமருந்தாக அமைந்திருந்தது. இன்று முன்னணி எழுத்தாளர்களாகத் திகழும் நடுத்தர வயதினர் பலருக்குச் சஞ்சீவியே ஆரம்பக் களம். கருத்துக் கலசம், சிறுவர் சுடர், நங்கை, குறுநாவல், சிறுகதை, வெள்ளித்திரை, கமமும் புலமும், சொற்சிலம்பம், பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம், உலக உலா, உள்ளும் புறமும், வாசகர் வாசகம் முதலிய அம்சங்கள் சஞ்சீவிக்கு அணி செய்தன.சஞ்சீவியில் வெளிவந்த அதிரடி அரங்கைப் படிப்பதற்குப் பலர் ஆர்வம் காட்டினர். சமூகத்தில் இடம்பெறும் முறைகேடுகள் இவ்வரங்கினூடாகச் சாடப்பட்டன. பெரும்பாலும் கல்வித் துறையினரே கருப்பொருளாகினர். இதைவிட வித்துவான் பதில்கள் என்றோர் பகுதியும் இளசுகளிடையே பிரபலம் பெற்றிருந்தது. இரட்டை அர்த்தம் தரும் பதில்கள் இடம் பெறுவதாக எழுந்த கண்டனத்தைத் தொடர்ந்து இப்பகுதி கைவிடப்பட்டது எனக் கொள்ளலாம்.

16.06.1990 திகதியுடன் சஞ்சீவி வெளியீடு(மலை - 5 சிகரம் 20) தற்காலிகமாகத் தடைப்பட்டது. பத்திரிகைக்குக் கடிதம் எழுவோருள் பலர் சஞ்சீவி வெளிவர வேண்டும் என வலியுறுத்திக் கடிதம் எழுதினர். இதற்கு மதிப்பளித்தும் யாழ்ப்பாண இடப்பெயர்வு, போர் அனர்த்தங்கள் யாவற்றுக்கும் இடம் கொடுத்தும் மீண்டும் 07.06.1997 தொடக்கம் சஞ்சீவி வெளிவரத் தொடங்கியது. ஆயினும் 06.05.2000 உடன் மீண்டும் சஞ்சீவி தடைப்பட்டது. இதனை ஈடுசெய்யும் வகையில் 04.01.2004 தொடக்கம் சூரிய காந்தி என்ற பெயரில் ஞாயிறு சிறப்பம்சம் ஒன்றை வெளிக்கொணர்ந்தனர். காலச் சூழ்நிலைகளால் பின்னாள்களில் 23.04.2006 ஆம் திகதியுடன் அதுவும் நின்று போயிற்று.

உதயன் ஆரம்பித்த காலப் பகுதியில் அவனுக்கிருந்த செல்வாக்கைக் கண்ட நிர்வாகத்தினர் அர்ச்சுனா என்ற சிறுவர் சஞ்சிகையையும் ஞானக் கதிர் என்ற சமய இதழையும் ஜோதிட ஜோதி என்ற மாத இதழையும் ஆரம்பித்தனர். இவையும் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன. ஆயினும் 1990 இல் எங்கள் பிரதேசங்களில் ஏற்பட்ட போர் நிலைமைகளாலும் பொருளாதாரத் தடைகளாலும் [illegible] பட்டுப்போயின.

யாழ். மண்ணின் களச் சூழல்களுக்கு முகங்கொடுத்துப் பத்திரிகையைப் பிரசுரிப்பதில் நிர்வாகத்தினர் பெரும் இடர்களை எதிர் நோக்கினர். யாழ். மண் போருக்கான களமாக அமைந்திருந்த நிலையில் உதயன் பணியகமும் தனது இடத்தை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. யாழ்..மின்சார நிலைய வீதி, கைலாசப்பிள்ளையார் கோவிலடி, கஸ்தூரியார் வீதி எனப் பல்வேறு இடங் களில் இருந்து உதயன் வெளிவந்தான். யாழ்ப்பாண மக்களுடன் தானும் சேர்ந்து இடம்பெயர்ந்து 14.11.1995 தொடக்கம் 19.04.1996 வரை சரசாலையில் உள்ள வீடொன்றிலிருந்தும் உதயன் வெளிவந்தான்.

ஒரு ரூபாவில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையின் விலை அடிக்கடி ஏற்றம் கண்டு இன்று பதினைந்து ரூபாவாக ஆகியிருக்கிறது. சிறுகச் சிறுக ஏற்பட்ட விலை அதிகரிப்பு 01.07.2008 இல் பத்து ரூபாவில் இருந்து பதினைந்து ரூபாவாக அமைந்திருந்தது. விலை அதிகரிப்புக்களை வாசகர்கள் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டனர். வாசகர்கள் பத்திரிகை மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்பு, உதயனின் சுமைகளில் அவர்களையும் பங்கேற்கச் செய்தது. உதயன் - எங்கள் வீட்டுக் குழந்தை என்ற உணர்வையே வாசகர்கள் கொண்டிருந்தனர். உதயனுக்குத் துன்பம் ஏற்பட்ட போதேல்லாம் தாமும் கலங்கிக் குமுறினர். வெற்றிகள், விருதுகள் பெற்ற போதெல் லாம் தமக்குக் கிடைத்த விருதாக மகிழ்ந்தனர். பத்திரிகைத் தாளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட 1996 இல் மஞ்சள், வெளிர் பச்சை, வெளிர் சிவப்பு முதலிய நிறங்களிலெல்லாம் உதயன் வெளிவந்தான்.

உதயன் நிர்வாகத்தினர் தமிழுணர்வுகளுக்கு எதிரான சக்திகளால் அடிக்கடி மிரட்டப்பட்டனர். வாசகர் பலம் என்ற மூலவேரின் சக்தியைப் புரிந்த உதயன் இவையெல்லா வற்றையும் கண்டு அஞ்சவில்லை. ஆனால் ஒரு காலகட்டத்தில் சில சக்திகளின் அழுத்தங்கள் காரணமாக உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை என்ற வாசகத்தை நீக்கிச் செயற்பட்ட நிலை யையும் இங்கு குறிப் பிட்டாக வேண்டும். உதயன் மீதான எதிர்ப்பின் மிக உச்ச வெளிப்பாடு 02.05.2006 அன்று முன்னிரவில் இடம்பெற்றது. உதயன் அலுவலகத்திற்குள் புகுந்த ஆயுததாரிகள் வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். விற்பனை முகாமை யாளர் உட்பட இருவர் பலியாகினர். இருவர் காயமடைந்தனர். பல பெறுமதியான உடைமைகள் அழிக்கப்பட்டன ஆனால் உடனடியாகவே தன்னைச் சுதாகரித்தவன் வாசகரை நம்பி உயிர்த்தெழுந்தான். மறுநாள் காலை நான்கு பக்கங்களுடன் உதயன் வெளிவந்து தனது உயிர்ப்பைக் காட்டி மக்களை ஆறுதலடைய வைத்தான். உதயன் அலுவலகத்தில் இடம்பெற்ற அச் சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் 04.05.2006 இல் மக்கள் ஒன்றுபட்டு அமைதியாகக் ஹர்த் தாலில் ஈடுபட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.



ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

உதயன் விருதுகளைப் பெறுகின்ற போது வாசகர் மனங்களில் மகிழ்ச்சி பிரவாகித்தது. இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் அவையினால் வழங்கப்பட்ட 1998 ஆம் ஆண்டுக்கான துணிச்சலான பத்திரிகைக்கான சோபலி குணசேன விருது, இலங் கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து வழங்கிய 2008 ஆம் ஆண்டுக்கான சிறந்த இதழியல் பெறுபேற்றுக் கான விருது. மக்கள் சேவை ஊடகம் மற்றும் சகிப்புத் தன்மைக்கான ஊடக விருது ஆகியவற்றை உதயன் பெற்ற போது வாசகர்கள் மட்டற்ற மகிழ் வெய்தினர். சமூகப் பெரியோர்கள் பத்திரிகை மூலம் பாராட்டுக்களைப் பகிர்ந்து கொண்டனர். இவை தவிர, இந்த ஆண்டில் உதயன் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் தனது 48 வருட பத்திரிகைப் பணிகளுக்குப் பெற்ற கௌரவமாக, இலங்கைப் பத்தி ரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் இணைந்து வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுக் கொண்டதும் உதயனுக்கும் பெருமையே.

உலகு இன்று இணையப் பின்னலால் இணைக்கப் பட்டிருக்கின்றது. இணைய வலையில் அகப்படக் கூடிய ஒரு முத்தாகவும் உதயன் விளங்குகின்றான். 2000 ஆம் ஆண்டில் உதயன் இணையத் தளப் பதிப்பிற் கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் 2003 ஆம் ஆண்டிலேயே உதயனின் இணையப் பதிப்பு வெளிவரத் தொடங்கிற்று. இன்று அச்சு வடிவில் பயன் கொள்வோரை விட "ஈ - பேப்பர்" வடிவில் உதய னைப் படிப்போர் எண்ணிக்கை அதிகம் என அறியமுடிகின்றது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலத் தமிழர் வாழ்விய லுடன் உதயன் பின்னிப்பிணைந்து நிற்கின்றான். மண்ணினதும் மக்களதும் இருப்பை வெளிப்படுத்தும் குரலாக உதயன் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக் கின்றான். உதயனின் பயணம் சாதனைப் பயணமா கவே கொள்ளப்படுகின்றது. இப்பயணத்தின் வலிகளும் சுமைகளும் பெற்ற உயர் தகைமைகளும் நூலுருவில் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

மூவேந்தர் காலந்தொட்டுத தமிழரிடையே ஒற்றுமை நிலவுவதாக இல்லை எனக் குறை சொல்லப்படு வதுண்டு. இந்நிலையில் அரசியலில் எம்மினத்தை ஆற்றுப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு உதயனுக்கு இருக்கின்றது. ★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## உதயனும் வளர்ந்தான் நானும் வளர்ந்தேன்

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு நாளாந்தப் பத்திரிகையா? அதுவும் "உதயன்" என்ற பெயரிலா, என்ற பல்வேறுபட்ட மக்களின் பேச்சுக்கு நடுவே, ஏற்கெனவே மூன்று பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த நேரத்தில் மூன்றாவது பத்திரிகையாக உதயன் வெளிவந்தது. - அதுவும் மற்றப் பத்திரிகைகளைப் போல் வார இதழாக வெளிவந்து மக்களின் நாடித் துடிப்பை அறிந்த பின் நாளாந்தப் பத்திரிகையாக உதயன் வெளிவரவில்லை.



காலையில் சூரிய உதயம் எப்படி மக்களுக்கு இதமான ஒரு விடியலைத் தருகிறதோ, அதே போலத்தான் உதயனும் மக்களின் இதயங்களுக்கு உண்மையான விடியல் செய்திகளை எடுத்துச் சென்றது. ஆனாலும் சூரிய உதயனின் முன்பாக உதயன் மக்கள் முன் உதயமாகி விடுவான். இதுதான் உதயனின் வளர்ச்சிக்குக் காரணம். முற்றிலும் வித்தியாசமாக, பெரிய அளவில் கதை சொல்லும் கறுப்பு வெள்ளைப் படங்களுடன், முழுமையான செய்திகளுடன், "முச்சந்தி முரளி" யின் அதிரடி அட்டகாசங்களுடன் எடுத்த எடுப்பிலேயே நாளாந்தப் பத்திரிகையாக "உதயன்" வெளிவந்து, அனைத்து மக்களிடத்திலும் பெருத்த ஆதரவைப்பெற்று, பல சவால்களையும், பல போராட்டங்களையும், பல இழப்புகளையும் சந்தித்த போதும் ஒன்றுக்கும் கலங்கிடாமல் பல நெஞ்சுரம் கொண்ட பணியாளர்களையும், செய்தியாளர்களையும், பல்லாயிரக்கணக்கான வாசகர்களையும் சுமந்து கொண்டு உதயன் என்ற கப்பல் பயணித்து 25ஆவது அகவையும் கடக்கிறது என்றால் அது ஒரு மாபெரும் சாதனை. தலை வணங்கி வாழ்த்துகின்றேன்."வாழ்க உதயன், வளர்க உதயன் குடும்பத்தினர். "நான் எப்படி வளர்ந்தேன்...... அன்றொரு நாள் பிரதம ஆசிரியர் என்னை அழைத்து யாழ். கச்சேரியில் ஒரு கூட்டம் நடக்கிறது போய் செய்தி சேகரித்து வாரும் என என்னை அனுப்பினார். நானும் பத்திரிகைத்துறைக்கு அன்றைய காலகட்டத்தில் புதியவன், கச்சேரிக்கு சென்று செய்தி சேகரித்து அதனை செய்தியாக எழுதி செய்தியாசிரியரிடம் கொடுத்துவிட்டு நான் வீட்டுக்குச் சென்றுவிட்டேன். அடுத்த நாள் காலையில் முதல் பக்கத்தில் நான்கு கலத்தில் நான் எழுதிய செய்தியா இது என வியக்கும் வண்ணம் நல்லூர் செய்தியாளர் க.இரத்தின ராஜசிங்கம் என பெயரிட்டு வெளிவந்த செய்தியை பார்த்த எனக்கு பெரிய மகிழ்ச்சி, ஒரு பக்கம் இருக்க... இன்னும் மேலும் எழுத வேண்டும் என்ற எண்ணம் வெறி கொண்டது. அந்த வெற்றிக்கு வித்திட்டவர் எனது பெருமதிப்பிற்குரிய பிரதம ஆசிரியர் அவர்கள். அதே போல் ஒவ்வொரு இரவும் நான் உதயன் பணிமனைக்குச் செல்லும் போது இன்று தலைப்பு செய்தி கொண்டு வந்தீரா? என்று கேட்டு மாதத்திற்கு பத்து தலைப்பு செய்திகளாவது எழுதும் அளவுக்கு என்னை மாற்றியவரும் அவரே, அதேபோல் சம்பந்தப்பட்டவர் செய்தி சொல்வது போல் பத்திரிகை படிப்பவர்களுக்கு செய்தி இருக்க வேண்டும் என்றும் கூறி நாளாந்தம் என்னைப் பட்டை தீட்டிப் பார்த்தவரும் பிரதம ஆசிரியர் அவர்களே......அவர் எனக்கு எழுத்தாற்றலை ஊட்டி வளர்த் தார்....நான் உதயன் எழுந்து நிற்க வேண்டும் என ஓடி ஓடி பணி செய்தேன்... இன்று நானும் வளர்ந்துள்ளேன் எனது உதயனும் வளர்ந்துள்ளான். வாழ்க பல்லாண்டு பல்லாண்டு வாழ்க.

**க.இரத்தினராஜசிங்கம்,**
*உதயனின் ஆரம்பகாலச் செய்தியாளர்,*
*சென்னை தமிழ்நாடு முன்னாள் செய்தியாளர்*

## தனித்துவமான சேவை தொடரட்டும்

எமது அபிமான நாளிதழ் 'உதயன்' 25ஆவது அகவையைப் பூர்த்தி செய்து வெள்ளி விழாக் கொண்டாடுவதையிட்டு உவகையுறுகின்றேன்.



தமிழ் பேசும் மக்களின் இதயமாகவும், அவர்களின் ஏகோபித்த குரலாகவும் திகழ்ந்து கடந்த 25 ஆண்டுகளாக 'உதயன்' ஆற்றி வந்த பணி எவராலும் குறைத்து எடை போட்டிட முடியாதது.

தமிழ் பேசும் மக்களின் உள்ளக் குமுறல்களை, உணர்வுகளை, அவர்களது அவலங்களை எத்தகைய சவால்கள் வந்த போதிலும் புடம் போட்டுக்காட்டுவதிலும் சர்வதேசம் வரை ஒன்றிக்கச் செய்வதிலும் தனித்துவ முத்திரையுடன் பங்காற்றிய பெருமையும் உதயனைச் சார்ந்ததாகும்.

'உதயன்' பண்ணையில் வளர்ந்தவன், அதனால் புடம் போடப்பட்டவன் என்ற வகையில் அதன் வெள்ளி விழாவை யொட்டி வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். உதயனின் தனித்துவமும், சேவையும் பல்லாண்டு காலம் மேலும் சிறக்க எமது நல்வாழ்த்துக்கள்!

இதேவேளை ஊடகத்துறையில் என்னை வளர்ப்பதில் பெரும் பங்காற்றிய 'உதயன்' பிரதம ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பீட மூத்த உறுப்பினர்களின் அர்ப்பணிப்பான சேவையையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரக்கடமைப்பட்டுள்ளேன். என் இனிய நல்வாழ்த்துக்கள்.

**கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம்**
*தலைவர், தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்.*

## உதயனே நீ நீடு வாழி

கடந்த 25 வருடங்களாகத் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஒலித்து வரும் உதயன் வெள்ளி விழாச் சிறப்பிதழுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

உதயன் 1985 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்ட போது அதன் ஆரம்பகால பிராந்திய செய்தியாளர்களில் ஒருவராகப் பணியாற்ற எனக்கும் வாயப்பு கிடைத்தமையை நான் பெரும்பாக்கியமாகக் கருதுகின்றேன்.



உதயன் கடந்த காலங்களில் பல சவால்களையும், நெருக்கடிகளையும், இழப்புகளையும் சந்தித்த போதிலும் தைரியமாகவும், துணிவுடனும் அவற்றுக்கு முகம் கொடுத்து தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஒலிப்பதை எவரும் மறந்து விட முடியாது.

பிராந்தியப் பத்திரிகையாக வெளிவந்தாலும், ஈழத் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் தனியிடத்தைப் பிடித்துள்ள உதயன் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் அபிலாஷைகளுக்கு ஏற்ப தனது பணியைத் தொடர வாழ்த்துகின்றேன்.

**இரா.உதயகுமார்,** *முன்னாள் உதயன் செய்தியாளர், (செய்தியாளர் பிபிசி - மட்டக்களப்பு).*

## "சரி" எனப்பட்டதை சொன்னவன்

உதயன் இன்று தனது 25 ஆவது அகவையை பூர்த்தி செய்கின்றான். அவனது வளர்ச்சிப் பாதையில் பங்கு கொண்டவன் என்ற வகையிலும், எனது வளர்ச்சிக்கு களம் சமைத்தவன் என்ற வகையிலும் அவனது வெள்ளி விழா சிறப்பிதழுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதை பெரும்பேறாகக் கருதுகின்றேன்.



இலங்கையிலிருந்து வெளிவரும் தினசரி நாளிதழ் களில் உதயனுக்கு தனியிடமும், தனிவரலாறும் உண்டு. ஜனரஞ்சகம் என்பதற்கு அப்பால் சமகால அரசியல் அலைகளுக்குள் நின்று போராடி நிலைத்து நிற்கும் இரகசியம் தான் அவனது வரலாறு தனியிடம் பெறுவதற்குக் காரணம். உதயன் தனக்குச் சரி எனப்பட்டதை சரிவரச் சொல்லியவன். இதுவே அவனது வளர்ச்சிக்கும், நிலைபேற்றிற்கும் காரணமும் கூட.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மூலைமுடக்குகள் தோறும் அதிகாலைவேளை சென்று தகவல் வழங்குவதுடன், அறிவுப்பசிதீர்த்த "உதயன்" வெறுமனே செய்தி வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை உரிய முறைப்படியும் வெளியிட்டான். அத்துடன், அவை தொடர்பில் அவன் தொடர்ந்தும் உரிய கவனிப்பையும் செலுத்திவந்தான். இதனாலேயே உதயன் மீது மக்கள் கொண்ட நம்பிக்கை நாளாந்தம் பல்கிப் பெருகியது.

உதயனை வாங்கினால் நாளாந்தச்செய்திகளுடன் கல்வி, சமயம், விவசாயம், வர்த்தகம், கலை, விளை யாட்டு, வெளிவிவகாரம், புதியகண்டுபிடிப்புகள் உள் ளிட்ட இன்னோரன்ன விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம் என்ற மனப்பாங்கு யாழ். குடாநாட்டு மக்களிடையே புரவிப் போய்விட்டது. அத்துடன், தமிழ் மொழியின்தூய்மை பேணப்படவேண்டும் என்பது தொடர் பில் உதயனின் ஆசிரிய பீடம் காட்டும் அக்கறையும், ஈடுபாடும் குறிப்பிட்டு கூறப்படவேண்டியவை. தொடர்பாடல்துறையின் முக்கியத்துவம் கருதி அபிவிருத்தி திட்டங்கள் பலவும் முன்னெடுக்கப்பட்டு வரும் இன்றைய காலகட்டத்தில், பத்திரிகை நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பது என்பதும், அதனை இடையறாது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது என்பதும் எவ்வளவு தூரம் நெருக்கடி நிறைந்தது என்பதற்கு உதயனின் கடந்த 25 வருடகால வரலாறு சான்று பகரும். எனவே, உதயன் குடும்பம் இதுவரை சந்தித்த துன்ப துயரங்கள் எல்லாம் அகன்று நல்லதொரு சூழல் மலர அனைத்தும் வல்ல பரம்பொருளை மனதார வழுத்தி அமைகின்றேன்.

**இ.நித்தியானந்தன்,** *உதயன் முன்னாள் உதவி ஆசிரியர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், வவுனியா.*

## எதிர்காலம் சிறப்புறட்டும்

பத்திரிகை 25 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவருவது சாதாரணமாகத் தெரியலாம். ஆனால், வாய்கள் மௌனித்து ஆயுதங்கள் தேசிய காலகட்டத்தில் உதயன் மௌனிகளின் குரலாக 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து தொடர்ந்தும்வெற்றிகரமாக இயங்குவது சாதனையே.



உதயனின் ஆரம்பம் முதல் இன்று வரையுள்ள குறுகியகாலத்தில் இடைப்பட்ட பணியாற்றியவர்கள் கூட, மையினால் அச்சடிக்கப்படும் உதயன் இரத்தத்தால் அச்சிடப்பட்டதைக் கண்டிருப்பார். தோளோடு தோள் நின்று பணியாற்றிய தோழமையின் இழப்பு நெஞ்சையடைக்க, மறுநாள் பத்திரிகை வெளிவர வேண்டும் என்ற வேட்கையோடு வேலை செய்த அனுபவம் அவர்களுக்கு இருக்கும். இத்தகைய கடினமான பாதையில் கால் நூற்றாண் டைக் கடந்து தொடரும் உதயனின் பணியில், கால்வாசிக் காலம் உதயனின் ஊடக சேவைக்கு நானும் தோள் கொடுத் தேன் என்பதில் பெருமிதமடைகிறேன். ஊடக உலகம் பெருமை கொள்ளும் இவ்வேளையில், முன்னே விரிந்து கிடக்கும் நீண்ட பாதையில் உதயன் மேலும்சிறப்புடன்என்றும் போலவே வெற்றி நடைபோடட்டும்.

**ம.ஜெயகேஸ்வரன்** *உதயன் முன்னாள் உதவி ஆசிரியர்.*

## இதுவோர் இமாலயச் சாதனை

உதயன் பத்திரிகைக்கு வயது இருபத்தைந்து என்றதும் மிகவும் பிரமிப்பாக இருக்கின்றது. இதற்குக் காரணம் இத்தனை வருடங்கள் இந்தப் பத்திரிகை சோடை போகாமல் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது என்பதே.



இந்த இருபத்தைந்து ஆண்டுகளையும் திரும்பிப் பார்க்கும்போது இந்தப் பத்திரிகை கடந்து வந்துள்ள கால கட்டங்கள் நினைவில் வருகின்றன.

திரட்டப்பட்ட செய்திகளை பங்கருக்குள் இருந்து அச்சுக்குத் தயார் செய்தது இந்தப் பத்திரிகையின் ஆசிரியர்குழுவுக்குக் கிடைத்த ஒரு வித்தியாசமான அனுபவம். பகல் பொழுது கரைந்து, இருள் கவியத் தொடங்கியதும், கனத்த திரைச்சீலையால் மறைக் கப்பட்டுள்ள ஜன்னலுக்கு ஊடாக வெளிச்சம் வெளி யில் கசிந்துவிடக் கூடாதே என்ற உறையச் செய்யும் அச்சத்தோடு பத்திரிகையை அச்சுப் பதிவுக்கான வேலைகளை நடத்திய அந்தத் திகில் அனுபவம் வேறு எவருக்கும் ஏற்பட்டு விடக்கூடாது.

ஏனெனில் அந்தப் போர்ச் சூழலில் வெளிச்சம் தெரியும் இடத்தை நோக்கி விமானக்குண்டுகள் வீச்சோடு வந்து தாக்கி அழித்து விடும். இந்த விமானக் குண்டுக்கு அஞ்சியஞ்சி எத்தனை நாட்களுக்குத்தான் பத்திரிகை அலுவலகத்தில் வேலை செய்ய முடியும்? ஆனால் உதயன் பத்திரிகையில் செய்தியாளர்கள், உதவி ஆசிரியர்கள், ஆசிரியர் மற்றும் ஊழியர்கள் இருந்து பணியாற்றியிருக்கின்றார்கள். இத்தகைய சூழலில் உதயன் பத்திரிகையை அவர்கள் தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வந்திருக்கின்றார்கள்.

அது மட்டுமா? தொலைபேசியே இல்லாமல், வெளித் தொடர்புகள் எதுவுமே அற்ற நிலையில் செய்திகளைத் திரட்டிய இலாவகம், உதயன் அலவலகச் செய்தியாளர்களையும், உதவி ஆசிரியர்களையுமே சேரும். அதிலும் குறிப்பாக வானொலியில் பல்வேறு நிலையங்களுக்குத் திருப்பத் திருப்ப் இலங்கை பற்றிய செய்திகளையும், சர்வதேசத்துடன் தொடர்புடைய செய்திகளையும் தேடி எடுத்து செய்தியாக மக்களுக்கு வாசிப்பதற்கு அளித்ததை மறந்துவிட முடியாது.

அது மட்டுமல்ல கடுமையான காகிதத் தட்டுப்பாட்டிற்குள்ளேயும் உதயனை மக்கள் வாசித்தார்கள். பத்திரிகை அச்சடிக்கும் தாளை யாழ்ப்பாணத்தி;ற்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் புல்ஸ்காப் தாள் எனப்படுகின்ற கோடடிக்கப்பட்ட தாளிலும் பிரவுண் பேப்பரிலும், பிரிஸ்டல் போடிலும் உதயனை அச்சடித்து வெளியிட்டார்கள்.

போர்க்காலச் சூழலில் பல்வேறு நெருக்கடிகள், பற்றாக்குறைகள், அச்சுறுத்தல்கள், சவால்கள் என எல்லாவற்றையும் எதிர் கொண்டு உதயன் பத்திரிகை தனது ஊடகப் பணியை ஆற்றி வந்துள்ளது. இது ஓர் இமாலயச் சாதனை என்றால் அது மிகையாகாது.


இந்தச் சாதனைக்கு உதயன் பத்திரிகை கொடுத்துள்ள விலையும் அதிகம். உதயன் என்ற இந்த ஊடகக் குடும்பத்தில் ஆறுபேர் இந்தப் பயணத்தின் போது பலியாகிப் போனார்கள். நான்கு பேர் படுகாயமடைந்துள்ளார்கள்.

பேனையும் எழுத்தும் வலுவானதுதான். ஆனால், ஆட்கொல்லி ஆயுதங்களின் முன்னால் அவைகள் எப்போதும் நிமிர்ந்து நிற்பதென்பது இலகுவான காரியமல்ல. இந்த நிலையில் உதயனின் செய்தியாளர்கள் பலர் தமது தொழிலைக் கைவிட்டு, ஊரைவிட்டே வெளியேறினார்கள். ஆளணிப் பற்றாக்குறை ஒருபுறம். உயிர் அச்சுறுத்தல் இன்னொருபுறம்.

உதயனின் இருபத்தைந்து வருட கால ஊடகப் பணியைப் பற்றி முழுமையாக எழுதுவது என்பது ஒரு கடினமான வேலையாகும். அது சிறப்பாகச் செய்யப்பட வேண்டிய ஒரு பணி.

காலத்தின் தேவையறிந்து, கரடு முரடான ஓர் ஊடகப் பயணத்தை மேற்கொண்டு, கால் நூற்றாண்டை எட்டியுள்ள உதயன் இன்னும் பல நூற்றாண்டுகள் வாழ வேண்டும். உதயன் என்ற நிழலின் கீழ் பணியாற்றுகின்ற ஆசிரியர், செய்தி ஆசிரியர், உதவி ஆசிரியர்கள். பணியாளர்கள், ஊழியர்கள் அனைவரும் உடல், உள ஆரோக்கியத்தோடு நீண்ட காலம் வாழ வேண்டும். இதற்கு இறைவனருள் தொடர்ந்தும் கிட்ட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**பொன்னையா மாணிக்கவாசகம்**
உதயன் முன்னாள் செய்தியாளர்,
(செய்தியாளர் பிபிசி - வவுனியா)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

உதயனே உன் பணி மேலும் வீறுகொண்டெழ எமது வாழ்த்துக்கள்



பிள்ளையார் ரவல்ஸ்



யாழ்-கொழும்பு வான் சேவை

பிள்ளையார் களஞ்சியம்



பிள்ளையார் பன்சி ஹவுஸ்



பிள்ளையார் Food City

மது பன்சி ஹவுஸ்
021 222 7543



அனைத்தும் ஒரே கூரையின் கீழ் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்.வீதி மானிப்பாய். 021 225 5148

உரிமையாளரும் ஊழியர்களும்



ஈழத் தமிழர், புலம்பெயர் தமிழர்களை இணைக்கும்
உறவுப்பாலமாகத் தொழிற்படும் உதயனின் பணிதொடர வாழ்த்துக்கள்

22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

நேசம் அழகுமாடம்



பிரதான வீதி, சங்கானை.

தமிழ் மக்களின் முதற் தர தெரிவாய் தொடர்ந்தும் உதயன் மலர எமது வெள்ளிவிழா வாழ்த்துக்கள்

AHUJA

கோபுரம் சவுண்ட்ஸ்

இல.38, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



ஒலிபெருக்கி சாதனங்களும் அதற்குரிய
உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



Ithayam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN



ஆதித்தன் நாமங்கொண்ட அதிசிறந்த நாளேடே! நீ சாதித்த சாதனைகளோ பற்பல!! உதயனே வாழிய நீடூழி!!!

## ஆறுமுகம் சிற்பாலயம்

Specialist All Kinds of Wood Carvings, Sculptures, Temple Chariots, Vaganams, Rathams and etc...

**Arumugam Sitppalayam**

Kalikovilady, Thirunelvely West, Jaffna. T.P:021- 2222892





யாழ்.மண்ணிலே தொடர்ந்தும் முதற்தரமாய் கொடிகட்டிப் பறக்க எமது வாழ்த்துக்கள்

## சாரங்கன் பூஞ்சோலை

295 , பலாலி வீதி, ஆலடிச் சந்தி, திருநெல்வேலி.

- ★ நல்ல இன குறோட்டன்கள்
- ★ ஒட்டு றோசாக்கள் மற்றும் பூங்கன்றுகள்
- ★ ஒட்டு மா, ஒட்டுத்தேசி, ஒட்டுப்பலா மற்றும் பல பயன்தரு மரங்கன்றுகள்
- ★ சிமெந்திலான, பிளாஸ்ரிக்கிலான சாடிகள்
- ★ பூங்கன்றுகள் நோயின் தாக்கத்திற்கு உள்ளாகாமல் தடுக்கும் மருந்து வகைகள் போன்றவற்றை ஒரே இடத்தில் பெற நாடவேண்டிய இடம்

இதயத் தாகம் தீர்க்கும் எங்கள் 'உதயன்' நாளிதளுக்கு இன்று இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவு விழா வெள்ளி விழா ஆண்டில் வெகு சிறப்புடன் திகழ வாழ்த்துகின்றோம்.



## சுந்தர்சன்

SUNDHARSON

கடந்த 31வருடங்களுக்கு மேலாக மின்சார உபகரணங்கள், நீர்வழங்கும் PVC குழாய்கள் அதன் இணைப்புகள், அதிநவீன அலங்கார லைற் வகைகள், சுவர் லைற்றுக்கள், மின்விசிறிகள், குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், உயர் ரக கையடக்கத் தொலைபேசிகள், மனங்கவர் பரிசுப்பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும், உத்தரவாதத்துடன் நியாய விலைகளில் விற்பனை செய்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பையும், விருதுகளையும் பெற்றுத் தமக்கென தனி இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளவர்.

கொள்வனவு செய்யப்படும் பொருள்கள் இலவசமாக உரிய இடத்தில் சேர்க்கப்படும்.

**சுந்தர்சன்**

யாழ். வீதி, மானிப்பாய். தொலைபேசி இல: 021 225 5136



சவால்களை எதிர்கொண்டு சரித்திரம் படைக்க எமது வாழ்த்துக்கள்

கொழும்பு விலையைவிட குறைவான விலையில்...

## கபிலா

காலணியகம் — 24,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பாதணியகம் — 13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



கற்பகதரு போல் கரங்களில் தவழ்ந்திடும் உதயனின் வெள்ளிவிழா சிறக்க அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

றேடியோ, கசெற்ஸ், மின்விசிறிகள், VCD, DVD Player LCD T.V. மின்சார வீட்டுப் பாவனைப் பொருள் மற்றும் இலத்திரனியல் உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்.

திருத்திக் கொடுப்பதிலும் விசேஷமான நிறுவனம்

Sony யாழ்.விற்பனை முகவர்

## V.K.இராசரத்தினம்

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே 021 222 2056



பணிதொடர வாழ்க பல்லாண்டு!

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்



## பிறேம் நகைமாடம்

No.171, Prem Plaza,
Jaffna Road, Manipay.
T.P:0777241485, 0773039572
உரிமையாளர் : இ.பிறேம்குமார்



இதயங் குளிர இங்கிதமாய் மலர்ந்து எம்மை மகிழ்விக்கும் 'உதயன் நாளிதழே!' நீ உன்னதமாய் என்றென்றும் நீடூழி வாழியவே!

## சரவணா

Saravana Texs ரெக்ஸ்

இல.526, [illegible] யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 1723



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

# இடர்களைத் தாண்டிய இரண்டரைத் தசாப்தப் பணியில்....

### 1985

உதயன் குடாநாட்டின் மூன்றாவது இதழாக 27.11.1985 ஆம் திகதி பவனி வந்தான்.

### 1986

உதயன் தனது செய்திச்சேவையின் இரு மாதங் களைப் பூர்த்தி செய்வதற்கு ஒருநாள் முன்பதாக, அதாவது 1986.01.25ஆம் திகதி வெளியீடு - சஞ்சீவி - என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

பொதுவாக வார இறுதிநாள் என்பது அதுவரையில் ஞாயிற்றுக்கிழமையாகவே கருதப்பட்டது.

தமிழ் மரபுப்படியும், சோதிட முறைப்படியும் ஞாயிற்றுக்கிழமைதான் வாரத்தின் முதல்நாள். சனிக்கிழமையே வாரத்தின் கடைசிநாள். அதாவது, வார இறுதிநாள் சனிக்கிழமைதான். அதனாலேயே உதயனின் வார இறுதி இதழான சஞ்சீவியைச் சனிக்கிழமைகளில் வெளியிடத் தீர்மானித்ததாக பிரதம ஆசிரியர் சஞ்சீவியின் முதற்பதிப்பில் விளக்கம் வெளியிட்டிருந்தார்.

வாரந்தோறும் சனிக்கிழமைகளில் சஞ்சீவி என்ற பெயரில் சஞ்சிகையாக வெளிவந்த இதழ், குடாநாட்டு வாசகர்களின் அபிமானத்தை விரைவில் ஈட்டிக்கொண்டது.

எழுத்து வன்மை கொண்டவர்களை ஊக்கப்படுத்தி அவர்களது திறமைகளை வெளிக்கொணரக் களம் அமைத்துக்கொடுக்கும் வகையில் கவிதை,கட்டுரை,சிறுகதை என்ற இலக்கியத்துறைசார் விடயங்களுடன், குறுநாவல், சொற்சிலம்பம்,பஞ்சாமிர்தம், நங்கை, சிறுவர் சுடர்,திரையுலகில்,உலக உலா, அதிரடி அரங்கு போன்ற பலதரப்பட்ட அம்சங்களை உள்ளடக்கி வெளிவந்த சஞ்சீவி வாசகர்களின் இரசனைக்குப் பெருவிருந்தாக அமைந்தது.

### 1987

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்குப் பக்கப்பலமாக ஆரம்பம் முதல் இற்றைவரை சேவை புரிபவன் என 'உதயன்' அடையாளப்படுத்தப்பட்டான். தமிழ்த் தேசிய உணர்வு பொங்கிப் பிரவகிக்க ஆரம்பித்த காலகட்டமாக 1987 ஆம் ஆண்டு அமைந்தது.

1987 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நகரின் மையப் பகுதியில் இருந்துகொண்டு தனது பணியைச் செவ்வனே நடத்துவது சிரமமானதென உதயன் உணர்ந்து கொண்டான். தினமும் பல வகைகளில் பொதுமக்களுடன் தொடர்பு பேண வேண்டிய வகையில் அமைந்ததொரு பணியே பத்திரிகைத் தொழிலாகும். சமூக, அரசதுறை மட்டங்களில் பற்பல வகைகளில் தொடர்புகள் பேணப்பட வேண்டிய நிலையில், அரச படைகளின் எறிகணைத் தாக்குதல் மற்றும் விமானக் குண்டுவீச்சுகள் என்பவற்றின் மத்தியில் சிரமத்துடன் செயற்படுவதைத் தவிர்த்து, நகரின் ஒதுக்குப்புறமான பகுதியில், அமைதியான சூழலில் இருந்து தனது பணியைத் தொடர உதயன் விரும்பினான். அதன் காரணமாக 1987ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி முதல் நாவலர் வீதியில் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள 292/2 ஆம், இலக்கக் கட்டடத்துக்கு உதயனின் பணிமனை இடம்மாற்றப்பட்டது.

இந்தியப் படையினரால் உதயனை நோக்கி ஏவப்பட்ட ஷெல் முன் வீட்டில் விழுந்து 8 பேர் பலியாகினர். உதயன் பணியாளர்கள் தப்பிய போதிலும் அதன் பின்னர் மூண்ட சண்டையினால் பத்திரிகையை வெளியிடுவது தடங்கலாயிற்று. ஒக்ரோபர் மத்தியின் பின்னர் பெப்ரவரி 15 ஆம் திகதியே மீண்டும் உதயனை வெளியிடமுடிந்தது.

### 1988

. 1988ஆம் ஆண்டில் குடாநாட்டில் தீவிர யுத்தச் சூழல் நிலவியது. வடக்கு - கிழக்குப் பகுதி களில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதி காக்கும் படையினர் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் நோக்கில் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேர்ந்தது. அதுவுமின்றி இலங்கை அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடை காரணமாகவும் பொதுமக்கள் பலவித சிரமங்களையும் எதிர்நோக்க நேர்ந்தது. இத்தகைய சூழ்நிலையிலும், உதயன் பற்பல சிரமங்களை எதிர்நோக்கிய நிலையிலும், குடாநாட்டுப் பொதுமக்களுக்குத் தனது பணியைச் செவ்வனே ஆற்றிவந்தான்.

ஆனால், உதயன் பிரசுரம் இரண்டாவது தடவையாகத் தடைப்படுவதற்கான சம்வமொன்று இந்த ஆண்டிலேயே இடம்பெற்றது. அந்த வேளையில் குடாநாட்டில் இயங்கிய பலதரப்பட்ட ஆயுதப் போராட்டக் குழுக்கள் தம்மிடையே மோதிக் கொண்ட காலகட்டமது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி இலங்கையில் வடக்கு - கிழக்குப் பகுதிக்கென உருவாக்கப்பட்ட மாகாணசபை ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற இயக்கத்தினரின் நிர்வாகத்தில் இடம்பெற்று வந்தது. அவர்களுக்கான பாதுகாப்பை இந்திய அமைதி காக்கும் படை மேற்கொண்டிருந்தது. இந்த நிலையில் 1989ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத பிற்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தால் உதயனின் அச்சு இயந்திரங்கள், புதிய மின்பிறப்பாக்கி என்பன பலாத்காரமாகப் பறித்தெடுத்துச் செல்லப்பட்டன. இதனால், 1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி முதல் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி வரையான 137 நாள்கள் உதயனை வெளியிட நிர்வாகத்தால் இயலாமல் போனது. இந்த 137 நாள்களும் உதயன் வாசகர்கள் குடாநாட்டில் தினந்தினம் இடம்பெற்ற சம்பவங்களைத் தெரிந்துகொள்ள இயலாது ஒரு விதமான 'இருட்டினுள்' வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

### 1990

137நாள்கள் இடைவெளியின் பின்னர் 05.02.1990ஆம் திகதியன்று உதயன் மீண்டும் வெளிவரத் தொடங்கினான். பத்திரிகைக் காகிதத்துக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணமாக 04.08.1990 ஆம் திகதி முதல் உதயனின் அமைப்பு சிறிய வடிவில் மாற்றம் செய்யப்பட்டது.

அந்த வேளையில் உதயன் பத்திரிகையை அச்சிடும் இயந்திரத்தை விமானக் குண்டு வீச்சிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு நிலத்தின் கீழ் அமைந்த பதுங்கு குழிக்குள் வைத்தே இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் கோட்டையை தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றிய செப்ரெம்பர் 26 ஆம் திகதி மாலையில் உதயன் மீது ஷெல் வீச்சு நடத்தப்பட்டது. அதிர்ஷ்டவசமாக எவரும் பாதிக்கப்படவில்லை.

அடுத்த நாள் 27 ஆம் திகதி உதயன் பணிமனை மீது அகோரமான விமானக் குண்டுவீச்சு, ரொக்கட் தாக்குதலும் நடத்தப்பட்டன. பணியாளர்கள் பலரும் பதுங்கு குழிக்குள் சென்றதால் தப்பிக் கொண்டனர். உதயன் பணிமனைக் கட்டடங்கள் பலவும் சேதமடைந்தன. மேல்மாடிக் கூரை சுக்குநூறாக சிதறியது. ஆயினும் விநியோகப் பகுதி உதவி அலுவலர் பொ.பத்மநாதன் உயிரிழந்தார். நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த யோ.ஜெயந்தனின் ஒரு கை துண்டிக்கப்பட்டது. இயந்திர திருத்துனர் ஏ.சுகிர்தராஜா ஒரு காலை இழந்தார்.

பாதுகாப்புப் பகுதியைச் சேர்ந்த வி.கந்தப்பு, உதயன் பணிமனைக்கு அலுவலாக வந்திருந்த எஸ்.சூரியகுமார் ஆகிய இருவரும் படுகாயமுற்றனர்.

இதனால் 28.09.1990 முதல் நான்கு நாள்கள் பத்திரிகை வெளிவரவில்லை.

### 1992

1992ஆம் ஆண்டில் பத்திரிகை அச்சிடும் தாளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக பல தடவைகள் கோடிட்ட தாள் மற்றும் கவர்த்தாள் என்பவற்றில் உதயனை அச்சிடவேண்டிய நிலை நிலவியது.

### 1995

1995ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டுப் பொதுமக்களைப் பெரும் சிரமத்தில் ஆழ்த்திய ஆண்டாகும். அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே தொடர்ந்து யுத்தம் காரணமாக குடாநாட்டுப் பொதுமக்கள் தினந்தினம் இழப்புகளைச் சந்திக்க நேர்ந்த நிலை நிலவிய ஆண்டு அது.

குடாநாட்டுப் பொதுமக்களைப் பாரிய இடப்பெயர்வுக்கு உள்ளாக்கி, அவர்களுக்கு பெரும் சொத்தழிப்பு, உயிரிழப்புக்களை ஏற்படுத்திய ஆண்டாக 1995 (ஒக்ரோபர் 31 ஆம் திகதி) அமைந்தது.

இப்பாரிய இடப்பெயர்வின் காரணமாக உதயனுக்கு தென்மராட்சிப் பகுதிக்கு இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. இதன் காரணமாக 31.10.1995 ஆம் திகதி முதல் 13.11.1995 ஆம் திகதி வரையான 14 நாள்கள் உதயன் பத்திரிகையை வெளியிட முடியாத நிலை நிர்வாகத்துக்கு ஏற்பட்டது.

ஆயினும், தம்மைச் சுதாகரித்துக் கொண்டு சாவகச்சேரி, சரசாலை தெற்கு, கனகம்புளியடிச் சந்திக்கருகில் பருத்தித்துறை வீதியில் தற்காலிக முகவரியிலிருந்து 14.11.1995 திகதி முதல் உதயன் மீண்டும் வெளியிடப்பட்டது. ஆயினும், தென்மராட்சியிலிருந்து உதயனை வெளியிட்ட 1995 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களிலும் 1996 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் அச்சிடும் தாளுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக மஞ்சள், வெளிர் பச்சை, வெளிர் சிவப்பு ஆகிய கலர்த்தாள்களிலும், கோடிட்ட தாள்களிலும் உதயனை அச்சிட வேண்டியதாயிற்று.

### 1996

தென்மராட்சியிலிருந்து 19.04.1996 வரை வெளியிடப்பட்ட உதயன், மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வரவேண்டிய நிலையால் 20.04.1996 திகதி முதல் 09.07.1996 வரை 81 நாள்களாக வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது.

10.07.1996 ஆம் திகதி முதல் மீண்டும் நாவலர் வீதியில் அமைந்த பணிமனையிலிருந்து உதயன் வெளிவரத் தொடங்கியது.

### 1997

இதுவரை காலமும் தடைப்பட்டிருந்த சஞ்சீவி 07.06.1997 சனிக்கிழமை முதல் மீண்டும் வெளிவரத் தொடங்கியதுடன் அதன் விலை 8 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இந்த நிலையில் இடப்பற்றாக்குறை காரணமாக உதயன் நிறுவனத்தை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 361ஆம், இலக்கக் கட்டடத்திற்கு 1997.04.23ஆம் திகதி முதல் மாற்ற நேர்ந்தது.

### 1999

இதனிடையே அதுவரை காலமும் அச்சுக் கோர்ப்பு முறையில் அச்சிடப்பட்ட உதயன் பத்திரிகையை கணினியில் தட்டச்சு முறையில் வெளியிடும் முறை இந்த ஆண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வகையில் கணினித்தட்டச்சு முறையில் அச்சிடப்பட்ட சஞ்சீவி 06.02.1999 ஆம் திகதியன்று முதன் முதலாக வெளிவந்தது.

இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி உதயன் பணிமனைக்கு அரசின் துணைப் படை ஒன்றினால் குண்டு வீசப்பட்டது. அச்சு இயந்திரங்க்ளை நாசப்படுத்தும் நோக்குடன் வீசப்பட்ட குண்டுகளால் நிறுவன வாகனங்கள் சேதமுற்றன. பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கடும் காயமுற்றார்.

### 2000

2000 ஆம் ஆண்டில் முற்பகுதியில் அடிக்கடி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், (28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனின் சேவைகள் எண்ணிலடங்காதவை



ஒரு கால் நூற்றாண்டாக உலகத் தமிழ் தேசிய இனத்தின் மைய மண்ணாக விளங்கும் யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் உதயன் நாளிதழ் தனது இருபத்தைந்தாவது ஆண்டு பத்திரிகைச் சேவையைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் கொண்டாடும் முகமாக வெளியிடப்படும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

27.11.1985 உதயன் பத்திரிகை வெளிவர ஆரம்பித்த திலிருந்து இன்றுவரை நெருங்கிய உறவு கொண்டிந்தவன் என்றவகையில், தமிழ்த் தேசிய உணர்வை மழுங்க விடாமல் தமிழ், தேசியம், தாயகம், சுயாட்சி, சுயநிர்ணயம் என்ற தந்தை செல்வா வகுத்த அடிப்படைக் கொள்கை களையும், கோட்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்ல ஊன்றுகோலாக இருந்தமையைப் பெருமையோடு குறிப் பிட விரும்புகிறேன்.

இவற்றுக்காக உதயன் சந்தித்த எதிர்ப்புக்கள், ஏளனங் தள், இழப்புக்கள், அழிவுகள், உயிரிழப்புக்கள் ஏராளம். இவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு தைரியமாகத் தலைநிமிர்ந்து வளர்ச்சியடைந்த பெருமை உதயனுக்கு உண்டு.

உண்மைகளை உருமாற்றாம்ல் மக்களுக்கு வழங்கியதுடன், தமிழினத்தின் கலை, கலாசார, இலக்கியத் துறைகளுக்கு உதயன் ஆற்றிய ஆதரவும், சேவைகளும் எண்ணிலங்காதவை.

நிம்மதியான சகஜ நிலையற்ற இந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நிலைத்து நின்று சோதனைகள் அத்தனை யையும் தாண்டிச் சாதனை புரிந்து பல பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்ற உதயன் எதிர்காத்திலும் ஏற்றமுடன் முன்னேறித் தமிழ்த் தேசிய இனத்தின் நியாயமான தனித்துவத்தையும், அடையாளத்தையும், இருப்பையும் நிலைநிறுத்த எடுக்கும் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு ஆதரவாக நின்று மென்மேலும் வளர்ந்து, மேன்மை பெற எமது நல்வாழ்த்துக்கள்.

**சி.வி.கே.சிவஞானம்,**
*முன்னாள் யாழ்.மாநகர ஆணையாளர்.*

## பணி பல்லாண்டு நீடிக்கட்டும்

தமிழ் மக்களின் தலை சிறந்த நாளேடாகிய உதயன் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடும் தருணத்தில்



பலருடைய வாழ்த்துச் செய்திகளும் பாராட்டுக்களும் வரும் வேளை நானும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கைத் தமிழ் மக்களின் சோகம் நிறைந்த வரலாற்றுடன் உதயனும் பங்கெடுத்திருக்கிறது. அன்றாடச் செய்திகளை உடனுக்குடனே அச்சமின்றி நடுநிலையில் நின்று உண்மைக்குச் சான்று பகர்ந்து, பிரசுரித்திருக்கின்றது. இதனால் பதிப்பாசிரியரினதும், அவரது குழுவினரும், அச்சகப் பணியாளரும் பல்வேறு நெருக்குவாரத்துக்கு உள்ளாகி அச்சுறுத்தல் மத்தியிலேயே பல தடவைகள் பத்திரிகையை வெளிக் கொணர முடிந்ததை நாம் அறிவோம்.

போர் முடிந்து இனவாதம் மறைந்துள்ள வேளை தேசத்தையும், மக்களையும் கட்டியெழுப்பும் பாரிய பணி அனைவருக்கும் உண்டு. எனவே உண்மையுடனும் நடுநிலையில் நின்று தொடர எனது வாழ்த்துக்களையும் ஆசீரையும் தெரிவித்து நிற்கின்றேன்.

உதயனின் பணி பல்லாண்டு நீடிக்க இறையருள் வேண்டுகின்றேன்.

**மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்,**
*யாழ் ஆயர், ஆயர் இல்லம்,*
*யாழ்ப்பாணம்.*

## நூறாண்டு வாழ்க



*"உண்மையை எண்ணமாக்கி,*
*உணர்வுகளைப் பண்பாக்கி,*
*உய்த்துணர்தல் இல்லாமல்,*
*உதய தரிசனம் தரும்,*
*உதயனே நீ நூறாண்டு வாழ்க"*

கடந்த 25 வருடங்களாக யாழ். மண்ணில் பல தடைகளைத் தாண்டி தனக்கென மக்கள் மனத் தில் நிலையான இடத்தினைப் பெற்று வெளிவருகின்ற உதயன் பத்திரிகையானது இன்று போல் என்றும் சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மு.நந்தகோபாலன்,**
*பிரதேச செயலர், பிரதேச செயலகம்,வேலணை.*

## நற்பணி தொடரட்டும்

வெள்ளிவிழா நாயகன் உதயன் பத்திரிகையின் சிறந்த மக்கள் பணிக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் உரித்தாகுக. மேலும் வீறு



நடையுடன் பத்திரிகை உலகில் சாதனைகள் படைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

"உண்மையே உயர் அறம்" என்ற பொன்மொழிக்கமைய பக்கச்சார்பின்றி செய்திகளைப் பிரசுரிப்பது மக்கள் மனதை நிறைவடையச் செய்கின்றது. ஆவலோடு உதய நேரம் உதயன் பத்திரிகையை வாசிப்பார்கள். "நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்ற வாக்கியத்திற்கமைய எழுதப்படும் ஆசிரியர் தலையங்கத்தை விரும்புகிறவர்கள் அநேகர்.

தமிழ்பேசும் மக்கள் கௌரவமாகவும், சுயமாகவும் வாழ்வதற்கு பலதரப்பட்ட முயற்சிகளை சர்வதேச ரீதியிலும் உதயன் விமர்சிப்பது காலத்தின் தேவை. உதயனின் நற்பணி தொடர எங்கள் வாழ்த்துக்கள்.

**சு.பரமநாதன்,**
*செயலாளர்,சமாதானத்திற்கும்*
*நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு.*

## உதயனின் சமுதாயப் பணி சிறக்கட்டும்

யாழ்ப்பாணத்தில் இருபத்தைந்து வருடங்கள் தங்கி இருந்து பல துன்பங்கள் மத்தியில் என்ன நடக்கிறது.



என்ன நடந்தது என்று தடுமாறிக் கொண்டு இருந்த மக்களுக்கு உதயத்தில் ஆறுதல் தந்த உதயன் பத்திரிகை வெள்ளிவிழாக் காண்பது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாடு முழுவதும் பரந்து வாழ்கின்ற தமிழ்பேசும் இனம் நாட்டுநிலைமையும், இன்பதுன்பங்களையும் அறிவிக்கவும் அறிந்து கொள்ள வும் உறுதுணையாக பத்திரிகை உதயன்.

ஊக்கமும் முயற்சியும் முக்கிய காரணமாக உள்ளது. முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இணங்க உரிமையாளர் களைப் பாராட்டி மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து நாட்டிற்கும் தமிழ் பேசும் சமுதாயத்திற்குப் பணிபுரிய வேண்டி எல்லாம் வல்ல செந்தில் கதிர் வேலாயுதப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துக் கூறுகின்றேன்.

**சி.தியாகராசா,**
*முன்னாள் யாழ்.மநகரசபை உறுப்பினர்.*

# இடர்களைத் தாண்டிய இரண்டரைத் தசாப்தப் பணியில்....

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழமை யான செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டது. இதன் காரணமாக 06.05.2005 ஆம் திகதி சனிக்கிழமை வெளியான சஞ்சீவியுடன் சஞ்சீவி வெளியீடு தடைப்பட்டது.

2000 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தணிக்கை விதிகள் அமுல்படுத்தப்பட்டன.

விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் செய்தித் தணிக்கை முறை மீண்டும் மறுசீரமைப்பு ஏற்பாடுகளுடன் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியொன்று இச்சட்ட விதிகளை மீறுவதாக அமைந்ததெனக் காரணம் காட்டி 20.05.2000 ஆம் திகதியன்று உதயன் பத்திரிகை நிறுவனம் இலங்கை இராணுவத்தால் பூட்டிச் சீலிடப்பட்டது. இதன் காரணமாக 20.05.2000 திகதி முதல் 03.07.2000 ஆம் திகதி வரையான 45 நாள்களாக உதயன் பத்திரிகை வெளியிடப்படவில்லை. 03.07.2000ஆம் திகதியன்று உதயன் பத்திரிகை மீதான தடை நீக்கப்பட்டதை யடுத்து மறுதினம் 04.07.2000 ஆம் திகதி முதல் உதயன் மீண்டும் வெளிவரத் தொடங்கினான்.

### 2004

04.01.2004 ஞாயிற்றுக்கிழமை முதல் உதயனுடன் சூரியகாந்தி என்ற புதிய இணைப்பு வெளிவர ஆரம்பித்தது. 23.10.2004 தொடக்கம் உதயனின் விலை 10 ரூபாவாக விலை உயர்த்தப்பட்டது.

### 2006

உதயன் பத்திரிகையின் இரண்டு தசாப்தங்கால வரலாற்றில் 2006 ஆம் ஆண்டு மிகப் பாரிய இழப்புகளையும் நட்டங்களையும் சந்திக்க நேர்ந்த கறுப்பு ஆண்டாக அமைந்தது.

2006 மே மாதம் 2ஆம் திகதியன்று உதயன் அலுவலகத்துக்குள் நுழைந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் குழுவொன்று மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் உதயன் நிறுவனப் பணியாளர்கள் இருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். மற்றும் இரு ஊழியர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகி உடல் நலம் பாதிக்கப்பட்டனர். அத்துடன் பத்திரிகை அச்சிடும் பணியில் முக்கிய இடம் வகிக்கும் கணினிகள் பிரிவில் இருந்த சாதனங்கள் யாவும் அக்குழுவினரால் சுட்டுப் பொசுக்கப்பட்டு பெரும் நஷ்டம் விளைவிக்கப் பட்டது.

2006 ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியன்று உதயன் பத்திரிகையை வாகனமொன்றில் வடமராட்சிப் பகுதிக்கு எடுத்துச் சென்று விநியோகித்து விட்டுத் திரும்பிய உதயன் பணியாளரொருவர், ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்த நிலையிலும் பட்டப்பகலில் வழிமறிக்கப்பட்டு வாகனத்தில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார்.

2006 ஆகஸ்ட் 18ஆம் திகதியன்று கோப்பாய் இராச வீதியில் அமைந்துள்ள உதயன் நிறுவனத்தின் களஞ்சியம் இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.

### 2007

2007 ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதியன்று காலை உதயன் அலுவலகச் செய்தியாளர் எஸ்.ரஜிவர்மன் தமது கடமைக்காக அலுவலகத்துக்கு வந்து கொண்டிருந்த வேளையில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2007 நவம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று இரவுக் கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த உதயன் ஆசிரியர் பீட பணியாளர் ஒருவர் வழியில் வைத்துக் கடத்தப்பட்டார்.

### 2008

2008 ஜனவரி 6 ஆம் திகதியன்று உதயன் பத்திரிகை வெளியிடுவதை நிறுத்திவிடுமாறு உதயன் அலுவலகத்துக்கு அனாமதேய தொலைபேசி அழைப்பு மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது.

மக்கள் சேவை ஊடகம் மற்றும் சகிப்புத் தன்மைக்கான ஊடக விருது உதயனுக்கு வழங்கப் பட்டது.

### 2009

இலங்கையில் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான சேபால குணசேன விருது உதயனுக்கு வழங்கப்பட்டது.

உதயன் அலுவலகம் மீது 24.03.2009 அன்று இரவு கைக்குண்டு வீச்சு.

25.06.2009 திகதியன்று விநியோகத்துக்கென எடுத்துச் செல்லப்பட்ட உதயன் பத்திரிகைப் பிரதிகள் இனந்தெரியாதோரால் பறித்தெடுக்கப்பட்டு தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

2009.06.30ஆம் திகதியிலிருந்து உதயன் பத்திரிகையில் பணிபுரியும் பணியாளர்கள், செய்தியாளர்கள், முகவர்கள் மற்றும் ஏனையோரும் வேலையைவிட்டு விலகிக் கொள்ளவேண்டுமெனவும் தவறினால் தண்டனைக்கு உள்ளாவர் எனவும் நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு என்ற பெயரில் 27.06.2009 திகதியிடப்பட்ட அனாமதேயத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## விறல்மிகு ஏடு - உதயன்

நம்முடைய பெரும் சொத்தாக மிளிர்கின்ற பன்தமிழ் பனுவல்களும் கல்வெட்டுக்களும் எண்ணற்ற ஓலைச் சுவடிகளும் விளம்புகின்ற பேருண்மை ஒன்று உளது. அன்றைய நிகழ்வுகளை அந்தமிழ் அழகுறும் செந்தமிழில் பைந்தமிழ் பனு வில்களாகப் புலத்துறை முற்றிய பால் குடச் சான்றோர் தமிழ் கூறும் ஞாலத்துக்கு உவகையுடன் உவந்தளித்தார்கள். அந்த மரபு இன்று பெருமளிவில் பேணிப் பாது காக்கப்படுவதில்லை என்ற நிலையில் மக்களுக்குச் செய்திகள் வடிவிலும் கட்டுரைகள் வடிவிலும் சங்கத் தமிழ் ஆய்வு வடிவிலும் அறிவை வழங்கிடும் அமுத சுரபிகளாக நம்மிடையே வலம் வருவன செய்தி ஏடுகள்தான்.



தமிழ்மக்களின் வைகறையாக விடியலை அறிவிக்கும் பூங்குயிலாக, இள ஞாயிறு ஞாலத்தின் இருள் மறைய வீசுகின்ற கதிரொளியாகச் சான்றோர்கள், மாணவர்கள் மற்றும் பொதுவான வாசகர்களின் ஆசியோடும் பேராதரவோடும் உதய னாகி உதயமாகிய சொற்ப காலத்திலேயே மக்கள் உளம் புகுந்து அவர்களின் கருத்தையும் கண்ணையும் கவர்ந்து ஒரு பல்சுவை ஏடாக இன்று இதே மண்ணில் ஓங்கி வளர்ந்திருப்பது ''உதயன்'' ஏடாகும். 25 ஆண்டுக்களுக்கு முன் தோற்றம் பெற்ற இந்தப் பெரும்சுடர் அறியாமை இருள் அகற்றப் பிறந்த விரிசுடர். இன்று இந்த வியனுலகத்தில் விண்ணையும் மண்ணையும் இணைக்கின்ற ஒரு பாலமாக இந்த மண்ணில் வாழுகின்ற மக்களுக்கு மட்டுமன்றி, புலம் பெயர்ந்து வாழும் மக் களுக்கும் அறிவு விருந்து அளிக்கின்ற பணியில் ஒல்காது உழுத்தித் தழைத்து ஓங்குகின்ற பெருமையினை எல்லாம் அனுபவித்து வாழ்த்துரை வழங்கும் செம்பணியாகக் கொண்டு அது பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துரை வழங்குகின்றோம்.

*வெள்ளிவிழாக் காணுகின்ற ஏட்டினுக்கு*
*விளம்புகின்ற எம்முடைய வாழ்த்துரைகள்,*
*விள்ளரிய சிறப்புடைய ஏடதற்கு*
*மேதினியே ஏற்றமதை என்றும் தந்து,*
*அள்ள அள்ளக் குறையாத அமுதமென்றே*
*அது படைக்கும் ஆய்வுகளை அள்ளிவரும்*
*செய்திகளை அறிந்து நாளும்*
*விருந்தாகச் சுவைத்திடவே*
*விரும்பினாலும் தெள்ளு தமிழ் மனம் பரப்ப*
*திக்கெட்டிற்கும் விள்ளலென அறிவு*
*வளம் சிறந்துயர*
*வையத்தில் ஓங்கிடவே வாழ்த்துகின்றோம்.*

**க.சி.சிவசுப்பிரமணியம்,**
*ஆங்கில ஆசிரியர்.*

## சோதனைகளைச் சாதனைகளாக மாற்றியவன் உதயன்

உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா சிறப்பிதழுக்கு வாழ்த்துச்செய்தி யினை அனுப்புவதில் நான் எல்லை யற்ற உவகை அடைகின்றேன். ஒரு செய்தித்தாளின் வகிபங்கினை அல்லது செயற்பாட்டினை நடுநிலை நின்று மதிப்பீடு செய்வதாயின் அது செயற்பட்ட காலத்து, சமூகப் பொருளாதார அரசியல் பின்னணியை கருத்தில் கொள்வது அவசியமானது.



இந்த எடுகோளின் அடிப்படையில் உதயனின் செயற்பாட்டினை ''இணைப்புக்களின்றி'' பார்ப்பர்கள் உதயன் ஒரு ஜீவன் என்பதை ஏற்றுக்கொள்வார். மண் ணின் இன்பங்கண்டு கழிப்புற்றும், துன்பங்களை கண்டு துன்புற்றதோடு மட்டுமன்றி உரிமைக்குரல் எழுப்புவதற்கு உதயன் பின்னின்றதில்லை. அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது என்பதையே அறிய முடியாத காலத்தில் அயற்கிராமத்தின் செய்திகளையும், அந்நிய நாட்டுப்புதினங்களையும் எமக்குத் தந்ததுடன் அவர்களுக்கும் படம் காட்டி நிரூபித்தது.

உதயன் செய்திகளை வழங்கி சமூகத் தோடு ஒட்டி நின்றதுடன் பல்துறை வளர்ச்சிக்கும் செயற்திட்டங்களை நிறைவேற்றியது. பலரின் பயிற்சிக்களமாகவும் அமைந்து நிற்கிறது. சோதனைகளையும், வேதனைகளையும் சாதனைகளாக மாற்றியது உதயன்.

''இன்றைய செய்தி நாளைய வரலாறு'' என்பர். கடந்த 25 வருடங்களாக உதயனின் ஆசிரியர் பேனா ஊற்றினை ஆழ்ந்து அறிந்தால் தமிழ் பேசும் மக்களின் களநிலை தெரியும். அவை ஆய்வுக்குரிய கருவிடமென்பதும் புரியும். உதயனின் வெற்றிக்கு உழைக்கும் ஊழியர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன். உதயன் நீண்டு நிறைவுடன் நிதானம் தவறாது வளர வாழ்த்துகிறேன்.

**சுந்தரம் டிவகலாலா.**

## மனோதிடம் கொண்டவன் உதயன்

உதயன் பத்திரிகையின் வெள்ளிவிழாவினையொட்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.



உதயன் நாளிதழின் பொதுமக்களிடையேயான நன்மதிப்பு யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தமிழர்கள் வாழும் அனைத்து இடங்களிலும் ஆழங்காணமுடியாத அளவுக்கு வேரூன்றியுள்ளது.

ஒவ்வொரு நாள் காலையும் சூரிய உதயத்தின் பின்னர் யாழ்ப்பாணத்து மக்கள் உதயன் பத்திரிகையின் வருகைக்காக ஆவலுடன் காத்திருப்பர். ஏனென்றால் உதயன் அந்த அளவுக்கு செல்வாக்கை மக்களிடையே பெற்றிருந்தது. இப்போதும் அதே நிலைமையே தொடர்கின்றது. இந்தப் பத்திரிகையின் வெள்ளி விழாவானது வாசகர்களுக்கும், பத்திரிகை ஆசிரியருக்கும் இதன் வெளியீட்டாளர்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடியது. யாழ்ப்பாணத்தில் மூன்று தசாப்தங்களாக நீடித்த அசாதாரண சூழ்நிலைகளால் உதயனை வெளியீட்டுவதற்கும் சில தடைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அவையெல்லாவற்றையும் மனோதிடத்துடன் சமாளித்துப் பத்திரிகை தொடர்ந்து வெளி வருவதற்குப் பாடுபட்ட நிறுவனநிர்வாகிகளும், ஆசிரியரும், சகல பணியாளர்களும் பாராட்டுதலுக்கு உரியவர்கள், போற்றுதற்குரியவர்கள். உதயன் ஆசிரியரும், ஊழியர்களும் தமது நற்பணிகளை இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களுக்கும் தொடர்ந்து ஆற்றுதற்கு ஆண்டவனின் ஆசீர்வாதங்கள் எப்போதுமே கிடைக்க நான் இறைஞ்சு கின்றேன். ஈற்றில் நான் ஒரு ஆங்கிலப் பழமொழியுடன் எனது கருத்துக்களை நிறைவு செய்து கொள்ள விரும்பு கின்றேன்.

'Good wine needs no bush'

**பேராசிரியர், வைத்திய கலாநிதி என். சிவசூரியா**
*வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்*

## பத்திரிகாதர்மத்தைக் காத்தவன் உதயன்

இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப் பெறும் இந்த ஈழமணித் திருநாட்டின் சொத்து என்று சுட்டப்படும் சிறப்புடன் பண்டு தொட்டே இங்கு வாழ்ந்து வருகின்ற பண்பாட்டு பாரம்பரியத் தமிழ் குடிமக்கள் நாம். வந்தேறு குடிகள் என்ற வசைக்கு ஆளாகாத நாம், எங்கிருந்தோ வந்த ஏனையோருக்கும் இடம் கொடுத்து அவர்களுடனும் இணைந்து வாழ்ந்து வருகின்றோம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற முக்கூட்டு விழுமியங்களின் அடிப்படையில் யாருக்கும் அடிமையாகாமல், யாரையும் அடிமைகொள்ளாமல் நமது இன, மத, மொழி, கலை, கலாசார, அரசியல், சமூக பொருளாதாரநிலைகளை மேம்படுத்தி நமது தனித்தன்மையை உறுதிப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளோம். தமிழ் மக்களுடைய இந்த உன்னதமான இலட்சியத் தையே தன்னுடைய அடிப்படையாகவுங் கொண்டுள்ள உதயன் அந்த இலட்சியத்தை நோக்கிய தன் கடினமான பயணத்தில் இருபத்தைந்து ஆண்டுகளைத் திருப்தியாக பூர்த்தி செய்துள்ளமை பெருமைக்குரியது.



கே.பி.ஹரன், எஸ்.டி.சிவநாயகம், இராஜ.அரியரத்தினம், டி.பி.தனபாலா போன்ற பழம்பெரும் பத்திரிகையாளர்களின் வழிகாட்டல்கள் போன்றவற்றாற் பண்பட்ட பத்திரிகையாளராகப் பரிணமித்த உதயன் பிரதம ஆசிரியர் தவறானவற்றையார், எங்கே, எப்படிச் செய்தாலும் தயவு தாட்சயமின்றித் தட்டிக்கேட்டும், தரமானவற்றையும் தர்ம நியாயங்களுக்கு உட்பட்டவற்றையும் யார் செய்தாலும் உறுதியாகவும் உள்ளன்புடனும் அவர்களைத் தட்டிக் கொடுத்தும், நடுநிலை தவறா நற்பண்பை, பத்திரிகா தர்மத்தைக் கட்டிக் காத்துவரும் பெருமைக்குரியவர்.

இனங்காண முடியாத ஈனர்கள் சிலரின் ஈவிரக்கமற்ற செயல்களால் உதயன் பணியாளர்கள் சிலர் கடமையில் இருந்த வேளையிலேயே தம் கடைசி மூச்சை விட நேர்ந்த போதிலும், பிரதம ஆசிரியர் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதிலும், உண்மையை உரைப்பதிலிருந்து சற்றும் பின்வாங்காமற் செயற்பட்ட உதயனின் உறுதியும் துணிவும் இலட்சியப் பற்றும் பாராட்டுக்குரியவை.

செய்திகளை வெளியிடுவதுடன் மட்டும் திருப்திப்படாமல் அவற்றின் பின்னணி அவற்றால் ஏற்படக் கூடிய விமர்சனங்கள், ஆரம்பத்திற் குறிப்பிடப்பட்ட மொழி, கலை, இலக்கிய, அரசியல் பொருளாதார சமூக நிலை பற்றிய தகவல்கள், கட்டுரைகள், ஆலோசனைகள் போன்றவற்றைச் சாதாரண மக்களுக்கும் இலகுவில் வாசித்து விளங்கிப் பயனடையும் வண்ணம் வெளியிட்டு ஒவ்வொரு குடும்பத்தினரதும் உற்ற நண்பனாகவும் வழிகாட்டியாகவும் விளங்கும் உதயன் அப் பழுக்கற்ற தன்சேவையை ஆண்டாண்டு காலம் செய்யவேண் டும் என ஆண்டவனைப்பிரார்த்தித்து அமைகின்றேன். இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் சமீபத்தில் அவருக்கு வழங்கிய விருது அவருடைய தகைமைக்கும் திறமைக்கும் துணிவுக்கும் கிடைத்த உயர் அங்கீகாரத்தின் சின்னம் எனில் மிகையன்று.

**சி.சரவணபவன் (சிறீ),**
*மூத்த பத்திரிகையாளர், இளைப்பாறிய அதிபர்.*

## உதயனுக்கான வாழ்த்துச் செய்தி

பிரதேச எல்லைநிலைத் தினப்பத்திரிகை ஒன்று தனது சுத்தினை யாழ்ப்பாணத்தில் தொடங்கி எங்கும் சுடர்ஒளி விடுவது உலகின் சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்று அல்ல.



ஏறத்தாழக் கால்நூற்றாண்டுகளுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் நிலவிய சூழல் காரணமாக அங்கு தமிழ்த்தினப் பத்திரிகைகள் தோற்றவேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டது. ஈழநாடு, ஈழமுரசு என் பனவற்றைத் தொடர்ந்து வணிக முதனிலைப்பட்ட பிரச்சினைகளுக்கு இடமளிக்காத உதயனும் வெளிவந்தது. உதயனின் மிக முக்கியமான பங்கு அதன் செய்திப் பரப்பும் கருத்துநிலைத் தெளிவுமாகும். தமிழர் நல்வாழ்வுக்கான வழிவகைகளைக் காணுதல் என்பது உதயனுடைய அச்சாணியாக அமைந்துள்ளது. இதன் காரணமாக, உதயன் யாழ்ப்பாணத்தையும் இலங்கையையும் ஒரு பிரதேசத்துக்கு மறுபிரதேசம் இணைத்து வேண்டியவற்றைத் தருகின்றது.

உதயன் நிறுவனத்துக்குக் கிடைத்த மிகமுக்கிய வளம் அதன் பிரதம ஆசிரியர் அவர்கள். அவரின் சிறப்புப் பண்பு ''தகுதிகளின் ஒருமையையும் ஒருமையின் தகுதிகளையும் பார்ப் பதாகும். செய்தி என்பதற்கான உலகப் பிரசித்தமான வரைவிலக்கணம் ''News is what you want to read'' உண்மையில் நாம் வாசித்து முடித்த பத்திரிகையில் இருந்தே சில பகுதிகளைத் தொட்டுக் காட்டும் பொழுதுதான் செய்தி என்பது சில வற்றை வாசிக்க விரும்புவது எனப் புலனாகின்றது.

உதயனின் முக்கியத்துவம் அது செய்தியைத் தருவது மாத்திரமல்லாமல், அச்செய்தியினால் ஏற்படக்கூடியவற்றையும் பூடகமாகக் குறிப்பிடுதலும் ஆகும்.

இப் பண்புக்குக் காரணமாக அமைபவை நிறுவனப் பொறுப்பாளர்களின் பொறுப்புணர்ச்சியும் அதன் பொறுப்பாசிரியரின் லௌகீக தீட்சண்யமும் ஆகும்.

Editorஎன்பதற்கான தமிழ்மொழிபெயர்ப்பு பதிப்பாசிரியர் அல்ல. செம்மையாக்குதல் அல்லல் செவ்விதாக்குதல் ஆகும். உதயனின் பிரதம ஆசிரியரிடத்து இச் செவ்விதாக்கப் பண்பு நிறைய உள்ளது. சல சலப்பற்ற ஓடைநீர் போல உதயனும் பாய்கிறது. பிரதம ஆசிரியரும் பாய்கிறார்.

உதயன் முதன்முதலில் கொண்டுவரப்பட்ட பொழுது பல சவால்கள் காணப்பெற்றன. ஈழநாடு, ஈழமுரசு என்பன நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. அத்தகைய ஓர் நிலையிலே, திறமைசார்ந்த சாரதி ஒரு வன் எவ்வாறு ஏற்ற இறக்கங்களையும் பாதையின் நெளிவு சுழிவுகளையும் கருத்தில் கொண்டு தனது பணியைச் செய்வானோ, அதேபோன்று உண்மையில் உதயனும் கானமயில்நாதனும் செய்தவை இவையே. இவை வெறுமனே செய்யப்பட்ட காரியங்கள் அல்ல; சாதனைகள் ஆகும்.

உதயன் நிறுவன அதிபர் ஈ.சரவணபவனை யும், பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனையும் அவர் தம் பணி தொடர வாழ்த்துகிறேன்.

**கார்த்திகேசு சிவத்தம்பி,**
*தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்,*
*தெஹிவளை. யாழ்.பல்கலைக்கழகம்.*

## மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவன் உதயன்

சமூகப் பணியின் நிறைவைக் கொண்டாடும் எமது அபிமானப் பத்திரிகை உதயனை வாழ்த்துவதில் பெரிதும் பூரிப்படை கின்றேன்.



உதயனின் கடந்த காலப் பணிக்கான பயணம் கரடு முரடான பாதையாய் அமைந்தது. அச்சகத்திற்கான சீல்வைப்பு, பத்திரிகைக்கான தடை, மிரட்டல், கொலை, அடாவடித்தனம் எனப் பல இடையூறுகள் உதயனின் சென்றகாலப் பயணங்களில் குறுக்கிட்டன.

இத்தனை இடையூறுகளுக்கும் மத்தியிலும் உதயன் தனது சமூகக் கடப்பாடுகளை எள்ளளவும் மறக்கவில்லை. எமது மக்களின் பால் திணிக்கப்பட்ட அடக்குமுறைகளை வெளிப்படையாக எடுத்துக்கூறிக்கண்டித்தமை சமூகத் தேவையினை எடுத்தியம்பியமை, எழுத்தாளர்களின் படைப்புக்களைப் பிரசுரித்து ஊக்குவித்தமை, மக்களின் கருத்துக்களுக்குப் பத்திரிகையில் இடமளித்தமை மேலும் பல நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்கியமை போன் றவை உதயனின் ஒரு சில சமூகம், மக்கள் பற்றிய கரிசனைகளாகும். இவற்றையெல்லாம் நடுநிலை நின்று பார்த்தவர்கள் உதயனைப் பாராட்டி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கவும் தவறவில்லை.

துணிச்சல் மிக்க செயற்பட்டி னால் மக்களின் உள்ளங் களைக் கவர்ந்த உதயன் மேலும் வளர வேண்டுமென மீண் டும் வாழ்த்துகின்றேன்.

**அ.பஞ்சலிங்கம்,**
*முன்னாள் அதிபர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN




Manufacturers of Gold Jewels

26 ஆவது அகவையில் கால்பதிக்கும் உதயனுக்கு எமது வாழ்த்துக்கள்

# கிருஸ்ணா நகை மாளிகை

Krishna Jewellary

கிளை நிறுவனம்:
**கிருஷ்ணா அடகு கடை**
370, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 5046

---

தமிழர்களின் முதுகெலும்பாக தொடர்ந்து வெளி வர எமது வாழ்த்துக்கள்



# PSB Communication

*Local Call, Net IDD Calls, Net Browsing, Photocopy, DVD Writting, DVD Movies, Mobile Phone Sales & Parts*

337(555),K.K.S. Road, Jaffna.
T.P No: 021 222 7477, Fax : 021 222 4501


---

தடைகளை தகர்த்து தலை நிமிர்ந்து உன் பணிதொடர எமது வாழ்த்துக்கள்

பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், நாவல்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட கழிவுடன் நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# ஸ்ரீ லங்கா புத்தகசாலை

234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2573



---

நீ உன்னதமாய் என்றென்றும் நீடூழி வாழியவே!

# ஆர்.வி.ஜி மருந்தகம்

504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே. 0212222129

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# R.V.G ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6806


---

கற்பகதரு போல் எங்கள் கரங்களில் தவழ்ந்திடும் உதயனே...! வாழி... வாழி... வாழி...

# மகி வைன்டிங்

ரான்ஸ்போமர், ஆமேச்சர், எலக்றிக்கல் மோட்டர், டைனமோ, மைக்னேற்றர், கொயில், பான் வயறிங், பிளமிங் குறித்த நேர காலத்தில் செய்து தரப்படும்.

இல.178, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 4901033



---



உதயவேளையில் உதயமாகும் உதயனே உன் பணி தொடர வாழ்த்துக்கள்

சுவையான, சைவ, அசைவ உணவு வகைகள், குளிர்பான வகைகள் மற்றும் சிற்றுண்டி வகைகளைப் பெற்றுக்கொள்ள

# நீலாம்பரி உணவகம்

இல.744, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

---

மக்களோடு மக்களாக நின்று தமிழ்மக்களின் பிரச்சினைகளை வெளி உலகிற்கு கொண்டு வந்த உதயனே வாழி..!

# செல்வி நகை அகம்

(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)

நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## துணிவுடன் செயற்படுபவன் உதயன்



யாழ். மண்ணிலே பல் நாளிதழ்கள் வெளிவருகின்ற போதிலும் தனக்கென தனித்துவமான இடத்தை கால் நூற்றாண்டு காலமாகத் தக்கவைத்துக் கொண்டதொரு நாளிதழ் உதயன் என்றால் அது மிகையாகாது. அதுமட்டு மன்றி, தமிழ் மக்களின் ·உந்துசக்தியா கவும் மேலும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம்மக்களுக்கும் அரும்பெரும் சேவையாற்றி வருகின் றது.

உரிய நேரத்தில் உடனுக்குடன் காத்திரமான ஆசிரியர் தலையங்கத்தை தீட்டுவதில் தனி முத்திரை பதித்தும், செய்திகளை உடனுக்குடன், நம்பகத்தன்மையுடைய வகையிலும் தொகுத்து அளிக்கின்ற ஒரேயொரு நாளிதழ்.

யாழ்.மண்ணிலே ஏற்பட்ட பல பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொண்டு தலைநிமிர்ந்து அறிவு பூர்வமாக துணிந்துசெயற்பட்ட நல்லதொரு நாளிதழ்

இச்சந்தர்ப்பத்திலே வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வதில் நானுமொருவன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியெய்துவதோடு, மேலும் பல நூற்றாண்டுகளைக் கடந்து சேவையாற்ற வேண்டுமென எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**த.தேவராஜன்,** *முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்.*

## காரிருள் அகற்றி காவியம் படைப்பவன் உதயன்



உரிமையுடன், உணர்வுகள், உண்மைகளை உலகத்தவர்களுக்கு அச்சமின்றி எடுத்துரைக்கும் உதயனே!

உனது அகவை இருபத்தைந்து கண்டு உளமார வாழ்த்துகின்றோம்.

ஈழத்தமிழர்களின் நாடித்துடிப்பறிந்து நீ ஓடிச்சென்று கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் அஞ்சாநெஞ்சனாய் நின்று அகிலம் அதிர, அனைத்துத் தமிழ் மக்களின் உரிமைக்குரலாய் ஓங்கி ஒலிக்கும் உதயனே நீ வாழ்க!

வாழ வழி அற்றவர்க்கும், வழித்துணை இழந்தவர்க்கும், ஏழை எளியவர்க்கும் ஏற்ற நாயகனே, கல்விமான்களையும், கவினுறு கலைஞர்களையும், எல்லையில்லா எழுத்தாளர்களையும், ஏற்றமிகு வள்ளல்களையும், கள்ளம் கபடமற்றுத் துள்ளித் திரியும் சிறார்களையும், துணிந்து முன் செல்லும் இளம் தலை முறையினரையும் நின் கதிரலைகளினால் ஈர்த்தெடுத்து காரிருள் அகற்றி காவியம் படைத்து நிற்கும் உதயனே, உலகம் உள்ளவரை உன்குரல் ஓங்கி ஒலித்து இனிதே வளம் பெற இறையருள் வேண்டி வாழ்க வாழ்கவென வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

**த.புவனேந்திரன்,** *முகாமையாளர், இலங்கை வங்கி, அச்சுவேலி.*

## அர்ப்பணிப்புடன் செயற்படுபவன் உதயன்



உதயன் தன் 25 ஆவது வருட கால பணியை நிறைவு செய்து வெள்ளிவிழா காண்பதையிட்டு மன நிறைவும், மகிழ்ச்சியும் அடைகின்றேன். வெள்ளிவிழாச் சிறப்பிதழ் 27.11.2010 வெளியிடுவது வரவேற்கத்தக்கது.

பல இன்னல்களின் மத்தியிலும், உதயன் தனது பணியை தமிழ் மக்களின் துயர் தீர்க்கவும், அவர்களின் வாழ்வு மேம்படவும், சகல அரசியல் உரிமைகளையும் பெற்று, நிம்மதியுடன் வாழவும் பாடுபடுவதற்கே உதித்தான். 1985 ஆம் ஆண்டு தொடக்கம் பல சவால் களையும் எதிர்கொண்டு, தனது பணியை மிகச்சிறப் பாகவும், துணிச்சலுடனும், அர்ப்பணிப்புடனும் நிறைவேற்றி வருகின்றான்.

இன்று வெள்ளிவிழா காணும் உதயன் தொடர்ந்தும் பல ஆண்டுகள் தமிழ் மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவையை இன்னும் முனைப்புடன் நிறைவேற்றுவான் என்ற நம்பிக்கையுடன் இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன்.

**வி.சோமசுந்தரம்,** *முன்னாள் உதயன் பொது முகாமையாளர்.*

## துணிச்சல் மிகு பத்திரிகை உதயன்



யுத்தகாலத்திலே பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து இன்று இருபத்தி ஐந்தாவது அகவையிலே அடியெடுத்து வைத்து வெள்ளி விழாக் கொண்டாடும் உதயனுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

உண்மையின் குரலாய் ஊமைகளின் பிரதிநிதியாய் ஓங்கி ஒலிக்கும் உதய னின் சேவை நமக்கு நாள்தோறும் தேவை! யுத்தத்தின் விளைவால் ஏற்பட்ட (காகிதப்) பஞ்சம், பசி,பட்டினி எல்லாவற்றையும் தாண்டி கோவை மட்டைகளிலும், அட்டைகளிலும், பொதிசுற்றும் மண்ணிறத் தாள்களிலும் செய்திப் பத்திரிகையாக வெளிவந்து மக்கள் மனம் மகிழ்வித்த உதயனின் சேவைபோற்றுதற்கு அரியது. தாண்டிய தடைகள், தாண்டிய படிகள், ஏராளம்! ஏராளம்!

பத்திரிகை தர்மம் தந்த துணிச்சல் மிகு பத்திரிகை என்ற பெயரை என்றென்றும் நிலைக்க வைத்து உன்பணி சிறக்க என் மனமார்ந்த வாழ்த்துக்கள்! ''வாழ்க வளமுடன்''

**வீ.சி.சிவநாதன்,** *இலங்கை வங்கி- வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர், வடமாகாண காரியாலயம், யாழ்ப்பாணம்.*

## ஊடகத்துறையில் ஒரு மைல்கல் உதயன்



ஒவ்வொருவரது இதயத்திலும் வைகறையிலே உதயன் கால்நூற்றாண்டுகளாக உதயன்! இதை எவராலும் மறுக்க இயலாது. சோதனைகளைச் சாதனைகளாக மாற்றியதிலே சரித்திரம் படைத்தவன் உதயன்!! இதையும் மறுக்க இயலாது.

ஒரு பிரதேச நாளிதழ் மிகவும் இக்கட்டான போர்ச்சூழலில் 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவருவது மட்டுமல்ல மக்கள் மனதில் நீங்கா இடத்தைப் பெற்று வளர்ந்தும் வருவது பத்திரிகை உலகத் தில் ஒரு முத்திரை என்றும் கூறலாம்.

'எதிர் நீச்சல்போடுவது' என்பதற்கு உதயனும் ஒரு உதாரணம். எத்தனை உயிரிழப்புக்கள்? எத்தனை அழிவுகள்? எத்தனை தடைகள்? இன்று இந்த வடுக்கள் சரித்திரமாக மாற தலைநிமிர்ந்து நிற்கும் உதயன் யாழ்.மண்ணில் ஊடகத்துறையின் ஒரு மைல்கல்.

காலையில் உதயனை வாசிக்க முடியாது ஆதங்கப்பட்டுக் கொண்டு பத்திரிகை விநியோகஸ்தரை எதிர் நோக்கித் தெருவிலேயே காத்திருக்கும் பலரை நான் கண்டிருக்கிறேன்.

பத்திரிகைத்துறை ஒரு சமூகசேவை நிறுவனம். ஒரு நாட்டில் நடப்பதை மக்களிடம் கொண்டுசெல்வது, கலாசாரத்தை வளர்த்தெடுப்பது, இன ஒற்றுமையை வளர்ப்பது. ஒழுக்கத்தைப் பேண வழிவகுப்பது, தவறுகளைப் பகிரங்கமாகத் தட்டிக் கேட்பது, அது அரசாங்கமாக இருந்தாலும் கூட, - இன்னும் பலப்பல சேவைகள் இத்துறையின்மூலம் மக்களுக்குக் கிடைக்கின்றன.

இந்தச் சேவைகளிலே உதயன் என்றும் பின் நிற்கவில்லை. யாழ்.மருத்துவபீடத்தின் சமூக நல மருத்துவக் கற்கைக்கும் உதயன் கைகொடுப்பது பலருக்குத் தெரியும். (விரிவுரைகள் மூலம்) உதயனின் வாசகர் வட்டம் மேலும் விரிவடைய வேண்டும்; அதன் புகழ் திக்கெட்டும் பரவவேண்டும்; பொன்விழா, வைரவிழா, பவள விழா, நூற்றாண்டு விழா என்று கொண்டாடவேண்டும்; வாழையடி வாழையாக இது வளரவேண்டும் என இந்த வெள்ளிவிழாக் காலத்திலே மனமார வாழ்த்துகிறேன்.

**க.பாலசுப்பிரமணியம்,** *முகாமையாளர், யூனியன் வங்கி, யாழ்ப்பாணம்.*

## உறுதியும் நேர்மையும் கொண்டவன்



கடந்த இருபத்தைந்து வருடங்களாக தமிழ் மக்களுக்காக அளப்பரிய சேவையை அர்ப்பணிப்புடன் வழங்கி வரும் உதயன் நாளிதழ் வெள்ளிவிழாக் கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். கடந்த காலங்களில் பல இன்னல்களை சந்தித்தும் தனது சேவையை உறுதியாகவும் நேர்மையாகவும் வழங்கி வரும் பத்திரிகையாக உதயன் நாளிதழ் திகழ்கின்றது. தமிழ் மக்களின் உரிமைக் குரலாக அன்றும் இன்றும் என்றும் ஓங்கி ஒலிக்கும் உதயன் நாளிதழ் குடாநாட்டு மக்களுக்கும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்களுக்கும் இணையத்தளம் வழியாகத் தனது சேவையைச் சிறப்பாக ஆற்றி வருகிறது. தமிழ் மக்களுக்காகவே ஒலிக்கும் உதயன் நாளிதழ் குடாநாட்டு மக்களுக்கும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கும் சிறப்பாகச் சேவையாற்றி வருகின்றது. உதயன் நாளிதழ் இன்று போல் என்றும் தனது சிறப்பான சேவையை ஆற்ற வாழ்த்துகின்றோம்.

**பே.பிரான்சிஸ்,** முகாமையாளர், *இலங்கை வங்கி, இரண்டாம் மேற்தரக் கிளை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

## அமைதிக்காகப் போராடுபவன்



சாதனைகளைச் சுமந்து நிற்கும் எந்த வரலாறும் வேதனைகளின் வரம்புகளையும் சோதனைகளின் தடைகளையும் கடந்து தான் தன் இலக்கினை அடையமுடியும். ஆனாலும் அங்கே ஒரு சுகம் உண்டு.

மனித வாழ்க்கையே ஒரு போராட்டம் நிறைந்தது. அது தாயின் கருவறைக் குள்ளேயே ஆரம்பமாகின்றது. போராட்டத்தின் வெற்றி மனித வடிவாகி மண்ணில் பிறக்கின்றபோது அது தாய்க் கும் போர்க்களமாகின்றது. வேதனையும் வலியும் சுமந்த அந்த தாய்க்கு பிஞ்சுக்கரம் பட்டவுடன் சுகம் அந்தக் குழந்தைக்கும் இன்றுதான் பிறந்த நாள் . இல்லை போராட்ட நாள் மீண்டும் ஆரம்பமாகின்றது. அது பெரியவனாகும் வரை எத்தனை போராட்டம்.

அன்பிற்கினிய உதயனே, உனது உதயமும் அவ்வாறுதான். ஒரு போராட்ட காலத்தில்தான் நீ பிறந்தாய். கன்னித் தமிழின் அமிழ்தப் பால் குடித்து தவழ்ந்து இன்று இருபத்தியைந்து ஆண்டு இளைஞனாகிவிட்டாய். ஒவ்வொரு வருடமும் பல தடைகளையும் வரம்புகளையும் கடந்து வந்தாய்.

உனக்கு ஒவ்வொருநாளும் கன்னிப் பிரசவ நாளே. ஆனாலும் தமிழர் நெஞ்சங்களுக்கு அவை ஒரு புனித நாள்களே.

இலைமறைகாயாக வாழ்ந்த எத்தனையோ முகங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தாய். கடந்த காலப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் தமிழ் நெஞ்சங்கள் பட்ட அவல வாழ்வு தெரியும். துன்ப துயர சோகம் நிறைந்த அந்த போராட்டம் நிறைந்த கதைகளை வைரம் நிறைந்த அந்த போராட்டம் நிறைந்த நாள்களை மறக்கத்தான் முடியுமா. அதற்கு மேலாக நடுநிலை காத்திட நீ கொடுத்த விலைமதிக்க முடியா தியாகத்தை உலகம் என்றும் அறியும்.

கடந்த கால நாள்கள் என்பது வெறும் எண்ணிக்கையான விடயமல்ல. அந்த ஒவ்வொரு நாளும் வேதனையையும் வலியையும் கடந்து காலையில் எம் கைதனில் தவழும் போது, எமது கண்களை அகல விரியச் செய்கின்றபோது, நீ சுகம் கண்டாய். அந்த சுகத்தினில் உந்தன் வரலாற்றுக் காற்றைச் சுவாசித்தாய். ஆனாலும் எத்தனையோ கண்ணீர்த் தழும்புகளையும் காகிதாதிகள் தட்டுப்பாட்டு வேதனையும் அலுவலகத்துக்கு ஏற்பட்ட சோதனைக் கதைகளையும் நீ தாங்கிக் கொண்டாய். உனக்கிது தியாகம். ஆனால் எமக்கது இமயம்.

புத்திஜீவிகளின் பொக்கிஷமாகத் திகழ்ந்த எமது நூலகம் எரியூட்டப்பட்ட நிகழ்வு, இந்திய இராணுவம் யாழ்.பொது மருத்துவ மனையில் நிகழ்த்திய அராஜக வெறியாட்டம், சிதைந்துபோன தமிழ் மண்ணில் அழிந்துபோன எத்தனையோ வீடுகள்.எமது இனத்திற்காக நீலிவிழிக் கண்ணீர் வடித்த உலகத் தலைவர்கள் வரலாற்றை, வெந்துபோன காயத்தில் வேல் நுழைந்தது போன்ற திருட்டுச் சம்பவங்கள், என உன் பணியால் வெளிச்சம் போட்டுக் காட்டினாய்.

அது மட்டுமல்ல ஒட்டு மொத்த குடாநாட்டு தமிழ் மக்களின் இடப்பெயர்வு, உலகை உலுக்கிய இயற்கைப் பேரழிவுச் சுனாமி, மற்றும் குடாநாட்டு வெள்ள அனர்த்தம், காலம்காலமாய் நிழல் கொடுத்த பல விருட்சங்கள் ஒரேநாளில் மண்ணோடு மண் சாய்ந்த கதை என்பவற்றை தடைகள் பல தாண்டி படமெடுத்துக் காட்டினாய்.

இத்தனை பல தடைகளையும் தாண்டிப் போராடிய உனது அப்பழுக்கற்ற அரியபணிக்கு சவாலாக உன் முன்னே எமது சமுதாயத்தின் விடிவும் அவர்கள் அமைதியாக வாழும் நாள்களை உருவாக்கும் அளப்பரிய பணியும் காத்திருக்கின்றது. எதிர் காலத்தடைகளை தகர்த்தெறிந்து வெற்றி நடைபோடுவாயாக. தமிழர் நெஞ்சங்களின் இதயக் கதவு உனக்காக என்றும் திறந்திருக்கும்.

பாரிலுள்ளோர் உன் பணிதனைப் போற்ற வேண்டும். அது பல்லாண்டு தழைக்கவேண்டும். அடுத்த தலைமுறை இந்த வரலாற்று உண்மைகளைப்படிக்க வேண்டும். அதற்காக பல்லாண்டு காலம் நீ வாழ்ந்து தான் ஆக வேண்டும். தமிழன்னை மனம் களிப்புற வேண்டும். அதற்காக உதயனே இப் புனித நன்னாளில் இறைவனை வணங்கி அவனருள் கிடைக்க உனை வாழ்த்துகின்றேன் பல்லாண்டு வளமுடன் வாழ்வாயாக.

**என்.சிவரத்தினம்,** *ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN





எட்டுத்திக்கெங்கும் உன் புகழ் பெருக எமது மனம்நிறைந்த வாழ்த்துக்கள்

**Dealers in Fancy & Gift Items**
531, Point Pedro Road,
Nallur, Jaffna. SriLanka
T.P: 0094 021 222 6960
E-mail:santhiyajaf@walla.com

WESTERN UNION
Money Transfer

**SANTHIYA**
**Multi Courdyard**



நீதியின் குரலாய் ஒலிப்பவனே... பணி தொடர்க!

**தர்சினி**
**மரத்தளபாட இயந்திரத் தொழிற்சாலை**
சகலவிதமான நுட்ப வேலைகளுக்குச் சிறந்த இடம்
காளிகோயிலடி சங்கானை.
உரிமையாளர் வ.திருநாவுக்கரசு

**EDWARD MAKES**
**Edward pain Oil**
**எட்வேட் நோவு வாத எண்ணெய்**
சகல விதமான நோவு, வீக்கம், கண்டல், சுளுக்கு, கை கால் பிடிப்பு, நாரிப்பிடிப்பு, கழுத்துளைவு,தீச்சுட்ட புண், பித்த வெடிப்பு நீங்க நோ எண்ணெய் வாங்குங்கள்!
* பித்த வெடிப்பினால் ஏற்பட்ட நோவு, வேதனையிலிருந்து விடுதலை தந்து குணமளிக்கும் அதிசய தைலம்.
* மாடுகளுக்குண்டாகும் சகல நோவு, வீக்கங்களும் குணமாகும்.

**RED OINTMENT (ரெட் ஒயின் மெண்ட்)**
நீர்ச்சிரங்கு, சொறி, புண்,புரை, பருக்கள், கட்டு, படுவன் அக்கி, கிரந்தி அவியல், தலை அவியல், தீச்சுட்ட புண், வெட்டுக்காயம், உரேஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி சகலதையும் குணமாக்க வல்லது.

எட்வேட் தயாரிப்புக்கள் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

பல காலமாகப் பற்பல மருந்துகள் செய்து அனுபவம் பெற்றவர்கள். சித்த ஆயுள்வேத மருந்துகள், வைத்தியர்களுக்கும் மருந்துக் கடைகளுக்கும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
நோயாளர்களுக்கு வைத்திய ஆலோசனைகளும், சிகிச்சையும் வழங்கப்படும்.

வைத்திய கலாநிதி கபிரியேல் எட்வேட்
L.A.M.P., R.I. M.P. வைத்தியர்சாரி, வைத்தியபூபதி, கலாஜோதி, வைத்தியகலாநிதி திருமதி பஸ்ரின் புட் ஸ்ணா
(B.S.M.S)

சித்த ஆயுள்வேத சுதேச மருந்துகள் உற்பத்தி நிலையம்
63, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2228171
edwardmakes @yahoo.com



வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மாபிள் வகைகள், கொமட் வகைகள், சமையலறை உபகரணங்கள் P.V.C. குழாய்கள் என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**சஜெய் செரமிக்**
281, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4920742

**Sajei Ceramics**

மக்கள் சேவையே மகேசன் சேவை வெளிவரும் உதயனின் பணிதொடர வாழ்த்துக்கள்



நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

**சிங்கப்பூர் ஜுவல்லறி**

22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 4590260



உரிமைக்காக குரல் கொடுத்து மக்களின் உள்ளங்களில் குடிகொண்டவனே வாழ்க!

காலை, மதியம், மாலை சைவ உணவு வகை, சிற்றுண்டி வகைகள் சகல வைபவங்களுக்கு ஓடருக்கு குறித்த நேரத்துக்கு செய்துகொடுக்கப்படும்

**மணியம் கபே**
309, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்ந்து முதற்தரமாய் வெளிவர எமது வாழ்த்துக்கள்



கொழும்பு விலையில் தரமான மின் பாவனைப் பொருள்கள், மொத்தமாகவும், சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**NEW TONE ELECTRICAL**
440,442, Hospital Road, Jaffna. Phone. 021 222 2037


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

## உதயன் உள்ளங் கவர் கள்வன்



சென்ற 25 ஆண்டுகள் தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடெங்கும் அம்மக்களின் உள்ளங்கவர்ந்து ஒளியுடன் சிறந்து விளங்கும் உதயனின் வெள்ளிவிழாவிற்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமை அடைகின்றேன். அமுதசுரபி சென்றாண்டு தனது 50 வது அகவையைத், தனது குழந்தையாகிய உதயனின் விமரிசையுடன் கூடிய விளம்பரத்துடன் உலகறியக் கொண்டாடிப் பேருவகை அடைந்தது. எமது ஸ்தாபனத்தின் ஐம்பது கால வாழ்நாளில் உதயன் 25 வருட வாழ்வும் ஒன்றிணைந்துள்ளது என்பதைக்கூறுவதில் மகிழ்வு அடைகின்றேன். உதயன் தனது குறுகிய கால எல்லையில் சந்தித்த துன்ப, துயரங்கள் அனேகம்.

நயவஞ்சகர்களின் ஈனச்செயல்களால் உதயன் பணிமனை தாக்குண்டமை, அவனது உதயத்துக்கு நாள்தோறும் வழி வகுத்துக் கொடுத்த ஊழியர்கள் தாக்கப்பட்டமை, கொலை செய்யப்பட்டமை இவை அனைத்துக் கொடுமைகளையும் பொறுமையுடன் சுமந்து அவன் வெள்ளிவிழாக் கொண்டாட வல்லமை பெற்றதும் இறைவனின் திருவருள் என்றே கூற வேண்டும். சிறப்பாக யாழ். குடாநாட்டிலும் பொதுவாகத் தமிழ் மக்கள் வாழும் பிர தேசமெங்கும் அவர்களது நன்மை, தீமைகள், பாராட்டுக்கள், வாழ்க்கைச் சிறப்புக்கள் அனைத்தையும் தினமும் உலகறியச் செய்து அனைவரது உள்ளங்களையும் கவர்ந்தவனாகத் திகழ்பவன் உதயன்.

நாள்தோறும் நாட்டில் நடைபெறும் விழாக்கள், பல்வகைத்தொழில் முயற்சிகள், அரச, தனியார் துறைச் சேவைகள் அனைத்தையும் பாமர மக்கள் மத்தியில் கொண்டு செல்ல தினமும் முன்னின்று உழைப்பவன் உதயன் என்பதில் வியப்பில்லை. இத்தகைய நற்தொண்டாற்றும் உதயனின் வெள்ளிவிழாச்சிறப்படைய வாழ்த்துவதோடு, நூற்றாண்டுகளைக் கடந்தும் அவன் புகழ் வாழையடி வாழையாக வாழ எமது அமுதசுரபியின் நல்லாசியும், நயினை நாகபூசணி அம்மனின் திருவருளும் என்றும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**கு.சாந்தலிங்கம்**, *செயலாளர்,*
*நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை.*

## உதித்தனன் தமிழ் உலகம் உய்ய

தமிழ் பேசும் மக்களின் தன்மானக் கவசம்.....
தமிழ் பேசும் மக்களின் உரிமை ஊற்று.......
தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டு மூச்சு......
உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் உண்மையை
உரக்க உரைக்கும் வீச்சுத்திறன் ......
காலத்தை கட்டியுரைக்கும் கலைகளின் கால்வாய்......
அறிவுக்கு வித்திடும் கொத்தான மலர்கள்.....
சட்டத்தின் சாட்டையாய் சாற்றிடும் சமர்களங்கள்.....
அடுக்கிக் கொண்டே செல்லலாம் -
நீதித்தாயின் தராசாம்,
நம் கண்விழிப்பின் தரிசனமாம்- உன்னதச் செல்வன்
அவன் தான் உதித்தனன் தமிழ் உலகம் உய்ய
உதயன் எனும் நாளிதழ்.

உண்மையை வெளியிடும் உன் உன்னத பாங்கு பாரினில் எவரும் பெற்றிடமுடியாது. விருப்பு, வெறுப்பு என்பது உன்னில் மருந்திற்கும் பெறமுடியாது.



உன்வீரம் கண்டு புறநானூறு புளகாங்கிதம் கொள்கின்றது. சிறுவர் முதல் முதியோர்வரை, பாமரர் முதல் படித்தவர் வரை தொழிலற்றோர் முதல் தொழில் செய்வோர் வரை, அரசியல்வாதி முதல் ஆத்மீகவாதி வரை பசிக்கு அட்சய பாத்திர மாய் அள்ளி வழங்கிடும் செய்திகள் பற்றி பட்டியலிட முடியாது. 'நீரின்றி அமையாது உலகு' என்பது போல் உதயன் இன்றி அமையாது உலகு எனும் தரத்தில் உன் பணிகள் உளி கொண்டு செதுக்கிடும் சிலையாய் எழுந்து நிற்கின்றது.

கடந்த இருபத்தி நான்கு வருடங்களாக பத்திரிகைச் சுதந்திரத்துக்கு சோதனைகள் வந்த போதும் சோர்வு கொள்ளாமல், தடைகள் வந்த போதும் தளர்வடையாமல், பயமுறுத்தல்கள் வந்தபோது பயம் கொள்ளாமல், அச்சுறுத்தல்கள் வந்தபோது அடிபணியாமல், சவால்கள் வந்தபோது சலிப்படையாமல், மக்கள் அறிய வேண்டியதை மறைக்காமல் மறுக்காமல், புனையாமல், சுருக்காமல் புகன்றிடும் பாங்கு-பாணி- உன் வழி தனிவழி தான். போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும், உண்மையை உரைப் போம் என்று இதுவரை வாழ்ந்த உதயன் இனியும் இனியும் இனிக்கும் சுவையுடன் சுதந்திரவானில் தொடர்ந்து சிறகடித்து சிறப்புடன் வாழ்க! விருது பல பெறுக! விருட்சமாய் திகழ்க! என வெள்ளிவிழா ஆண்டில் வாழ்த்துகின்றேன்.

Lion.P.K.B.**பாலசங்கர்**, *மாவட்டத் தலைவர்,*
*சர்வதேச லயன்ஸ் கழகம், மாவட்டம் 306 B1.*

## உதயனின் பணி- புனிதப்பணி



ஈழத்தமிழ் மக்களின் உரிமைக்குரலாக தேசிய பற்றுணர்வுடனும், துணிவுடனும் பல நெருக்கடிகளுக்கும் சவால் களுக்கும் முகம் கொடுத்து எமது தேசத் தில் தமிழ் சமுதாயத்தின் விடிவினை நோக்கிய பயணத்தில் உறுதுணையாக நின்றுழைத்து வருகின்றான் உதயன்.

எத்தனையோ இடர்களையும் தடைகளையும் எதிர்கொண்டு இந்தப் புனிதப் பணியில் தன்னை முழுமையாக அர்ப் பணித்து அளப்பரிய சேவையாற்றி இருபத்தைந்து அகவை நிறைவில் வெள்ளி விழாக்காணும் நாயகனாக பவனிவரும் உதயனுக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடை கின்றோம்.

கனதி மிக்கதும், காத்திரமானதுமான செய்திகளைத் தாங்கி முதிர்ந்த அனுபவத்தோடு சிறந்த வழிகாட்டியாக மக்களின் தேவையை நிறைவு செய்து நீண்ட சேவையாற்றி வரும் உதயன் தொடர்ந்தும் ஈழத்தமிழ் மக்களின் விடிவுக்காகவும் சமூக மேம்பாட்டுக்காகவும், கலாசார எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் என்றும் உழைத்து உன்னத பணி பெருக்க வாழ்த்துகிறோம்.

**காரை.எஸ்.பி.அருளானந்தன்,**
*பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்.*

## உதயன் நிரந்தரமானவன் அழிவதில்லை



"உதயன்" வாழ்ந்து கொண்டிருக்கிறான்,
வளர்ந்து கொண்டிருக்கிறான்
தவழ்ந்த காலம் எல்லாம் போய்விட்டது.
வானிலே கொடி கட்டிப்பறந்து
கொண்டிருக்கிறான் - அதுவும்
எத்தனையோ விதமான கொடிகளுடன்
கம்பீரமாகப் பறக்கிறான்
மற்றவர்கள் பிடிக்க முயன்றாலும்
மிக உயரமான தூரத்திலே
பறந்துகொண்டிருக்கிறான்
எவரும் பொறாமைப்பட்டாலும் எதையும்
பொருட்படுத்தாது
தன்பாட்டிலே பறந்து கொண்டிருக்கிறான்
உலகம் மிக வேகமாக வளர்ந்து
கொண்டிருக்கிறது
அதற்குக் கட்டியம் கூறுவது போல்
Jet வேகத்தில் பறந்து கொண்டிருக்கிறான் - காரணம்
நடு நிலைமை
துணிச்சல்
பாரபட்சமின்மை
மிக முக்கியம் தன்மீதும், மக்கள் மீதும்
நம்பிக்கை, நம்பிக்கை, நம்பிக்கை

கற்பூரம் பத்தி வைச்சா கரைஞ்சு தான் போகுமண்ணே
உயிரெல்லாம் ஒருநாளில் ஓய்ந்துதான் போகுமண்ணே
முன்னேறி ஓடி ஆடி வானை முட்டி நின்றாலும்
எந்த நாள் காலையிலும் உதயன் நிண்டு எழும்புகிறான்.
மாதமில்லே, வருஷமில்லே யுகங்கள் தான் கடந்தாலும்
தமிழன் சந்ததி சாகும் வரை
"உதயனே" - உன் நினைவு மாளாது.
25 ஆண்டுகளாக - சும்மா சொல்லக்கூடாது - கால் நூற்றாண்டு
வீறு நடை போடுகின்றான் உதயன்
வாழ்க்கை என்றுமே வண்ணாடும் வண்ண
மலர்ச் சோலையாக இருப்பதில்லை.
அது வாழத்தெரிந்தவர்களுக்கு வசந்தம்
வழுக்கி வீழ்ந்தவர்களுக்குப் புயல்
இது இரண்டையும் உணர்ந்தவன் தான் மனிதன்
அந்த மனிதருக்கு அந்த இரண்டையும்
உணர்த்துபவன் - உதயனின் ஆற்றொனா சேவை

விளக்கு ஒன்று அணைந்து போனால்
வீடு மட்டும் இருள்கிறது
வீதி விளக்கு அணைந்து போனால்
சாலை மட்டும் இருள்கிறது
மேற்கே சூரியன் மறைந்து போனால்
பாதி உலகம் இருள்கிறது.
பெத்த தாயவள் செத்துப் போனால்
மொத்த உலகமும் இருள்கிறது.
"உதயன்" என்பவன் கருகிவிட்டால்
நினைக்கவே நெஞ்சு ஏதோ செய்கிறது.

வல்லவனுக்கு உதயன் ஒரு பூஞ்சோலை
வாடிக் கிடப்பவனுக்கு உதயன் ஒரு ஊன்று கோல்
சாதிக்க நினைப்பவனுக்கு உதயன் ஒரு சரித்திரம்
சத்தியத்தில் நிற்போருக்கு உதயன் நித்தியம் வருவான்

"உதயன்" நிரந்தரமானவன் - அழிவதில்லை
எந்த நேரமும் அவனுக்கொரு மரணமுமில்லை

வாழ்க, வளர்க, கலங்காது நீடூழி வாழ்க.

**வைத்திய கலாநிதி க.மயிலேறும்பெருமாள்,**
*மாவட்ட வைத்திய அதிகாரி, வல்வெட்டித்துறை.*

## சோதனைகள் பல கடந்து வந்தவன் உதயன்



உதவிக்கு வந்தவர்கள் உதைக்கத் தொடங்கிய போது, இருதலைக் கொள்ளிபோல் தவித்த தமிழ் மக்களுக்குத் தகவல் தந்து உதவ உதித்தாய் நீ. உருட்டினார்கள், புரட்டினார்கள் உடைந்து போகவில்லை நீ. பெயருக்கேற்பத் தினந்தோறும் உதித்தாய். மக்கள் ஓடியபோது அங்கும் உதித்தாய். உன் சேவைகள்தான் எத்தனை. நீ பிறந்த நாள் முதல் உன்னை நேசித்தவர்களில் நானும் ஒருவன். உனது உயர்ச்சியில் மகிழ்ந்தேன்! வாழ்த்தினேன்! உதைக்கப்பட்டபோது உருகினேன். நீ கடந்துவந்த சோதனைகள்தான் எத்தனை. அத்தனையையும் மீறி வளர்ந்து விட்டாய். இருபத்தைந்து வயதான இளைஞன் நீ. துடிப்புடன் வாழ்க வளர்க. சோதனையில் வேதனையுற்று, வீழ்ந்து போன உனது உழைப்பாளிகள் இன்று மன நிறைவுடன் வானிலிருந்து வாழ்த்துவார்கள் உன்னை. உதயனைப்போல் உடைக்கப்பட்டபோதும் உயர்ந்து நிற்கும் அதன் பிரதம ஆசிரியரும் ஊழியர்களும் என்றென்றும் வாழ்க வளர்க என்று மனதார வாழ்த்துகிறேன்.

**ந.சதாசிவஐயர்.**
*மேலதிக பதிவாளர் நாயகம்,*
*பதிவாளர் நாயகம் அலுவலகம், கொழும்பு.*

## ஊடகப்பணி பரந்து விரிந்து சிறக்கட்டும்


எந்த ஓர் இனத்தினதும், நாட்டினதும் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் முக்கியப்பங்காற்றுபவை ஊடகங்களே. அந்த வகையிலே எம்மக்களது இன்ப, துன்பங்களிலே



தானும் இணைந்து பல்வேறு சவால்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியிலும் துணிவோடு செயற்பட்டுக் கொண்டு இருக்கின்ற உதயன், வெள்ளிவிழாக் காண்பதையிட்டு அக மகிழ்ச்சி அடைகிறேன். அதன் பணி இன்னு மின்னும் பரந்து விரிந்து ஏற்றமுடன் ஒளி பரப்ப எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு எனது வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் நிறைவடைகிறேன்.

**ப.பிரபாகர்**, *காணி மேலதிக மாவட்டப் பதிவாளர்,*
*யாழ்ப்பாணம்.*

## சாதனையாளர் பட்டியலில் உமக்கே முதலிடம்



உன்னதை உன்னபடி
உலகிற்கு எடுத்துரைத்த
உன்னதப்பணியாளன் உதயனுக்கு
வயது இருபத்தைந்து
பிள்ளையாய் தவழ்ந்து
குழந்தையாய் நடந்து
வாலிபனாய் வந்துவிட்ட
உன்பணிக்கு வாழ்த்துக்கள்.

உயிர்ப்பலி பல கொடுத்து
மனக்கிலி பல கொண்டு
தனக்கென வாழாது
தரணியில் தளைத்தவனே,
உனக்கினிப் பயமில்லை
உலகமே விழித்தெழும்
சரித்திரம் படைத்தவுன்
சக்கரங்கள் சரியாக சுழலட்டும்.

சாதனையாளர் பட்டியலில்
உமக்கே முதலிடம்
சரித்திரம் படைத்ததில்
நீரே வழிகாட்டி
மக்கள் சேவையில்
நீரே நற்றோழன்.

வாழ்க பல்லாண்டு
வளர்க நின் பணிநீண்டு
ஓங்க உன்நாமம்
ஒலிக்க நின்னோசை,
ஏங்கும் உன்னத்தைத்
தாங்கும் வல்லமை
தருவான் இறைவன்
தரணியில் வாழியவே.

**சரா.புவனேஸ்வரன்,**
*விரிவுரையாளர்,*
*கோப்பாய் ஆசிரிய*
*கலாசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்
25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
27.11.2010 Silver Jubilee Of UTHAYAN

# ஓங்காரமாய் ஒலிக்கும் உதயனே



உதயனே..
உனக்கு வயது 25
அப்படியென்றால் நீ தினசரி பிரசவித்த
பிள்ளைகள்
கிட்டத்தட்ட 9125-
அவற்றில் சாதாரண பிரசவங்கள்
கொஞ்சம்தான் - ஆனால்
நொந்து பெற்ற பிள்ளைகள்தான் ஏராளம்.
"ஓ" போடும் பத்திரிகைகளே ஓரங்கட்டப்படும்
போது — நீ
மட்டும் இது நாள் வரை ஓங்காரமாய்
ஒலித்தது...
(வேதனைகள் பல நிறைந்த) சாதனை.

உன்னை வளைத்துப்போட எத்தனை பேர்
வலிந்து வந்தார்கள்.
வளையவில்லையே — நீ
மடிந்து கொடுத்தால் மடியில் வைத்துத்
தாலாட்ட
எத்தனை பேர் காத்துக்கிடந்தார்கள்.
மடங்கவில்லையே — நீ

உண்மைக்கும் - உரிமைக்கும்தானே உரக்கப்
பாடினாய்.
நீ கொஞ்சம் இளகிக் கொடுத்திருந்தால் ....
பட்டு பீதாம்பரம் அணிந்து
பஞ்சணையில் தூங்கி பகட்டாக
இருந்திருக்கலாம்.
இல்லையே... நீ கட்டியிருக்கும்
கோவணத்தைக் கூட
களவாடிச்செல்லப் பார்த்தார்களே...அப்போதும்
நிலை குலையாது நடை தளராது
உறுதியாக நின்றாயே...உதயா...

நீ கட்டிய பாலத்துக்கு — சிறு
கல்லெடுத்துப் போட்ட அணிலாக
நான் இருந்ததற்கு .....
உதயனே உனது ஊழியனாக
இருந்த காலத்தை அசை போட்டுப்
பார்க்கிறேன்.

செத்துப் பிழைத்து விளையாடிய
நாட்கள் எத்தனை.
சொந்தம் போல் பழகிய நண்பர்களை
சதைத்துண்டுகளாக அள்ளி எடுத்த
கணங்கள் எத்தனை!

ஏசியிலே இருந்துகொண்டு
ஓசி டீ குடித்தபடி — எல்லோரும்
நாளிதழ் வெளியிட்ட போது....
நாம் பங்கருக்குள் இருந்தபடி
பத்திரிகை வெளியிட்ட
நாட்கள் எத்தனை!

இது மட்டுமா..?
இன்னும் பல திகிலான
திடுக்கிடும் சம்பவங்களால்...
உருவானதுதான் உனது — 25
வருட வரலாறு.

கல்லையும் முள்ளையும்
காலுக்கு மெத்தையாக்கிக்
கொண்டவன் - நீ

எதிரிகள் உன்னை எரிக்க — அதனை
படம் போடலாக எடுத்துக்கொண்டாய்.
வெட்ட அதனை பட்டை
தீட்டலாக எடுத்துக்கொண்டாய்.

உன்னை மூச்சடக்க மேற்கொண்ட
முயற்சிகளை எல்லாம்... உனக்கு
சாதகமாக்கிக் கொண்ட
அவதார புருசன் - நீ


நீ வாழ வேண்டும் .. தொடர்ந்தும்
இதே மிடுக்கோடும்
நெறிச் செருக்கோடும் வந்து கொண்டே
இருக்க வேண்டும்.

ஐம்பதாவது வருடத்திலும்
இதே விந்தையுடனும்...
அலங்காரத்துடனும்... நீ
வெளிவரவேண்டும்.
ஆனால் ஒன்று இத்தனை காலம்
காத்த பெருமையை
காற்றில் போக விட்டுவிடாதே...
தோற்றுப்போன நாம்
கரை சேரக்காத்திருக்கும்
கப்பல்களில் நீயும் ஒருவன்.

தொடர்ந்து வா.... கொடுமைகளை கண்டு
கொத்த முடியாத நிலையெனில்
பரவாயில்லை — சீறு
அநியாயக்காரர்களைத் தெரிந்தும்
அடக்கமுடியாவிடில் பரவாயில்லை — அழ
ஏனென்றால் நீ
அகிம்சைப் போராளி....
அப்படியே உனது சகோதரன்
"சஞ்சீவி" எங்கே..
அவனையும் காட்டி வா...

- எஸ்.ராஜ்குமார்
*(உதயன் முன்னாள் செய்தியாளர்)*

## தமிழினத்துக்கு வழி காட்டும் உதயன்



எம் இனத்தின் சுதந்திரத்திற்கான சாத்வீகப் போராட்டங்களினால் பலனின்றித் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தரித்தபோது உதயன் நீ தோன்றினாய். உன் இனத்துக்கா கப் பேனாவைத் தூக்கினாய்.

கொடுமைப்படுத்தப்பட்ட மக்க ளின் குரலானாய். ஐக்கிய நாடுகள் சபையின் சுயநிர்ணய உரிமை தொடர்பான தீர்மானங்களை அனுசரித்து வழங்கப்படும் தீர்வே எமக்கு சமத் துவம், கௌரவம், பாதுகாப்பு, ஜன நாயக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நீதியையும் சமாதா னத்தையும் வழங்க முடியும். இல்லை யேல் இந்நாடு அர சியல் புயலின் அழிவிலிருந்து விடுபடமுடியாது எனத் தீர்க்க தரிசனம் சொன்னாய்.

எண்ணமுடியாத இடப்பெயர்வுகளையும், துன்பத்தையும், அழிவையும் அனுபவித்தோம். ஆனால் நீயோ பிரிவினை கோருதல், பயங்கரவாதம், இராஜ துரோகம் போன்ற அரசின் வழமையான குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானாய்.

உனது நிலைப்பாடு ஜனநாயக, சுதந்திரத்தை நேசிக்கும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஏதேச்சாதிகாரம், அடக்குமுறை, சுரண்டல், சண்டித்தனம், சர்வாதிகாரம் ஆகிய வற்றின் துணைகொண்டு ஆட்சி செய் வோரது எதிரி நீ.

உனது நேர்மையான நோக்கங்களும் கொள்கைகளும் உனக்கு எதிரான நிறுவனமயப்படுத்தப்பட்ட பொய்த் தோற்ற முள்ளவர்க்கு வெறுப்பூட்டும். சுதந்திரமற்ற அடிமைப்படுத் தப்பட்ட எமக்கான ஒளியாக விளங்குவதற்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கங்களும் நன்றிகளும் இன்று அனுபவமிக்க, அறிவு முதிர்ந்த, பலமான இருபத்தைந்து வயது வாலிபன். சரி, பிழை எதுவெனப் பிரித்து, அழிந்து, தெளிந்து பார்க்கக்கூடிய முதிர்ச்சி பெற்றுள்ளாய். எதிர்கால செயற்பாடுகள் யாவும் இன்னும் வீரியம் பெறட்டும்.

உடைந்து நொருங்கி, தோல்வியடைந்த இனமோவெனச் சோர்ந்துபோகாது, நாமெல்லாம். பீனிக்ஸ் பறவைகளாக நிமிர்ந்து, உயர்ந்து நிற்க வழிகாட்டு.

உதயனின் ஐம்பதாம் ஆண்டு - அரை நூற்றாண்டு - பொன்விழா மலராவது - எம் இனத்தின் வெற்றியையும், சந்தோசத்தையும், புகழையும் உலகெங்கும் உரத்துப் பறைசாற்றும் வெளியீடாக அமைய உன் பணி தொடர உளமார வாழ்த்துகின்றேன்.

**தங்கராஜா அருணகிரிராஜா,**
*ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்,*
*[உடற்கல்வி]*

# மறக்க முடியாத பயங்கரம்

25 வருடங்களைப் பூர்த்திசெய்து வெள்ளி விழாக்காணும் உதயனின் வரலாற்றில் மறக்க முடியாதநாள் 2006-05-02 ஆம் திகதி.

நாட்டில் எந்தவொரு பத்திரிகை நிறுவனமும் முகம் கொடுக் காத- எதிர்கொள்ளாத - மிகப் பயங்கர சம்பவம் நடந்தேறிய கறுப்பு நாள்.

இரவு 7 மணியளவில் அந்தப் பயங்கர நாடகம் அரங்கேறியது.

இரவு வேலைக்குத் தயாராகிச் சுறுசுறுப்பாக ஆசிரிய பகுதி இயங்கிக் கொண்டிருந்த அந்த வேளையில், ''டுமீல், டுமீல்'' எனத் துப்பாக்கி வேட்டுக்கள் உதயன் அலுவலகத்தின் முன் வாயில்பக்கமாக முழங்கின.

உதயன் பல்வேறு தாக்குதல்களை ஏற்கனவே சந்தித்திருந்தது. அவை எல்லாம் அலுவலகத்துக்கு வெளியிலும் வாகனத்தில் இருந்தும் மேற்கொள்ளப்பட்டன.

அலுவலகத்துக்குள் திடீரென துப்பாக்கிகளுடன் முகமூடி நபர்கள் நால்வர் அந்திசாய்ந்த முன்னிரவுவேளையில் புகுந்தனர். அழைக்கப்படாத விருந்தாளிகளாக அடாத்தாக உள்நுழைந்த அவர்கள் கண்மூடித்தனமாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

விளம்பரப்பிரிவின் முன் அறையில் இருந்த சந்தைப்படுத்தல் முகாமையாளர் சுரேஷை முதன் முதலில் பதம்பார்த்த அந்த முகமூடி நபர்கள் அங்கிருந்து அகன்று உள்ளே ஆசிரிய பகுதியை நோக்கி மாடிக்கு ஆவேசத்துடன் வந்தனர். ஆசிரிய பகுதிக்குப் பொறுப்பாக அப்போது இருந்த வரைத் தீர்த்துக் கட்டும் நோக்கில் அங்கும் இங்கும் தேடினார்கள். அவர்களின் கண்களில் அவர் தென்படாததையடுத்து



பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஸ்)



இராஜரட்ணம் ரஞ்சித்குமார்

அங்கிருந்த கணினிகள் மீது கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தும் அடித்து நொறுக்கியும் தங்களின் ஆத்திரத்தைத் தீர்த்துவிட்டுத் திரும்பினர்.

ஆசிரிய பீடத்துக்குச் சென்றுவிட்டு ஆக்ரோஷத்துடன் திரும்பி வந்த முகமூடி நபர்கள் விநியோகப் பகுதியில் அச்சத் துடன் நிலத்தில் படுத்திருந்த ரஞ்சித் என்ற விநியோகப்பகுதி ஊழியரைச் சுட்டுக் கொன்றனர். அந்தவேளை அருகில் படுத்திருந்த தயாபரன் காயமடைந்தார். அதேபோன்று பாதுகாப்புப் பிரிவுக்கு முன்பாகத் தீர்க்கப்பட்ட வேட்டுகளுக்கு உதயகுமார் என்ற மற்றொரு விநியோக ஊழியர் காயமடைந்தார்.

காரணம் ஏதுமின்றி அலுவலகத்துக்குள் நுழைந்து அப்பாவிகள் இருவரைப் படுகொலை செய்தும் இருவரைக் காயப்படுத்தியும் வெறியாட்டம் நடத்திய அந்த முகமூடி நபர்கள் இன்னமும் - நான்கு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை.இச்சம்பவம் நடைபெற்றது தெரிந்து, பொலிஸாரும் அப்போது பணியில் இருந்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும், நீதிவானும் உதயன் அலுவலகத்துக்கு உடன் விரைந்து விசாரணைகள் நடத்தினர். எல்லாம் வீணாயிற்று; விளைவு ஏதுமில்லை.

உரிய இடங்களுக்கு, உயர்மட்டங்களுக்கு உரிய முறையில் முறையிட்டபோதிலும் இன்னும் மர்மம் துலங்கவில்லை. அவர்கள் சுதந்திரப் பறவைகளாகவே பறந்து திரிகிறார்கள்.

ஊடகச் சுதந்திர தினத்தன்று அரங்கேறிய இந்த நாடகத்தை இயக்கிய சூத்திரதாரிகள் யார் என்பது இன்னமும் மர்மாகவே இருக்கின்றது.

அந்த மர்மம் துலங்காவிட்டாலும் உதயனின் வரலாற்றில் மட்டுமன்றி இலங்கையின் ஊடக சுதந்திரத்துக்கும் இழுக்கு ஏற்படுத்திய மிக மோசமான சம்பவமாக இந்த வெறியாட்டம் பதிவு செய்யப் பட்டுவிட்டது. சர்வதேச ஊடகவியலாளர் சங்கங்கள் பலவற்றின் ஊடாக உதயன் அலுவலகத்துப் படுகொலைகள் அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டபோதிலும் அசட்டையும் மௌனமுமே மறுமொழியாக நீள்கின்றன.

- அனுவிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெள்ளிவிழாச் சிறப்பு மலர்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

27.11.2010 Silver Jubilee Of UTHAYAN


இதயத் தாகம் தீர்க்கும் எங்கள் 'உதயன்' நாளிதழுக்கு எமது வெள்ளி விழா வாழ்த்துக்கள்

★ 29" Sony Flat TV, 21" FlatTv, 14" TV மிக மிகக் குறைந்த விலையில்

★ தற்போது 21" TV 12,490 ரூபா மட்டுமே....

★ எங்கும் பெற முடியாத உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய அதி வேகமான சேவையும் எம்மிடம் மட்டுமே.

Barnabas

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (முத்திரைச் சந்தி அருகில்)



Life Time Free Service

5வருட உத்தரவாதம்

தேமதுரத் தமிழ் நாளேடே..! வாழி பல்லாண்டு!

Harini Net Cafe



High Speed Internet Browsing

3D Games

CD, DVD Writing

Photo Copy

Scaning & Printing

Net 2 Phone, Video Calls

Local / IDD call, Fax

Reload, Top Up Cards

Stationary

K.K.S ROAD, KOKUVIL JUNCTION, KOKUVIL.

Ph : 0779456528

Airtel Dialog Hutch

அசல் 22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

ஆசைப்பிள்ளை

அன் சன் நகைமாடம்



இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை.

தொ.பே: 021 321 2399

மகத்தான சேவையினால் மக்கள் மனம் கவர்ந்த நாளேட்டுக்கு எமது வாழ்த்துக்கள்



திருமண கோட் சூட் வகைகள்,புதிய மொடல் ஜீன்ஸ் வகைகள், சேட், ரீசேட் வகைகள், சேட்டிங், சூட்டிங்,தொப்பி, பெலிற், போர்ஸ் வகைகள் மற்றும் புதிய மொடல் கோட் வகைகளும் தலைப்பாகை வகைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம், மற்றும் தலைப்பாகை கோட் சூட்களையும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

Juki, Hara, Over Lock Machines

மெசின், மெசின் உதிரிப்பாகங்கள், தையல் உபகரணங்கள், நூல் வகைகள் அனைத்தையும் கொழும்பு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சிற்றிசன் போய்ஸ் செலக்சன்&ரெயிலறிங்

இல.01, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். கிளை: இல.302, பலாலி வீதி, ஆலடிச் சந்தி, திருநெல்வேலி. தொ.பே: 0776143301

Yogi's Beauty

Acadamy of Beauty Therapy, Hair Dressing & Home Science

வெள்ளி விழாக் காண்பதற்கு இன்னும் 2 வருடங்களே உள்ள நிலையில் எமது நிறுவனம் யாழ்.நகரிலும் கொழும்பிலும் தனது சேவையைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றது. எமது மாணவர்கள் இலங்கையிலும் லண்டன், கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, சுவிஸ், நோர்வே, ஜேர்மனி, போன்ற பல நாடுகளிலும் தமது நிறுவனங்களை ஸ்தாபித்துள்ளனர். எம்மால் அளிக்கப்பட்ட சான்றிதழ்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு விஸாவினைப் பெறுவதற்குக் கூட அங்கீகரிக்கப்பட்டவையாக உள்ளன.இப்படி யாழ்.நகரில் தன்னிகரில்லாத தாய் நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது எமது நிறுவனம்.

உங்கள் அழகு சம்பந்தப்பட்ட சகல குறைபாடுகளோ பிரச்சினைகளோ எல்லாவற்றுக்கும் எங்கள் அதி நவீன சிகிச்சைகள் மூலம் நிவர்த்தி செய்கின்றோம். மாணவர்களுக்கு அழகுக் கலை பயிற்சி வகுப்புக்களும் சிறந்த முறையில் எமது நிறுவனத்தில் அளிக்கப்படுகின்றன. எமது நிறுவனத்தில் முறையான பயிற்சியைப் பெற்று திறமையான அழகுக்கலை நிபுணராக விரும்புவோர் எம்மை உடன் தொடர்புகொள்ளவும்.

Mrs.Yogini Shanmuganathan

★ Diploma in Aesthetics & Advanced Cosmetology (India)

★ Diploma in Advanced Bridal Makeup & Character Makeup (India)

★ Diploma in Home Economics (India & SriLanka)

உதயன் நாளிதழே!' நீ உன்னதமாய் என்றென்றும் நீடூழி வாழியவே!



தொ.பே: 021 222 2796, 021 321 0077, 0777164923.

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

உதயனே வாழி! வாழி!! வாழி!!! உன் பணி சிறக்க எமது வெள்ளிவிழா வாழ்த்துக்கள்.

திருமுருகன் கொம் நெற்

இல.259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் – 021 222 7835

Computer Sales & Repairing



220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

DHL அங்கீகரிக்கப்பட்ட முகவர்



WESTERN UNION

Money Master

கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடவைகள், உணவுப் பொருட்கள் மற்றும் CD,DVD என்பன மிக விரைவாக உங்கள் உறவுகளுக்கு அனுப்பிடலாம்

Debug Authorized Distributor

EPSON EXCEED YOUR VISION

D-Link Building Networks for People



கிளை நிறுவனங்கள் ✓ "TCN Express" No-2B, ... Place, Colombo 6 ✓ ... வவுனியா

✓ 46. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி ✓ பிரதான வீதி, நெல்லியடி ✓ 4. திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயனின் ஆரம்பம்


துணிச்சலுக்கான முதலாவது விருது



பொதுப் பணிக்கான இதழியல் விருது


அச்சுக் கோர்த்தல்


ஆரம்ப கால அச்சு இயந்திரம்


துணிச்சலுக்கான இரண்டாவது விருது




ஓவ்செற் இயந்திரங்கள்


நவீன அச்சு இயந்திரம்


உதயன் சீல் வைக்கப்பட்ட பின்பு


உதயன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின் விசாரணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.